# கலையருவி

17வது
மலர்
2008



கல்விக்கழக வெளியீடு
அரசினர் ஆசிரியர் கலாசாலை - கொட்டகலை

கல்விக்கழக வெளியீடு

# ''கலைபருவி''




தொ:பே. 051-2224922

கல்விக்கழகம்
அரசினர் ஆசிரியர் கலாசாலை
கொட்டகலை.

# கலாசாலை கீதம்

மலையக மதனில் மகிழ்வுடன் மலர்ந்த
கலையகத்தாயே வாழ்க - எங்கள்
கலையகத்தாயே வாழ்க
மலையக மக்கள் நிலையுயர்ந்திடவே
தலை சிறந்த பணிபுரிக
(மலையக..................)

எண்ணும் எழுத்தும் கண்ணெனக்கருதி
உண்ணியே பயின்றிடுவோம் - நாம்
பயிற்சியின் பின்னர் பள்ளி சிறாரை
முயற்சியால் உயர்த்திடுவோம்
(மலையக..................)

இன்றைய மாணவர் நாளைய பிரஜை
என்பதை உணர்ந்திடுவோம் - நாம்
நெறிமுறை காட்டி கலைகள் உணர்த்தி
அறிவை வளர்த்திடுவோம்
(மலையக..................)

ஆயகலைகள் அறுபத்து நான்கும்
நேயமுடன் பயின்று - நாம்
தமிழர்கள் என்று தலைகள் நிமிர்ந்து
பெருமையுடன் இங்கு வாழ
(மலையக..................)

பாரிபோல் எமக்குப் பள்ளிகள் அமைத்து
வாரி வழங்கிடும் அரசும் - என்றும்
பரிவுடன் பயிற்சிகள் அளித்திடும் அதிபர்
விரிவுரையாளர்கள் வாழ்க
(மலையக..................)

# தமிழ் தாய் வாழ்த்து

காதொளிருங் குண்டலத்தாள்
கனிமொழியாள் வாழ்க !
கைக்குவளை யாபதிகொள்
கன்னிகையாள் வாழ்க !

மேதகு மென் மார்பிடைச்சிந்
தாமணியாள் வாழ்க !
மின்னுமணி மேகலை சூழ்
மெல்லிடையாள் வாழ்க !

சீதமலர் பாதமொளிர்
சிலம்புடையாள் வாழ்க !
சேர சோழ பாண்டியர் தஞ்
செல்வ மகள் வாழ்க !

நீதியுறுஞ் செங்கோலாய்
தூயகுறள் தாங்கும் !
நிகரறியாச் செந்தமிழ்த் தாய்
நீதுழி வாழ்க !

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே !

வானம் அளந்த தனைத்தும் அளந்திடும்
வன் மொழி வாழியவே !

ஏழ்கடல் வைப்பிநும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே !

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே !
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே !

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே !

வாழ்க தமிழ் மொழி ! வாழ்க தமிழ் மொழி !
வாழ்க தமிழ் மொழியே !

வானம் அளந்த அனைத்தும் அறிந்திடும்
வளர்மொழி வாழியவே !

# பிரதம ஆணையாளரின் ஆசிச் செய்தி

மாணவர்கள் இன்று சகல விடய்களையும் தெரிந்துக் கொண்டே பாடசாலைக்கு சமூகம் கொடுக்கின்றார்கள். இவர்களை வழிநடத்துவதற்கு ஆசிரியர்கள் கூடுதலான விடயங்களை அறிந்திருத்தல் அவசியமாகும். ஒரு ஆசிரியர் இன்றைய காலகட்டத்தில் தனது கடமையை நிறைவேற்ற இரட்டிப்பான செயற்பாடுடையவராக இருத்தல் வேண்டும். அதாவது தான் கூடுதலான தகவல்களைப் பெற்று (கற்றுக் கொண்டு) மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளதை ஆசிரியர்கள் அறிந்திருத்தல் வேண்டும்.

தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி மாணவர்களின் கல்வியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. எனவே ஆசிரியர் மிக கூடிய கவனம் செலுத்தி மாணவர்களுக்கு பொருத்தமான அல்லது உகந்த தகவல்களின் அடிப்படையில் பூரணமான தெளிவுடன் அவர்களை வழிநடத்திச் செல்லும் பொறுப்பினை ஆசிரியர்கள் கொண்டுள்ளனர்.

ஆசிரிய கலாசாலை பயிற்சிக் காலத்தில் ஆசிரியர்கள் பெற்ற தொழில் சார் அறிவு, அனுபவம், விசேட தேர்ச்சிகள் மற்றும் புதிய கற்பித்தல் உபாயங்கள் என்பவற்றை உபயோகப்படுத்தி மாணவர்களது கற்றலை மேம்படுத்த சகல முயற்சிகளையும் மேற்கொள்ளல் வேண்டும். இதன் மூலம் மாணவர் விருப்புடன் கற்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். மேலும் மாணவர்களது ஈடுபாட்டை அதிகரித்து நல்ல கற்றல் கற்பித்தல் சூழலை பாடசாலைகளில் ஏற்படுத்த முடியும் .

இதன்பால் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட்டு பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டினை தரமிக்கதாக ஆக்குவதன் மூலம் நல்ல பெறுபேறுள்ள கல்வியினை வழங்க முடியும்.

இச்சஞ்சிகை வெளியீட்டுக்காக உழைத்த அனைவரது பங்களிப்பிற்கும் உரிய வழிகாட்டல் வழங்கிய அதிபர், விரிவுரையாளர்கள் அனைவரது முயற்சியையும் பெரிதும் மதிக்கின்றேன்.

எமது பணியினை சிறப்புடன் செயற்படுத்த என்றும் புதிய விடயங்களை தேடிப் பெறுவதில் ஆர்வம் செலுத்துவோம்.

**நன்றி**

**க.முஹமது தம்பி**
**பிரதம ஆணையாளர்**
**கல்வி அமைச்சு.**



# கலாசாலை முதல்வரின் ஆசியுரை

இக்கலாசாலையில் பயிற்சி பெற்று வரும் ஆசிரியமாணவர்கள் தமது கலைத்திட்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் இணைபாட விதானச் செயற்பாடுகளில் இலக்கியத் துறை சார்ந்த அம்சமாக இக்கலையருவி நூலினை அழகுநிறை ஆரமாகவும், அறிவுக்கண்திறக்கும் நல்லதொரு நூலாகவும் வருடா வருடம் ஆக்கி வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அந்த வகையிலே இந்நூலானது ஒரு காலத்தின் கண்ணாடியாக தற்காலத்திற்கு பொருந்தும் வகையில் கல்விசார்ந்த அம்சங்களுடன் கூடிய கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியக் கருத்துக்களை உள்ளடக்கி எமது கரங்களிலே தவழ்கின்றது. இது தற்கால சமூகத்தின் போக்குகள், எதிர்கால மாணவ சமூகம் எவ்வாறு இருக்க போகின்றது என்பனவற்றை புலப்படுத்தக்கூடிய அறிவுபூர்வமானதொரு ஆதார நூலாகக் காணப்படுகின்றது. இதற்காக படைப்புக்களை வழங்கிய அனைத்து படைப்பாளிகளும் பாராட்டுக்குரியவர்கள்.

இவ்வாறனதொரு நூலாக்க முயற்சி வெற்றிபெற அயராது உழைத்த பொறுப்பு விரிவுரையாளர், கல்விக்கழகத் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் இணைப்பாளர் உள்ளிட்ட குழுவினருக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த முயற்சியை கலாசாலையுடன் நிறுத்திவிடாது தாம் செல்கின்ற ஒவ்வொரு பாடசாலைகள் தோறும் இது போன்ற ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே எனது அவா. இம் முயற்சிக்கு மனமார்ந்த எனது நல்லாசிகளை வழங்குவதில் பெருமிதமும் பெருமகிழ்வும் அடைகின்றேன்.

நன்றி

செ. ஜெயக்குமார்
கலாசாலை முதல்வர்



## உங்களுடன் ஒரு நிமிடம்

இலவசக் கல்வியின் மற்றுமொரு அம்சம்
ஆசிரியர்களுக்கும் இலவச பயிற்சியாகும்.

தரமான ஆசிரியர்களை உருவாக்கும் நோக்கில்
இலங்கை அரசு வழங்கும், இவ்வாய்ப்பை
உன்னதமான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள
வேண்டும்.

மாணவர்களுக்கு உணர்வூட்டி, உயிரூட்டி
சுயமாக எழக்கூடிய, வாழ்க்கை முழுவதற்குமான
“கல்வி சக்தியை” கொடுக்கும் பணி ஆசிரியர் பணி.

நூல்கள் பல்வேறு அனுபவங்களை வழங்குகின்றன.
வாழ்க்கையில் எவ்வளவு உயரத்திற்கு உயர்ந்தாலும்,
வளர்ந்தாலும், தாழ்மையும், எளிமையும் வேண்டும்.

ஏழ்மையிலும் கற்கும் மாணவர்களுக்கு, பணி செய்வது
உங்கள் கடமையாகும்.

மலைநாட்டில் இருந்து ஊற்றெடுக்கும் இந்நூல், புதிய
பார்வை, புதிய சிந்தனை, புதிய நோக்கு, புதிய உலகுக்கு
“சவாலாக” அமைய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.
மேலும்! இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைத்து
ஆசிரிய மாணவர்களையும் பாராட்டுகின்றேன்.

நன்றி

நூல் நல்ல நயம்
பல பெற
என்றென்றும் வாழ்த்துக்கள்.

**P. ஸ்ரீதரன் M.A, S.L.E.A.S**
**பிரதி அதிபர்.**



## ஆசிச் செய்தி

இவ்வருடம் எமது கல்விக் கழகத்தின் ஏற்பாட்டில் 'கலையருவி' வெளியிடப்படுவது மிக மகிழ்ச்சியைத் தருகின்றது.

மனித வாழ்வை மாண்புறச் செய்து அவ்வாழ்வின் ஒவ்வோர் கட்ட வளர்ச்சியிலும் எழுச்சியிலும் பலவேறுபட்ட விடயங்கள் பங்களிப்பு செய்துள்ளன. இவ்வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் படைப்பிலக்கியங்கள் பெரும் பங்காற்றியுள்ளன. இக்கலையருவியிலும் பல்வேறுபட்ட வடிவங்களில் படைப்பிலக்கியங்கள் மிளிர்வது கண்டு சந்தோசமடைகின்றேன். இப்படைப்பாளிகளின் எழுத்துக்கள் இன்னும் கூர்மைப் படவும் அவை சமூக வளர்ச்சிக்கும் மனித இருப்புக்கும் துணை புரியவும் வேண்டுகின்றேன். அடிமைத்தனம், சுரண்டல்கள், வன்முறைகள் என்பவற்றுக்கு எதிராக அவர்களின் எழுத்துக்கள் வீறு கொண்டெழ வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

மேலும் கலையருவி பூரணப்பட சகலவிதமான ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்கிய கல்விக் கழகத்தின் தலைவர்.V.சிவேந்திரன் செயலாளர்:-P.கதீசன் பொருளாளர்:-K.ஜெயகாந்தன் உட்பட கழக உறுப்பினர்களுக்கு வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**பிரதி அதிபர்**
**திருமதி சந்திரலேகா கிங்ஸ்லி.**



## ஆசிச் செய்தி

கொட்டகலை ஆசிரியர் கலாசாலையில் கலையருவி நூல் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் வெளிவந்து கொண்டுள்ளது. இவ்வருடமும் கலையருவி நூல் வெளிவருவதையிட்டு அகமகிழ்வடைகின்றேன். ஆசிரிய மாணவர்களின் பல்வேறு வகையான ஆக்கங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆசிரிய மாணவர்கட்கு இணைபாடவிதானச் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிகளை அளிக்கப்படும் போதே ஆசிரியர் பயிற்சியானது நிறைவடைய முடியும். அந்த வகையில் இணைபாடவிதானச் செயற்பாடுகளின் ஒருவடிவமான கலையருவி நூலுக்கான ஆக்கங்கள் அமைந்துள்ளன.

ஆசிரிய மாணவர்களின் திறமைகளை இனங்கண்டு அதனை வளர்ப்பதற்கு இவ்வாறான நூல் வெளியீடுகள் உதவும் என நம்பலாம். இந் நூலிலுள்ள ஆக்கங்கள் காத்திரமானவை அல்ல ஆனால் கனதியானவை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு மலரை வெளிக்கொணருவது பிரசவ வேதனையாகும். பொருளாதார, மனஉளைச்சல் என்பன மலராக்கக் குழுவினரை நெருக்கடிக்குள்ளாக்கின என்பதையும் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறான தாக்கங்களுக்கு மத்தியில் இந்நூல் வெளிவருவது அனைவரின் மகிழ்விற்கும் காரணமாகின்றது. எனவே கலையருவி எனும் இந்நூலானது பல சாதனைகளையும், வேதனைகளையும் தாண்டி வெளிவருவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

நன்றி
பொருப்பு விரிவுரையாளர்

**இவ்வண்ணம்**
**J. சற்குருநாதன்.**



# வாழ்த்துரை

அரசினர் ஆசிரிய கலாசாலையின் 29வது அகவைதனில் 17வது ஊற்றாக வெளிவரும் இக்கலையருவி நூலானது இம்முறையும் பல காத்திரமான படைப்புகளை தன்னகத்தே கொண்டு வெளிவருவதை இட்டு நாம் அனைவரும் உவகை கொள்கின்ற அதே வேளை அந் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்க சந்தர்ப்பம் அளித்த அனைவருக்கும் முதற் கண் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நல்லாசிரயர்களை நாடு முழுவதும் நற்பணியாற்ற உருவாக்கும் எமது கலாசாலையானது நாட்டின் நாலா பக்கங்களிலும் இருந்து வருகை தருகின்ற ஆசிரிய மாணவர்களை உள்வாங்கி அவர்களின் அறிவுசார் விருத்தியை மேம்படையச் செய்கின்றது. ஆண்டு தோறும் வெளிவரும் இக்கலையருவி நூலில் எம் ஆசிரிய மாணவர்கள் தத்தம் தனித்துவமான திறமைகளையும், தாம் கண்ட கல்விசார் அனுபவங்களையும் ஏனைய சமூகமும் உள்வாங்க வேண்டும் எனும் உயர்வான எண்ணத்துடன் இந்நூலை வெளியிடுகின்றனர். எனவே இம்முயற்சியில் அர்ப்பணிப்போடு செயற்படுகின்ற ஆசிரிய உள்ளங்களை பாராட்டுகின்றேன்.

எமது கலாசாலையானது குறைவான வளத்துடன் நிறைவான பயிற்சியையும், சிறந்த கல்விசார் அனுபவத்தையும் எமக்குப் பெற்றுக்கொடுத்திருக்கின்றது என்றால் அதற்கு முதற் காரணம் எமது கலசாலையின் சிறந்த நிர்வாக கட்டமைப்பாகும். அத்துடன் எமது கலாசாலையில் நாம் எமது கல்வித்துறையில் சிறந்த அனுபவத்தையும், நிறைவான பயிற்சியையும் பெற்றுச் செல்கின்றோம் என்பதற்கு இக்கலையருவி நூலானது சிறந்த சான்றாதாரமாக அமைகின்றது. மேலும் எமது கல்லூரியினுடைய ஒவ்வோர் ஆண்டுக்குமுரிய ஆவணப் பதிப்பாகவும், கடந்த காலத்தின் ஞாபகச் சுவடுகளாகவும் அமையும் பொருட்டு எழுத்துருவிலே இந்நூலை படைத்திருக்கின்றார்கள். ஆகவே இந்நூல் சிறப்பாக அச்சிட்டு வெளிவர ஒத்துழைப்பு நல்கிய கலாசாலையின் முதல்வர், பிரதி அதிபர்கள் மற்றும் விரிவுரையாளர்களும், கல்விக்கழக பொறுப்பு விரிவுரையாளர், மற்றும் கல்விக்கழக தலைவர், செயலாளர், பொருளாளர், கழக உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என் இதய பூர்வமான நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகிறேன்.

**அ. அஜந்தன்**
மாணவப் பேரவை தலைவர் ( 2006 - 2008 )



## வாழ்த்துரை

நமது கலாசாலை வருடா வருடம் பிரசவிக்கும் கலையருவி வரிசையில் இவ்வருட மலருக்காய் வாழ்த்துரை வழங்கக் கிடைத்த வாய்ப்புக்காய் அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன். எண்ணற்ற நூல்கள் பல செவ்வனே வெளிவரும் இக்காலக்கட்டத்தில் நம் ஆசிரிய கலாசாலை ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வித்துறை சார்ந்தோர் எனப் பல்வகைப்பட்டோரது ஆக்கங்கள் அறிவுகூர் சமூகத்துக்கு பல்வகைக் கருத்துக்களை வழங்கும் வண்ணம் ஆக்கம் கொண்டதைக் கண்டு ஆனந்தமடைகின்றேன்.

பல்துறைசார் ஆக்கங்கள் பலவற்றை ஆசிரியர்கள் ஆக்கி உயிர் கொடுத்திருப்பது கலையருவிக்கேயுரிய தனித்துவமாய் அமைந்துள்ளது. அறிவுசார் சமூகம் ஆர்வத்துடன் அதி உன்னத வெளிப்பாடாய் பிரசவித்துள்ள கலையருவியானது அனைவராலும் முழுமையாக வாசித்து பயன்பெறப்பட வேண்டும் என்பதும் தமிழ் பேசும் அனைத்துக் கரங்களிலும் இது தவழ வேண்டும் என்பதும் நம் அவா.

இப்பணி செவ்வனே நடந்தேற அயராது உழைத்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும், கல்விநேய உறவுகளுக்கும் நம் இதய நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

*புதிய சிந்தனையுடன் மலரும் கலையருவியே*
*நின் புதுமைகள் தொடரட்டும்!*

சுப்ரமணியம் பிள்ளை விஷ்வநாதன்
மாணவர் பேரவை செயலாளர்
(2006 - 2008)



## கல்விக்கழகத் தலைவரின் உள்ளத்திலிருந்து

வளர்ந்து நிற்கும் கலாசாலையின் கலைதனை வெளியிட்டு 29ஆவது அறுவடையைத் தொட்டு 17ஆவது மலராக மலர்ந்து மணம் வீசும் இக்கலையருவியின் பரிமாணத்தின் தலைவராக இருப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மலையும், மலைசார்ந்த குறிஞ்சியிலே ஊற்றெடுத்து ஆறாகப் பாய்ந்து கொண்டிருக்கும் தூய்மையான ஊற்றைப் போல எம் ஆசிரிய மாணவர்களின் உள்ளங்களிலே எடுத்த தாகங்களை தணிக்கும் வகையில் அவர்களின் சிந்தனைகளின் வெளிப்பாடுகளை இவ் ஏட்டருவியின் மூலம் எமது நாட்டின் எல்லா மாகாணங்களினதும் மண்வாசனைகளையும், எல்லா மதத்தவரின் சமூக கலாசார அம்சங்களையும், முத்தமிழின் இலக்கிய சாரல்களையும் கொண்டிருக்கும் இவ் ஏட்டருவியின் பயன் கல்விச் சமூகத்திற்கு பயனுள்ளதாக அமையும் என்பதில் எனக்கு எந்த ஐயப்பாடும் இல்லை. இம் மலரானது நாட்டின் எட்டுத்திக்கிலும் தித்திக்கும் என்பதும், மணம் வீசும் என்பதும் வெளிபடையாகும்.

இம்மலர்தனை மலர வழிவகுக்க உறுதுணையாக இருந்த முதல்வர் அவர்கட்கும், பிரதி முதல்வர்கள், பொறுப்பு விரிவுரையாளர், முழு நேர, பகுதி நேர விரிவுரையாளர்கள், மாணவப் பேரவைத் தலைவர், செயலாளர், பொருப்பாளர், கல்விக் கழகச் செயலாளர், இதழாசிரியர், பொருளாளர், இணைப்பாளர் கழக உறுப்பினர்கள், ஆசிரிய மாணவர்கள், கல்விசாரா அலுவலர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி

**கல்விக்கழகத் தலைவர்,**
**வேலுப்பிள்ளை - சிவேந்திரன்**
**(2006 - 2008)**



## கல்விக்கழக செயலாளரின் ஆசிச் செய்தி

மாறி வரும் உலகில்
மங்காத ஒளியுடன்
மடைதாண்டி ஓடிவரும் கலையருவியே!~ நீ
பதினேழாவது தடவையாகவும்
பிறப்பதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

மலையகத்தின் உயிர் நாடியான எமது கலாசாலை அன்னையவள் ஆண்டு தோறும் 'கலையருவி' எனும் மலரினை வெளியிடுவதில் உளம் பூரிப்படைகின்றாள். இம்மலருக்கு கலையருவியின் செயலாளர் என்ற வகையில் ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு மனமகிழ்வடைகின்றேன்.

எமக்கு என்றும் சிறந்த நண்பனாக அமைவது நாம் தேடிக் கற்கும் நூல்களே. இந்த வகையில் எமது ஆசிரிய மாணவர்களின் இலக்கியப் படைப்புக்களையும், நினைவுச் சுவடுகளையும் தாங்கி வரும் இந்நூலானது எம் கலாசாலையின் மற்றுமொரு வளர்ச்சிப் படி என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் இந்நூல் சிறப்புடன் வெளிவர ஆக்கமும், ஊக்கமும், அறிவுரைகளும் வழங்கிய கலாசாலை முதல்வர், பிரதி முதல்வர்கள், பொறுப்பு விரிவுரையாளர், முழுநேர பகுதிநேர விரிவுரையாளர்கள், மற்றும் ஆசிரிய நண்பர்களுக்கும், அத்துடன் இந்நூலுக்கு மேலும் ஆக்கங்களைத் தந்து சிறப்பித்த அன்பு உள்ளங்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

'கலையருவியே' - நீ
பல்வேறுப்பட்ட கலைகளைத் தன்னகத்தே கொண்டு
தனித்துவம் பெற்றிட வாழ்த்துகிறேன்.

**கல்விக் கழகச் செயலாளர்**
**பொன்னம்பலம் - கதீசன்**
**(2006 - 2008)**



கல்விக் கழகத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் கலையருவி நூலானது இம்முறையும் எமது கல்விக் கழகத்தினால் வெளியிடப்படுவதில் பெருமையடைகிறேன். எமது கலாசாலையின் ஆசிரிய பயிலுனர்கள் மற்றும் விரிவுரையாளர்கள், கல்விமான்கள் ஆகியோரின் ஆக்கங்களைத் தாங்கி வரும் இந்நூலானது அனுபவரீதியான பல செய்திகளைக் கொண்டுள்ளதுடன் அறிவு சார்ந்ததும், ஆக்க பூர்வமானதுமான பல பல கட்டுரைகள் அய்வுகள் சிறுகதைகள் என பல்வகை ஆக்கங்களை உள்ளடக்கியுள்ளது.

எம்மால் வெளியிடப்படும் இந்நூலானது எமது துறைசார்ந்த ஆக்கங்களைக் கொண்டுள்ள போதும் பல்துறைசார் வாசகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாவிடினும் துறைசார்ந்த இம்முயற்சியானது எமக்குள் ஒரு சிந்தனைக் கிளறலை ஏற்படுத்தி எதிர்காலத்தில் இவ்வாறான ஆக்கங்களை வெளியிடுவதற்கு நல்ல ஒரு தொடக்கப்புள்ளியாக அமையும் என்ற நம்பிக்கையுடன்.......

தொடர்ச்சியாக இந்நூலை வெளியிட்டு வருகின்ற கல்வி கழகத்தினருக்கும், பல்வேறு வகையிலும் உதவி புரிந்து ஆக்கங்களைத் தந்துதவிய அனைத்துப் படைப்பாளர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**ம. சாந்தரூபன்**
**இதழாசிரியர்**
**கல்விக்கழகம்**

# நூலைப்பற்றி.........

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கலையருவி |
| ஊற்று | : | 17வது |
| உரிமை | : | கல்விக் கழகம் |
| பக்கங்கள் | : | 200 |
| விடயம் | : | பொது |
| வெளியீடு | : | கல்விக் கழகம்,<br>அரசினர் ஆசிரியர் கலாசாலை,<br>கொட்டகலை |
| எழுத்தின் அளவு | : | 12புள்ளி |
| காகிதத்தின் அளவு | : | 7"X9.5" |
| அட்டைப்படம் | : | திரு.S.நந்தபாலன் |
| அச்சுப்பதிப்பு | : | நியூ ஹில்பிரைன் அச்சகம்,<br>132, திம்புள்ள வீதி,<br>ஹட்டன்.<br>தொ.பே.0777-519159 |

## கலாசாலை நிர்வாகக் குழு

முதல்வர் : திரு. S. ஜெயக்குமார்.
B.Ed (Ceylon),MATE, S.L.E.A.S.III

பிரதி முதல்வர் : திரு. P. ஸ்ரீதரன்
B.A.Dip InEd, MATE,MATHS Trd S.L.E.A.S.III

பிரதி முதல்வர் : திருமதி. சந்திரலேகா கிங்ஸ்லி
B.A.(Ons), Dip In Ed, MATE, (Rd) S.L.E.A.S.III

## முழு நேர விரிவுரையாளர்கள்

திரு. J. சற்குருநாதன் – B.A.Dip In Ed,MATE, (Rd) Agri Trd S.L.E.A.S. III P.G.D.M. (Rd)

திரு. S. இராமச்சந்திரன் – B.A.Dip In Ed,Science Trd S.L.T.S. II-II

திரு. S. சேகர் – B.A.Dip In Ed,Primary Trd S.L.T.S. II-II

திரு. A. செல்வேந்திரன் – B.Ed, Primary Trd S.L.T.S. II-II

செல்வி. K. இராணி சுலோச்சனா – National Dip In Teaching

## பகுதி நேர விரிவுரையாளர்

ஜனாப் S.M. அன்வர்டீன் – (P.T.Spc- Trd Super Grade S.L.T.S. )
திருமதி. M. விக்கிரமசிங்க – (Home Sci- Trd S.L.T.S. 2-1 )
திருமதி. S.K. ஆறுமுகம் – (Eng-Trd S.L.P.S. 2-1 )
திரு. K. செல்வராஜா – (Spc.Socil-Trd S.L.T.S1)
அருட்சகோதர. S. ஜெயவதி

## கல்விசாரா ஊழியர்கள்.

திரு.K.ராஜசேகரன்

திரு.S.ஆரோக்கியசாமி

திரு.R.முத்துவீரன்

திரு.R.ராஜாஹரிகரன்

திரு.J.அசோக்குமார்

திருமதி. S.ராஜராஜேஸ்வரி

திருமதி. S.சகுந்தலா

திருமதி. S.சாமிலி பீரிஸ்

# கல்விக் கழகம் - 2008

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு. V. சிவேந்திரன் |
| செயலாளர் | :- | திரு. P. கதீசன் |
| பொருளாளர் | :- | திரு. M. ஜெயகாந்தன் |
| இதழாசிரியர் | :- | திரு. M. சாந்தரூபன் |
| இணைப்பாளர் | :- | திரு. B. சதீஸ் |
| உபதலைவர் | :- | செல்வி. S. சுரனுதா |
| உபசெயளாளர் | :- | திருமதி. N. ஜொய்சி |

## உறுப்பினர்கள்

திரு. K. பிரதீவ்
திருமதி. V. சுகந்தி
திருமதி. S. இமல்டாநேவிஸ்மேரி
திருமதி. S. லீலாவதி
செல்வி. M.S. நூரி
செல்வி. F.A.J. ரஷ்மி
செல்வி. D. ஜென்சிகுயின்ரா

திருமதி. S. அமுதினி
திருமதி. R. ரஜேந்தினி
திருமதி. S. யசோதினி
திருமதி. D. அனற்சுகந்தி
திருமதி. P. கனேந்திரன்
செல்வி. K. சண்முகவதனி

## மாணவர் பேரவை - 2008

தலைவர் : திரு. A. அஜந்தன்
செயலாளர் : திரு. S. விஷ்வநாதன்
பொருளாளர் : திரு. S. சாந்தமூர்த்தி
இணைப்பாளர் : திரு. Y. சுதாஸ்கரன்
உபதலைவர் : -
உபசெயலாளர் : திருமதி. R. ஷியாமா பர்னாந்து

## நிர்வாக உறுப்பினர்கள்.

01. செல்வி. S. பத்மஸ்ரீ
02. திருமதி. S. லோகீசன்
03. செல்வி. J. வினித்தா மகேஷ்வரி
04. செல்வி. V. சுதர்ஷினி
05. செல்வி. B. கலாதர்ஷனி
06. செல்வி. A. ரஞ்சனி தேவமலர்
07. செல்வி. M. சசிகலா
08. செல்வி. S. தவப்புதல்வி
09. திருமதி. M.V.S. சந்தியாப்பிள்ளை
10. செல்வி. M. நளினி
11. திருமதி. S. மனோன்மணி
12. திருமதி. W.M.J. பீரிஸ்

## விளையாட்டுக் கழகம் - 2008

தலைவர் : T. தியாகராஜா
செயலாளர் : S. பகீரதன்
பொருளாளர் : S. சுவேந்திரன்
உபதலைவர் : N. J. குலாஸ்
உபசெயலாலர் : C.R.J. சுதர்சினி
இணைப்பாளர் : J. வராகினி

## உறுப்பினர்கள்

C. தேன்மொழி
K. சந்திரரமணி
S. பத்மாவதி
A. புஸ்பராணி
K. கமலாதேவி
M. தஷாயனி
V. சுகன்யா
P. சுஜிதா
K. புனிதமலர்
T. சுஜிதா
B. மேரி ஸ்ரெலா
N. சசிகலா
N. சுரெஸ்
L. தவச்செல்வம்
S. குணாநிதி
P. சிவசக்தி
M. பிரியா
P. யோகேஸ்வரி
Y. தாவீது
S. சசிகுமார்
N.M. சுதார்ஷி
J. கலிஷ்டா
K. இரத்தினகுமார்
G. வினோதினி
A. குயினா குலாஸ்
M. இரத்தினகுமாரி குருஸ்

A. யாகப்பு (யா. அந்தோனியாப்பிள்ளை)

## முத்தமிழ் கலா மன்றம் - 2008

| | | |
|---|---|---|
| தலைவர் | : | Mr. R. சுபேந்திரன் |
| செயலாளர் | : | Ms. M. சுசிகலா |
| பொருளாளர் | : | Mr. S. நந்தபாலன் |
| இணைப்பாளர் | : | Mrs. K. சந்திரரமணி |
| உபதலைவர் | : | Mrs. R. கிஷாந்தி |
| உபசெயலாளர் | : | Ms. M. பிரியா |

### உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| Ms. J. M சுஜாதா | Mrs. T. பாமினி | Mrs. S. சோதிநாதன் |
| Ms. T. மஞ்சுளா | Ms. P. தேவகி | Mrs. S. சிவகுமார் |
| Ms. K. சுமிதா | Ms. M. அஜந்தா | Mrs. S. எமில் றொமில்டன் |
| Ms. A. அருள்மலர் ராஜி | Mrs. S. கணேசநாதன் | Mrs. A. N. காமல் ஜொய்சி |
| Ms. S. றமா | Mrs. J. ஜெயரூபன் | Ms. B. சந்திரவதனி |
| Mrs. K. சிவகுமாரன் | Mrs. I. S. சாள்ஸ் றோய் | Mrs. R. கிருபாகரன் |

## ஆரம்ப கல்விக் கழகம் - 2008

| | | |
|---|---|---|
| தலைவர் | : | Ms. V. தர்ஷினி |
| செயலாளர் | : | Ms. M. சுசிகலா |
| பொருளாளர் | : | Mr. M. பிரதீப் |
| இணைப்பாளர் | : | Ms. B. கலாதர்ஷினி |
| உபதலைவர் | : | Mrs. S. மனோன்மணி |
| உபசெயலாளர் | : | Ms. G. வினோதினி |

### உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| Mr. P. லோகீசன் | Mrs. G. கிருபாகரன் | Mrs. R. கிருபாகரன் |
| Mr. V. வேலானந்தம் | Mrs. C. அருட்செல்வி | Mrs. M. சதீஸ்குமார் |
| Mr. K. கிரிசங்கர் | Ms. R. X. செல்வஜோதிகுலாஸ் | Mrs. P. சிறிக்குமரன் |
| Mrs. T. சீத்தாதேவி | Ms. S. புஸ்பலதா | Mrs. R. X. சோதிராஜன் |
| Mrs. M. பாமா | Ms. N. றூபா | Ms. R. ராஜேஸ்வரி |

## மகளிர் மன்றம் - 2008

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி S. சிவகலா |
| செயலாளர் | : | திருமதி லூமினா சில்வா |
| பொருளாளர் | : | திருமதி V. சுகந்தி |
| இணைப்பாளர் | : | திருமதி R. சசிகலா |
| உப தலைவர் | : | திருமதி. சுதர்ஷிநாயகம் |
| உப செயலாளர் | : | திருமதி. சோதிநாதன் |

### உறுப்பினர்கள்

திருமதி M.Y.E அஸ்மிளா
திருமதி . V. சுதா
திருமதி . A. கோகிலவதனி
திருமதி . S. தவமகள் ராதா
திருமதி . R. சம்சுதீன் நிசா
திருமதி . K. சந்திரா ரமணி
திருமதி . J. ஸ்ரீகாந்தா
செல்வி . S. அன்றண்ட்றுசா

## இந்துமா மன்றம் 2008

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. T. ஜெகதீசன் |
| செயலாளர் | : | செல்வி S. துஷ்யவதனி |
| பொருளாளர் | : | திரு. N. ஸ்ரீதரன் |
| இணைப்பாளர் | : | திரு. P. லோகீசன் |
| உபதலைவர் | : | திருமதி. T. ஆராதனா |
| உபசெயலாளர் | : | திருமதி. T. பராகரன் |

### உறுப்பினர்கள்

திரு. S. நந்தபாலன்
திரு. S. சாந்தமூர்த்தி
திரு. S. சிவபாலன்
செல்வி. N.M.F. நிஹாரா
திருமதி. B. ஆதீசன்
செல்வி. M.S.Y. யோகேஸ்வரன்
திருமதி. T. பரமேஸ்வரன்
செல்வி. S. உதயகுமாரி
திருமதி. S. தமிழ்ச்செல்வி
திருமதி. T. விக்னேஸ்வரன்
செல்வி. S. கிருசாந்தி
செல்வி. S. கலைவீரநளினி
செல்வி. P. கலையரசி
செல்வி. M. ஸ்ரீவிலாசினி
செல்வி. S. சுரனுதா
திருமதி. S. வரதன்
திருமதி. N. வைரமுத்து.
திருமதி. J. உதயகுமாரி
திருமதி. K. அரவிந்தன்
செல்வி. K. ஜெகதீஸ்வரி
திருமதி. N. செந்தில்நாதன்

## கிறிஸ்தவ மன்றம் - 2008

தலைவர் : Mr. M. J. ரவீந்திரன்
செயலாளர் : Ms. J. M. சுஜாதா
பொருளாளர் : Mrs. P. யேசுதாசன்
இணைப்பாளர் : Ms. A. புஸ்பராணி
உப தலைவர் : Mrs. N. W. ஜெனிற்றா பீரிஸ்
உப தலைவர் : Ms. J. அந்தோனிப்பிள்ளை

### உறுப்பினர்

Mr. M. சாந்தரூபன்
Ms. A. லிஷா
Mrs. S. ராஜ்வதனி
Ms. E. ஐறின் சோபாசினி
Mrs. A. தயாபரன்
Mrs. S. உமாதேவி
Mrs. V. தோமஸ்
Mrs. K. ரஞ்சிதமலர்
Mrs. C. எட்வேட் கூஞ்ஞ
Mrs. S. சிவபாக்கியம்.

## இஸ்லாமிய மஜ்லிஸ் - 2008

தலைவர் : திருமதி . F.H.D.D. றிஹானா.
செயலாளர் : திருமதி. A. அமீனா பீபி
பொறுளாளர் : திருமதி M. Y. F அஸ்மிலா
இணைப்பாளர் : செல்வி C. தேன்மொழி

உப தலைவர் - திருமதி U. ஹபீபா
உப செயலாளர் - திருமதி U. தாவீது

### உறுப்பினர்கள்

1.செல்வி. A. புஷ்பராணி
2.திருமதி. S. மோகன்
3.திருமதி. S. கிருபா
4.திருமதி. K. சுஜிதா
5. திருமதி. V. மணிமேகலை
6. திரு. V. சிவேந்திரன்
7. திரு. S. சுவேந்திரன்
8. செல்வி. S. தனுசியா
9. திருமதி. K. சுகன்யா
10.திருமதி. S. ஜெயந்தி
11.திருமதி. J. குலாஸ்
12. திருமதி. R. கிரிசாந்தி
13.திருமதி. J. பரதன்

# அட்டைப் படம் பற்றி.....

சமூகத்தில் பல்வேறுப்பட்டவர்கள்
இருக்கின்றபோதும்
ஏற்றத்தாழ்வு காரணமாக
கல்வித்துறை
பல்வேறு சவால்களைச்
சந்திக்க நேர்கின்றது.
பணம் படைத்தவர்கள், உயர்ந்த
வர்க்கத்தினர்கள்,
கல்வியாலும் அந்தஸ்து நிலையாலும்
மென்மேலும் உயர்வடைகின்ற போது
பணம் இல்லாத, தாழ்த்தப்பட்டவர்களுக்கு
கல்வி உரிமை மறுக்கப்பட்டு
சிறுவயதிலேயே
வேலைக்கு அமர்த்தப்பட்டு
நசுக்கப்படுகின்றனர்
என்ற "சமூக பிரச்சனையை"
இப்படம் எடுத்துக்காட்டுகின்றது.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | சமூகமும் உளவியலும் | 01 |
| 02. | சொல்லத் துடிக்குது மனசு | 07 |
| 03. | வகுப்பறத் தலைமைத்துவம் | 09 |
| 04. | Your role as a Teacher of Physical Education | 15 |
| 05. | ஜூலியஸ் நியராரேயின் அற்புதமான கல்விச் சாதனை | 17 |
| 06. | சுனாமி சிறுகதை | 20 |
| 07. | ஊனமுற்ற ஆசான் | 24 |
| 08. | கனவுகள் சுமந்த பயணம் | 26 |
| 09. | கல்வித் தொழினுட்பவியல் | 31 |
| 10. | மலர நினைத்த மொட்டொன்று... | 37 |
| 11. | கற்றல் சூழ்நிலை | 41 |
| 12. | மௌன மொழி | 45 |
| 13. | புவி அதிர்வுகளும் அதன் விளைவுகளும் | 48 |
| 14. | SMS Short cuts | 53 |
| 15. | நாட்டிய சம்பிரதாய உருப்படிகளும் அவற்றின் விரிவான விளக்கமும் | 56 |
| 16. | மனிதனின் தேடல் | 60 |
| 17. | சம்பள நாள் சிறுகதை | 62 |
| 18. | பெற்றோரே பிள்ளைகளை இணங்காணுங்கள் வாழ்வை வளமாக்குங்கள் | 64 |
| 19. | குழந்தைகளை மேதையாக்குவது எப்படி? | 66 |
| 20. | பொதுக் கல்விச் சீர்திருத்தம் ஒரு நோக்கு...... | 67 |
| 21. | கல்வி உலகின் புதிய பாதை | 73 |
| 22. | இருப்புக்கள் தான் நிலையை நிர்ணயிக்கின்றன. விருப்புக்கள் அல்ல. | 75 |
| 23. | Good Health Habits | 82 |
| 24. | பணியிடத்தைச் சிறப்பாகப் பேணும் ஐந்து பின்பற்றுதல்கள் | 83 |
| 25. | சுருக்கப்பெயர்கள் | 86 |
| 26. | எமது பண்பாட்டுக்கலை | 88 |
| 27. | நணபத்துவம் பற்றிய ஓர் கண்ணோட்டம் | 90 |
| 28. | நாடகம் கூத்து என்ற சொல்லின் தோற்றம் பற்றிய சில தகவல் | 92 |
| 29. | தமிழர் பண்பாட்டு விழுமியங்களும் விஞ்ஞான செறிவும் | 94 |

| | | |
|---|---|---|
| 30. | மலையகக் கல்வி அபிவிருத்தி | 96 |
| 31. | பெண்களும் அன்று தொட்டு இன்று வரையான சமூக நிலையும் | 101 |
| 32. | ஆசிரியர் பணியே அறப்பணி | 104 |
| 33. | தொழிலின் மகத்துவம் தொழிலாளருக்குரிய கடமைகள் உரிமைகள் என்பன பற்றி இஸ்லாமிய போதனைகள். | 106 |
| 34. | கலைகளும் சமுதாயமும் | 111 |
| 35. | நவீன தொடர்பு சாதனங்கள் | 114 |
| 36. | சிந்திக்கும் நொடியில் சிரத்தையெடுக்க சில துளிகள் | 116 |
| 37. | Rudiments of body Language and the importance of body Language | 118 |

**கவித்துளிகள்**

| | | |
|---|---|---|
| 38. | நூல் | 121 |
| 39. | மனிதம் மதிக்கப்படல் வேண்டும் | 122 |
| 40. | ஆசான் | 123 |
| 41. | கேட்பது யார் | 124 |
| 42. | தேசம் அழுகிறது | 125 |
| 43. | இனியொரு பொழுது | 126 |
| 44. | சமய சமரசம் | 128 |
| 45. | கைக்கூ.... கவிதைகள் | 130 |
| 46. | சுனாமி பேரலையின் கோரத் தாண்டவத்தால் விடை காண வினாக்களாக! | 131 |
| 47. | நூல் | 132 |
| 48. | மனித நேயத்தை வளர்ப்போம் | 133 |
| 49. | அகதி முகாம் | 135 |
| 50. | இன்றுவரை கலாசாலையை பரிணமித்த அதிபர்கள், உப அதிபர்கள், பிரதி அதிபர்கள். | 136 |
| 51. | கலாசலையில் கடந்து போன இருபத்தொன்பது வருடங்கள் இன்றுவரை கலாசாலையில் பரிணமித்த பண்புமிக்க மாணவ தலைவர்கள் | 137 |
| 52. | அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் பதக்கம் பெற்றவர்கள் | 138 |
| 54. | 2006-2008 ஈராண்டுப் பயிற்சியில் சிறந்த ஆற்றுகைக்கான விருது பெற்றோர் | 139 |
| 55. | மாணவர் பெயர் விலாசங்கள் | 140 |
| 56. | நன்றியுரை | 152 |

# சமூகமும் உளவியலும்

உளவியலும் சமூகவியலும் சங்கமிக்கும் பாலமாக சமூக உளவியல் எழுச்சி பெறுகின்றது. உளவியல் முற்றிலும் தனிமனிதவாதத்தைச் சுற்றி நிற்கும் நிலையை சமூக உளவியல் மாற்றியும், பதுக்கியும் அமைக்கும் செற்பாட்டை மேற்கொள்கின்றது. உளவியற்கல்வி தனியாளின் விஞ்ஞானமாக மேலெழுந்த நிலையைச் சீனாவில் இடம் பெற்ற பண்பாட்டுப்புரட்சி துல்லியமாகச் சுட்டிக் காட்டியது. ஏற்கனவே ருஷ்யாவின் உளவியல் விஞ்ஞானிகள் உளவியலின் சமூகத்தளத்தைத் தமது புலமைப்படைப்புக்களூடாக மீளவலியுறுத்தினர்.

தொல் சமூகங்கள் அனைத்தும் சமூகப்பிணைப்புக்களால் (SOCIAL BONDS) ஆக்கப்பெற்றன. சமூகத்தின் இயல்பும் நடத்தைகளுமே தனிமனிதர் வழியாக வெளிப்பாடு கொண்டன. தொல்குடியினரது பொருண்மிய நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு அவர்களுக்குரிய பிணைப்புக்கள் இடம்பெற்றன. அதன் வழியாகவே சமூகத்தின் அடிப்படை அலகாகிய குடும்பத்தின் சமூகமயமாக்கற் செயற்பாடுகள் இடம் பெற்றன. பண்பாடு என்பதும் குறிப்பிட்ட சமூகக்குழுவின் நடத்தைகளின் தொகுப்பைச் சுட்டிநிற்கும். அவற்றை அடியொற்றியே தனிமனித நடத்தைகளும் ஒழுங்கமைக்கப்படும். மற்றவர்களின் நடத்தைகளே தனிமனிதனின் நடத்தைகளை நெறிப்படுத்துகின்றன.

தொல் சமூகங்களின் ஆக்கங்களும் சமூக இயல்பினை முக்கியத்துவப் படுத்துகின்றன. “கலை உந்தல்” (ARTISTIC IMPULSE) என்பது அடியொற்றி மேலெழுதலைத் தொல்சமூகங்களின் கலையாக்கங்கள் வெளிப்படுத்துகின்றன. பச்சைகுத்தும் செயற்பாட்டில் (TATTOOING) தமது குலக்குறியின் சின்னத்தையே குறிப்பிட்ட குழுவில் உள்ள அனைவரும் பதித்துக்கொண்டனர். அழகுபடுத்தும் அணிகலங்களிலும் காணப்பட்ட “பொதுமைப்பாடு” கலையாக்க நடத்தைகளின் சமூகப்பிணைப்பையே வெளிப்படுத்துகின்றன.

பொருண்மிய அடிப்படை நிலைகள் மாற்றமடைய அவற்றின் வெளிப்பாடுகளாக மனித நடத்தைகளிலே நிகழ்ந்த மாற்றங்கள் சமூக உளவியல் என்ற அறிவுப்புலத்தை முக்கியம் பெறச் செய்தன. கைத்தொழிற்புரட்சியின் பின்னர், முன்னர் காணப்பட்ட சமூக அமைப்புச் சிதறியது. குடும்பக் கட்டமைப்பு மாற்றமடைந்து விரிந்த குடும்பங்கள் கருக்குடும்பங்களாக ஒடுங்கின. தனிமனித அந்நியமயப்பாடு மேலெழுந்தது. மனித நடத்தைகளை மனிதர் ஊடாட்டம் கொள்ளும் சமூக அலகுகள் உருவாக்கியும், நெறிப்படுத்தியும் வருகின்றன. அவ்வகையில் குடும்பம் பொருண்மிய நிலை, சமூக அடுக்கின் நிலை,

சகபாடிகள் என்றவாறு அலகுகள் பன்முகமாக அமைகின்றன. கூடிவாழும் உந்தல், போலச் செய்தல், கருத்தோற்றம், ஒத்துணர்வு என்றவாறான செயற்பாடுகள் சமூக இருப்பிலிருந்து மேலெழுகின்றன. கல்வி உளவியல், குழந்தை உளவியல், குற்றஉளவியல், கைத்தொழில் உளவியல், சூழல்உளவியல், தனியாள் உளவியல், மருத்துவ உளவியல், என்ற அனைத்து உளவியல் புலங்களும் சமூக உளவியலுடன் ஒன்றிணைந்த நிலையிலே சமூக உளவியலே உளவியற் கல்வியின் "இருப்புநிலை" என்று கூறப்படுகின்றது. சமூக உளவியல் இரண்டு கிளைகளாகப் பிரிந்து வளர்ச்சியுற்று வருகின்றது. உலகச்சிந்தனை வளர்ச்சியில் ஏற்பட்ட துருவப்பாடுகள் சமூக உளவியலை இரு கிளைகளாகப் பிரித்தன. அத்துருவப்பாட்டை பின்வருமாறு விளக்கலாம்.

1. தனிமனிதரிலிருந்து சமூகம் தோற்றம் பெறுகின்றதென்ற தனிமனித வாதத்தை அடியொற்றிய சமூகப் புலக்காட்சி மேலைத்தேய சமூக உளவியல் பெருமளவில் இவ்வழியே வளர்ந்து வருகின்றது.
2. சமூக இருப்பிலிருந்து தனிமனித இருப்பு உருவாகின்றதென்ற மார்க்சிய வாதம் அதாவது சமூகத்தின் அடிப்படையாதாரங்களில் மாற்றங்களை கொண்டு வருதல் வாயிலாகவே தனிமனித உள்ளங்களை மேம்படுத்த முடியும் என்ற இயங்கியல் தருக்கத்தை முதன்மைப்படுத்தும் அறிகைச் செயற்பாட்டை சமூக உளவியலாளர் பின்வரும் உள்ளடக்கங்களில் ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றார்.
   1) அறிகை இணக்க மறுப்பு - COGNITIVE DISSONANCE
   2) சமூகப்புலக்காட்சி - SOCIAL PERCEPTION
   3) சமூகமயமாக்கல் - SOCIALIZATION
   4) சமூக உளப்பாங்கு - SOCIAL ATTITUDE
   5) சமூக இடைவினைகள் - SOCIAL INTERACTIONS
   6) சமூகக்குழுக்கள் - SOCIAL GROUPS
   7) பரப்புரையும்கருத்தேற்றமும் -PROPAGANDA AND INDOTRINATION
   8) பொதுசன ஊடகங்கள் - MASS MEDIA
   9) சமூகப்பிரச்சினைகள் - SOCIAL PROBLEMS
   10) சமூக வகிபங்குகள் - SOCIAL ROLES
   11) சமூக வளஞ்செய்தல் - SOCIAL FACILITATION

அறிகை இணக்கமின்மை ஒருவரது நம்பிக்கைக்கும் நடத்தைக்குமிடையே முரண்பாடான ஒவ்வாமை உணர்வுகளை வெளிப்படுத்துகின்றது. அறிகை இணக்கமின்மையை அனுபவிப்பவர்கள் ஒன்றில் தமது நடத்தைக்கு ஏற்றவாறு மனத்திலே பதிந்துள்ள நம்பிக்கைகளை மாற்றிக்கொள்வார்கள். அல்லது ஏற்றவாறு தமது நடத்தைகளை அறுவடிவாக்கிக் கொள்வார்கள்.

புறவயமான அளவீட்டுச் சட்டகங்கள் இல்லா நிலையில் மனிதர்கள் தமது நடத்தைகளைப் பிறரது நடத்தைகளுடன் ஒப்புநோக்கிச் சீர்படுத்திக் கொள்வர். மற்றவர்கள் எப்படி எண்ணுகின்றார்கள் என்று கற்பனை செய்வது தமது நடத்தைகளைச் சீர்திருத்தி அமைப்பதற்குரிய அகவயமான உணர்வுகளை உருவாக்கிக் கொள்கின்றார்கள். இந்நிலையில் அறிகை இணக்கமின்மையைத் தணித்துக் கொள்வதற்கு சமூக மனிதரே அளவு கோல் வடிவினராக உள்ளனர்.

சமூகத்துடன் இணைந்து செல்லும் தனிமனித இயல்பை விளக்குவதற்குரிய வடிமாக சமூக உளவியலில் அறிகை இணக்கமின்மைக் கோட்பாடு உருவாக்கப்பட்டது. தன்னிலைக்கும் (SELF) மற்றவர்களுக்குமிடையே கவர்ச்சியையும் இழுவிசையையும் உருவாக்கும் காரணிகளாக, சமூகப்புலக்காட்சி, சமூகஒப்புமை ஒத்தபண்புகள் அண்மைநிலை பழக்க அனுசரணை முதலியவை அமைகின்றன. "எதிரியின் எதிரி எனது நட்புக்குரியவர்" என்பது ஒத்தபண்பைக் குறிப்பிடும். தமது எதிர் கூறலோடு பங்கு கொள்பவர்களோடு அவர்கள் குறித்த நபரின் கவர்ச்சிக்கு உரியவராகிவிடுகின்றனர். மீள மீள ஒருவரைச் சந்தித்துப் பழகும் பொழுது அவர்கள் மீது நேர்நிலையான துலங்கலை வெளிப்படுத்த முடிகிறது. வேலைத்தலங்களில் பணிபுரிவோரிடத்து இக்காரணியே ஒற்றுமையைத் தோற்றுவித்து விடுகின்றது.

சமூக உளவியல் அதிக கவனத்தை ஈர்க்கும் ஆய்வுப்புலமாகப் புலக்காட்சி விளங்குகின்றது. புலன் வழியாகத்திரட்டப்படும் அறிவின் நம்பகத்தன்மை தொடர்பான நீண்ட விவாதங்கள் மெய்யியலிலே பல்லாண்டுகளாக நடைபெற்று வந்துள்ளன. சமூக உளவியலின் வளர்ச்சி புலக்காட்சி தொடர்பான சமூகத்தலங்களைத் தேடும் செயற்பாடுகளை முன்னெடுத்தது.

சமூக இயல்புகள் புலன்கள் வாயிலான திரட்டல்களிலே திரிபுகளை ஏற்படுத்த வல்லவை. புலன்களுக்குக் கிடைக்கும் சமிக்ஞைகளில் சமூக பண்பாட்டு இயல்புகள் குறுக்கீடுகளை ஏற்படுத்தும். நிஜமான காட்சிக்கும் காட்சிப்படுத்தலுக்கும், காட்சி உட்கொள்ளலுக்கும் ஒன்றிணைப்பதற்கும் இடையே முரண்பாடுகள் எழலாம்.

அண்மையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்காட்டாக கூறலாம். பிச்சை எடுப்போர் பற்றி ஆராய விளைந்த ஒரு பேராசிரியர் பிச்சை எடுப்போர் வேடம் பூண்டு கொழும்பு நகர்ப்புறத்தில் ஒரு வாரமாக அலைந்து திரிந்தார். காண்பவர்கள் அவரை ஒரு பேராசிரியராக காணாது பிச்சை எடுப்போராகவே புலக்காட்சி கொண்டனர். அதாவது பிச்சசைக்காரருக்குரிய சமூக அந்தஸ்தே சென்ற இடமெல்லாம் தனக்கு கிடைத்ததாக அவர் குறிப்பிட்டார்.

சமூகம் தொடர்பாக ஒருவரது உள்ளத்திலே ஆக்கப்படும் வடிவம் சமூகப் புலக்காட்சியாகின்றது. ஒருவரது சமூக மயமாக்கற் செயற்பாட்டோடு இணைந்ததாக சமூகப் பாத்திரங்கள் பற்றிய காட்சிகள் மற்றும் சமூக வகிபாகம் தொடர்பான உளவமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. புலக்காட்சியை உருவாக்குவதிற் கல்வியும், கருத்தேற்றமும் ஊடகங்களும், சடங்குகளும் இடம் பெறுகின்றன. சமூக புலக்காட்சியை வர்க்கும் நோக்கிலே கூர்மைப்படுத்தும் செயற்பாட்டினை மார்க்சியத் தருக்கம் மேற்கொள்கின்றது. புலக்காட்சியும் சமூக மயமாக்கலும் ஒருவரது ஆளுமையிலும் நடத்தைகளிலும் நீடித்த செல்வாக்குகளை ஏற்படுத்துவதாக சமூக உளவியலிலே குறிப்பிடப்படுகின்றது.

சமூகத்திலுள்ள எடுத்துக்காட்டாக விளங்குபவர்களை மாதிரிகளாகக் கொண்டு ஒருவர் தமது நடத்தைகளை உருவாக்கிக்கொள்ளும் செயல்முறை சிறார் நிலையிலிருந்தே உருவாக்கம் பெறத் தொடங்கிவிடுகின்றது. ஒடுக்கு முறைகளும் எதேச்சதிகாரமும், மேலோங்கிய நாடுகளில் அடங்கி வாழ்தலும், மௌனித்து வாழ்தலும் சமூக மயமாக்கல் வாயிலாகக் கையளிக்கப்பட்டு வருகின்றன. பாராட்டுகளாலும் வெகுமதிகளாலும் அவ்நடத்தைகள் மீளவலியுறுத்தப்படுகின்றன. சமூக இயக்கத்தின் வழியாக மட்டுமன்றி சட்டங்கள், மரபுகள், கலையாக்கங்கள், சமயங்கள் வழியாகவும் சமூகமயமாக்கல் நெறிப்படுத்தப்படுகின்றது. குடும்பம் உள்ளிட்ட அனைத்து சமூக நிறுவனங்களும் குறிப்பிட்ட சமூக இயல்புகளுக்கு ஏற்றவாறு சமூகமயமாக்கற் பணிகளை செயற்படுத்துவதிலே தலையீடு கொண்ட நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக உரோமாபுரியில் யூலியஸ்சீசரின் ஆட்சிக்காலத்தில் (கி.மு.48 –44) அங்கிருந்த சமூக நிறுவனங்கள் பல ஒடுக்கப்பட்டன.

சமூகத்திலுள்ள குறிப்பிட்ட நிகழ்ச்சிகள், பொருள்கள், பாத்திரங்கள் தொடர்பாக ஒருவர் தமது உள்ளத்திலே கொண்டுள்ள பதிவுகளின் வழியாக எழுச்சி கொள்வதே உளப்பாங்கு எனப்படும். இது மனித உளவாழ்க்கையுடன் இணைந்தது. குழந்தை நிலையிற் குடும்ப வாழ்க்கையாற் கிடைக்கப் பெறும் நேர் மற்றும் எதிர்த் தூண்டிகள் உளப்பாங்குகளை ஏற்படுத்தத் தொடங்குகின்றன. ஒருவருக்கு கிடைக்கப் பெறும் சமூகக் கல்விநிலையே உளப்பாங்கு ஆக்கத்திலே பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றது.

அனைத்துப் பொருள்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான உளப்பாங்குகள் ஒரே தரத்தினதாக அமைவதில்லை. அதாவது உளப்பாங்குக் குவிப்பிலே பாரிய வேறுபாடுகள் காணப்படும். உளப்பாங்கை அளவீடு செய்யும் முயற்சிகள் சமூக உளவியலிலே அதிக முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன.

அரசியல் நடவடிக்கைகள், சமூகம் மற்றும் சமய நடவடிக்கைகள், பொருள் விற்பனையை மேம்படுத்தல் முதலான செயற்பாடுகளுக்கு உளப்பாங்கு அளவீடுகள் துணை செய்கின்றன.

குறிப்பிட்ட குழுவின் உள்ளும் புறமுமாக நிகழும் இடைவினைகள் முதலியவை சமூக உளவியலின் சிறப்பார்ந்த நிகழ்சித்திட்டங்களாக அமைகின்றன. இடைவினைகளில் இடம் பெறும் சமூக மொழி, இடைவினைத் தூரங்கள் , இடைவினைகளுக்கும் சமூக அந்தஸ்த்துக்குமுள்ள தொடர்புகள், குழுவின் ஆக்கம், அதன் அமைப்புமுறை, அதன் வகைப்பாடு, குழுவியக்கவியல் முதலியவை சமூக உளவியலின் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

குழ்நிலைச் சிகிச்சை (GROUP THERAPHY) முறை நாட்டார் உளவியலிலே இடம் பெற்று வந்தாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து அதனை நவீனப்படுத்தும் முயற்சிகள் மேலெழத் தொடங்கின. அந்த முயற்சியை முன்னெடுத்தவர்களுள் மெஸ்மர் குறிப்பிடத்தக்கவர். பின்னர் உளப்பகுப்பு உளவியலாளர் இத்துறையில் தீவிர கவனம் செலுத்தலாயினர். அவர்களைத் தொடர்ந்து மானிட உளவியலாளரும் குழுச் சிகிச்சை முறையினைக் கையாளத் தொடங்கினர்.

கல்வியும் ஊடகங்களும் மேற் கொள்ளும் கருத்தேற்ற நடவடிக்கைகளும், அவ்வாறான கருத்தேற்றங்களுக்குப் பயன்படுத்தப்படும் உளவியல் உபாயங்களும், அவற்றால் அனுகூலம் பெறுவோரின் இயல்புகளும் சமூக உளவியலின் வீச்சுக்குள் கொண்டுவரப்படுகின்றன. பரப்புரைகள் மனவெழுச்சிகளுடன் ஒன்றிணைக்கப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் அவை முடிவுகள் பற்றிய அச்சத்துடனும் தொடர்புபடுத்தப்பட்டு மனவெழுச்சிகள் விசைப்படுத்தப்படுகின்றன. தொடர்புசாதனங்கள் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளனவோ அவர்களின் செய்தியாக வெளிவருகின்றன. ஊடகங்கள் தமது செய்திகளைப் பரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் உளவியல் உபாயங்கள் பற்றிய ஆய்வும் சமூக உளவியலின் வீச்சுக்குள் கொண்டு வரப்படுகின்றன. ஊடகங்களின் ஆற்றுகைப் பலம் அவை பயன்படுத்தும் பன்முகமான உளவியல் நுட்பங்களுடன் தொடர்புபட்டுள்ளன.

சமகால வாழ்க்கைக் கோலங்களின் தெறிப்புக்கள் ஒருவர் மேற்கொள்ளும் சமூக வகிபங்குகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து வருகின்றன. சமூக வகிபங்குகள் பலவாறு பாகுபடுத்தப்படும்.

குடும்ப வகிபங்குகள், பதவிநிலை வகிபங்குகள், பண்பாட்டுநிலை வகிபங்குகள், சமயநிலை வகிபங்குகள், குழுநிலை தொடர்புகள் காரணமாக ஏற்க வேண்டிய வகிபங்குகள் என்றவாறு வகிபங்குகள் பன்முகமாகி வளரத் தொடங்கி உள்ளன. இவ் வகிபங்குகளின் இயல்புகள், ஆற்றுகைத்திறன்கள் முதலியவை சமூக உளவியலின் அறிகை வீச்சுக்குள் கொண்டுவரப்படுகின்றன. சமூக உளவியலில் தலைமைத்துவம் என்ற பொருள் பற்றிய ஆய்வும் சிறப்பிடம் பெறுகின்றது. தலைமைத்துவத்தின் வகைகள் அதற்குரிய உறுப்பண்புகள் (TRIT.) முதலியவை பற்றிய ஆய்வுகளும் சமூகவியலின் பாற்படும்.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும் பொழுது சமூக உளவியலின் முக்கியத்துவம் மேலும் வலிதாவதைக் காணலாம். உலகளாவிய முறையில் அதிகரித்து வரும் பொருண்மியச் சுரண்டலும், பறிப்பும் வருமான இடைவெளிகளின் அதிகரிப்பும் இலாப நோக்கு நடவடிக்கைகளால் சூழல் விரைந்து மாசடைதலும், மேலாதிக்க வன்முறைகளால் நிகழ்த்தப்படும் ஒடுக்கு முறைகளும், ஊடகங்களினால் வளப்படுத்தப்படும் வன்னடத்தைத் தூண்டல்களும் சமூகப் பிரச்சினைகளை அதிகரிக்கச் செய்வதுடன் தாக்கங்களின் செறிவைத் தூண்டி வருகின்றன. இந் நிலையில் சமூக உளவியல்த் துறையில் மேலும் விரிவான ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டிய தேவை மேலெழுந்து வருகின்றது.

பேராசிரியர். சபா.ஜெயராசா.

# கலாசாலையின் நிர்வாக குழு



**கலாசாலையின் நிர்வாகக் குழு இடமிருந்து வலம்**

செல்வி. K.இராணிசுலோச்சனா (விரிவுரையாளர்), திருமதி. M.விக்ரமசிங்க (பகுதிநேர விரிவுரையாளர்), திரு.K.செல்வராஜ் (பகுதிநேர விரிவுரையாளர்), திரு.S.இராமச் சந்திரன் (விரிவுரையாளர்), திரு. S.சேகர் (விரிவுரையாளர்), திரு. P.ஸ்ரீதரன் (பிரதி முதல்வர்), திரு. S.ஜெயக்குமார் (முதல்வர்),

திரு. J.சற்குருநாதன் (விரிவுரையாளர்), திரு. A.செல்வேந்திரன் (விரிவுரையாளர்), ஜனாப். S.M.அன்வர்டீன் (பகுதிநேர விரிவுரையாளர்), திருமதி. சந்திரலேகா கிங்ஸ்லி (பிரதி முதல்வர்), திருமதி. A.ஆறுமுகம் (பகுதிநேர விரிவுரையாளர்)

# சொல்லத் துடிக்குது மனசு
# சிறுகதை

வீதி எங்கும் மக்கள் கூட்டம் நான்கு திசையும் வெடிக்கும் சத்தம் திருவிழாவோ? இல்லை தமிழர்களின் அவலநிலை போர் செய்யும் சதி. இருக்கும் இடம் இழந்து, உற்றார் உறவினரை இழந்து மரங்களுக்கு கீழ் மௌனமாய் மனிதர்களின் கண்களில் மரண பயங்களோடு....... அவற்றில் நானும் ஒருத்தி.

எனது பெயர் அஞ்சலா பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு உயர் கல்வியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். போனவருடந்தான் விமானத்தாக்குதலில் தந்தையை இழந்தேன். அம்மா, தங்கை, தம்பி என்ற என் சிறிய குடும்பத்தோடு திருமணம் ஆகாமல் அக்காவின் குடும்பத்தை பாதுகாக்கும் என்மாமாவோடு போகும் இடம் தெரியாமல் ஒரு மரநிழலில் அமர்ந்துகொண்டோம்.

எனது கண்கள் நான்கு திசையும் உலாச் சென்றது. வெள்ளமாய் குவிந்திருந்த சனக் கூட்டங்களுக்குள் எம் அருகிலிருந்த வாலிபன் மூதாட்டி மீது பார்வை பதிந்தது உடுத்த உடையோடு ஓடிவந்திருக்க வேண்டும் அவர்கள் கோலத்தை பார்க்க புரிந்தது. சிறுவர்கள் பசியால் கதற உயிர்களை இழந்த குடும்பங்கள் ஒப்பாரிவைக்க அதை சொல்லவோ, எழுதவோ முடியாது கண்களால் பார்க்க வேண்டும்.

“இந்தாக்கா இதை பிள்ளைகளுக்கு கொடு” மாமா கொடுத்த பிஸ்கட்பெட்டியை அம்மா வேண்டி சின்னவர்களுக்கு கொடுத்து விட்டு எனக்கும் நீட்டினாள். “வேண்டாம்மா” “இரவில் இருந்து சாப்பிடேல இப்படி பட்டினி கிடந்தா என்னாகும் இன்னும் நிறைய தூரம் நடக்கணும் சக்தி வேண்டாமா”?

‘‘அம்மாவின் வார்த்தையை காதில் வாங்காது திரும்பினாளாம் சக்தி” என்ற வார்த்தை காதில் ஒலிக்காமலில்லை, அன்று உங்களுக்கெல்லாம் சக்தியிருந்திருந்தால் ஏனம்மா இந்த நிலை! இதயத்தில் எழுந்த கேள்வி இதயத்துள்ளே உறைந்துபோனது. மீண்டும் என் கண்கள் சுற்றத்தை நோக்கின. பார்வையை எதிலோ தொடங்கிய கண்கள் கடைசியில் அந்த வாலிபன் மீது நிலைத்தது. ஏன் இந்த மாற்றம்? இளமையின் வேகமா, வயதின்பிரச்சினையா? அல்லது அவரின் பார்வையால் கண்கள் வெட்டாது அவளைப் பார்க்கும் அவனது விழிகள் என்ன கூறுகின்றது தேடலா....காதலா...காமமா எதையும் உணரமுடியாத நிலையில் எரிச்சலோடு அவனை முறைத்துவிட்டு தெருவோரம் பார்வையை செலுத்தினேன் இது கிளிநொச்சியா?

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் உறவுப் பாலமாக இருந்த யாழ்வீதிக்கு வந்தவிதி என்ன? எங்கும் இரத்த அபிஷேகம் செய்யச் சொன்னது யார்? உயிரற்ற உடல்களை படைக்க சொன்னது யார்? யாரிடம் கேட்டால் பதில் கிடைக்கும்.

“கொஞ்சத் தூரம் நடந்தா கிணறு வரும் முகத்தை கழுவிற்று வாங்க இங்கால செல் வராதாம் இரண்டு நாளைக்கு இங்கு இருந்துட்டு சண்டை குறையப் போகலாம்”

மாமாவின் வார்த்தைகள் நிம்மதியை தருவதுபோலிருக்க சகோதரர்களை கூட்டிக்கொண்டு கிணறு நோக்கி நடந்தேன். அது ஒரு பொதுக்கிணறு கும்பலாக நின்ற சனங்களை விலக்கிக் கொண்டு எப்படி தண்ணீர் எடுப்பது யோசித்து நிற்கும் போதே!

வாளிநிறைய தண்ணீரை என் அருகில் வைத்தான். என் பார்வைக்குரியவன் “எனக்கு கையிருக்கு உங்க வேலையை பாருங்க” நான் அப்படி பேசியதும் தண்ணீரை ஆசையோடு பார்த்த தங்கை ஏமாற்றமாக திரும்பினாள்.

இரண்டு நாளில் வீடுசெல்லலாம் என்று சந்தோசமாயிருந்த எனக்கு ஒருவாரமாகியும், வெயிலிலும், குளிரிலும் உடலும், உள்ளமும் சோர்ந்துபோயின. ஆனாலும் இனம்புரியாத ஏதோ ஒரு உணர்வு அதை தந்தவன் கதீர். என் பார்வைக்குரியவன் அவனது குரல் மிகவும் இனிமையானது. அவனது பாடலைக் கேட்டு பலர் உறங்கிப் போவார்கள். அதில் நானும் ஒருத்தி. தங்கை, தம்பி அவனோடு ஒட்டிக் கொண்டார்கள். எனக்கும் அவன் மீதிருந்த நெருடல்மாறி அன்பு மலர்ந்தது. நிமிடத்திற்கு ஒருமுறை புன்னகையை அள்ளி வீசுவேன் அதற்கு அவன் பாடலை அனுப்பி வைப்பான். அன்று வெள்ளிக்கிமை நள்ளிரவு தூக்கத்திலிருந்து நான் துள்ளி எழுந்தேன். எங்கும் அவல ஓலங்கள் ஐயோ.... க...யே... ஓடு...ஓ..டு..ப..டு..படு.. பிள்ளை எங்க... ஐயோ வலிக்குது... ஒரே நேரத்தில் பல குரல்கள் கதற “பிள்ளைகள் ஓடிவாங்கோ” செல்வந்து விழுகிறது. மாமா எம்மை இழுத்துக் கொண்டு ஓட ஓடியபடியே கதீரைத் தேடினேன். அந்த இருளில் வெடித்த குண்டின் ஒளியை தவிர எவரையும் தெரியவில்லை. சற்று நேரத்தில் என் நினைவு மங்கி கீழே விழுந்தேன்.

என் தலையை வருட கண்களை விழித்தேன். மாமா, அம்மா, தங்கை, தம்பி கடவுளே ஒன்றும் ஆகவில்லை.

“அஞ்சு கெதியா எழும்பம்மா இந்த இடத்தை விட்டு போயிடலாம் இங்கையும் செல்விழுமாம்” எங்கும் காடு காடை நிறைத்து மக்கள் கூட்டம் எங்கே கதீர் என் உள்மனம் ஆவலாய்க் கேட்டது. தேடியபடியே நடந்தேன்.

மாட்டு வண்டியில் சில சாக்கு மூட்டைகள் சாக்கையும் மீறி கசிந்த இரத்தத்தை பார்த்து என் கால்கள் தள்ளாடியது.

“பாவம்அந்த பெடியன்” தனக்குள் முனங்கிய மாமாவை நெருங்கி “யார் மாமா”

“அதுதான் பாட்டுப் பாடுவானே குண்டு பட்டு உடல் சிதைந்து போயிற்றாம்” வேகமாய் திரும்பி வண்டியை பார்த்தேன். கதீர்.....கதீர்...... என் இதயம் குமுறிக் குமுறி அழும் சத்தம் வெளியே விடமுடியாமல் நடைப்பிணமாக நானும் நடக்கின்றேன்.

முற்றும்

**சுதா மனோ**
**2ம் வருடம்.**

# வகுப்பறைத் தலைமைத்துவம்

**அறிமுகம்**

வகுப்பறை முகாமைத்துவம்பற்றி பொதுவாக நாம் கூடிய கவனம் செலுத்துவதுண்டு. வகுப்பறையின் கவிநிலையை கற்றல், கற்பித்தல் செயன்முறைக்கு சாதகமாக்கி நிர்ணக்கப்பட்ட இலக்கினை அடைய சிறந்த வகுப்பறை முகாமைத்துவம் இன்றியமையாதது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. வகுப்பறை செயற்பாடுகளை திட்டமிட்டு, வளங்களைத் திரட்டி ஒழுங்கு படுத்தி, அன்றாடபணிகளை நெறிப்படுத்தி சகலசெயன்முறைகளையும் காண்பிப்பது அடிப்படை முகாமைத்துவ பணிகளாகும். அண்ணளவாக சிக்கல்களும் மாற்றங்களும் இல்லாத ஓர் அளவுக்கு நிலையான சூழ்நிலைகளில் முகாமைத்துவம் சிறப்பாக இயங்க முடியும். ஆனால் இன்றைய சமூக பொருளாதார சூழ்நிலைகள் வித்தியாசமானவை. மனிதகுலம் தனது வரலாற்றில் என்றுமே கண்டறியாத அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ICT எனப்படுகின்ற தகவல் தொடர்பாடல் தொழில் முறையியலில் ஏற்பட்டுள்ள புரடசிகரமான அதிதீவிரமான மாற்றங்கள் மனித வாழ்வின் சகல பரிணாமங்களிலும் செல்வாக்கு செலுத்துகின்றது. அறிவு பிரலாபம் ஏற்பட்டுள்ளது. இணையத்தின் வளர்ச்சி காரணமாகம் அறிவுப்பிரவாபம் இன்று தீவிரமடைந்துள்ளது. தொழின்முறையில் மனித வாழ்வை வசதிப்படுத்தியமைக்கு சமமாக சமூகத்தின் சிக்கல்த் தன்மையும் பெருமளவுக்கு அதிகரித்துள்ளது. இப்பின்னணியில் வகுப்பறையில் முகாமைத்துவம் போதுமானதாக அல்லது அதற்கு அப்பால் சென்று ஆசிரியர்கள் தலைமைத்துவ வகிபாகத்தை மேற்கொள்ளவேண்மா? என்பது இன்று முகிழ்ந்தெழுகின்ற முக்கிய வினாவாகும். இக்கட்டுரை இந்த வினாவுக்கு விடைதேட முயற்சி செய்கிறது.

தலைமைத்துவம் என்றால் என்ன?

தலைமைத்துவம் என்பது ஒரு சிக்கலான என்னக்கரு. அதனைப்பற்றி ஆய்வுசெய்த அத்தனை ஆய்வாளர்களுமே தத்தமது ஈடுபாட்டுக்கு ஏற்ப தலைமைத்துவத்தை வரைவிலக்கணப் படுத்தியுள்ளனர். எனவே தலைமைத்துவம் பற்றி எண்ணிறைந்த வரையிலக்கணங்கள் காணப்படுகின்றன. பொதுவாக “ஒரு நோக்கினை அடைவதற்கு மனிதர்கள் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஒரு செயன்முறையாக” தலைமைத்துவம் நோக்கப்படுகின்றது. “தாம் விரும்பாதவற்றையும் செய்ய வைப்பதுடன் அவற்றை விருப்பத்துடன் செய்ய வைப்பதே தலைமைத்துவம்”என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஹரிடுரூமன் (Harry Truman) கொஞ்சம் வித்தியாசமான தலைமைத்துவத்தை வரையறைப்படுத்தினார்.

மஹாத்மா காந்தி, நெல்சன் மன்டேலா போன்ற தேசியத் தலைவர்களும் லெனின், மாஓசேதுங், பிடல்காஸ்ரோ போன்ற புரட்சித் தலைவர்களும் கௌதம புத்தர், முஹம்மது நபி போன்ற ஆன்மீக தலைவர்களும் மக்களுக்கு நல்வழிகாட்டியுள்ளனர். அதே நேரத்தில் ஹிட்லர், முசோலினி, இடியமீன் போன்றவர்கள் மனித குலத்தின் அழிவுக்கு காரணமானவர்களும் கூட தலைவர்களாக இருந்துள்ளனர். எனவே தலைமைத்துவம் என்பது மிகவும் சிக்கலான, குழப்பமான ஓர் எண்ணக்கருவாகி விடுவதில் ஆச்சரியம் ஏதுமில்லை. எனவேதான் மக்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துபவர்கள் தலைவர்கள் என பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இச்செல்வாக்கு நல்வழிநோக்கியதாகவோ அல்லது தீமையை நோக்கியதாகவோ அமையலாம்.

ஏனெனில் நன்மை தீமை என்பவை சார்புப் பதங்களாகும். ஒருவர் நல்வழி என நினைப்பதை இன்னொறுவர் தீய வழியெனக் கூறலாம்.

எனினும் மனித வாழ்வில் தலைமைத்துவம் முக்கியமானது. மனிதன் காட்டுமிராண்டிகளாக காடுகளிலும், குகைகளிலும் வாழ்ந்த காலத்திலும் தலைவர்கள் இருந்துள்ளனர். மனித வரலாறு என்பதை அரசியல், சமூக, சமய, இராணுவ, கலையிலக்கிய தலைவர்களின் வரலாறாக இருந்தது என கூறலாம். மனித வாழ்வின் செயல் நெறியினை தலைவர்கள் எனும் தனிமனிதர்களே தீர்மானிக்கின்றார்கள்.

இன்று தலைமைத்துவம் பற்றி வித்தியாசமான கண்ணோட்டம் நிலவுகின்றது. தலைவர்கள் என்போர் தாம் சார்ந்த குழுவினர்க்கான தரிசன நோக்கத்தை (Vision) நிர்ணயிக்கப்படுவதோடு தமது மக்களை ஒன்றிணைத்து அத்தரிசன நோக்கத்தினை அடைவதற்காக பல்வேறு வழிகளிலும் ஊக்குவிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தவகையில் தலைமைத்துவம், முகாமைத்துவத்திலிருந்தும் வேறுபட்டு நிற்கின்றது.

## தலைமைத்துவமும் முகாமைத்துவமும் (Leadership and Management)

தலைவர்களும் முகாமையாளர்களும் ஏற்கனவே நிர்ணைக்கப்பட்ட இலக்குகளை நோக்கியே செயற்படுகின்றனர். எனவே முகாமைத்துவத்துக்கும் பொருந்துவனபோல தோன்றும். ஆனால் இவை இரண்டுக்குமிடையில் வேறுபாடுகள் உள்ளன.

வாரன் பென்னிஸ் (Warren Bennis,1985) என்னும் அறிஞர் தலைவர்,முகாமையாளருக்கிடையிலான வேறுபாடுகளைப் பின்வருமாறு ஒப்பிட்டு காட்டுகின்றார்.

## முகாமையாளரும் தலைவரும்

| முகாமையாளர் | தலைவர் |
|---|---|
| *நிர்வாகம் செய்பவர் | புதுமை புகுத்துபவர் |
| *நிறுவனத்தைப் பேணுவோர். | அபிவிருத்தி செய்பவர் |
| *கட்டமைப்புக்களில் கவனம் செலுத்துபவர். | மக்களில், பணியாளர்களில் அக்கறை காட்டுபவர் |
| *கட்டுப்படுத்துவதை நம்புவர். | பரஸ்பர நம்பிக்கையை வளர்த்தெடுப்பவர் |
| *குறுங்கால நோக்கினைக் கொண்வர். | நீண்டகால பார்வையைக் கொண்டிருப்பவர் |
| *தற்போதைய நிலைமைய ஏற்றுக் கொண்டவர | அந் நிலைமைக்கு சாவல் விடுபவர் |
| *சொன்னதை செய்யும் போர் வீரன். | சுயமான சிந்ததனை கொண்டவர |
| *எப்படி, எப்போது எனக் கேட்பவர் | ஏன் எதற்கு என வினவுபவர் |
| *.விடயங்களை சரியாக செய்பவர். | சரியான விடயங்களையே செய்பவர். |

எனவே தலைவர் என்பவர் முகாமையாளர் செய்யும் பணியினை எல்லாம் செய்பவர் என்ற போதிலும் அதற்கு அப்பால் சென்று தனது நிறுவனத்தையும் மக்களையும் உயர்மட்டத்திற்கு அழைத்துச் செல்பவராக இருப்பார். தனது நிறுவனத்தை வெறுமனே பேணுவதைவிட அதனை சூழலின் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கக் கூடிய வகையில் மாற்றி அமைக்கிறார்.

## வகுப்பறை தலைமைத்துவம்

வகுப்பறையில் கற்பிக்கின்ற ஆசிரியர் பல்வேறு முகாமைத்துவ பணிகளில் ஈடுபடுகின்றனர். தினசரி மாணவர் வரவு பதிதல், நேர அட்டவணை முதலான பல்வேறு அட்டவணைகளை தயாரித்தல், மாணவர் விபரங்களை பேணுதல், பாடப்பதிவுகளைக் கவனித்தல் முதலான பல்வேறு பணிகளும் முகாமைத்துவம் சார்ந்த பணிகளே. ஆனால் இன்று ஆசிரியரின் நிலைமாற்றும் வகிபங்காக (Transformatiomal Role) மாற்றமடைந்துள்ளது. நிலைமாற்றம் என்பது பல்வேறு பரிணாமங்களைக் கொண்டது. தனது பொறுப்பில் உள்ள மாணவர்களை சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு முககொடுக்கும் வகையில் அவர்களின் அறிவு திறன் மனப்பாங்குகளில் உரிய மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமே ஓர் ஆசிரியர் தனது நிலைமாற்று வகிபங்கினை சிறப்பாகவும் விளைதிறனுடனும் ஆற்ற முடியும். எனவே தற்கால ஆசிரியர் தனது வழமையான முகாமைத்துவ பணிகளிலிருந்து மேம்பட்டு தலைமைத்துவ வகிபங்கினை ஆற்றவேண்டிய நிலை உள்ளது. தனது மாணவர்களின் எதிர்கால உயர்வு குறித்த தரிசன நோக்கினை உருவாக்கி மேம்படுத்துவதோடு அதனை அடையக்கூடிய வண்ணம் மாணவர்களை ஊக்குவிப்பது தலைமைத்துவம் சார்ந்த பணியாகும்.

இத்தகைய தலைமைத்துவ பாங்கினை மேற்சொன்ன ஆசிரியர்களுக்கு மிகவும் உதவக்கூடிய தலைமைத்துவ கோட்பாடு யாதென்பது முக்கியமான வினாவாகும். தலைமைத்துவம் பற்றிய விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் 1930களிலேயே தோற்றம் பெற்றன. ஆரம்பகால ஆய்வுகள் பண்புக்கூறுகளின் அடிப்படையில் (Trait Theories) அமைந்தன. அதாவது தலைவர் என்பவர் குறிப்பிட்ட உடல், உள, சமூக பண்புக்கூறுகளைக் கொண்டவர்களாக இருப்பர் என இக்கோட்பாடு கூறியது. உதாரணமாக தலைவர் அதிக உயரம், புத்திக்கூர்மை, நேர்மை போன்ற பண்புகள் கொண்டவர்களாக இருப்பர். ஆனால் இப்பண்புகள் இல்லாதவர்களும் சிறந்த தலைவர்களாக இருந்திருக்கின்றனர் எனவே இக்கோட்பாடு வலுவிழந்தது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க நாட்டில் அஜோவா,ஒஹியோ,மிச்சிகன் முதலிய பல்கலைகழங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் விளைவாக நடத்தை சார் தலைமைத்துவக் கோட்பாடுகள் (Behavioral Leader ship Theories) தோற்றம் பெற்றன. இவற்றில் மிக முக்கியமான ஆய்வு பிலேக்,மோர்ட்ன் (Robert R.black Jane S.Mouton 1960) ஆகியோர் உருவாக்கிய தலைமைத்துவ சட்டகம் (Leader ship Grid ) ஆகம். இதில் பணி, பணியாளர், எனும் பரிணாமங்களின் அடிப்படையில் தலைமைத்துவ பாங்கு ஆய்வுசெய்யப்பட்டது.

மேற்கூறப்பட்ட இருவகை அணுகுமுறைகளும் தலைமைத்துவத்தை தெளிவு படுத்தாமையின் காரணத்தால்

மேற்கூறப்பட்ட இருவகை அணுகுமுறைகளும் தலைமைத்துவத்தை தெளிவு படுத்தாமையின் காரணத்தால் சூழ்நிலைசார் தலைமைத்துவக் கோட்பாடுகள் (Situational Leader Ship Theories) முன்வைக்கப்பட்டன. இவற்றில் தலைத்துவ தொடர்பகம் (Ribert Tennebaul 1958) L.P.C கோட்பாடு (Fredfiebler 1964) தலைமைத்துவம் II மாதிகை (Heresy and Blnchard) வழி, இலக்கு கோட்பாடு (Evens and House 1970) ஆகிய பல்வேறு தலைமைத்துவக் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

இந்த வரிசையில் இன்று அறிவோர் மத்தியில் மிகவும் பெற்றள்ள நிலைமாற்றுத் தலைமைத்துவம் (Transformati Leader Ship) ஆகும். 1978ல் பர்ன்ஸ் (J.M.Barns) என்பவரால் முன்வைக்கப்பட்ட இக்கோட்பாடு வேறுபல ஆய்வாளர்களினால் செலுமைப்படுத்தப்பட்டுள்ளது. தற்காலத்தில் மனித வாழ்வு மிகவும் சிக்கல் நிறைந்ததாக உள்ளது. நிறுவனங்களும், சமூகங்களும், தேசங்களும் தொடர்ச்சியான மாற்றங்களுக்கு உட்படுகின்றன. I.C.T எனப்படுகின்ற தகவல் தொடர்பாடல் தொழின் முறையியல் மற்றும் பூகோள மயமாக்கம் காரணமாக முழுஉலகமுமே இன்று நிலைமாறுதல்களுக்கு உட்படுகின்றது. இதற்கு பாடசாலைகளும் விதிவிலக்கல்ல. சமூகத்தில் எற்படுகின்ற மாற்றங்களை உள்வாங்கி தன்னை அதற்கு ஏற்ற விதத்தில் மாற்றிக் கொள்ளாது விட்டால் தற்கால பாடசாலைகள் நிராகரிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். எனவே குழப்பம் நிறைந்த சமூகப் பொருளாதார அரசியல் சூழ்நிலைகளிலிருந்து நிறுவனங்களையும் சமூகங்களையும் தேசங்களையும் காப்பாற்றி அவற்றைக் கரைசேர்க்கவும் பொருந்தியதாக இந்த நிலைமாற்றுத் தலைமைத்துவம் நோக்கப்படுகிறது.

நிலைமாற்று தலைமைத்துவம் என்பது வசீகரத் தலைமைத்துவம், உயிர்ப்பூட்டும் தலைமைத்துவம், குறியீட்டுத் தலைமைத்துவம் என்னும் வேறு நாமங்களினாலும் அழைக்கப்படுகிறது. நிலைமாற்றுத் தலைமைத்துவம் தனிநபர்களையும் நிறுவனங்களையும் மாற்றி அமைக்கின்ற ஒரு செயன்முறையாகும். தனிநபர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை இனங்கண்டு அவர்களது உடல் உள சமூக மனவெழுச்சி தேவைகளை பூர்த்தி செய்து, பொது இலக்குகளை அடைவதற்கு அவர்களை ஊக்குவிக்கு ஒரு செயன்முறையாக நிலைமாற்றுத் தலைமைத்துவம் விளங்குகின்றது. இச்செயன்முறையில் தனிநபர்களையும் நிறுவனங்களையும் மாத்திரமல்லாது தலைவர்களும் நிலைமாற்றத்துக்கு உள்ளாகின்றனர். நிலைமாற்றுத் தலைவர்கள் தமது மக்கள் உன்னதமான அடைவுகளைப் பெருவதற்கு ஊக்கிளாக செயற்படுவர்.

பர்ன்சின் கருத்துப்படி பணியாளர்களின் தேவைகளிலிருந்து தலைமைத்துவத்தைப் பிரித்து விடமுடியாது. தலைவர்களையும் பின்தொடர்வோரையும் (Follower Ship) ஒன்றினைப்பதே நிலைமாற்றுத் தலைமைத்துவமாகும். வகுப்பறைகளில் ஆசிரியர்கள் சில சந்தர்ப்பங்களில் தலைமைத்துவ பாங்குகளை வெளிப்படுத்தினாலும் பொதுவாக முகாமைத்துவ அம்சங்களையே வெளிப்படுத்தி நிற்கின்றனர். அவர்கள் வகுப்பறைகளில் பின்வருவனவற்றைப் பின்பற்றுகின்றனர்.

• மாணவர்களின் சிறந்த செயலாற்றுகைக்காக வெகுமதிகளை வழங்குதல் உதாரணமாக:- நன்றாகப் படித்தால் கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.
•ஒழுங்கு விதிகள் தராதரங்களிலிருந்து விலகும் போது அவற்றைத் திருத்தல் உதாரணம் சட்டொழுங்கு மீரப்படும் போது உரிய தண்டனை வழங்குதல்.
•மாணவரின் நலன் கருதி தீரிமானங்களை மேற்கொள்வதற்கு தயங்குதல் உதாரணம்: அதீத திறமைகாட்டும் மாணவர்களுக்கு விசேட கற்றல் ஏற்பாடுகளை ஒழுங்கமைக்க முன்வராமை.

இது பொதுவாக கொடுத்து வாங்கும் (Transactional) தலைமைத்துவமாகும். நிலைமாற்றுத் தலைமைத்துவம் இதனை விட முற்றிலும் வேறுபட்டது. நன்கு படிக்கும் மாணவர்களுக்கு கூடிய புள்ளியும் குறைவான மாணவர்களுக்கு குறைந்த புள்ளியும் வழங்குதல் கொடுத்து வாங்கும் பரிமாற்ற தலைமைத்துவமாகும். ஆனால் வகுப்பின் சராசரிப் புள்ளியை மேம்படுத்தல் அதாவது சகல மாணவர்களினதும் செயலாற்றல்களை மேம்படுத்தல் நிலைமாற்றுத் தலைமைத்துவமாகும். தவறுசெய்யும் மாணவர்களுக்கு தண்டனை வழங்குதலில் தலைமைத்துவப் பண்புகள் எதுவும் இல்லை. ஆனால் மாணவன் ஏன் தவறுசெய்கின்றான் என்பதை அறிய முயல்வதும் அதனை நிரந்தரமாக தவிர்ப்பதற்கு அவனுக்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதும் நிலைமாற்றுத் தலைமைத்துவமாகும்.

ஒரு தலைவர் நிலைமாற்றுத் தலைவராக மாறுவதற்கு என்ன செய்யவேண்டும் என்பது ஆய்வுகளின் அடிப்படையில் பின்வருமாறு முன்வைக்கப்படுகிறது.

• தெளிவான சகலரையும் ஆசீர்வதிக்கக்கூடிய தரினநோக்கினை முன்வைத்தல்.
•அத்தரிசன நோக்கினை அடைவதற்கான திட்டங்களை உருவாக்கி முன்வைத்தல்.
•பரஸ்பர நம்பிக்கையுடனும் உடன்பாடான மனப்பாங்குடனும் செயற்படுதல்.
•சிறு சிறு வெற்றிகளையும் கொண்டாடுவதன் மூலம் நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.
•தனது நடத்தையை மற்றவர்கள் உதாரணமாகக் கொள்ளும் வண்ணம் நடந்துகொள்ளல்.
•புதிய கலாசாரங்களை கட்டியெழுப்புதல்.
• மாற்றங்களை முன்வைத்தல், அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் வகையில் பணியாளரை வழிப்படுத்துதல்.

வகுப்பறை ஆசிரியரும் கூட மேற்படி அம்சங்களைப் பின்பற்றுவதன் மூலம் தன்னை ஒர நிலைமாற்றுத் தலைவராக மாற்றிக் கொள்ள முடியும். அவ்வாறு அவர் தன்னை மாற்றிக்கொள்ள முடியுமெனில் தனது வகுப்பறையும் ஒரு நிறுவனமாகக் கருதி அதன் மேன்பாடுகருதி செயற்பாடுகளை அவர் முன்னெடுக்க முடியும். நிறுவன வெற்றிக்கு பணியாளர்களின் பலம், பலவீனங்களை அடையாளம் கண்டு அவர்களது திறமைகளை உச்சத்துக்கு வளர்த்தெடுப்பதன் மூலம் நிறுவன வெற்றிக்கு வழிவகுக்க முடியும். அதுவே நிலைமாற்றுத் தலைமைத்துவமாகும்.

முடிவுரை

மனித வாழிவியலின் சகல பரிமானங்களும் இன்று புரட்சிகரமான மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளன. தெடர்பாடல், போக்குவரத்து, மருத்துவம்

தொழின் முறையியல் அசுரத்தனமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது ல்வித்துறையும்பாடசாலைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. புதிய மாற்றங்களைபாடசாலைகள் உள்வாங்காத நிலையில் அவை சமூகத்தினால் நிராகரிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகும். இவ்விடயத்தில் வகிபங்குமாற்றம் முக்கியமானது. இன்று ஆசிரியர்கள் நிலைமாற்று வகிபங்கினைஏற்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மரபு ரீதியானமுகாமைத்துவ வகிபங்கிலிருந்து அப்பாலச் சென்று தலைமைத்துவவகிபங்கினை நவீன ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். மேற்படிதலைமைத்துவ வகிபங்கினை சிறப்பாக மேற்கொள்ள நிலைமாற்றுத்தலைமைத்துவ கோட்பாடு ஆசிரியர்களுக்கு மிக்க உதவியாக இருக்கக்கூடும்.

தை.தனராஜ்
முதுநிலை விரிவுரையாளர்,
கல்விப்பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

# Your role as a Teacher of Physical Education

The future of our country belongs to the child population of today. You are entrusted with the task of developing them physical and mental through physical education. It is important to provide well planed physical activities to the children. It is your responsibility to give them opportunities to cultivate qualities such as friendship, leadership, follow ship, collectivity accepting victory of defeat calmly. Please remember that you are entrusted with an important task of producing to the society, an honest, dutiful and will disciplined youth.

The physical education activities with school should aim at realizing the educational objectives. You should create an attitude in the child so that he will engage recessional activities as adults.

Children gain experience mostly when working in a group than individually. Sportsmanship, shells, good qualities can lest be developed, when working as a team. Your leadership is very important to the child. A good social education will eradicate otimeand corruptions from future Sri Lanka. Check the child's progress in knowledge, shills and attitudes that you have provided. That will enable the teaching process success learning.

Developing the Health
Children growing up spend more time seated for about 5 – 6 hours. This is an age when they need a lot of activity. It is because of that educationist say that physical education should be a part of the school curriculum. Physical activity is swimming; competitive games, hiking, camping, educational trips and free play are some of the essentials activi9ties for maintaining good health.

Correct potures and exercises are necessary for health and physical growth. Let children understand that these activities not only improve physical growth, skills but also the correct use of the body, its beanty and smartness. A good knowledge of sports and other activities will help you to cultivate correct attitudes in children. They should be made aware that an individual body mind, social qualities, character, appearance etc,. Can be developed through physical activities. By participating in recessional activities. A good social atmosphere can be develop health habits should be formed. Explain the importance of rest and slap, just as much as food and cleanliness for healthy body. Encourage children to observe good health habits in the play ground.

Encourage cleanliness in body and cloths to the maintenance of good health.

Update your knowledge – rules and techniques of sports are constantly changing. So it is necessary that update your knowledge. The methods of the teaching learning process are also subject too change. You can renew your knowledge by participating in in-service programmes training camps, seminars; work sessions conducted by the Education Departments, N.T.E. sports ministry, and other sports bodies for various games and Athletics.

You must very clearly understand that getting a few children in your school too complete in a tournament does not complete your role as a teacher in this subject. Your main task is to cater to take messages, The entire school population should gain physically, mentally, emotionally socially and morally.

A physical Education programme planed on the above principles and operated by a skilled physical education teacher will help in the achievement of our ultimate goal developing of personality.

S. M. Anwerdeen( Lecturer)
Physical Education

# விடுகையாண்டு ஆசிரிய மாணவர்கள் 2006 - 2008
## குழு - 01



**1ம் வரிசை இடமிருந்து வலம்**
Miss. K. சுமிதா, Miss. N. M.F. நிஹாரா, Mrs. S. தவமகள்ராதா, Mrs. S. லீலாவதி, Mrs. S. ராஜ்வதணி, Miss. M.S. நூரி, Miss. S. பத்மஸ்ரீ, Mrs. S. தர்சினி, Mrs. இமல்டா நேவிஸ்மேரி, Miss. C. தேன்மொழி, Mrs. T. சீதாதேவி, Miss. T. மஞ்சுளா, Mrs. F.H.D.D. நிஹானா, Miss. S. புஸ்பலதா,

**2ம் வரிசை இடமிருந்து வலம்**
Mrs. R. அருட்செல்வி, Miss. K. ஜெகதீஸ்வரி, Mrs. S. லுமினாசில்வா, Miss.A.புஸ்பராணி, Miss.N.ரூபா, Mrs.M.சுதா, Miss.S.துஷ்யவதனி, Mrs.M.சுசிகலா, Miss.S.அன்டனிறுஷா, Miss.V.சுகன்யா, Mrs.S.கோகிலவதனி, Mrs.L.சாந்தமலர், Mrs.K.சந்திரமணி.

**3ம் வரிசை இடமிருந்து வலம்**
Miss.J.மேரிசுயாதா, Mrs.M.தஷாயனி, Mr.T.ஜெகதீசன், Mr.M.சாந்தரூபன், Mr.S.நந்தபாலன், Mr.P.லோகீசன், Mr.S.விஸ்வநாதன், Mr.K.பிரதீவ், Mr.V.சிவேந்திரன், Miss.S.சுசிகலா, Miss.J.பத்மாவதி.

To live is to learn; and to learn is to try to live better



# ஜூலியஸ் நியராரேயின் அற்புதமான கல்விச் சாதனை!

1922 - 1999

ஆபிரிக்கா மண் உலகிற்கீந்த மற்றுமோர் அருஞ் செல்வம் நியராரே. அடிப்படையில் ஓர் அரசியல்வாதியான இவர் ஒரு மாமேதையுமாவார். ஜூலியஸ் கம்பராகே நியராரே 1922 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி தன்சானியாவிலுள்ள புட்டியாமே எனுமிடத்தில் பிறந்தார். இவரின் தந்தை சனாகி எனும் பழங்குடி தலைவராக இருந்தார். நியராரே தனது பன்னிரண்டாவது வயதின் பின்னர்தான் கல்வியைத் தொடங்கினார். பாடசாலைக் கல்விக்காக தினமும் இவர் 26 மைல்கள் நடக்க வேண்டியிருந்தது. இவர் இடைநிலைக் கல்விக்காக அரசாங்கத்தின் இடைநிலைப் பாடசாலை ஒன்றுக்குச் சென்றபோது அங்கு கற்பித்த ரோமன் கத்தோலிக்க பாதிரிகளால் இவரின் புத்திக்கூர்மை உடனடியாகவே அடையாளங்காணப்பட்டது. அவர்களின் உதவியுடன் உகாண்டாவில் கம்பாலாவில் அமைந்திருந்த பல்கலைக் கழகத்தில் ஆசிரியராக பயிற்சி பெற்றார். இதன் பின் நாடு திரும்பிய இவர் மூன்றாண்டுகள் ஆசிரியராகப் பணிப்புரிந்தார். பின்னர் அரசின் புலமைப் பரிசில் கிடைக்கப் பெற்று தனது முதுகலைமாணி பட்டப் படிப்பிற்காக எடின்பரோ பல்கலைக் கழகத்திற்குச் சென்றார். இவரே முதல் முதலாக பிரித்தானியாவிற்கு பட்டப் படிப்பிற்காக தான்சானியாவிலிருந்து சென்றவர் என்ற பெருமையையும் ஆபிரிக்காவிற்கு வெளியில் பட்டம் பெற்ற இரண்டாவது நபர் என்ற பெருமையையும் பெற்றவர். இங்கிருக்கும்போதே இவர் சோஷலிச கொள்கைகளில் ஈடுபாடு காட்டினார்.

இவர் தாய்நாட்டிற்குத் திரும்பியபோது காலனித்து ஆட்சியாளர்கள் அரசியல் அல்லது ஆசிரியர் தொழில் இரண்டில் ஒன்றைதான் மேற்கொள்ளலாம் என்ற நெருக்கடியைக் கொடுத்தனர். ஆசிரியராக இருப்பது தனது தெரிவு என்றும் - அரசியல் தற்செயலானது என்றும் அவர் விவரித்தார். பல்வேறு கொள்கைகள் கொண்ட தேசாபிமானிகளை ஒன்று திரட்டி 1954 ஆம் ஆண்டு தான்சானிய ஆபிரிக்க தேசிய யூனியனை (TANU) உருவாக்கி அதன் தலைவராகவும் செயற்பட்டார். 1958 இல் அரசு கழகத்தில் நுழைந்த இவர் படிப்படியாக பல பதவிநிலைகளை எட்டி 1961ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நாடு சுதந்திரம் பெற 1962ஆம் ஆண்டில் நாட்டின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

நாடு சுதந்திரம் கண்டாலும் வறுமையின்பிடியிலும் கடன் சுமைகளிலும் இருந்து மீட்சி பெற முடியாத இக்கட்டான நிலையிலிருந்தது. தொலைநோக்கு அறிவாற்றலும் கொண்ட தலைவர் கோட்பாடுகளுக்கு உயிர் கொடுத்தார். சோஷலிச அருந்தத்துவங்களைத் தனது நாட்டுக்கும் நடைமுறைக்கும் ஏற்ற விதத்தில் புதுப்பித்தார். அவரின் தொலைநோக்கு அருஷா பிரகடமாக 1967ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

“பிறரைச் சுரண்டாமலும் தாங்கள் சுரண்டப்படாமலும் எவ்வித பாரபட்ச வேதனைகளும் இல்லாதவர்களாகத் தங்கள் அயலவருடன் சமாதானத்துடன் வாழக்கூடிய சமுதாயம் ஒன்றிலே சகலரும் சமத்துவமும் சமவாய்ப்பும் கொண்டவர்களாக வாழச்செய்வதும் தனித்த எந்த நபரும் சொகுசாக வாழ்வதற்கு முன்னதாக அனைவரும் அடிப்படை வாழ்க்கை மட்டங்கள் படிப்படியாக உயரும் நிலை ஏற்படச் செய்வதுமே தான்சானியா சோஷலிசத்தின் குறிக்கோள்” என நியராரே கொள்கை வகுத்தார். இதற்கான பல வேலைதிட்டங்களையும் மேற்கொண்டார். தனது நாட்டு மக்களின் விடுதலைக்கு மட்டுமன்றி முழு ஆபிரிக்க விடுதலைக்குமாகப் பெரும் பங்களிப்பு செய்த மாமனிதர் இவர். தென்னாபிரிக்கா, சிம்பாபே, உகாண்டா, மொசாம்பிக் ஆகிய நாடுகளின் மக்கள் விடுதலைக்காகவும் இவர் பங்களிப்புகளைச் செய்தார். இவரின் அரசியல் சித்தாந்தங்கள் அற்புதமானவை. அந்த அற்புதங்களையும் மீறிய அற்புதமே அவரின் கல்விச் சிந்தனைகள்.

தான்சானியாவில் அப்போது காணப்பட்ட கல்வி ஒருவன் எந்த சமூகத்திலிருந்து வருகின்றானோ அந்த சமூகத்திற்கானதாக அமையவில்லை என்பதை அவர் உணர்ந்தார். வெறும் காகித தகுதிகளுக்கும் பரீட்சைப் புள்ளிகளுக்கும் கல்வியில் காட்டப்படும் முக்கியத்துவங்களை இவர் வெறுத்தார். உற்பத்தித் திறன்கள் மாணவர்களுக்கு போதிக்கப்படாமையைக் கண்ணுற்றார். இவற்றிற்கான தீர்வுகளாக நியராரேயின் கல்விக் கொள்கை இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக உருவானது. தன்னெழுச்சிக்கான (SELF RELIANCE) கல்வி , வளர்ந்தோர் கல்வி என்பவையே அவை. இவரின் தன்னெழுச்சிக்கான கல்வி இந்தியாவின் மகாத்மா காந்தியின் வார்த்தா கல்விக்கு ஒப்பானது என்றும் நோக்கப்படுகின்றது.

இவரின் தன்னெழுச்சிக்கான கல்வி காலனித்துவ கல்வி முறையின் குறைப்பாடுகளையும் பொருத்தமின்மையையும் தர்க்கரீதியாக விமர்சனத்திற்குட்படுத்துவதாக அமைந்தது. அ.்.து தான்சானியாவைக் கட்டியெழுப்புவதாக உருப்பெற்றது. அ.்.து கிராமிய பொருளாதாரத்திற்கும், சோஷலிச கோட்பாடுகளுக்கும் இடமளிக்கும் விதத்தில் விரிவு பெற்றது.

அவரின் வளர்ந்தோருக்கான கல்விக் கொள்கைகள் வாழ்நாள் முழுவதற்குமாக கல்வி, விடுதலைக்கான கல்வி ஆகிய மூலக் கோட்பாடுகளை உள்ளடக்கியதாக அமைந்தது.

அவரின் அரசியல் இலட்சியத்திற்கு ஒப்பானதாக அல்லது அதனைப் பிரதிபலிக்கும் விதத்தில் அதாவது இணைந்து வாழ்தல், இணைந்து பணியாற்றுதல் என்ற குறிக்கோள்களைக் கொண்டதாக கல்வி அமைய வேண்டும் என்பதே அவரது அபிலாசையாகும்.

சுருக்கமாகச் சொல்வதானால் அவரது தன்னெழுச்சிக்கான கல்வி பின்வரும் நோக்கங்களை உள்ளடக்கியிருந்தது.

01. கல்வி கிராமிய வாழ்க்கையை இலக்காக கொண்டிருக்க வேண்டும்.

02. உற்பத்திச் செயற்பாடுகளில் ஆசிரியரும் மாணவரும் இணைந்து ஈடுபடல் வேண்டும். அத்துடன் இத்தகைய செயற்பாடுகளைத் திட்டமிடுகின்ற மற்றும் தீர்மானமெடுக்கின்ற செயன்முறைகளில் மாணவரும் பங்கேற்றல் வேண்டும்.

03. உற்பத்திப் பணியை ஒரு பகுதியாக பாடசாலைக் கலைத்திட்டம் கொண்டிருப்பதுடன் கருத்துடைய அனுபவங்கள் மூலமாக சித்தாந்த அறிவுக்கும் பிரயோகத்திற்குமிடையே ஒன்றிணைப்பு உருவாக்கப்படல் வேண்டும்.

04. பரீட்சைக்கான முக்கியத்துவங்கள் குறைக்கப்படல் வேண்டும்.

05. ஏழு வயதிலேயே பிள்ளைகளுக்கான பாடசாலைக் கல்வி தொடக்கமுற வேண்டும். (அப்படியானதால் அவர்கள் பாடசாலை விட்டு விலகும்போது தன்னெழுச்சிக்கான மற்றும் உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடிய முதிர்ச்சியைக் கொண்டிருப்பர்.)

06. வெறுமனே உயர்கல்விக்கான அடிப்படையை வழங்குவதாக அமைந்துவிட்டாலும் ஆரம்பக்கல்வி அதற்கேயுரிய முழுமையைக் கொண்டடிருத்தல் வேண்டும்.

07. மாணவர் தன்னம்பிக்கையுடையோராகவும், கூட்டுறவு மனப் பாங்குடையோராகவும் ஆகுவதுடன் தர்க்கிப்பதற்கும் ஆய்ந்தறிவதற்கான சிந்தனா வலிமையுடையோராகவும் ஆகுதல் வேண்டும்.

நியராரேயின் வளர்ந்தோர் கல்வியும் மிகுந்த கவனத்திற்குரியது. எண்ணங்களை சாத்தியமாக்கும் வழிமுறைகளை வளர்ந்தோருக்கும் போதிக்கும் விதத்திலான அவரது வளர்ந்தோர் கல்விக் கொள்கைகள் உலகின் கல்வி அறிஞர்களாலும் பொருளாதார விற்பன்னர்களாலும் பெரிதும் போற்றப்படுவன. வளர்ந்தோருக்கான கல்வியை வாழ்நாள் நீடித்த கல்வியாக முன்வைக்கும் நியராரே கற்றலுக்குரிய வளர்ந்தோரை (அ) பொதுவானோர் (ஆ) சிறப்பானோர் எனும் இரு வகுதிக்குள் அடக்குகிறார். அரசியலில் இயங்குவோர், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள், சமூக அபிவிருத்திப் பணியாளர்கள் போன்றோர் முதற் தொகுதியிலும் சுகாதாரம், விவசாயம், முகாமைத்துவம், சிறுவர் பராமரிப்பு போன்ற துறைகளில் நிபுணர்கள் இரண்டாவது தொகுதியிலும் அடங்குவர். பணிபுரியும் வாழ்க்கையோடு கற்றலும் என்றென்றும் தொடர்பைக் கொண்டிருப்பதாக நியராரே குறிப்பிடுகின்றார். “In a country dedicated to change we must accept that education and Working are both parts of living and should continue from birth until we die (Nyerere, 1973b,p.300-01).

இவரின் முன்னேற்றகரமான கல்விக் கொள்கைகள் தான்சானியாவில் நடைமுறைப்படுத்தியதன் விளைவுகள் மீது சாதக, பாதகமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் ஆபிரிக்க நாடுகளுக்குள் தான்சானியா கல்வியில் பல முன்னேற்றங்களைக் கண்டிருப்பது நியராரேயின் தொலைநோக்குச் சிந்தனையாலேயே என்பது திண்ணம். காலனித்துவத்தின் எச்சங்களாக கல்விக் கொள்கைகளை வைத்துக் கொண்டிருப்பதிலும் பார்க்க அல்லது கடன்கொடுக்கும் நிறுவனங்களின் கட்டுப்பாடுகளுக்கேற்ப கல்வித் திட்டங்களை வகுப்பதிலும் பார்க்க சுய சிந்தையுடன் தனது நாட்டுக்காக தனது மக்களுக்காக தீட்டப்பட்ட நியராரேயின் கல்விக் கொள்கைகள் மூன்றாம் உலக நாடுகளுக்குப் பெரிதும் பொருந்தக் கூடியது என பல நடுநிலைக் கல்வியியலாளர்கள், அறிஞர்கள் கருத்துரைக்கின்றனர்.

தான்சானியா சாதித்திருக்கிறது. ஒரு கறுப்பு மனிதனின் வெள்ளையுள்ளம் சாதித்திருக்கிறது.

விரிவுரையாளர்
**ஆ.செல்வேந்திரன்**

# சுனாமி - சிறுகதை

அதிகாலைப் பொழுது பருத்தித்துறைக் கடற்பரப்பு ஒரே இரைச்சலாகக் காணப்படும். அங்கே மீனவர்கள் இரவில் கடலில் சென்று விரித்த வலைகளை பகலில் சென்று கரைக்கு எடுத்துவரச் செல்வார்கள். அவர்களுக்கு உணவு எடுத்துச் செல்லும் பெண்கள் கூடியிருந்து கும்மாளம் அடிப்பார்கள். அந்தக்காலம் விடுமுறைக்காலம் ஆனபடியால் பாடசாலை சிறுவர்கள் என கடற்கரை ஒரே கும்மாளமாகக் காணப்பட்டது.

பருத்தித்துறைக் கடற்கரைக்கு அருகாமையில் பிரதான வீதி காணப்படுகிறது. அதற்கு அருகாமையில் கடலோடு அண்டி தேவாலயம் காணப்படுகிறது. பிரதான வீதிக்கு மறுகரையில் விஷாலினியின் வீடு அமைந்துள்ளது. விஷாலினியின் வீட்டிலுள்ளவர்கள் குருவிக்கூட்டம் போல் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய வீட்டில் எல்லோருக்கும் சம உரிமையே காணப்பட்டது. மார்கழிமாதம் என்றபடியால் கிறிஸ்தவர்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான். ஏனெனில் அவர்களுக்கு அந்த மாதத்தில் தான் பெரிய பூசை நடைபெறும். அதோடு புதுவருடம் பிறத்தலாகும்.

விஷாலினியும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவள்தான். அவள் பல்கலைக்கழகத்தில் முதல் வருடம் படிக்கும் மாணவி. அவளுக்கு மூன்று சகோதரர்கள். இதில் இரண்டு சகோதரியும், ஒரு சகோதரனும் ஆகும். விஷாலியின் மூத்த சகோதரி உயர்தரம் படித்துக்கொண்டிருக்கிறாள். இளையசகோதரன் தரம் ஏழிலும், இளைய சகோதரி தரம் ஐந்திலும் படித்துக்கொண்டிருந்தனர். விஷாலியின் தந்தையார் நோய்வாய்ப்பட்டு விட்டார். குடும்பம் தந்தையார் சேர்த்து வைத்த சொத்துக்களில் தான் வாழ்க்கை போய்க்கொண்டிருக்கிறது.

நத்தார் காலம் என்றபடியால் விஷாலினி வீட்டில் நின்றாள். இரண்டு சகோதரிகளுடனும் சேர்ந்து தாய்க்கு சிறு சிறு உதவிகள் செய்து கொண்டிருந்தாள். அன்று சனிக்கிழமை பொழுதுமலர்ந்து கொண்டிருந்தது. விடியற்காலை ஏழுமணிக்குத்தான் விஷாலினி எழும்பினாள். எழும்பியவள் முகம் கழுவாமல் அப்படியே இருந்தாள். அதனை நெடுநேரமாக அவதானித்த தாய் "ஏனம்மா விஷாலினி முகம் கழுவாமல் அப்படியே இருக்கிறாய்" என்று கேட்டார். அதற்கு விஷாலினி "ஏதோ விபரீதமான கனவு கண்டேன்." எனக்கூறினாள். அதெல்லாம் ஒன்றும் நடவாது நீ முகத்தைக் கழுவு பலகாரம் எல்லாம் செய்ய வேண்டும். நிறைய வேலையிருக்கு. என பெருமூச்சு விட்டாள். முகத்தைக் கழுவி தேநீர் பருகியவள் தன்னுடையசினேகிதியிடம் தொலைபேசியில் உரையாடினாள்.
"ஹலோ" சங்கவி எப்படியடி உன்ர வீட்டில் கொண்டாட்டம்.
"பரவாயில்லையடி"
"நாங்கள் இரண்டு பேரும் பல்கலைக்கழகத்திற்கு பலகாரங்களைக் கொண்டு போவம்."
"ஓமடி"
"ஓக்கே பாய்"

தொலைபேசியை வைத்தவள் தங்கை அழைக்கும் சத்தம் கேட்டுஅவள் நிற்கும் இடத்திற்குச் சென்றாள்.

“பவானி ஏன் தம்பியோட அடிபடுகிறாய்”
“இவன் என்னை குளிக்க செய்யிற வேலையைப் பாரக்கா”

தம்பியை அதட்டியவளாய் அடுக்களைக்குள் நுழைந்தாள். “அம்மா நிறைய பலகாரங்கள் செய்யுங்கோ. நான் காலையில் பல்கலைக்கழகம் போக வேணும் என்றும் சினேகிதர்கள் பலகாரத்திற்கு எதிர்பார்த்தப்படி காத்திருப்பார்கள்.” என்று கூறினாள்.

விஷா எல்லாப் பலகாரமும் செய்தாச்சம்மா உனக்குத் தேவையானதை எடுத்துக் கட்டிவை. என்றார். பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் ஆயத்தங்களைச் செய்து விட்டு நித்திரைக்குச் சென்றாள். 2006.12.26 ஆம் நாள் ஞாயிறு அதிகாலை மகிழ்ச்சியாகப் புலர்ந்தது. ஆறு மணிக்கு எழும்பியவள் அவசரஅவசரமாக வெளிக்கிட்டாள். அவள் வெளிக்கிடும் சத்தம் கேட்டு சகோதர்களும் தமது வேலைகளைச் செய்யத் தொடங்கினார்கள். “விசாலினி இந்தாம்மா|சாப்பிடு” என்று தாயார் கூறினார். எனக்கு வேண்டாம் அம்மா பசிக்கவில்லை என்று கூற தாயார்

தேநீரைக் கொண்டு வந்து கொடுத்தார். அதனைக்குடித்து விட்டு விடை பெறும் வேளையில் தாயின் கண் கலங்கியதை கண்டவள் “ஏனம்மா அழுகிறீர்கள்?” என்று கேட்டாள். கவனமம்மா இப்போதைய நாட்டு நிலைமையில் போய் வருவது என பெருமுச்சு விட்டாள்.

அம்மா இதையெல்லாம் நினைத்து கவலைப்பட வேண்டாம். என சமாதானம் கூறி எல்லோரிடமும் விடைபெற்றுச் சென்றாள். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் சென்று தனது நண்பர்களுக்கு பலகாரம் கொடுத்துச் சாப்பிட்டு சந்தோசமாக இருக்கும் அவ்வேளையில் கடற்கரைக்கு அண்மையிலிருந்த வீடுகளெல்லாம் கடல் பெருக்கெடுத்து மக்களையும், வீடுகளையும் அழித்ததாக கேள்வியுற்றாள். உடனடியாக பருத்தித்துறை பஸ்ஸில் ஏறி வீடு நோக்கி வரும்போது தான் கண்ட பயங்கர கனவையும், தாயார் வழியனுப்பும் போது கண்ணீர் விட்டதையும் நினைத்து நினைத்து அழுதவண்ணம் வந்துகொண்டிருந்தாள். “அன்னை வேளாங்கன்னி மாதாவே என் தாய், தந்தை, சகோதரர்களுக்கு ஒன்றும் நடந்திருக்கக் கூடாது.” என்று பல நேர்த்திகள் வைத்த படி பஸ்தரிப்பிடத்தை வந்தடைந்தாள். தனது வீட்டிற்கு நடக்கக் கால்எடுத்து வைத்தால் எங்கு பார்த்தாலும் சனக்கூட்டம். ஒரேநெரிசல்கள், வாகனங்கள், அம்புலன்சுகள் ஓடித்திரிகின்றன. சனத்தின் அவலக்குரல்கள் கேட்ட வண்ணம் இருக்க தனது வீட்டை நோக்கி பாதையை கடந்து சென்றாள். அங்கே தனது வீட்டையே காணவில்லை. சுற்று முற்றும் பார்த்தாள். அருகே இருந்த உறவினர்களின் வீடுகள்,தென்னைமரங்கள், மாமரங்கள் ஒன்றையும் காணவில்லை. உடைந்த வீடுகளையும் முறிந்த மரங்களையும் கண்டாள்.

அவற்றைப் பார்த்தவள் தன் தலையில் அடித்து “அம்மா அம்மா “எனக்கதறி அழுதாள். இயலாத நிலையில் மயக்கமடைந்தாள். இரண்டு மணித்தியாலங்களின் பின் தனது சந்திரா மச்சாளின் மடியில் தலை வைத்திருந்ததை உணர்ந்தாள். மச்சாளைக் கட்டியணைத்து தனது தாய் தந்தை சகோதரர்கள் எங்கே எனக்கேட்டு அழுதாள். அவற்றைக் கேட்ட மச்சாளும் சேர்ந்து அழுதாள். தனது தாய் தந்தை சகோதரர்கள் எல்லாம் இறந்து விட்டதாகக் கூறினாள்.

உனது மூத்த சகோதரி சாந்தி மட்டும் உயிரோடிருப்பதாகக் கூறினாள்.அவள் நிற்கும் வீட்டிற்கு கூட்டிச்சென்றாள். சாந்தி விஷாலினியைக் கண்டதும் "அக்கா அக்கா" என்று குளறிக்கொண்டு ஓடிவந்தாள். இருவரும் சேர்ந்து கட்டியணைத்து அழுதார்கள். மயக்கமடைந்து பின் எழும்பினார்கள். தங்கை சாந்தியை தனது மடியில் படுக்க வைத்துக் கொண்டு நடந்த சம்பவத்தைக் கேட்டாள்.

அக்கா நீங்கள் சென்ற பின்பு நான் குளித்துவிட்டு வெளிக்கிட்டுச் சந்தைக்குப் புறப்பட்டேன். அப்போது அப்பா கட்டிலில் படுத்திருந்தார்.அம்மாவும் தங்கையும் வேலை செய்துகொண்டிருந்தார்கள். தம்பி விளையாடிக் கொண்டிருந்தான். நான் சந்தைக்கு செல்ல புறப்பட்டேன். சந்தையால் மீனும் மரக்கறியும் வாங்கிக்கொண்டு வரும்போது நண்பியைக் கண்டு கதைத்தேன். பின் வீடு நோக்கி சென்ற போது மீன் சந்தைக்கு அப்பால் சனங்கள் தமது கையில் இருந்த பொருட்களை எறிந்துவிட்டு ஓடுவதையும். வாகனங்களில் வந்தவர்கள் குதித்து ஓடுவதையும் அவதானித்த நான் எனது சைக்கிளில் இருந்து இறங்கி என்ன ஓடுகிறீர்கள் ஒரு அம்மாவிடம் கேட்டேன். கடல் கொந்தளித்து வருவதாக கூறினார்கள். அதைக் கேட்டதும் நானும் சைக்கிளையும் வாங்கி வந்த பொருட்களையும் அப்படியே விட்டு விட்டு வீடு நோக்கி அம்மாவைப் பார்க்கச் சென்றேன். கடல் பெரிய இரைச்சலுடன் சுமார் 50 அடிக்கு மேல் இருக்கும் கரு நிறத்துடன் அலைகள் தூரத்தில வருவதைக் கண்ட நான் என்கு வீடு நோக்கி செல்ல முடியவில்லை. எங்கள் வீட்டை எல்லாம் தாண்டி வரும் கடல் அலைகளைக் கண்ட நான் ஓடுகின்ற கூட்டத்துடன் நானும் இணைந்து ஓடி ஓடிச் சென்றேன். பருத்தித்துறை சிவன் கோயிலடியைச் சென்றடைந்த மக்கள் கூட்டம் அங்கேயே நின்றார்கள். நானும் அங்கே நின்ற போதுதான் மச்சாள் சந்திராவைக் கண்டேன். அதன் பின்புதான் எனக்கு உயிர் வந்தது. கடலத் தாயின் சீற்றம்தான் இராட்சத சுனாமி ஆகம். என்று தனது அக்காவிற்கு கூறி முடித்தாள்.

நானும் சாந்தியும் வீட்டைப் பார்க்ச் சென்றோம் எமது வீட்டிற்கு அண்மையில் இருந்த மேல் மாடிக் கட்டடங்களையே பாணவில்லை. நாங்கள் இருந்த வீட தரைமட்டமாகவும் மரங்கள் எல்லாம் கருகிய படியும் காணப்பட்டது. எங்கள் அம்மா, அப்பா சகோதரி, தம்பி அவர்கள் எப்படி தண்ணீரில் தத்தளித்து இறந்திருப்பார்கள். என்று வீட்டு முற்றத்தில் இருந்து நானும் தங்கை சாந்தியும் " ஐயோ ஐயோ" என் அப்பா, அம்மா, சிவா தம்பி என்று தலையில் அடித்து அடித்து கதறி அழுதோம். இனி எந்தப் பிறப்பில் எங்கள் அம்மா அப்பா சகோதரர்களை பார்க்கப் போகின்றோம் என்று சொல்லி அழுதோம்.

நாங்கள் ஊரவர்கள் , பல்கலைகழக மாணவர்கள், வைத்தியசாலை நலன்புரி அமைப்புக்கள், மற்றும் தொண்டு நிறுவனங்கள் எல்லாம் வந்து சுனாமியால் கட்டிடங்களில் நெரிப்பட்டு இறந்த மக்களையும் கடல் நீர் வந்து அள்ளுண்டு இறந்த மக்களையும் தொண்டர்கள் பொது மண்டபத்தில் மக்களின் பார்வைக்கு வைத்துள்ளார்கள்.

மேலும் சிலரின் உடல்கள் வடலிப்பனைகள், மரங்களில் சிக்குண்டு இறந்து காணப்பட்டவர்களையும் வாகனங்கள் கொண்டு சென்று ஏற்றிக்கொண்டு வந்தார்கள். சிலர் வாகனங்களினுள் இறந்தும் காணப்பட்டனர்.

பொது மண்டபத்தில் பார்வைக்கு வைக்கப்பட்ட உடல்களைப் பார்த்துக் கொண்டு சென்றபோது எனது அம்மா. அப்பாவின் உடல்களைக் கண்டதும் நாங்கள் இருவரும் அருகே விழுந்து ஐயோ என்று தலையிலும் நெஞ்சிலும் அடித்துக் கதறினோம். இப்பொழுது மண்டபமே மக்களின் அலறல் சத்தத்திற்கு இடிந்து விழும் அளவிற்று ஓலக்குரல் ஒலித்த வண்ணம் இருந்தது. நானும் தங்கையும் எம் தம்பி தங்கையின் முகம் தேடி அலைந்து திரிந்தோம். அவர்களைக் காணவில்லை. சிலருடை முகம் கருகிய நிலையில் முகம் தெரியாத அளவிற்கு காணப்பட்டது. சிலர் தங்கள் உறவினர்களின் உடல்களுக்கு அஞ்சலி செலுத்தி அடக்கம் செய்தார்கள்.

மூன்றாம் நாள் கிடைத்த சிறுவர்கள் சிறுமிகளின் உடல்கள் நெரிபாட்டிற்குள் இருந்தும் மண் குவியலால் மூடப்பட்டு இருந்தவர்களைத் தோண்டி எடுத்துக் கொண்டு வந்து பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. அவர்களின் முகங்கள் ஓரளவு தெரிந்தது. அவர்களைப் பார்த்துக் கொண்டு சென்ற போது எங்கள் தம்பியையும், தங்கையையும் பார்த்து அவ்விடத்தில் இருந்து தலையை சுவருடன் மோதி அடித்துக் குளறினேன். அதைக் கண்டு ஓடி வந்த தங்கை தலையில் அடித்துக் கதறினாள். நான் தங்கையை ஆறுதல்ப்படுத்தித் தேற்றினேன்.

எமது ஊர் கிராம சேவையாளர் வந்து ஒவ்வொருவரின் உறவினர்களின் பெயரையும் பதிந்து சிலரது உடல்களில் இருந்த ஆபரணங்களைக் கழற்றி உரியவர்களிடம் கொடுத்தார். எனது தங்கைக்கு ஆசையாக செய்து கொடுத்த ஒரு கைச் சங்கிலியும், தம்பி ஆசையாக போட் மோதிரத்தையும் கிராமசேவையாளர் என்னிடம் ஒப்படைத்தார். அவற்றைப் பார்த்து அழுது கொண்டே இருந்தேன். பின் எமது வீட்டை நோக்கி நடந்தோம். எங்கு பார்த்தாலும் மக்கள் எல்லோரும் சோக நிலையில் அங்கும் இங்குமாக நடைப்பிணம் போன்று மனம் பாதித்த நிலையிலும் காணப்பட்டனர்.

எம் இருவருக்கும் எம் ஊரிலே இருக்க வெறுப்பாக இருந்தது. காரணம் அம்மா, அப்பா, சகோதரரின் நினைவுகள் அணு அணுவாகக் கொன்றது. எமது பருத்தித்துறை பிரதேசத்தில் மட்டும் பன்னிரெண்டாயிரத்து நானூற்றி இருபதிற்கு மேல் இறந்துள்ளனர். வாழ்க்கையில் இதைப் போன்ற சம்பவம் இனிமேல் வரக்கூடாது. இதை வாழ்நாளில் மறக்கவே முடியாத ஒன்றாக உள்ளது.

**திருமதி G.நாகேஸ்வரி**
**1ம் வருடம்**

# ஊனமுற்ற ஆசான்

பிள்ளைகள் இயற்கையின் இரத்த உறவுகளுடன் இணைந்து வாழ்பவர்கள். மாறிவரும் உலகத்தோடு இணைந்து வாழ ஆசான்களோடு இணைந்து வாழும் பிள்ளைகள், கல்வியில் ஏகபோக உரிமைக்கும், சவால்களுக்கும் முகம் கொடுக்கின்றார்கள். பண்பு ரீதியான அடிப்படை அம்சங்கள் எம்மை விட்டு நீங்கிச் செல்கின்றன.

உலகத்தோடு இணைந்து வாழ வேண்டும் - என்றால்
உறவுகளை வீசி எறிய வேண்டும்
உறவுகளுடன் வாழ வேண்டும் - என்றால்
உலகுடன் இணைய முடியாது.

இதனடிப்படையில் பாடசாலைகளில் நல்ல பிள்ளைகளுக்கும் ஊனமுற்ற பிள்ளைகளுக்கும் தனித்தனியாக கல்வி போதிக்கப்படுகின்றது. இதற்குள்ளே உளவியல் விளையாட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆசான்களின் குறைபாடுகள் பிள்ளைகளின் கல்வி பாதிக்கின்றது.

முழு மனநிறைவோடு வீட்டிலிருந்து புறப்படும் பிள்ளை பதற்றம், பீதி, அச்சம், பயம், தண்டனை, இழிவான சொற்பிரயோகம், பாகுபாடு, முரண்பாடு, வஞ்சனை, லஞ்சமோசடி, காமம், பாலியல்சேட்டை, குரோதமான செயற்பாடுகள் எனப் பலதை பிள்ளைகள் ஆசானின் நடத்தைக்கு முகம் கொடுத்து, சீரழிந்து மனநிறைவற்ற நிலையில் வீடு திரும்புவதை காண்கின்றோம். பிள்ளையின் உள்ளம் வெதும்பிய நிலையில் பாடசாலையை விட்டு அம்மா மடியில் உறவுக்காக ஏங்கி தூங்கும் பிள்ளையின் முகம் கண்டோம்.

பிள்ளையை தட்டி, அடித்து, உதைத்து தேடிப்படி, தேடிப்படி என்று தேன் ஒழுக வசைபாடும் ஆசான்தான் படிக்க மறப்பதேனோ! ஆசானே! நீ எப்போது கற்பதை நிறுத்துகின்றாயோ அப்போது உன் சம்பளத் தொழிலான கற்பித்தலை நிறுத்து என்று சான்றோர்கள் சொன்னது உனக்கு கேட்கவில்லை, புரியவில்லை, விளங்கவில்லை, நீ என்ன குருடா? இல்லை நீ ஒரு ஊனமுற்ற ஆசான்.

சுகதேகியாக நல்ல பிள்ளைக்கு ஊனமுற்ற ஆசானின் வழிகாட்டலும் கற்பித்தல் அணுகுமுறையும் செவிடன் காதில் ஊதிய சங்கா? குருவே! புறப்பட்டு இன்றே கற்றுக்கொள்ள தொடர்ந்து கற்றுக் கொள்ள நீ நல்ல மனிதன்......... மனிதனாக உளவியலைக் கற்றுக் கொள்வதை விட உளவியலைப் பிரயோகித்துப்பார் உண்மை புரியும். பிள்ளையானவன் பிள்ளைதான் கற்க ஆவலாய் உள்ளான். இயற்கையில் சீற்றம்! அவன் மனதை முறித்து நெஞ்சை பிளந்து பிஞ்சு உள்ளத்தை கிழிக்கின்றது.

இயற்கையின் சீற்றம் நிலநடுக்கத்தின் விளைவுகள் உயிர்களை காவு கொள்கின்றன. பயங்கரவாதத்தின் நஞ்சுக்குண்டு வெடித்து உயிர்களை அழித்து ஊனமாக்குகின்றது. விபத்து கற்பழிப்பு (Rape) கொலைகள் பிணங்களை எடுத்துச் செல்லும் காட்சிகள், சிதறிய உடல்களை அள்ளிச் செல்லும் காட்சிகள், உறவுகளை இழந்து தவிக்கும்

உள்ளங்கள் உறவுகளை, சிறுவர்களை, பெற்றார்களைக் கடத்திச்செல்லும் கும்பல்களின் நடத்தை, உறவுகளைத் தேடி அலைந்து திரியும் பிஞ்சு உள்ளங்களை மனமுறிவுடன் உன்னிடத்தில் கொடுத்தால் நீயோ! ஒரு முடவன்.

செல்போன்களில் மிரட்டல்கள், மனிதர்கள் தொலைந்து போதல் அல்லது காணாமற் போதல், புதுமையிலும் புதுமை தினந்தோறும் அவல ஓலங்கள் பிள்ளையின் மனதை ஊனமுறச் செய்யும் இயற்கையின் கொடுமை இவற்றுடன் வகுப்பில் உனது கொடுமை.

இதற்குள் ஆசானின் ஆயத்தம் இல்லாத ஆயுதம் இல்லாது வகுப்பறையின் போர்க்களம் கற்பித்தலின் சீற்றம் கொடியது. உளம் அறிந்து புரிந்து கற்பிக்கும் ஆசான் வேண்டும் மனம் திறந்து மாணவனைப் புரிந்து இன்பமாகக் கற்பிக்க வேண்டும். நல்ல பிரஜைகளை உருவாக்க கற்பிக்கும் ஆசிரியர்களும் அழியாத செல்வமாகிய கல்வியை நன்கு கற்றுணர்ந்து நற் பிரஜையாக திகழ வேண்டும்.

இயற்கையே உதிரத்தை உதிரவைக்கும் நிலையில் பாடசாலை வரும் பிள்ளையை முடமாக்காதே! உளவியல் அறிவின் கூர்நிலையில் அல்லது அபிவிருத்தியில் ஊனமுற்ற ஆசானாக இனங்காணப்படுவீர்.

P. ஸ்ரீதரன்,
பிரதி முதல்வர்.

# கனவுகள் சுமந்த பயணம்

சிறுகதை

மெல்ல மெல்ல சூரியன் தனது பொற்கரங்களை தரையினிலே பரப்பியது. கடும்பனியினால் கம்பளம் விரித்தாற்போலக் கிடந்த தாவரக்கூட்டங்கள் சிரிப்பதைப் போன்று மலர்ந்தது. பாரினிலே பறவைகள், மிருகங்கள் உறக்கம் விட்டெழுந்தன. மனிதர்கள் தங்கள் நண்பனான சூரியனை ஒருகணம் தலைவணங்கி தத்தம் கடமைகளை செய்ய முற்பட்டுக்கொண்டிருந்தன. தினமும் இவ்வாறாக பொழுது மலர்ந்துகொள்ளும். எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சியின் வெள்ளம் பெருக்கெடுத்துஓடும். நாற்புறமும் இயற்கை வனங்களையும், சிறிய நதிகளையும் வானுயர்ந்த பயன்தரு மரங்களையும், கடற்பரப் பினையும்,துகள் போன்ற வெண்மணற்பரப்பினையும் தன்னகத்தே கொண்டமைந்த முல்லை மாநகரினில் அழகிய குக்கிராமம் தான் கள்ளப்பாடு ஆகும். இக்கிராம வாசிகள் சுயதொழிலாக மீன்பிடித்து தமது ஜீவனோபாயத்தைக் காப்பாற்றி வந்தார்கள்.

அதிகாலையிலே கடற்கரையினில் சிறுசிறு படகுகளுடன் இருபாலாரும் தொழில் புரிவார்கள்.துள்ளியெழும் மீனினம் தூண்டிலில் அகப்பட்டதும் போதும் இன்று எமது வயிற்றுப்போக்குக்கு தாமரை மலர்ந்தது போன்ற முகத்துடன் தம் இல்லம் நோக்கிச் செல்வர். அப்போது தம் அருமைக் குழந்தைகளுக்கும் தம் கணவருக்கும் உண்டி கொடுப்பதற்காக தினமும் காத்திருக்கும் இல்லத்தரசிகள் இன்முகத்துடன் தன் கணவன்மாரை வரவேற்பர். அன்றைய பொழுது இனிதாய் மகிழ்வுடன் சாயும்.

இப்படியாக வந்தோரை வரவேற்று கூடியுண்டு மகிழ்ந்து வாழும் வேளையில் அவ்வூர் மக்களை கொடிய இனவாத அரசின் போர் விமானங்கள் திடீரென வானை வட்டமிட்டுக் கொள்ளும் எங்கு பார்த்தாலும் ஐயோ! ஐயோ! என்ற அவலச்சத்தம் காதைப்பிளக்கும். வானைப் பார்த்தபடி மழலைகள் மட்டுமல்ல தள்ளாடி தள்ளாடி பொல்லுடன் நடக்கும் வயோதிபர்களும் ஆங்காங்கே ஓடிக் கொள்வார்கள். வானை விட்டு போர்க் கழுகுகள் சென்றதும் கண்ணீரோடு தம் கணவன்மார்களையும், தம் மனைவி குழந்தைகளையும் தாய் தந்தை இன ஜனங்களையும் எங்கு என்று குரல் கொடுத்து அங்குமிங்கும் தேடிப்பார்ப்பார்கள். குண்டு வீச்சினால் ஒரே இரத்த வெள்ளம் ஒருபுறம் மயங்கிக் கிடப்போரும் தம் உயிரை துண்டு துண்டங்களாக கொடுத்த உடலங்களும், அங்கங்களை இழந்தவர்களுமாக அக்கிராமம் காட்சியளிக்கும்.

ஆ! இது என்ன கொடுமை. மனித உயிர்களையே குடித்து வாழும் மனிதமா? சீ.. வேண்டாம். போதும் மேன்மை கொண்ட மனித வாழ்வு என்று கூறுமளவிற்கு போர்விமானத்தின் குண்டு வீச்சுகளும் எறிகணைக் குண்டுகளும் ஒருபுறம் பொருளாதார தடை, மருந்துத்தடைகள், போக்குவரத்துத்தடை, கல்வித்தடைகள் இவ்வாறாக எத்தனைத் தடைகள். மறுபுறம் துன்பத்தின் விளக்கு பிரகாசித்துக்கொண்டிருந்த காலம் அக்காலம். இந்த அழகிய கிராமத்திலேதான் கண்ணாளன் என்பவர் வாழ்ந்து வந்தார். அப்பொழுது நல்லம்மா என்பவளைத் திருமணம் செய்து இனிதாய் வாழ்ந்து வரும் வேளை இவர்களுக்கு ஆறுகுழந்தைகள் தரணியிலே வந்துதித்தார்கள். தம் குழந்தைகளை சீராட்டி தாலாட்டி பல எண்ணங்களோடு அன்புடன் அறிவு மழலைகளாக வளர்த்து வந்தான். தினமும் அதிகாலையிலே எழுந்து நீராடி நனைந்த உடையுடன் கடல் தாயை வேண்டி கடல் நோக்கி விரைந்து படகுதனை ஓட்டி மீன்களைப் பிடித்து தன் குடும்ப வாழ்வை இனிதாக நடத்தி வருவார். சூரியன் உதித்து விட்டான். சுருண்டு கிடந்த கண்ணாளன் கண்களைக் கசக்கிக்கொண்டு எழுந்தான். அயல் வீட்டு நாய்கள் எல்லாம் ஊளையிட்டன. நடு நிசியிலும் கனவு கண்டேன். கூரையிலே ஊமத்தையும் கூவுகின்றது. என்னவோ என்று எண்ணுவதற்குள் மனைவி நல்லம்மா தேனீர் கொடுத்தாள். மடமடவென அருந்திவிட்டு கடலை நோக்கி கண்ணாளன் சகபாடிகளுடன் வழமைபோல் கடமைக்குச் செல்கின்றான்.

மூடு பனித்திரையால் விழிப்புடன் படகுதனை வணங்கிவிட்டு கடலை நோக்கி புறப்படுகின்றனர். மீன்பிடிப்படகுகள் தரையிலிருந்து மெல்ல மெல்ல நடுக்கடலை நோக்கி விரைகின்றது. திடீரென கடற்படையினரின் துப்பாக்கி வேட்டுக்களின் சத்தங்கள் இடிமுழக்கம் போல் கேட்கின்றன. திசை திரும்பும் முன் கண்ணாளனின் படகிலிருந்த செல்லையா உயிரைத்துறக்கின்றான். கண்ணாளன் திகைக்கின்றான். படகினில் ஐயோ! என்ர செல்வங்களே! என் கடவுளே! என்கின்ற ஓசை வானைப் பிளக்கின்றது. நடுக்கடலிலே துடுப்பில்லாது தத்தளிக்கும் படகுபோல் அனைவரது படகுமிருந்தது. உடனே கண்ணாளன் கடலில் குதித்து கரை சேர்கின்றான். சிறு நேரத்தில் மழையாகப் பொழிந்த குண்டுகளின் ஓசை குறைந்து கொள்கின்றன. ஊர்மக்கள் திரண்டனர். தலைவிரி கோலமாகவும் கண்ணீர் சிந்தும் விழிகளாகவும் கையில் மட்டுமன்றி இடையிலே இன்னொரு குழந்தையுடனும், அண்ணா,அப்பா என்ற குரல் கொண்டவர்கள் இன்னொரு புறமாகவும், நடக்க முடியாத வயோதிபரும் கடற்கரையைச் சூழ்ந்து கொண்டனர். அப்போது இறந்த உடல்களுடன் கரை ஒதுங்கும் சடலங்களும், வள்ளங்களும் அங்கங்களை வேட்டுக்களுக்கிரையாக்கிய உயிருடல்களுமாக கடற்கரை காட்சியளித்தது. கண்ணாளன் விழிகளை திறந்து பார்க்கின்றான் தொழிலுக்குச் செல்லும் அனைவரது குடும்பஸ்த்தர்களும் கடலுக்கு வந்து விட்டனர். என்குடுப்பத்தை காணவில்லையே விரைகின்றான் வீடு நோக்கி.....

விமான குண்டு வீச்சுக்கு இரையாகிய இரண்டு குழந்தைகளின் ஆண்டு நினைவு நாள் வருகின்றது. உறவினருக்கும் கூறி ஆண்டவனிடம் ஆத்ம சாந்திக்காக வேண்டுவதற்கு பணம் வேண்டும். இன்னொரு புறமாக தனது நான்கு பெண் குழந்தைகளையும் குப்பி விளக்கில் குனிந்து படித்தாலும் செப்பமுடன் தலை நிமிர வைக்கணும் மூத்தவள் ஒரு வைத்தியராகவும் இளையவள் ஆசிரியையாகவும் கடக்குட்டியும் ஓர் மெய்யியலாளராகவும் ஊர் புகழ ஏற்றுவேன். என தினமும் மனைவியிடம் கூறிக் கொள்வான். " ஆண்டவரே நாற்திசை போற்ற நன் மக்களை காப்பாற்றி அருள்புரிந்திடையா" என வேண்டும் வார்த்தை மக்களின் காதிற்கு கேட்கும். அவ்வாறே ஆண்டவரும் அருள் கொடுத்து மூத்தவள் வைத்திய கல்லூரிக்கும் இளையவள் ஆசிரிய வேலைக்கும் கடிதம் வருகிறது. தொழிலுக்கு தினமும் இவ்வாறே சென்று வந்தான் கண்ணாளன். சீர் குலைந்த உடையுடனும் கண்ணீரோடும் வீடு நோக்கி செல்கிறான். வீதியின் இரு மருங்கிலும் அவலக்குறி கொண்ட தோரணங்கள். வீட்டு முற்றத்தில் வெண்திரைமூட்டமும் சனக்கூட்டமுமாக காட்சியளிக்கும் நிலையை பார்த்த போது குரல் நடுங்க ஐயோ!.. என்று விரைகிறான். மைத்துனன் கட்டி தழுவி அக்கா போயிட்டா அத்தான். எங்களால் காப்பாற்ற முடியல என்றதும் கண்ணாளன் மயக்கமடைகின்றான். ஒருவாறு மயக்கம் தெளிந்து தலையை சற்று உயர்த்தி பார்க்கின்றான். மனைவிக்கான இறுதி மரணக் கிரிகை நடக்கின்றது. தன் மனதை தேற்றிக் கொண்டு அனைத்து கிரிகைகளையும் செய்து முடிக்கின்றான்.

தினமும் நோயின்றி வாழ்ந்து வந்த நல்லம்மா அன்று நெஞ்சு வலியால் துடித்துப் போகின்றாள். வீட்டில் யாருமில்லை.அயல் வீட்டிற்கு ஓடுகிறாள். வாகனங்கள் எதுவுமில்லாததால் துவிச்சக்கர வண்டியில் செல்லையா முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்கின்றார். சிகிச்சைகள் துரிதமாக நடை பெற்றுக் கொண்டிருந்தது. போதியளவு மருந்துகள் இல்லாத காரணத்தால் கூடிய முயற்சி இருந்தும் நல்லம்மாவைக் காப்பாற்ற முடியவில்லை. சிறிது நேரத்தில் மூச்சற்றுப் போகின்றாள். வைத்தியர்களின் முன்னிலையில் உயிர் துறந்த நல்லம்மாவின் இறுதி அஞ்சலியின் பின் அடக்கம் செய்கின்றார்கள். தாயின்றி வாழும் தன் குழந்தைகளுக்கு தாயாக காட்சி கொடுத்து வரும் வேளை நாட்டிலே போர் இன்றி சமாதானம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

கண்ணாளன் எண்ணியது போன்ற தன் கனவுகளை நனவாக்க சுறுசுறுப்புடன் அல்லும் பகலும் அயராது உழைக்கின்றான். வழமைபோல் கடல் தொழிலுக்குச் செல்கிறான். மீன்கள் நிறைய பிடிபடுகின்றது. யாவற்றையும் விற்று பணம் சேர்க்கின்றான். அச் சந்தோசத்தாலும் எக்காலமும் தனது இல்லத்தில் எந்த பண்டிகையும் விழாவும் செய்யவில்லை.

ஆயினும் தன் மக்களின் கல்வி மேன்மையின் சந்தோசத்தாலும் நாட்டின் சமாதானத்தின் சந்தோசத்தாலும் இம்முறை நத்தார் பண்டிகையை செய்ய எண்ணுகிறான். வீட்டில் பட்டாசு வெடிகளும் இனிய கீதங்களும் ஆண்டவரின் இசைக் கானமும் வீட்டை பெருக்குவதுடன் சூழலையும் சுத்தமாக்கி வருகிறான். நாளை பண்டிகை இவ்வளவு காலமும் வேதனைகளுடன் வாழ்ந்தேன். ஆயினும் எவ்வளவு சந்தோசம் இன்று! என் கனவுகள் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் ஆண்டவருக்கு நன்றி கூறிக் கொண்டு அன்றிரவு அமைதியாக தூக்கமடைகின்றான்.

சேவல் கூவுகின்றது. ஆலயமணி ஒலிக்கின்றது. கண்ணாளன் தன் கடமைகளை செய்வதற்காக எழுந்து ஆண்டவரை வேண்டி வழமைபோல் கடலுக்குச் சென்று படகினை எடுத்துக் கொண்டு செல்கிறான். கண்ணாளனுடன் சக படகுகளும் தொழிலுக்காகச் செல்கின்றது. ஊரிலே தொழில் புரிபவர் தத்தம் தொழிலுக்குச் செல்கின்றனர். பாடசாலை மாணவர்களும் பாடசாலை செல்கின்றனர். சந்தையில் சனக்கூட்டம் நிறைந்த பொழுதாக மலர்ந்து கொண்டிருந்தது. கண்ணாளனுடைய படகு நடுக்கடலை அடைந்தது. மும்மரமாக மீன் பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான்.

கடலிலே திடீரென பெரும் சத்தத்துடன் வானுயர அலை எழும்புகின்றது தரை நோக்கி செல்கின்றது. கடற்கரையை அண்மித்த பகுதிகள் யாவையும் கடல்நீர் விட்டுவிடவில்லை. சாதிமத இன பேதமின்றி சிறுவர் முதல் பெரியவர்வரை எத்தனையோ உயிர்களை பறித்துக் கொண்டது. நிலத்திலே பல சேதங்களை விளைவித்தது. மனித உயிர்கள் மட்டுமன்றி ஏனைய உயிர்களையும் பலியெடுத்தது. அந்த பெரிய அலை. நடுக்கடலில் நின்று பார்க்கிறான். சொற்ப மணி நேரத்தில் கடலலை செய்ததை நினைத்து கடலிலே கதறுகின்றான். செய்வதறியாது திகைக்கின்றான். தனக்கு அண்மித்த தூரமதிலிருந்த படகுகள் யாவற்றையும் காணோமே அலைச்சத்தம் இன்றிப் போகின்றது. கரையை நோக்கி விரைகின்றான்.

எத்தனையோ உயிர்களை கொள்ளை கொண்ட கடற்கரையை வந்தடைகின்றான். சிதறல்களாக கிடக்கும் உடலங்களும் ஆங்காங்கே பாறி வீழ்ந்த மரங்கள் கட்டிடங்கள் பொருட்கள் அழிவின் சின்னங்கள் ஒப்பிடமுடியாத இடுகாடாக காட்சியளிக்கும் தன் ஊரைப் பார்க்கின்றான். தன் குழந்தைகளை பெயர் கூறி அழைக்கின்றான். யாரையும் காணவில்லை பக்கத்து வீட்டிற்கு செல்கின்றான். செல்லையாண்ண பனையின் கீழும் பார்வதியக்கா பாழாங்கிணற்றுக்குள்ளும் மணியம் மரத்தின் மீதும் காண்கின்றான். தன் குடிசையை நோக்கியவன் சுடலை போன்று சின்னம் எதுவுமில்லாத அந்த நிலைமையை காணுகின்ற கண்ணாளன் மயக்கமடைந்து மனநோயாளியாகின்றான்.

2004.12.26 அன்று முல்லைத்தீவு முதல் கடற்கரை பிரதேசங்கள் யாவுமே சுனாமியால் பாதிப்படைகின்றது. மீட்புப் பணியில் பலர் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். எங்கும் மரண ஓலம் வைத்தியசாலைகள் யாவும் நோயாளிகள் பலவித நோய்கள் கண்ணாளனுடைய குழந்தைகள் மூவரையும் சுனாமி கொள்ளளையிட்டுக் கொண்டது. அவனது இளைய புதல்வி புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றாள். தொற்று நோய்ப்பிரிவில் கண்ணாளன் மனநோயாளியாகவும் மறுகட்டிலில் தன் சுய நினைவுகள் வரும்போது விழிக்கின்றான். இரத்தம் கையில் குழாய்மூலம் ஏறுவதனையும் காயங்களால் முனுகலுற்றுக் கிடக்கும் தன் மகளை அணைக்க எழுந்து செல்கின்றான். மருத்துவ தாதியினர் மறுக்கின்றனர். தன் மகளை கட்டியணைக்க முடியாத போது மீண்டும் மனமாற்றமடைகின்றான். நான்கு நாழிகையின் பின் மகள் இறக்கின்றாள்.

நோய் குணமடைந்து மீண்டும் கள்ளப்பாடு செல்கின்றார். தனக்குமட்டுமல்ல அவ்வூர் மக்களுக்கும் சொல்ல முடியாத துன்பம்தான். இவ்வளவு காலமும் நாட்டில் இனவாதத்தால் துன்புற்றோம். இன்று இயற்கையால் துன்புற்றுள்ளோம். இயற்கை செய்த இழப்பிற்கு யார் பொறுப்பேற்க முடியும். ஆண்டவரின் உறைவிடம் செல்கின்றான். அங்கே முல்லை மாநகரில் பேரலையால் உயிர் துறந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நிலையில் தூண்களைக் காண்கின்றான். தன்னுடைய கனவுகள் மட்டுமல்ல இவ்வுயிர்கள் யாவும் எத்தனை கனவுகளைச் சுமந்து வாழ்ந்திருக்கும். வாய் பேசாத மழலைகள் கூட உயிர் துறந்து விட்டனரே. தோன்றி மறையும் நீர்க்குமிழிகள் போன்றுமனித வாழ்வும் நிலையற்றது. சூரியன் தோன்றி மறைவதும் பின் தோன்றுவதும் உயிர்கள் பிறப்பதும் இறப்பதும் இயல்பானதே என்று உணர்ந்து கொண்டு வீடு நோக்கி புறப்படுகின்றார். பொழுது சாய்ந்ததும் ஊரே உறக்கத்தில் மூழ்கியது. தரணியில் மனிதருள் மனிதராய் வாழ்வது இன்றியமையாதது.

திருமதி.ய.சுதாஸ்கரன்.
விடுகையாண்டு.

# கல்வித் தொழினுட்பவியல்

இன்று தொழினுட்பம் என்பது மிகமுக்கியமான பதமாகிவிட்டது. ‘தொழினுட்பம் என்பது வெறுமனே இயந்திரங்களினதும், கருவிகளினதும் தொகுப்பு மாத்திரம் அல்ல. மாறாக செயற்படுத்தும் திறனும் அதனை வழிப்படுத்தும் முறைமையும் இணைந்ததே தொழினுட்பமாகும்.

**-Muffoletto 1994-**

நவீன விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக பல கருவிகளும் இயந்திரங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தொழிற் துறைக்கு பயன்படுத்திக் கொள்வது தொழினுட்பத்தின் ஒரு பகுதியாகும்.

இனி கல்வித் தொழினுட்பத்தை நோக்குவோம். இங்கு கல்வித் தொழினுட்பம் என்பதை வேறுப்படுத்தி நோக்க வேண்டியுள்ளது. கல்வியில் தொழினுட்பம் என்பது பொதுவான தொழினுட்பத்தை கல்வியில் பயன்படுத்துவதாகும். உதாரணமாக கனணி தொலைக்காட்சிப் பெட்டி வீடியோ, வோடியோ போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதனையே கல்வித் தொழினுட்பம் என்ற தவறான கருத்தும் நிலவுகின்றது.

மேற்குறித்த சாதனங்கள் கல்வித் தொழினுட்பத்தின் ஒரு பகுதியேயாகும். கல்வித் தொழினுட்பம் என்பது முறைசார்ந்த ஆய்வுகள், அனுபவங்கள் (விஞ்ஞான ரீதியாக பின்பற்றப்பட்டவை) கொள்கைள், கோட்பாடுகள், முறைமைகள் போன்றன இவற்றில் அடங்கும்.

கல்வித் தொழினுட்பம் தொடர்பான வரைவிலக்கணங்களை நோக்குவோம்.

**Council of Education Technology - U.K** என்ற அமைப்பு ‘கல்வித் தொழினுட்பம் என்பது மனிதனின் கற்றல் செயலொழுங்கை மேம்படுத்தி கூர்மைப் படுத்துவதை அடிப்படையாகக் கொண்ட ஒரு செயற்தொகுதி, நடைமுறை துணைகருவிகளின் விருத்தி, பயன்பாடு, மதிப்பீடு என்பனவாகும் என்று கூறுகின்றது.

ஐக்கிய அமெரிக்காவில் கல்வி தொழினுட்ப ஆணைக்குழு தனது வரைவிலக்கணத்தில்

‘கல்வித் தொழினுட்பம் என்பது கற்றலை அதிக வினைத்திறன் உள்ளதாக ஆக்கிகொள்வதற்கு மனித இனத்தில் கற்றல் மற்றும் தொடர்பாடல் ஆய்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு சிறப்பான கல்விக் குறிக்கோளுடன் கூடியதாக மொத்தக் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், மதிப்பீடு செய்தல் பற்றிய ஒரு முறைச்சார்ந்த முறையாகும் எனக் குறிப்பிடுகிறது.

இங்கு கல்வித் தொழினுட்பம் பற்றிக் குறிப்பிடும் போது விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் கொள்கைகள் கோட்பாடுகளை நாம் கற்றல் கற்பித்தலில் பயன்படுத்துகின்றோம். இதனை கற்றல் கொள்கை அடிப்படையில் புறூணர், பவுலோ, தோண்டைக் போன்றோர் ஆய்வுகளை மேற்கொண்டு கல்வித் தொழினுட்பங்களை புகுத்தியுள்ளனர்.

மேலும் கல்வித் தொழினுட்பம் பற்றி தொடர்பாடல் தொழினுட்பம் தொடர்பான ஒழுங்கமைப்பு (**Association for Educational Communication and Technology AECT. 1977**) தனது வரைவிலக்கணத்தை முன்வைத்துள்ளது.

ஒன்றிணைக்கப்பட்ட மனித செயன்முறைகளான

01. வழிமுறைகள்
02. கருவிகள்
03. ஒழுங்கமைப்பு
04. பிரச்சனைகளை பகுப்பாய்வு செய்தல்
05. பிரச்சனைகளை பகுத்துதொகுதியாக்கல்
06. நடைமுறைப்படுத்தல்
07. மதிப்பீடு செய்தல்
08. பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள முகாமைத்துவம் செய்தல்

ஆகிய அனைத்தும் கல்வித் தொழினுட்பமாகும் **AECT 1994** வெளியிட்ட கல்வித் தொழினுட்பம் பற்றிய கருத்தில் கல்வித் தொழினுட்பத்தில் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் இன்னொரு பதமாக அறிவுறுத்தல், அறிவித்தல் தொழினுட்பம் காணப்படுகின்றது.

செயன்முறைக்காக பங்களிப்பு செய்கின்ற கொள்கைகள் கோட்பாடுகளின் வடிவம் அவற்றினை விருத்தி செய்தல், பயன்படுத்தல், முகாமைத்துவம் செய்தல், மதிப்பீட்டு செயன்முறைகள், கற்பித்தல் செயன்முறைக்கான வளங்கள் இவை அனைத்தும் கல்வித் தொழினுட்பமாகும்.

**- AECT 1994 -**

**Gentry (1995)** என்பவர் கல்வி தொழினுட்பம் பற்றி பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளார். 'கல்வி தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வுக்காணப் பயன்படுத்துகின்ற கற்றல் அபிவிருத்தி முகாமைத்துவம் மற்றும் ஏனைய தொழினுட்பங்கள் என்பவற்றின் ஒரு கூட்டு அல்லது ஒரு தொகுப்பே கல்வித் தொழினுட்பம் ஆகம். கற்றல் கற்பித்தலை மேம்படுத்துவதற்கு அல்லது கற்றல் கற்பித்தலை அபிவிருத்தி செய்வதற்கு பயன்படும் உபகரணங்கள் கருவிகள் அல்லது சாதனங்கள் என்பவற்றைவிட வேறுப்பட்டது.

அது இக்கருவிகளையும் அதே வேளை இவற்றை கற்பித்தல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்ளும் வழிமுறையையும் உள்ளடக்கியுள்ளது. இந்த உபகரணங்கள் அல்லது சாதனங்கள் கற்றலுக்காகவும் அல்லது கற்பித்தல் வழிமுறைக்காகவும் வழிகாட்டலை வழங்குகின்ற கொள்கைகளையும் உள்ளடக்கியதாகும்.

கல்வித் தொழினுட்பம் பற்றி Roblyer (1997) குறிப்பிடும் போது.

01. தொடர்பு ஊடகம் கட்புல, செவிப்புல, தொடர்பு ஊடகங்கள் (தொழினுட்ப சாதனங்களான கற்புல செவிப்புல சாதனங்களை தொடர்பாலுக்கு பயன்படுத்தலாம். தொலைக்காட்சி பல்லூடகம், ஒலிநாடா, வானொலி **DVD,VCD**) இவை கற்பித்தல் செயன்முறைகளை செய்திகளாக அனுப்புவதற்காக சாதனங்களாக பயன்படுத்துவதற்குரியது.

02. கற்பித்தல் முறைக்கான தொழினுட்பம். இனங்காணப்பட்ட தேவைகளுக்கு பொருத்தமான வகையில் வடிவமைத்து விருத்தி செய்து முன்வைத்தல்.

03. தொழிற்பயிற்சிக் கல்விக்கான கருவியாக தொழினுட்பம். வேலையுலகோடு நேரடியாக தொடர்புபட்ட செயன்முறைப் பயிற்சிகளை வழங்குவதற்காக தொழினுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.

04. கணனியை அடிப்படையாகக் கொண்டு முறைமையான தொழினுட்பம். சகல கற்பித்தல் செயற்பாடுகளை முன்வைப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் கணனியையும் கணனியை அடிப்படையாகக் கொண்ட இயந்திரங்களையும் சாதனங்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் றொப்ளேயர் (1997) தனது ஆய்வில் குறிப்பிடும் போது கல்வித் தொழினுட்பத்தை மூன்றாக வகைப்படுத்தியுள்ளார்.

01. கல்வித் தொழினுட்பப் பிரயோகம்.

**A.** கற்பித்தலுக்கான மென்பொருள்.

**B.** இடைவினை கொண்ட வீடியோ போன்றவை.

**C.** தொலைக் கல்வி முறைக்கான பாடநெறிகள்.

02. ஆசிரியர்கள் கற்பித்தல் சாதனங்களை தயாரிப்பதற்கான பயன்பாடு

**A.** அச்சு ஊடாக கற்பித்தல் சாதனங்களை பயன்படுத்தல். Microsoft Word. Page Marker. (கையேடு, சொல்லட்டைகள், ஒப்படைகள, கணிப்பீட்டு உபகரணங்கள்)

**B.** பதிவுகளை வைத்துக்கொள்ளவும் தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கும். Microsoft Excel, Spreadsheet.

**C.** அச்சு ஊடகம் தவிர்ந்த கற்பித்தல் சாதனங்களை தயாரித்தல். (CD, Floppy ,Vedio, Odio)

**D.** சாதனங்களையும் நேரத்தையும் ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு.

03. மாணவர்களுக்கான உபகரணங்கள்.

**A.** ஒப்படைகள் எழுதுதல்

**B.** ஆய்வு நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

**C.** பல்வேறுப்பட்ட துறைகள் தொடர்பான உள்ளடக்கங்கள் பற்றி தேடியறிவதற்கு உதவுகின்றது. (Internet)

**D.** முன்வைப்புகளை தயார்ப்படுத்துவதற்கும் விருத்தி செய்வதற்கும் உதவுகின்றது. (Powerpoint,O.H.P., Multimedia, Computer base)

இனி இவற்றில் அடங்கியுள்ள பிரதான விடயங்களான கற்றல் அபிவிருத்தி முகாமைத்துவம் ஏனைய தொழினுட்பங்கள் என்பவற்றை நோக்குவோம். கற்றல் கற்பித்தல் பிரதானமாக ஈடுபாடு கொண்டவர்களாவர். கற்பித்தலை சிறப்பாக மேற்கொள்வதற்கு மாணவர் சார்ந்த பல கோட்பாடுகள் காணப்படுகின்றன. பிரதானமாக உளவியல் சார்ந்த பல கோட்பாடுளை அறிவித்தல் அவசியமாகும்.

வகுப்பறையில் சிறப்பான கற்பித்தலை நடைமுறைப்படுத்த மாணவரின் வேறுபாடுகளை அறிந்திருத்தல் அவசியம். அவர்களுக்கிடையிலான வயது, உடல், உள வேறுபாடுகளுக்கேற்பவே கற்றலில் ஈடுபடுவர். எனவே ஆசிரியர் கல்வியில் உளவியலைப் பற்றி அறிந்திருந்தால் மாத்திரமே பிள்ளையின் கற்றலை மேம்படுத்த முடியும். நவீன கற்பித்தல் சாதனங்கள் எவ்வளவு வளர்ச்சி பெற்றிருந்த போதிலும் உளவியல் தன்மைகளைக் கொண்ட கற்றல் கற்பித்தலுக்கு கல்வி உளவியல் நுட்பத்தை அறிந்திருப்பதும் பயன்படுத்துவதும் அவசியமாகும்.

மேலும் தொழினுட்பத்தில் வகுப்பறை முகாமைத்துவம் இன்றியமையாததாகும். ஒரு நாட்டின் எதிர்கால அபிவிருத்தியை அந்நாட்டின் நிகழ்கால வகுப்பறைகளே தீர்மானிக்கின்றன. வகுப்பறை பல்வேறு நடத்தைக்கோலங்கள் நிறைந்த இடமாகும். அதனால் சிறந்த முகாமைத்துவ நுட்பங்களை வகுப்பறையில் கையாளவேண்டியது முக்கியமாகும். இங்கு வகுப்பறை முகாமைத்துவம் சம்பந்தமாக கல்வித் தொழினுட்பம் விளங்குகின்றது. வகுப்பறையில் ஆசிரியரின் நடத்தைகள் வகிபாகங்கள் வகுப்பறை ஒழுங்கமைப்பு ஆசிரியர் மாணவருடன் கொண்டுள்ள தொடர்புகள் என்பவற்றை கல்வித் தொழினுட்பம் விபரிக்கின்றது.

கல்வித் தொழினுட்பம் பல்வேறு கற்பித்தல் முறைமைகளை விளக்குகின்றது. முன்னர் நெட்டுரு முறையில் கற்பித்தல் இடம்பெற்றது. அதாவது ஆசிரியர் தகவல்களை வழங்குபவராகவும் மாணவர்கள் செவிமடுத்து தகவல் சேகரித்து மனனஞ் செய்பவராகவும் விளங்கினர். ஆனால் இன்று பல்வேறு ஆராய்ச்சிகள் கோட்பாடுகளின் விருத்தி காரணமாக பல்வேறுப்பட்ட நுட்பமுறைகள் கற்பித்தலில் பயன்படுத்தப்படுகின்றன. அவை கலந்துரையாடல், அணிக்கலந்துரையாடல், சிந்தனைக்கிளறல், குழுச் செயற்பாடுகள், ஒப்படைகள், விடய ஆய்வுகள், பாத்திர மேற்று நடித்தல், பிரச்சனை விடுவித்தல், செய்துகாட்டல் முறை எனப் பலவாறான முறைகளை மாணவரின் அறிவு திறன் மனப்பாங்கு தேர்ச்சி என்பவற்றை கல்வித் தொழினுட்பம் ஏற்படுத்துகின்றது.

சனத்தொகை வளர்ச்சியின் காரணமாக மாணவர்கள் தொகையும் அதிகரித்துள்ளது. ஆனால் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. வகுப்பறைகளில் மாணவர் தொகை அதிகமானதால் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக பல்தரக்கற்பித்தல் முறையை பிரயோகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பல்தரக்கற்பித்தல் கல்வித் தொழினுட்பத்தில் முக்கியமானதாக கருதப்படுகின்றது.

கல்வித் தொழினுட்பமானது ஆசிரியரின் கற்பித்தல் அணுகுமுறையையும் விளக்குகின்றது. இதுவரை ஆசிரியர் அறிவை கடத்துபவராக மட்டும் செயற்பட்டு வந்தார். தற்போது மாணவர் மைய அணுகுமுறை சம்பந்தமான நுட்பமுறைகளை தெரிந்திருத்தல் அவசியமாகும். மாணவரது ஆற்றல் தேவைகள் வளர்ச்சி, கவர்ச்சி, விருப்புப் பற்றி ஆசிரியர் அறிந்து செயற்படுவதற்கு கல்வித் தொழினுட்பம் வழிகாட்டுகின்றது.

கற்றல் கற்பித்தல் செயன்முறைகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவி பெறக்கூடிய உபாய முறைகளை கற்பித்தல் நுட்பமுறைகள் என அழைக்கப்படுகின்றது. குறிப்பிட்ட நேரத்தில் கற்பித்தல் நிகழும் விதத்தையோ இயல்பையோ இவ்வுபாய வழிமுறைகள் புலப்படுத்துகின்றன. என ஜே.சி. அகர்வால் (1996) என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

அகர்வாலின் கூற்றின் படி கற்பித்தலில் ஆசிரியர் பயன்படுத்தும் நுட்பமுறைகள் காணப்படுகின்றன. உதாரணமாக வகுப்பறையில் சகல மாணவரிடமும் காணப்படும் பாட நூல்கள் திறமையுள்ள ஆசிரியர்கள் பயனுள்ள முறையில் பயன்படுத்தக்கூடிய நுட்பமுறையாகும். எனப் பரிசோதனையினூடாக கண்டறியப்பட்டுள்ளது. கதைகூறல்,நடித்தல், பொருட் காட்சி, முன்மாதிரி, விவாதங்கள், அவதானம், களச்சுற்றுலா, வினாக்கள் வினவுதல் போன்றன மாணவரின் கற்றலை இலகுப்படுத்துவதற்கு நவீன உபகரணங்களான கணனி பற்பல இருவெட்டுக்கள் **(CD)** ஆகியவை இன்றிலே கற்றலை மேம்படுத்தமுடியும். எனவே கல்வித் தொழினுட்பம் மேற்குறிப்பிட்ட விடயங்களில் அதிக கவனஞ்செலுத்துகின்றது. உதாரணமாக கண்காட்சி ஒன்றை நடத்த வேண்டுமானால் கண்காட்சி மாணவரின் கற்றலை எவ்வாறு இலகுபடுத்துகின்றது என்பதையும் அதனை அமைப்பதனூடாக மாணவர்களின் கற்றல் அனுபவங்கள் எவ்வாறு மேன்மையடைகின்றது என்பதையும் கல்வித் தொழினுட்பமே வழங்குகின்றது.

கல்வித் தொழினுட்ப கற்றலில் ஊக்கல்படுத்தல் சம்பந்தமாகவும் விளக்குகின்றது. பல்வேறு வகையான ஊக்கல் நுட்பங்களை ஆராய்கின்றது. ஊக்குவித்தல் வட்டம் மாஸ்லொவின் ஊக்கல் கொள்கை போர்ட்டரும் **(Porter and Lower's Motivation Model)** மாதிரிகளை அபிவிருத்தியை ஊக்குவித்தலில் ஆசிரியரின் பங்கு போன்றவற்றை குறிப்பிடுகின்றது. எனவே ஊக்கல் படுத்தல் சம்பந்தமான நுட்பங்களையும் கல்வித் தொழினுட்பம் வழங்குகின்றது.

கற்பித்தலில் இன்று நுண்முறை கற்பித்தல் **(Micro teaching)** என்ற நுட்ப முறைபெருமளவில் பிரயோகிக்கப்படுகின்றது. குறிபிட்ட பாடத்தில் மாணவர்கள் குறித்தபகுதியின் பிரச்சனைகளை எதிர்நோக்குவார்களாயின் அதற்கான வழிமுறைகளை ஆசிரியர் அறிந்து கற்பிப்பதற்கு கல்வித் தொழினுட்பமே வழிகாட்டுகின்றது. இதன் ஊடாக மாணவர்கள் பிரச்சனைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்வதற்கும் ஆசிரியர் தனது தொழில் வாண்மையை விருத்திசெய்து கொள்ளவும் முடிகின்றது. எனவே கற்பித்தல் முறைகளையும் கல்வித் தொழினுட்பம் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆசிரியர் வகுப்பில் சிறந்தமுறையில் செயற்பட வேண்டுமாயின் பாடம் தொடர்பான திட்டமிடலை அறிந்திருத்தல் அவசியம். ஆசிரியர் தான் கற்பிக்கப்போகும் பாடத்தை திட்டமிட்டு எழுதி நடைமுறைப்படுத்துவாரேயானால் மாணவரின் கற்றல் சிறப்படையும். எனவே கல்வி தொழினுட்பமானது பாடத்திட்டமிடல் சம்பந்தமான விளக்கத்தையும் வழங்குகின்றது. பாடத்தின் நோக்கம் பாடப்பிரவேசம் எண்ணக்கருவாக்கம் துணைச்சாதனங்கள் கற்பித்தல் முறைகள் ஆசிரியர் செயற்பாடு, மாணவர் செயற்பாடு, மீளவலியுறுத்தல், பாடச்சுருக்கம், மதிப்பீடு, பின்னூட்டல், ஒப்படை என்பவற்றுக்கு எவ்வாறு நேரத்தை ஒதுக்குவது என்பது பற்றிய விளக்கத்தை கல்வித் தொழினுட்பமே வழங்குகின்றது.

கோட்பாடுகளை கற்பித்தலில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதை கல்வித் தொழினுட்பமே விளக்குகின்றது. ரூசோ, மொண்டிசோரி, டூயி, புரௌபல், கார்னே, ஸ்கின்னர், பவ்லொவ் போன்றோரின் கோட்பாடுகளை கற்பித்தலில் பயன்படுத்துவது சம்பந்தமான விளக்கத்தினை வழங்குவது கல்வித் தொழினுட்பமாகும்.

மாணவரின் கற்றலை மேம்படுத்த வேண்டுமாயின் கோட்பாடுகளை ஆசிரியர்கள் மிகவும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். எனவே கோட்பாட்டு மாதிரிகளை கற்பிப்பதற்கு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை விளக்குவது கல்வித் தொழினுட்பமே.

கல்வித் தொழினுட்பமானது கற்றல் செயன் முறையை இலகுபடுத்துவதற்கு நவீனதொழினுட்ப உபகரணங்களை பயன்படுத்துவதேயாகும். என்ற குறுகிய வரையறையில் இருந்து விரிந்து செல்லும் ஒரு பாடநெறியாகும். இங்கு கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு முறைகள், ஊக்குவித்தல், ஆசிரியர் வகிபங்கு, நுண்பாக கற்பித்தல், வகுப்பறை முகாமைத்துவம், தொடர்பாடல் திறன்கள், கற்பித்தல் நுட்பங்கள், பாடந்திட்டமிடல், என்று பல்வகையான விடயங்களை விளக்கும் ஒரு பாடநெறியாகும். ஆசிரியரானவர் நவீன உபகரணங்களை மாத்திரம் வகுப்பறையில் பயன்படுத்தி கற்பித்தலை மேம்படுத்த முடியாது. அதனுடன் மாணவரின் நடத்தைகளையும் அறிந்திருக்க வேண்டும். குறிப்பாக மாணவர்களின் மனப்பாங்குகள், தேவைகள் மனவெழுச்சிகள், தனியாள் வேறுபாடு என்பவற்றினை அறிவதற்கு ஆசிரியருக்கு தொழினுட்பம் துணை செய்கின்றது. எனவே இவ்வாறான விடயங்களையும் கல்வித் தொழினுட்பம் கொண்டுள்ளது.

மேற்குறித்த விடயங்களிலிருந்து 'கல்வித் தொழினுட்பவியல்' என்பது கல்வித்துறையிலே பயன்படுத்துகின்றது. அனைத்து விடயங்களையும் அடக்கியுள்ளது. இவை கற்றல் அபிவிருத்தி முகாமைத்துவம் மற்றும் ஏனைய தொழினுட்பங்கள் என்பவற்றின் தொகுப்புக் கூட்டே கல்வித் தொழினுட்பமாகும். இது கற்றல் கற்பித்தலின் வெற்றியையும் உபாயங்களையும் வழங்குவதே கல்வித் தொழினுட்பமாக திகழ்கிறது.

உசாத்துணைகள்
✍கல்வித் தொழினுட்பம் **OUSL**
✍கற்பித்தலின் புதுமைகள்
✍தகவல் தொழினுட்பம் **OUSL**
✍கற்பித்தல் பயிற்சி கைநூல் **NIE**

S. சேகர்
விரிவுரையாளர்.

# மலர நினைத்த மொட்டொன்று ...

கிழக்கு வானைக் கிழித்துக் கொண்டு தன் கதிர்கீற்றுக்களை. கடமை தவறாது கதிரோன் வீசிகொண்டிருக்கிறான். யன்னல் ஓரத்தில் இயற்கை அன்னையின் கொடையான இளங்காற்றோ மெல்லிய குளிரினைத் தெளித்துக் கொண்டிருக்கிறது. பதுளை பஸ் நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி செல்லும் 'சுப்பர் லைன்' பஸ் தன் வேகத்தில் முன் செல்ல தேவியின் எண்ணங்களோ பின் நோக்கிச் செல்கிறது.

ஆம்! கோணக்கலையில் 3ம் நம்பர் லயத்தின் 4வது வீட்டில் மூக்கும் முழியுமாக வீறுநடை போடும் இடையழகி தான் தேவி புத்தகத்தோடு அமர்ந்த அவள் என்றும் போல் அன்றும் ஒருமுறை 'அப்பா எப்படி வருவார்? என்ன செய்வார்? என்ன பேசுவார்? என்று தனக்குள்ளே ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கும் போதே, லயத்துக் கோடியில் சுந்தரத்தின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. 'போ நாயே என்னைப் பார்த்து நீ எப்படி குலைக்கலாம்? நான் யாரு தெரியுமா? கொண்ணிடுவேன் கொண்ணு...' நாயோடு வாதாடிய வண்ணம் எப்படியோ தன் வீட்டை அடைந்த சுந்தரம் தனம் !அடியே தனம் ! சாப்பாட போட்டுட்டியா? எங்கடி தேவி? தனம் தாங்கொணா வேதனைகளோடு ஏங்க கொடுத்த காசை கட்டாம கரண்ட கட் பண்ணிட்டு போயிட்டாங்க லாம்புக்கு லாம்பண்ண கூட இல்லீங்க உங்களுக்கு போட்டுக்க மட்டும் காசு ...'என்று கூறி அவள் முடிக்கும் முன்னே 'நிப்பாட்டடி உன் கதையை சாப்பாடப் போடு'. தனம் தன்னையே நொந்துக்கொண்டு உணவைப் பரிமாறினாள்.

'ஏண்டி தனம் தேவிய பணிய கடையில முதலாளி வேலைக்கு கூப்பிடுறாங்க அனுப்பிடுவோமா?' சுந்தரம் லாவகமாய் கேட்க ஆவேசமாய் எழுந்த தனம் 'உங்களுக்கென்ன பைத்தியமா? பெரிய புள்ளைய அப்படி அனுப்பி இப்ப 'அட்ரசே இல்லாம நான் படுற வேதனை எனக்குதான் தெரியும், கண்ணீர் அவள் கன்னங்களை விட்டுக் கீழிறங்க விம்மியபடி தொடர்ந்தாள் 'இன்னும் 2மாசத்துல அவ படிப்பு முடிஞ்சிடும் சும்மா அந்த புள்ளைய படிக்கவிடுங்க. நல்ல படிக்குதாம் எல்லோரும் சொல்றாங்க'. வாய்வாதம் அடிபுடியோடு முடிய ஒவ்வொரு நாளும் அன்புக்காகவும் அமைதியாகவும் ஏங்கும் தேவிக்கோ அழுகை பொங்கிக் கொண்டு வர புத்தகத்தைப் பட்டென்று மூடி வைத்து விட்டு 'படிச்சு முன்னுக்கு வந்திடுவோமுனு நினைச்ச என்னோட ஆசையெல்லாம் பகல்கனவா போயிடுமோ? நினைக்கும் போதே அவள் கண்களில் நீர் புரண்டோட படுக்கைக்குச் சென்றாள்.

யாருக்கு என்னவானால் என்ன? கால தேவன் கடமை தவறாதவன் அல்லவா? பொழுது புலர தொடங்கியது. தனத்தால் தலைத்தூக்க முடியவில்லை உடம்பு கனத்தது. எழமனமின்றி எப்படியோ எழும்பி கூடையைத் தலையில் மாட்டத்தானே வேண்டும். தனம் எழுந்து காலைக்கடன்களை 'கடகட வென்று முடிக்க தேவியும் தாயிக்கு உதவியதோடு தானும் பள்ளிக்குச் செல்ல அவசர அவசரமாய் ஆயத்தமானாள். தேவி பாதையில் இறங்கவும் கொழும்பில் வேலை செய்யும் பக்கத்து வீட்டு குமார் அவ்விடத்தை அணுகவும் நேரம் சரியாக இருந்தது.

'தேவி என்ன உங்க அப்பா இன்னும் மாறவில்லையா? நானும் வந்ததிலிருந்து பார்க்கிறேன் உங்க வீட்டுல எந்த நாளும் ஒரே சண்டை. எப்படி உன்னால படிக்க முடியுது? நானும் வரும் போதெல்லாம் வா கொழும்புக்கு போயிடலாமுனு சொல்றேன். நீ என்னனா படிக்கனும் படிக்கனுங்கிற' குமார் தன் ஜால வித்தையை காட்ட ஆரம்பித்தான். 'இங்க பாரு இந்த 'போன்' 15000ரூபா அழகா இருக்கா? காசு தேவைனா கேளு தேவி' தன் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை மேலெடுத்து போட்ட வண்ணம் அவன் அவளை பார்த்துக் கொண்டே கூறினான். தேவியின் முகம் உடனே அன்று மலர்ந்த ரோஜாமலரைப் போல் ஜொலிக்க உடனே 'அங்க பாருங்க எங்க சுதர்ஸி 'டீச்சர்' வாராங்க அவுங்கக்கிட்ட நான் எல்லாத்தையும் சொல்ல போறேன். எங்க வீட்டுல அப்பாவால படுற கஷ்டம் வேலைக்கு அனுப்பனுமுனு அம்மா கூட சண்டை பிடிக்கிறதெல்லாம் நிச்சயம் அவுங்க உதவி செய்வாங்க. நான் தொடர்ந்து படிப்பேன்' அவன் பதிலுக்காக காத்திராது தேவி எட்டி நடந்தாள்.

'குட் மோனிங் டீச்சர்' தாயைக் கண்ட கன்று போல் ஆவலாய் கூறினாள். சுதர்ஷினி ஆசிரியையோ முறைத்துப் பார்த்து விட்டு எட்டி நடந்தாள். உண்மையில் திக்குத்தெரியா பச்சிளம் குழந்தை போல் தேவி ஒரு நிமிடம் தடுமாறி விட்டாள். காலைக் கூட்டம் நடந்தேறி முதல் பாடமும் ஆரம்பமானது. தேவியின் மனமோ 'ஏன் டீச்சர் அப்படிப் போனாங்க' என்று எண்ணித் தவித்தது.

முதல் பாடம் முடிந்தவுடனே காரியாலயத்துக்கு வரும்படி தேவி அழைக்கப்பட்டாள். அதிபருக்கு முன் சுதர்ஷினி ஆசிரியை குமாருடன் தேவி கதைத்துக் கொண்டு வந்ததை வைத்து ஏதேதோ பேசினாள். அதிபரும் ஒத்து ஊதினார். தேவி எத்தனையோ முறை அலையில் விழுந்து துரும்பாய் தன் வீட்டில் இரவு நடந்த சம்பவம் பற்றியும் அதுபற்றியே குமார் கதைத்துக்கொண்டு வந்தான் என்றும் கூற முயன்று தோற்றுப் போய் இறுதியில் மனவிரக்தியுடன் அனலில் இட்ட மெழுகாய் வேதனையுடன் வகுப்பறையை நோக்கி நடைப்பிணமாகச் சென்றாள். பாவம் அவளுக்கெங்கே புரியும் போகிறது. இன்று தன் பள்ளி வாழ்வில் இறுதிநாளென்று.

மாலை மருதம் மயங்கத்தொடங்கியது புத்தகப்பையை எடுத்த தேவி காலையில் நடந்ததை எண்ணி உள்ளுக்குள் குமுறினாள். 'ச்சீ நான் சொல்லப் போனதை சொல்லவிட்டாங்களா? ஏன் அப்படியெல்லாம் பேசினாங்க? நான் என்ன தப்பு செய்தேன்? அவள் மனதுக்குள் ஆயிரம் கேள்விக் கணைகள்' 'தேவி இருட்டுது கெதியில லாம்பைக் கொழுத்து' தனத்தின் குரல் ஒலியில் தன் நிலைக்குவந்த தேவி 'நாளைக்கு எப்படியோ சொல்லிவிட வேண்டும். டீச்சர் புரிஞ்சிக்குவாங்க என்று தனக்குள்ளே தைரியத்தை வரவழைத்துக் கொண்டு லாம்பைக் கொழுத்தினாள். மினுங்கி ஒளிக்கும் ஒளிக்குள்ளும் பெரிய பிரகாசத்தைக் காணத் துடிக்கும் தேவி புத்தகத்தை விரிப்பதற்கும் சுந்தரத்தின் குரல் ஓங்கி ஒலிப்பதற்கும் நேரம் சரியாக இருந்தது.

'அடி தனம் எங்கடி உன் புள்ள தேவி' ஆவேசமாய் உள்ளே நுழைந்த சுந்தரம் புத்தகப் பையை தூக்கி சுழற்றி எறிந்தவாறே 'உன்ன படிக்க வைக்க சொல்லி உங்காயி என்னோட இரவெல்லாம் சண்டை புடிச்சா உங்க டீச்சர் என்னானா உங்க புள்ளைய கவனமா பார்த்துக்குங்க பக்கத்து வீட்டுப் பொடியனோட போசவிடாதீங்கன்னு மடுவத்துல அத்தன பேரு நிக்கயில கூப்பிட்டு சொல்லிட்டு போறாங்க. என்னோட மானமெல்லாம் போச்சி' தன்னால் முடிந்த மட்டும் கத்தியவனின் கைகள் தேவியின் உடம்பை பதம் பார்த்தது. மீனுக்காக காத்திருந்தது போல் குமார் வீட்டுக்குள் நுழைந்து 'தேவி நீ என்னோட வா என்னாலதானே அடி வாங்குற' இடையில் என்ன நடந்தது என்று நிதானிக்க முன் எல்லாம் நடந்து முடிந்து விட்டது. குமார் சுந்தரத்தை அடித்து தள்ளிவிட்டு தேவியை அழைத்து கொண்டு தனது அக்காவின் வீட்டுக்கு பதுளை பஸ்ஸில் ஏறி விட்டான்.

மாதம் 01 நடந்தேறியது குமாரின் கபட வேடம் தேவிக்கு தெரிய வந்தது. தன் தந்தையை விட குடிப்பான் குமார். குடியை வேம்பாய் வெறுக்கும் தேவி குமாரையும் வெறுத்தாள். ஒருவாறு அவனை விட்டு அவன் அறியாமலே தன் வீட்டை வந்தடைந்தாள்.இரண்டு நாட்கள்தான் அங்கு நிம்மதி. சுந்தரம் தேவிமேல் வசைபாட ஆரம்பித்து விட்டான் தகாத வார்த்தைகளால் வஞ்சிக்கப்பட்ட தேவி தனது உறவினரான சாந்தியுடன் ஆடை தொழிற்சாலைக்கு வேலைக்குச் செல்ல கொழும்பு பஸ்ஸில்.....!

'தேவி தேவி என்ன நீ ஐடிண்டி கார்ட்டை எடு' அப்போதுதான் தன் நிலைக்கு வந்து அவிசாவளை சோதனைச் சாவடியில் பெற்றுக் கொடுத்த அஞ்சல் அடையாள அட்டையை எடுத்தாள் அதிலும் பெயர் தர்ஷினி தேவிக்கு தர்ஷன தேவி என்றிருந்தது. 'ஐயய்யோ இதை வாங்க மாட்டாங்களே படமும் ஒழுங்கா தெரியல ஒனக்கு மத்த ஐடிண்டி கார்ட் இல்லையா? சாந்தி முடிக்க முன்னே 'கோ கோ கண்ட கண்ட ஐடிண்டி கோ?' காக்கிச் சட்டை காரமாய்

அதட்ட தெவி நடுக்கத்தல் அழத்தொடங்கினாள் 'மொனவா கொயத யன்னே? கோயத இந்தலா யென்னே? நெஷனல் ஐடின்டியெக்க கோ? கேள்விகனைகளை தொடுத்தவள் பதிலையா எதிர்பார்த்தான். தேவி விழி பிதுங்கி அழ 'அப்பி ஸ்டேசன் எகடகட்ட எக்கரன யனவா நெஷனல் ஐடின்டிஎக்குத் நே அனித்எகெங் ஹரி தொரதுரு நே மெயாலாகே தாத்தாட்ட என்ட கியன்ட்ட அப்பிட்ட செக்கய்' சாந்தியும் ஏதொ வாதாடிப் பார்த்தாள் முடியவில்லை தேவி அவிசாவளை காவல் நிலையத்துக்கு அழைத்து செல்லப்பட்டாள்.

அந்த வாசலில் மொட்டானது இந்த மலரின் பாவமா? அல்லது மலர நினைத்ததுத்தான் பாவமா?

செல்வி. எஸ். சுசிகலா
விடுகையாண்டு.

# விடுகையாண்டு ஆசிரிய மாணவர்கள் 2006 - 2008
## குழு - 02



**1ம் வரிசை இடமிருந்து வலம்**
Mrs. B. தவராசா, Miss. B. கலாதர்சினி, Mrs. S. உமாதேவி, Miss.A.அருள்மலர்ராஜி, Mrs.E. சுதர்சினி, Mrs.L. சசிகலா, Mrs. P. பாமா, Mrs.J. அமுதினி, Miss.A.லிசா, Mrs. A. பிருந்தா, Miss J. வினித்தா மகேஸ்வரி, Mrs. S. சிவகலா, Mrs.K. சிவகுமாரன்.

**2ம் வரிசை இடமிருந்து வலம்**
Mrs. K. கிருபா, Mrs. R. ரஜேந்தினி, Mrs.P. ஜேசுதாஸ் Mrs.P.ஜென்சி குயின்ரா, Mrs.செல்வஜோதி ஜெயதரன் லெம்பேட், Mrs.A.அமீனா பீபி, Miss.S.தனுசியா, Mrs.V.சுகந்தி, Miss.Y.மாறிசுதர்ஷினி, Mrs.R.அனற்சுகந்தினி, Mrs.சிவகௌரிமோகன், Miss.S.கிரிசாந்தி, Miss.A.ரஞ்சனிதேவமலர், Miss.S.றமா, Mrs.S.கமலாதேவி.

**3ம் வரிசை இடமிருந்து வலம்**
Mrs.R.சம்சுன்நிஸா, Mr.R.சுபேந்திரன், Mr.S.பகீரதன், Mr.N.ஸ்ரீரதன், Mr.S.சுவேந்திரன், Mr.S.சாந்தமூர்த்தி, Mr.P.கதீசன், Mr.A.அஜந்தன், Mr.S.சிவபாலன் Mr.S.தியாகராசா, Mrs.M.Y.F.அஸ்மிலா

# கற்றல் சூழ்நிலை (Learning Environment)

மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் "கற்றல் சூழ்நிலை" என்பது பிரதான ஒரு இடத்தை வகிக்கின்றது. அவ்வகையில் கற்றல் சூழ்நிலை என்பதனை "Bereiter and scardam olia" (1989) என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். உயரிய சுய ஆற்றலையும் சுய ஊக்கத்தையும் கொண்டிருக்கவும், முதன்மையான நிலைமாறல் சக்தியாக கற்றலை பயன்படுத்துவதற்கு ஒரு கற்போனுக்கு அனுசரணையாக அமையும் சூழலே கற்றல் சூழல் என்கின்றனர்.

கற்றல் சூழல் என்பதனை நன்னூலார் சூத்திரம் " 36" ல் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*ஈதலியல்பே இயம்புக் காலைக்*
*காலமும் இடமும் வாலிதின் நோக்கிச்*
*சிறந்துழியிலிருந்து தன் தெய்வம் வாழ்த்தி*
*உரைக்கப்படுபொருள் உள்ளத்தமைத்து*
*விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து*

எனக்கூறுகின்றது. இதன் பொருள்:-

கற்றலுக்கு ஏற்ற காலம் பொருத்தமான இடம், பாடத்தை நடத்தும் ஆசிரியரின் சிறப்புத்தேர்ச்சி என்பவற்றைக் கொள்வதுடன் விரைவையும், சினத்தையம் தவிர்த்து விருப்போடும், முகமலர்ச்சியோடும் மாணவர் எல்லோருடைய மட்டத்தையும் அறிந்து மாணவருக்கு முன் ஆயத்தத்தை ஏற்படுத்திய பின் கற்பித்தலே கற்றல் சூழல் எனக் கூறப்படுகிறது.

இதே போலவே கற்றல் சூழ்நிலை என்பதனை www.imprial.ac.uk என்னும் இணையம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "கற்றல் இடம்பெறுவதற்குரிய பௌதீக மெய்நிகர் ஒழுங்கமைப்பே" கற்றல் சூழல் என்கின்றது.

இதே போலவே கற்றல் சூழ்நிலை என்பதனை www.tack-nology .com என்னும் இணையம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "கற்றல் இடம்பெறுகின்ற இடமும் ஒழுங்கமைப்புமே கற்றல் சூழலாகும்.இது பௌதீக வகுப்பறையை மட்டும் உள்ளடக்குவதல்ல கற்றலுக்குரிய பண்புக்கூறுகள் யாவற்றையும் உள்ளடக்கவதே கற்றல் சூழல்.

இதே போலவே www.usa.edu.au எனும் இணையம் பின்வருமாறு கூறுகின்றது. "ஒரு கற்றல் கற்பித்தல் செயன்முறை வெற்றிகரமாக நிகழ்த்துவதற்கு உதவும் சூழ்நிலையே கற்றல் சூழல்" என்கின்றது.

இதே போலவே www.upee.ca எனும் இணையம் பின்வருமாறு கூறுகின்றது. மாணவரின் துலங்கலில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய அறிவுறுத்தல்கள், ஆட்களுக்கிடையிலான தொடர்பு பௌதீக பண்புகளே கற்றல் சூழல் என்கிறது.

கற்றல் என்ற உயிர்ப்பான செயற்பாடு ஆசிரியர் மாணவர் உறவிலிருந்தே ஊற்று எடுக்கின்றது. இந்த அகப்பார்வையை அடிப்படையாகக் கொண்டு

1. தத்துவார்த்த தர்க்கவியலின் பாவனை
2. காட்சிகளைத் தேடுதல்
3. பிரச்சனைகளைத் தேடுதல்
4. பாடசாலைக் கலைத்திட்டத்தை அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்திக் கற்க வழிகாட்டல்

என்பவற்றினூடாக ஆசிரியர் கற்றல் சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள முடியும்.

கற்றல் சூழ் நிலையை உருவாக்குவதில் வீடு அதிலும் குறிப்பாக பாடசாலையிலும், வகுப்பறையிலும் இதற்குரிய கவின் நிலையை உருவாக்கவேண்டும். கவின் நிலை என்பது. பற்றுணர்வு, விசுவாசம், விழுமியம், மனப்பாங்கு, புலக்காட்சி, ஊக்கல், இலக்குகளை அடைதல் போன்றவற்றை வகுப்பறை கவின் நிலை குறிக்கும்.

இது பயன் தரும் கல்வித் தொழிற்பாடுகளுக்கான மாணவர்களின் கூட்டுச் சக்தியை வெளிப்படுத்துவதோடு, ஆக்கத்திறனை அதிகரிக்கும். பாடசாலையின் உயிர்துடிப்பான அழகான வகுப்பறை உள்ளக கவின் நிலையை உருவாக்க இவ்வளங்களும் சாதனங்களையும் சரியாக பயன்படுத்துவதோடு சாதகமான மனித இடைவினைகளும் இங்கு நிலவவேண்டும்.

இவ்வகையில் மாணவர்களின் பிரதான கற்றல் சூழல் வகுப்பறை ஆகும்.1998 கல்விச்சீர்திருத்தத்தின் விளைவாக அதிலும் குறிப்பாக ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு கற்றல் சூழலை உருவாக்க பௌதீக சூழலில் பௌதீக கட்டமைப்பு, காட்சிப்பலகை, மணல் மூலை, நீர்மூலை, வேலைமூலை இவ்வகையில் வகுப்பறையில் மாணவர் தனித்தனியாக கற்கக்கூடிய இடவசதிகுறைவாகக் கற்க தளபாட வசதி (இவை மாணவர்களின் வயது பிரிவிற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் ) அதே வேளை வகுப்பறைச்சூழல் நெகிழ்வுள்ளதாகவும் இருக்க வேண்டும். அதாவது பாடத்தலைப்புகளுக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாக்கி மாணவர் செயற்பாடுகளை வழங்கக்கூடியதாக வகுப்பறை காணப்பட வேண்டும்.

மாணவர்களது ஆக்கங்களை பராமரிக்கவும், உபகரணங்களைப் பாதுகாக்கவும் அலுமாரிகள் காணப்பட வேண்டும். வகுப்பறையில் சமூகச் சூழலில் சமூகத்தொடர்பு ( ஆளிடைத்தொடர்பு ) மாணவர்-மாணவர், மாணவர்- ஆசிரியர் மாணவர் - அதிபர், மாணவர் உபகரணங்கள் என்பவற்றிறகிடையிலான இடைத்தொடர்பு மிகவும் அன்னியோன்னியமாக, வலிமையானதாகவும் காணப்பட வேண்டும். இதற்கு புரிந்துணர்வு இன்றியமையாததாகும்.

இதற்கு ஆபிரகாம் மாஸ்லோவின் தேவைகளையும் (காப்பு, கணிப்பு, அன்புறவு, அழகியல், உடலியல்) மாணவரின் கற்றல் சூழ்நிலையை கருத்திற் கொள்வது பயனுடையதாக அமையும். சமூகச்சூழலில் மாணவரின் சுயகௌரவம், எந்தவிதத்திலும் பாதிக்காத வண்ணம் நடந்துகொள்ள வேண்டும். அதே வேளை பாடசாலை, வகுப்பறை,மாணவர்களின் சமூக நீதியைப் பேணும் வகையீல் சகலருக்கும் சம வாய்ப்பை வழங்க வேண்டும். கற்றல் சூழல் என்பது

1.வீட்டில் கற்கும் சூழல்
2.வகுப்பறையில் கற்கும் சூழல்.
3.பாடசாலையில் கற்கும் சூழல்.

எனவும் இவை மூன்றும் பௌதீகச்சூழல். சமூகச்சூழல் எனவும் பார்க்கலாம். இக்கற்றல் சூழலுக்கு கற்றல்களின் நிலை முக்கியமானதாகும். இவ்வகையில் மாணவரின் முதற் கற்றல் சூழல் வகுப்பறை ஆகும். எனவே வகுப்பறையை மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக மாற்றுவது ஆசிரியரின் பிரதான கடமையாகும். வகுப்பறைச் சூழலை உருவாக்க வெளிச்சூழலை வகுப்பறைக்கு கொண்டு வர வேண்டும். இதற்காக அதற்குரிய வளங்களை கூடியளவு வகுப்பறையில் கொண்டு வந்து பயன்படுத்த ஆசிரியர் முனைதல் வேண்டும். மாணவர்கள் தம்மைச் சுற்றியுள்ள உடனடிச்சூழலை ஆராய்ந்து பிரச்சனைகளை தீர்க்கக் கூடியவராக அமைத்துக் கொடுப்பது ஆசிரியரின் பிரதான கடமையாகும்.

கற்றல் சூழ்நிலையை அமுல்படுத்தும் போது முதற் சூழலான வகுப்பறை மாணவரின் கற்றலில் ஆர்வத்தை தூண்டும் வகையில் அதற்குரிய கவின்நிலை, கற்றலுக்குரிய ஒளி , காற்று பௌதீக வளங்களை ஒழுங்கு செய்யப்பட வேண்டும். வகுப்பறைச் சூழலை வகுப்பிற்குள்ளும் வெளியேயும் ஒழுங்கு செய்ய வேண்டும். பாடத்துடன் தொடர்புடைய அட்டவணைகள், கற்பித்தல் சாதனங்கள் பயன்படுத்தும் போது மாணவர்களை களத்திற்கு அழைத்து நேரடி அனுபவத்தைப் பெற்றுகொடுக்க முடியும்.

உ-ம் போக்குவரத்து, வாகனம், மரம், செடி, கொடி, தொழிற்சாலைகள், அலுவலகங்கள், எமக்கு உதவுவோர், வணக்கஸ்தலங்கள்.

போன்ற பாடங்களைக் கற்பிக்கும் போது நேரடியாக மாணவர் அதனூடாக அவர்களுக்கு மகிழ்ச்சிக்குரிய கற்றல் சூழ்நிலை பயன் உள்ளதாக அமையும்.

மாணவர்களுக்குரிய கற்றல் சூழ்நிலைகளைத் தயார்படுத்தும் போது வகுப்பறைக்குரிய பௌதீக வளங்களையும் கருத்திற்கொள்ள வேண்டும். முதலில் பொருத்தமான உட்கட்டமைப்பு வகுப்பறைச்சூழல், அதில் காற்று, ஒளி, நீர்வசதிகளுடன் மாணவர்களின் தொகைக்கேற்ப தளபாடங்கள், மின்சாரவசதிகள், அதனூடாக கற்றல் சாதனங்களைப் பயன்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும்.

அடுத்து பௌதீகச்சூழலில் கற்றல் சூழ்நிலையை உருவாக்க மாணவர்களுக்கு பாடசாலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் உ+ம் மதில்கள், நீர்நிலைகள், சுற்றுப்பாதுகாப்பு, வீதிகளுக்குச் செல்லும் பாதுகாப்பு ஏற்பாடுகள் முதலுதவி போன்றன சரியாக இருப்பதோடு விளையாட்டு மைதானம், சுகாதாரம், குடிநீர், நூலகம், கணணி, ஆய்வுகூட வசதிகள் என்பவற்றுடன் ஆரம்பப்பிரிவு பாடத்தலைப்புகளுக்கு ஏற்ற வகையில் அதனை மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

வீட்டுச்சூழலில், சமூகச்சூழலில் மிகவும் சுமுகமான உறவு, தொடர்பாடல் முறைகள் அவசியம் நிலவவேண்டும். பிள்ளைகளின் நலன் கருதி தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றையும் மட்டுப்படுத்தி பயன்படுத்துவதோடு நாகரீகமான தொடர்பாடல் பிள்ளைகளின் கௌரவம் பாதிக்கப்படாமல் நடப்பதோடு, தடைகளைத் தவிர்த்து முன் மாதிரியாக பெற்றோர் நடந்துக் கொள்ள வேண்டும். மாறாக பெற்றோரிடையே குடும்ப சண்டை ,பிணக்குகள் காரணமாகவும், பிள்ளைகளின் கற்றல் சூழல் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே பெற்றோரின் நேரான அனுபவம், பிள்ளைகளின் சேமநலன்கள்,உணவு, உடை, கற்பதற்குரிய உபகரணங்கள், ஓய்வு நேரங்களை பயனுள்ளதாக ஒழுங்கு செய்தல் என்பவற்றுடன் பிள்ளைகளை குறிப்பிட்டளவு அனுபவம் பயன்பெறத்தக்க வகையில் வீட்டு வேலைகள், உதவிகளைச் செய்வதோடு அவர்களைத் தேவையான நேரத்தில் ஊக்கப்படுத்தல், பாராட்டுதல் என்பவற்றையும் நட்புரீதியானதும், பிள்ளைகளின் தேவை,ஆர்வம்,விருப்புவெறுப்பு, கவர்ச்சி என்பவற்றை அறிந்து அதற்கேற்ற வகையில் தமது செயற்பாடுகளை ஆக்கிக் கொள்வதன் மூலம் கற்றல் சூழலை சிறப்பானதாக்கிக் கொள்ளலாம்.

எனவே, பிள்ளைகளின் கற்றல் சூழலை வீட்டில் கற்கும் சூழல், பாடசாலையில் கற்கும் சூழல் என்பவற்றை மேலுள்ளவாறு ஒழுங்கமைத்துக் கொடுப்பதன் மூலம் சிறந்த கற்றல் சூழலை தயார்படுத்திக் கொள்ள முடியும்.

செ.இராமச்சந்திரன்
விரிவுரையாளர்,

# மௌன மொழி

எங்கிருந்தோ ஒரு நாய் ஊ....ஊ......எனப் பெரிய சத்தமாக ஊளையிட்டுக் கொண்டிருந்தது. விடியற் பொழுதை உணர்த்த சேவல் கூவுவதும், இறகுகளை அடிப்பதுமாக இருந்தது. குயில் ஒன்று இந்த உலக மாயைகளை மறந்து இனிமையாக கூவிக்கொண்டிருந்தது.

பாயிலே புரண்டுபடுத்த சிநேகா காலை எழும்புவதற்கான அலாரம் 5.30 மணிக்கு அடித்து எழும்பு என அறிவித்தது. பரக்க பரக்க எழுந்து வேளையை கவனிக்க அடுக்களையை நோக்கிச் சென்றாள்.

பிள்ளை எழும்பீட்டியோ? கொஞ்சம் சுடுதண்ணி தாறியோ? இந்த இருமல் நிண்டபாடில்லை உசிரும் போகுதில்லை என முணுமுணுத்தபடி கட்டிலிலே எழுந்து இருந்து கொண்டிருந்தாள் சிநேகாவின் மாமியார்.

அம்மா..... அம்மா..... என்ற அழைப்புச்சத்தம் கேட்டதும் திரும்பினாள் சிநேகா மகள் சுபி சினுங்கியபடி தூக்கம்மா..... ம்..தூக்குங்க...... என சினுங்கியபடி அவளை பார்த்து அழுதாள். அடுக்களையில் வேலைசெய்த குறையில் அவளை அள்ளிஅணைத்துக்கொண்டு மாமியாருக்கு தேனீர் வழங்கிவிட்டு குழந்தையை இடுப்பில் வைத்தபடி அவசர அவசரமாக வேலையில் ஈடுபட்டாள்.

சிநேகா...... உந்த துவாயைக் எடுத்துக்கொடு நான் குளிக்கப்போறன் நான் கையில வேலையாய் இருக்கன் குறைநினைக்காமல் அறையில இருக்கு எடுத்துக்குங்கோ! உனக்கு இப்பெல்லாம் ஒன்றுக்கும் நேரமில்ல பள்ளிக்கூடம் பள்ளிக்கூடம் என்று சாகிறாய். போய் அங்கேயே இரு என முணுமுணுத்தபடி குளிக்க தயாரானான்.

ஈர விறகை ப்பூ.... ப்பூ..... என ஊதியதில் கண்களில் புகை கண்டு எரிச்சலை ஊட்டியது. மனமும் அடுப்பு போல புகைந்து கொண்டிருந்தது. ஈர விறகாவது புகைந்து புகைந்து நெருப்பாக வெளிவந்தது. இவள் இதயத்தின் புகை அப்படியே உள்ளேயே புகைந்து கொண்டிருந்தது.

மாமியாரின் அதட்டலுக்கும், கணவனின் கொடுமைகளுக்கும் மத்தியிலும் தன் பிள்ளைகளின் வேலைகளையும் செய்து பிள்ளை பராமரிக்கும் ஆயா வர குழந்தையை ஒப்படைத்து விட்டு மதிய உணவையும் எடுத்துக் கொண்டு பஸ்சை நோக்கி ஓடி அதில் ஆண்களின் அட்டகாசமும், சனநெரிசலுக்குள் நெரித்து பாடசாலை போய்ச் சேர பாதி உயிர் போய்விடும். அப்பப்பா பெண்கள் வேலைக்கு போவதே கொடுமையா? அல்லது புரிந்துகொள்ளாத ஆண்கள் மத்தியில் வாழ்வது கொடுமையா?

ஆயிரம் சுமைகளையும் பாடசாலை வளவின் வெளியே இறக்கி வைத்துவிட்டு புதியவளாக பிள்ளைச் செல்வங்களோடு சேர்ந்து அனைத்தையும் மறந்து அவர்களுக்கு பாடம் புகட்டுவதிலும் அவர்களை சந்தோசப்படுத்துவதிலுமே கண்ணும் கருத்துமாவாள்.

குட்மோணிங் ரீச்சர் என்றதும் நிமிர்ந்தாள் சிநேகா அங்கு அப்பாடசாலையை பார்வையிட ஆசிரிய ஆலோசகர் நின்று கொண்டிருந்தார். பதிலுக்கு குட்மோர்ணிங் சேர் என கூறி அவரை உட்கார வைத்தாள்.

அவர் நீங்க பாடத்தை எடுங்கோ என கூறி விட்டு உட்கார்ந்துவிட்டார். சிநேகா பாடத்தை முடித்ததும் கணிப்பீட்டுக் கொப்பி, பிள்ளைகளின் கொப்பி எல்லாம் பார்த்து விட்டுச் சென்றுவிட்டார். மாலை 1.30 மணியளவில் அதிபர் கூட்டம் என அறிவித்திருந்தார். எல்லோரும் மண்டபத்தில் ஒன்று கூடினர். என்னத்துக்காய் உந்த மனுசன் கூட்டம் வைக்குதாம். I.S.A வந்து போய்விட்டார் என்னத்தை போட்டுக் கொடுத்தாரோ தெரியாது என பேசிக்கொண்டனர்.

சிநேகா ஆசிரியர் மட்டும் கணிப்பீடு எல்லாம் திறம்பட செய்து கற்பித்தலும் செய்திருக்கிறாராம் நீங்கள் எல்லாம் என்னத்துக்கு வாறியள் கடமையுணர்வோடு வேலையைச் செய்யுங்கள் I.S.A குறைவாக கூறிவிட்டு போகின்றார் என பெரிய மழை பெய்து ஓய்ந்தது போல அதிபர் சற்று நேரம் பேசி முடித்தார். எல்லோர் முகங்களிலும் பொறாமையின் ரேகை வழிந்தோடியது.

புலமைப்பரீட்சை வகுப்பு மாணவர்களையே சிநேகாவிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. தன்பிள்ளை போல அவர்களையும் கவனித்தாள். ரீச்சர்.... நான் இன்றைக்கு மாலை நேர வகுப்புக்கு நிற்கமாட்டேன் நான் சாப்பாடு கொண்டு வரல்ல ரீச்சர். பரவாயில்லை சதீஸ் என்னுடைய சாப்பாட்டில சாப்பிடலாம்.

வகுப்பு முடிந்து வீடு சென்றாள் அங்கு என்ன நேரம் 4.00 மணிக்கு மேலே பள்ளிக் கூடத்தோட இருந்தால் யார் வீட்டு வேளையெல்லாம் கவனிக்கிறது நாங்களும் படிப்பிச்சு கொடுத்தனாங்கள் தான் உப்படி தட்டுமுட்டு சாமான்கள் கொண்டுபோனதும் இல்லை கண்விழிச்சு எழுதினதும் இல்லை பொடியனின் புத்தகத்தை வாங்கி படிச்சு கொடுத்துப் போட்டு வாறதுக்கு என மாமியார் கத்திக் கொண்டிருக்க ஏனென கத்துறாய் வருத்தத்தை உரக்க போறியோ? எல்லாம் என் தலைவிதி சலித்துக் கொண்டான் சிவா.

மாலை நேர உணவை தயாரிக்க அடுக்களை சென்றவள். யன்னலின் ஊடாக வெளியே நோக்கினாள் மழை சோவென பெய்து கொண்டிருந்தது. வானளவை உயர்ந்து நின்ற மலை இவளைப் பார்த்து கேலி செய்வது போல உணர்வு. நானும் மழை, வெயில், குளிர் என தாங்கித் தானே நிற்கிறேன். என்னைப்பார் எனக் கூறுவது போல பிரமை மழையா! இவள் கண்ணீரா! எது கூட என்பதை அளவிட முடியவில்லை.

சிநேகா இதுவரை காலமும் எதற்காக போராடினாளோ அதன் முடிவுகள் அவளுக்கு எல்லையில்லா ஆனந்தத்தை கொடுத்தது. அவள் கற்பித்த மாணவர்களில் 9 மாணவர்கள் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர். 10 பிள்ளைக்ளுக்கு மேலே நூறு புள்ளிக்கு மேலாக பெற்றிருந்தனர்.

புலமைப் பரிட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு பாராட்டுவிழா நடைபெற இருப்பதால் சிநேகாவையும் அவள் கணவன் சிவாவையும் அப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியருமான சிவாவின் தாயாகிய திருமதி. செண்பகம் நடேசலிங்கம் அவர்களையும் பாராட்டு விழாவுக்காக அழைக்கப்பட்டிருந்தார்கள்.

பாராட்டு விழா மாலை 1.30 மணியளவில் ஆரம்பமாக இருந்தது. பாடசாலை மண்டபமே சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு களைகட்டப்பட்டிருந்தது. மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பிரதம விருந்தினர்கள், நலன்விரும்பிகள் என பலரும் மண்டபத்தை நிறைத்து கொண்டிருந்தனர்.

முதலில் பிரதம விருந்தினர் மங்கள விளக்கேற்றி அன்றைய நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. அடுத்து பிரதம விருந்தினர் உரையில் அதிபரையும் அப்பாடசாலை ஆசிரியர்களையும் பெற்றோரையும் பாராட்டிப் பேசினார்.

இப்பாடசாலையில் அயராது உழைத்த திருமதி சிநேகா சிவா அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இவ் ஆசிரியரின் ஊக்கங்களையும் தியாக மனப்பான்மையும் போற்றி இவரைப் போற்றி பாராட்டுகின்றேன். என்றதும் எல்லோருடைய கரகோசங்களும் வானைப் பிளக்கும்படி கைத்தட்டல்கள் இடம் பெற்றது. மற்றும் இந்நேரத்தில் இவருடைய கணவனாகிய திரு. சிவா அவர்களுக்கும் அவர் மனைவிக்கு ஒத்துழைப்பையும் அவர் லீவு எடுக்காது சிரத்தையோடு பாடசாலைக்கு வந்ததற்கும் முதற் காரணமானவர் ஆவார். அவரையும் இந்நேரத்தில் பாராட்டுகிறேன் என அதிபர் கூறி முடித்ததும் அந்தச் சொல் சிவாவின் இதயத்தில் கூரிய அம்பாக குத்தியது எவ்வளவு கொடுமைகள், பேச்சுகள், பொறுப்புக்கள் மத்தியிலும் தன் மனைவியின் சாதனையைத்தான் புரிந்து கொண்டோமே ஒழிய வேதனையை புரிந்து கொள்ளாமல் இருந்து விட்டோமே என அவன் சிந்தனைகள் எல்லாம் எங்கோ சென்றது.

அடுத்து இப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியரான திருமதி. செண்பகம் நடேசலிங்கம் அவர்களை உரையாற்றும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன் என்ற ஒலிபெருக்கி அழைப்பிற்கேற்ப சிவா சுய நினைவுக்கு வந்தான். தனது வயோதிபத்தின் தன்மையை சாட்டாக வைத்துக்கொண்டு மனசாட்சி இடம் கொடுக்காததால் அம்மேடையிலே பேசுவதற்கு மறுத்துவிட்டாள் செண்பகம்.

இத்துடன் பாராட்டு விழா நிறைவு பெறுகின்றது என்று அதிபர் கூறியதும் வாங்கோ வீட்டிற்கு போவோம் என்ற குரல் கேட்டு நிமிர்ந்தான் சிவா. மாலையும் கழுத்துமாக சிநேகா நின்று கொண்டிருந்தாள். அவளை நிமிர்ந்து பார்ப்பதற்கே வெட்கப்பட்டான். மிஸ்டர் சிவா உங்க மனைவியின் சாதனை பெரியது என அதிபர் அவன் கையையும், மாமியின் கையையும் பிடித்து குலுக்கி வழியனுப்பினார்.

ஆட்டோவை வந்தடைந்த செண்பகம் சிநேகாவின் கையைப் பிடித்து முத்தமிட்டு கண்ணீர் வடித்து தனது மௌன மொழியால் மன்னிப்பு கூறினாள். அதை உணர்ந்த சிநேகா அவள் கையைப் பிடித்து ஆட்டோவில் ஏற்றி தானும், சிவாவும், குழந்தையுமாக பயணத்தை தான் எதிர்பார்த்த கனவுகள் போராட்டத்தின் மத்தியிலும் நிறைவேறிய அமைதியிலே பயணிப்பதற்காக ஓட்டோவில் ஏறி அமர்ந்தாள்.

முற்றும். திருமதி. சாந்தமலர் லோகீசன்
விடுகையாண்டு

# புவி அதிர்வுகளும் அதன் விளைவுகளும்
## (Earth quake and Its effects)

உலகின் விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது இன்று உச்சநிலை அடைந்துள்ளதினை நாம் அனைவரும் அறிந்த ஒரு விடயமாகும். ஆனாலும் விண்வெளியில் காலடி வைத்து சந்திரனில் வசிப்பதற்கு சிந்திக்கும் மனிதனுக்கு பூமியில் நிம்மதியாய் வாழமுடியவில்லை. இயற்கையை வெல்லும் திறன்கொண்ட மனிதனால் சில வேளைகளில் இயற்கையை வெல்ல முடியாமல் போய்விடுகின்றது. அண்மையில் ஏற்பட்ட சூறாவளி, சுனாமி, வெள்ளப்பெருக்கினால் மனிதன் அழிந்துபோகின்றான். ஆகையினால் புவியின் இயற்கை அனர்த்தங்களில் முக்கியமாக இன்று அனைவரினாலும் பேசப்படுகின்ற புவி அதிர்வு தொடர்பாக ஆராய்வோம்.

புவியோட்டின் ஒரு பகுதியில் ஏற்படும் சடுதியான அதிர்வை புவிநடுக்கம் (Earthquake) எனலாம். இதனை நிலநடுக்கம் , புவிஅதிர்வு, பூமிஅதிர்ச்சி என பலவாறு அழைப்பதுண்டு. புவியின் உட்பாகத்திலுள்ள பாறைக்குழம்பு புவியோட்டை தாக்கும் போது பெரும்பாலும் புவிஅதிர்வுகள் ஏற்படுகின்றன. புவிநடுக்கங்கள் ஏற்படும்போது பாறைகள் முன்பின்னால் அசைவதனால் அவை ஒன்றுடன் ஒன்று உரசிஓசையை எழுப்புகின்றன. நிலத்தில் வெடிப்புக்கள், பிளவுகளை ஏற்படுத்துகின்றன. உலகில் ஒவ்வொரு இரண்டரை மணி நேரத்திற்கும் பூமியில் எங்கோ ஓரிடத்தில் புவி அதிர்வு ஏற்படுகின்றது. அது போலவே வருடந்தோறும் சராசரியாக 40 நடுத்தர விசையிலான புவி நடுக்கங்கள் ஏற்படுகின்றன. உலகில் அதிக நிலநடுக்கம் ஏற்படும் இடமாக பசுபிக்சமுத்திரம் விளங்குகின்றது. இப்பகுதி ஓர் வட்டவடிவ வலயமாக அமைந்துள்ளது. இதனை (Ring of fire) என அழைப்பர். புவி நடுக்கத்தினை புவி நடுக்கக் கருவிகள் (Seismographs) பதிவு செய்கின்றன. புவிநடுக்கம் ஏற்படும் பகுதியை குவிமையம் (Focus) என்றும் அதற்கு நேர் மேலே செங்குத்தாக மேற்பரப்பிலுள்ள இடத்தினை மேன்மையம் (Epicenter) என்றும் அழைப்பர்.

### புவி அதிர்வு தோன்றக் காரணம்

முக்கியமாக நிலநடுக்கமானது இயற்கை செயற்பாடுகளினாலும் ,மனித செயற்பாடுகளினாலும், ஏற்படுகின்றன. இயற்கைக் காரணிகளில் புவிபௌதிகவியல், இடவிளக்கவியல்,எரிமலை செயற்பாடு வானிலையியல் காரணிகள் என்பன முக்கியமானவை இதில் புவி பௌதீகவியல் காரணிகள் எனும் போது புவி கவசத்தகடுகளுடன் சம்பந்தமானது.

புவியானது தோல் துண்டுகளின் இணைப்பால் உருவாகிய உதைபந்து ஒன்றினைப் போல புவியோடானது முக்கியமாக ஆறு பெருங்கவசத் தகடுகளாலும் 12சிறிய கவசத்தகடுகளாலும் உருவாக்கப்பட்டிருக்கின்றது இக்கவசத்தகடுகள் விலகியும் ஒருங்கியும், அமிழ்ந்தும், நகரும் இயல்புடையவை. இது புவி அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடியதான அசைவுகளாகும். கண்டத்தகடும், சமுத்திர தகடும் ஒன்றோடு ஒன்று ஒருங்கி மோதுமாயின் சமுத்திர தகடு அடர்த்தி கூடியதாகையால் அடர்த்தி குறைந்த கண்டத் தகட்டின்கீழ் அமிழ்ந்துவிடும் .

அமிழுகின்ற தகடு உயர் வெப்பநிலையுடைய மான்ரில் படையில் மோதி 300 - 670 கி.மீ ஆழம் வரையில் கரைந்து அமிழ்ந்து விடும். இதன் போது ஏற்படும் உதறல் பாரிய புவி அதிர்வினை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான செயல்பாடு 26,டிசம்பர்,2004 இல் இந்திய கவசத்தகடும் ,பர்மியன் தகட்டுடன் கூடிய ஐரோ - ஆசியதகடும் ஒன்றினை ஒன்று நோக்கி ஒருங்கியதால் பாரிய புவியதிர்வும் சுனாமி பேரலையும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. சமுத்திர தகடு ஒருங்கிக் கீழ் அமிழும்போது சமுத்திர அகழிகள் தோன்றி 30-60 வரையான கோணச்சாய்வில் புவி நடுக்க மையங்கள் தோன்றுகின்றன. இப் பகுதியை ''பெனிஒ.்.ப் வலயம் ''(Beniof zone) என்பர்.

படம் - 01

**கவசதகடுகளின் நடத்தைகள்**




புவி நடுக்கம் தோன்ற எரிமலை செயற்பாடுகளும் முக்கிய காரணமாகின்றன. புவியின் உட்பாகத்தில் உள்ள பாறைகுழம்பு (Magma) ஆனது புவியோட்டின் பலவீனமான பகுதிகளின் ஊடாக வெளியே கக்க முற்படுகின்றபோது பாறைகள் முன்பின்னாக அசைந்து புவிஅதிர்வினை தோன்றுவித்து விடுகின்றது. அவற்றோடு மானிட காரணிகளும் முக்கிய இடம் வகிக்கின்றமை குறிப்பிடதக்கது. மனிதனால் நதிகளை மறித்து உருவாக்கப்படும் பாரிய நீர்த்தேக்கம், ஆழமான கிணறுகள், அணுகுண்டு பருசோதனை இதில் முக்கியமானவை. அதாவது மனிதனால் அமைக்கப்படும் பாரிய நீர்த்தேக்கங்கள் புவியோட்டின் சமநிலைத் தன்மையை குலைக்கின்றது. இதன் காரணமாக அப்பகுதியில் நில நடுக்கங்கள் உருவாவதாக சொல்லப்படுகின்றது.

உதாரணமாய் மகாவலி கங்கை போன்ற பாரிய நீர்த்தேக்கமே இலங்கையின் மலைநாட்டு நிலநடுக்கங்களுக்கு காரணம் என புவியியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இது போல இந்திய நர்மதா நதியில் அமைக்கப்பட்ட இராட்சதநீர்த்தேக்கமே மகாராஸ்ராவில் ஏற்பட்ட நிலநடுக்கத்துக்கு காரணம் எனப்பட்டது. இதுபோலவே உலகின் வல்லரசு நாடுகள் நிலத்தடியில் மேற்கொள்கின்ற அணுகுண்டு பரிசோதனைகள் புவிநடுக்கத்தினை தோற்றுவிக்கின்றன.

புவிநடுக்கத்தின் போது மூன்று விதமான அலைகள் தோன்றுகின்றன. இவை முதலலை (P), துணையலை (S),மேற்பரப்பலை (L) என்பனவாகும். இவ்வலைகளின் தீவிரத்திற்கேற்ப புவியின் மேற்பரப்பில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. நிலம் பிளவடைதல், சுனாமி. நிலம்முறுக்கடைதல் போன்றன நிகழ்கின்றன.

# விடுகையாண்டு ஆசிரிய மாணவர்கள் 2006 - 2008
## குழு - 03



**1ம் வரிசை இடமிருந்து வலம்**
Mrs. ஜெ. ஜெயரூபன், Mrs. மே. பகீரதன், Miss. ம. அஜந்தா, Mrs.த.சண்முகலிங்கம், Mrs.ரே. கிருபாகரன் Mrs.லோ. தவச்செல்வம், Mrs. சி. கணேசநாதன், Mrs.ச. ரவிச்சந்திரன், Mrs.அ. தயாபரன், Miss. தா. சுஜிதா, Miss .மு. ஸ்ரீவிலாசினி, Miss. சி. உதயகுமாரி, Mrs.சி. பிரகாஸ், Miss. இ.கலையரசி, Mrs. ஜெ.ஸ்ரீகாந்தா.

**2ம் வரிசை இடமிருந்து வலம்**
Mrs. சு.கணேசலிங்கம், Mrs. கு. சத்தியநேசன், Mrs.கி. கருணாகரன், Miss.கு.சுகன்ஜா, Miss.அ.யூட்சியாறஸ்மி, Mrs.த.சந்திரகுமார், Mrs.வ.ஜெகதீசன் Miss.ப.தேவகி, Mrs.ம.வசந்தகுமாரன், Mrs.கௌ.கிருபாகரன், Mrs.ச.நவரத்தினம், Mrs.ம.சதீஸ்குமார், Miss.ப.சுஜிதா, Mrs.ய.சுதாஸ்கரன், Mrs.வி.தோமஸ்.

**3ம் வரிசை இடமிருந்து வலம்**
Mrs.ஜெ.சாந்தகுமார், Miss.க.புனிதமலர், Mr.நா.சுரேஸ், Mr.கு.ஜெனட்ரவிந்திரன், Mr.ம.ஜெயகாந்தன், Mr.வை.சுதாஸ்கரன், Mr.வி.வேலாநந்தன், Mr.பா.சதீஸ், Mr.க.கிரிசங்கர், Miss.சோ.கலைவீரநளினி, Miss.எ.ஜரின்சோபாஷினி

புவி நடுக்க அலைகளை புவிநடுக்கவியல்மானி (Seismometer) மூலம் அளக்கப்படுகின்றது. புவிநடுக்க உள்ளார்ந்த சக்தியின் அளவை றிச்டர் (Richter scale) அளவில் கணிக்கப்படுகின்றது.

## புவி நடுக்கத்தினை முன் கூட்டியே அறியும் வழிகள்

புவி நடுக்கத்தினை முன் கூட்டியே அறிய பாரம்பரிய முறைகள் சிலவும், நவீனமுறைகளும் உதவுகின்றன. விலங்குகளின் விசித்திரமான நடத்தைகள் புவிஅதிர்வு ஏற்படபோவதை எச்சரிப்பதாக சீனர்கள் நம்புகின்றனர். குதிரைகள் அமைதியிழந்து தவிப்பதும்,புற்றுகளிலிருந்து பாம்புகள் திரளாக வெளியே வருவதும் புவிநடுக்க அறிகுறிகளாக மரபுவழி மக்கள் நம்புகின்றனர்.

இதனைவிட பாறைகளில் ஏற்படும் திடீர் வெடிப்புக்கள் மூலமும், கிணறுகளின் நீர்மட்டம் உயர்ந்தோ,தாழ்ந்தோ மாற்றமடைந்து புவிநடுக்கம் ஏற்படப்போவதை இனம் காட்டிக்கொள்கின்றது பாறைகள் உடையும் போது புவியினுள்ளிருந்து அனல்மிகு ராடன் வாயுக்கள் (Radioactive radengas) வெளிவருகின்றது. உலகில் ரஸ்யாவும்,ஜப்பானுமே புவிநடுக்கத்தினை முன்கூட்டியே கணிப்பதில் வல்லவர்களாக திகழ்கின்றார்கள்.

படம் - 02

**நிலநடுக்க முன் எச்சரிக்கை அமைப்பின் மாதிரி**




## இலங்கையின் புவி நடுக்கங்கள்

சுமாத்திராவில் 2004ம் ஆண்டு டிசம்பரில் பாரிய அழிவை ஏற்படுத்திய நிலநடுக்கம் இலங்கையிலும் அதன் அதிர்வுகளை உணரச்செய்தது. காலை 7.05-7.15 மணிவரையில் இவை உணரப்பட்டன. வெள்ளவத்தை, கண்டி நுவரெலியா, பன்விலை, வத்தேகம, பேராதனை,தென்னகும்பர, குண்டகசாலை,தெல்தெனிய பகுதிகளிலும் இவை உணரப்பட்டன. கி.மு 150ம் ஆண்டளவில் இலங்கையின் களனிகங்கையை சூழ கடற்கோள் ஏற்பட்டதாக வரலாறு சொல்கின்றது.

## புவிநடுக்கத்தினால் ஏற்படும் அழிவுகள்

புவிநடுக்கமானது புவியின்மேற்பரப்பில் பாரிய அழிவுகளை உண்டுபண்ணுகிறது. அதாவது நிலம் பிளவடைதல், நிலம்முறுக்கடைதல், தண்டவாளம் முறுக்கடைதல், கட்டிடங்கள்இடிதல், நீர் தேக்கங்கள் அழிதல். மக்கள்அழிதல் என்பவற்றினைக் குறிப்பிடலாம். பொதுவாக நிலநடுக்கங்கள் மக்களை பலியெடுப்பதில்லை. ஆனால் நிலநடுக்கம் ஏற்பட்டபின் ஏற்படும் கட்டிட இடிபாடுகளாலும். தீ பரவுகையாலுமே ஏராளமான மக்கள் இறக்கின்றனர்.

கி.பி ஆறாம் நூற்றாண்டில் மத்தியதரைக் கடலில் ஏற்பட்ட நிலநடுக்கம் 3 லட்சம் மக்களை பலிகொண்டது. இதுபோல 1755ல் லிஸ்பனில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் 50000 பேர் இறந்தனர். 1906ல் சித்திரை 18ந் திகதி அமெரிக்காவின் சன்பிரான்ஸிக்கோவில் காலை 5.12 மணிக்கு ஏற்பட்ட நிலநடுக்கம் 40 வினாடிகள் நீடித்தது. இதில் 315 பேர் உயிரிழந்ததுடன் 30000 கட்டிடங்கள் தரைமட்டமாகின. 25000 பேர் வீடுகளை இழந்தனர். 1908ல் இத்தாலியில் நிலநடுக்கத்தினால் 150000 பேர் இறந்தனர். இதேபோல் 1917ல் சீனாவில் நிலநடுக்கத்தினால் 100000 பேர் இறந்தனர். 1920ல் சீனாவில் 200000 பேர் இறந்தனர். மேலும் 1923ல் டோக்கியோவில் 250000 பேர் இறந்தனர். 1948ல் ஜப்பானில் 7.3 றிச்டர் அளவிலான நிலநடுக்கத்தினால் 3500 பேர் இறந்தனர். 1970ல் பேருவில் 17000 பேர் இறந்தனர். 1976ல் சீனாவின் தங்சான் நகரில் 7.6 றிச்டர் அளவிலான புவி அதிர்வில் 500000 பேர் மாண்டனர். 1993ல் இந்திய மகாராஸ்ராவில் 35000 பேர் இறந்தனர். இந்நிலநடுக்கம் இலங்கையின் தென் பகுதியிலும் உணரப்பட்டது. 1995ல் ஜப்பானின் கோபே நகரில் 7.2 றிச்டர் அளவிலான நிலநடுக்கத்தினால் 5500 பேர் இறந்தும், 190000 கட்டிடங்களும் இடிந்தன. 2001ல்குஜராத் மாநிலத்தில் நிலநடுக்கத்தினால் 15000 பேர் இறந்தனர். இது போல 2004ல் டிசம்பர் 26ந் திகதி சுமாத்ராவில் 9.0 றிச்டர் அளவிலான நில நடுக்கத்தினால் தோன்றிய சுனாமி அலை இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் பல்லாயிரம் மக்களை பலியெடுத்தமை நினைவு கூறத்தக்கது.

## புவியதிர்விலிருந்து ஓரளவு விடுபடக் கையாளக்கூடிய வழிமுறைகள்

புவியதிர்ச்சியானது இன்று முன்கூட்டியே அறியக்கூடிய அளவிற்கு விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றுள்ளது. இதன் காரணமாகப் பாரிய அழிவுகள் தடுக்கப்படுகின்றன. 2007ம் ஆண்டு செப்டம்பரில் இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் சுனாமி அலைகளின் தாக்கம் இலங்கை உட்பட பல நாடுகளைத் தாக்கலாம் என அறிவிக்கப்பட்டதனால் கரையோரப்பகுதி மக்கள் உடனடியாக இடம்பெயர்ந்தனர். புவியதிர்ச்சி பற்றி விஞ்ஞானிகள் (Seismologist) அடையாளங்களை மிகத்தவறாமல் கண்டுபிடிக்கின்றார்கள். மண்ணில் ஏற்படும் சில அசைவுகள், நீரில் காணப்படும் ஒரு விஷேட வாயு, மிருகங்கள், பறவைகளின் வித்தியாசமான நடத்தை மூலம் இதனை ஊர்ஜிதம் செய்கின்றார்கள். உலகப்பரப்பில் பூமியதிர்ச்சி ஏற்படக்கூடிய தரைப்பிரிவுகள் பல்வேறு தட்டுக்களாக (Plates) பிரிக்கப்பட்டுள்ளது. இத்தட்டுக்களில் ஆபத்தான இடத்தில் அமைந்துள்ள நாடுகள் எளிதில் புவி அதிர்வுக்கு உட்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதனால் அவை அதிக விழிப்பாக இருத்தல் வேண்டும்.

அத்தோடு பல்வேறு வேலைத்திட்டங்களை அரசு அமுல்படுத்த வேண்டும். உலக நாடுகள் இணைந்து நிலநடுக்கம் தொடர்பான மகாநாடுகளை நடத்த வேண்டும். சீனாவில் 1970ல் முதலாவது புவி அதிர்ச்சி மகாநாடு இடம்பெற்றது. இம்மகாநாட்டில் 1980ல் சீனாவில் லியோனிங் மாகாணத்தில்பாரிய நிலநடுக்கம் ஏற்படும் என எச்சரித்தமையால் 35மில்லியன் மக்கள் பாதுகாக்கப்பட்டனர். இதனால் அங்கு 12 புவியதிர்ச்சி அவதானிப்பு நிலையங்களை நிறுவி அரசு விரைந்து செயற்பட்டது. இந்நிலையங்கள் ஊடாக மக்கள் அனைவரினதும் கவனத்தினை ஈர்க்கும் வகையில் பாரிய விழிப்புணர்வுப் பிரசாரங்கள் இடம் பெற்றன. அதில் மாணவர்களுக்கு அறிவூட்டும் வேலைத்திட்டம் பாடசாலை பூராவும் நடைமுறைப்படுத்தப்பட்டது. கையேடுகள், படங்கள் நிறைந்த புத்தகங்கள், (comics) விநியோகிக்கப்பட்டன. மடிக்கக்கூடிய சீன விசிறிகளில் கூட கவிதைகள் எழுதப்பட்டு புவியதிர்ச்சி ஏற்பட்டதும் செய்யவேண்டிய நடைமுறைகள் எழுதப்பட்டிருந்தன.

மேற்படி சீனாவின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை எல்லா உலக நாடுகளும் கவனத்திற் கொண்டு பல்வேறு முன்னெச்சரிக்கைகளை செய்யுமாயின் பாரிய இழப்புக்களை தவிர்க்கலாம். கொலராடோ பல்கலைக்கழக புவியியல் அறிஞரான டாக்டர் ரொகெர் பில்ஹாம் (Dr.Rogerbilham) இந்தியாவின் வடக்கில் இமையமலைப் பகுதியில் 60% நிலப்பரப்பை பாதிக்கக்கூடிய பாரிய நிலநடுக்கம் ஏற்படும் என எச்சரித்துள்ளார். இது 8 றிச்டருக்கு கூடவாகவும், 150 மெகா தொன் அணுகுண்டு வெடிப்புக்கு சமனானது என்கிறார்.

நிலநடுக்கங்களை துல்லியமாக இனங்கான முடியாது. எனினும் புவியின் சுற்றுப்பாதையில் புவிக்கு இணையாக அதே வேகத்தில் சுற்றிவரும் செய்மதிகள் (Global positioning System satellites) வாயிலாக குறிப்பிட்ட பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு நிலத்தட்டுக்கள் நகரும் திசை,வேகம், அவற்றில் ஏற்படும் அசைவுகள், மாற்றங்கள் என்பவற்றை ஜப்பான், சீனா, துருக்கி, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகள் நிலநடுக்கம் பற்றி அறிகின்றன. இது சிறந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உலகம் ஏற்றுள்ளது.

தங்கராஜா.ஜெகதீசன்
விடுகையாண்டு

# SMS SHORT CUTS
## கையடக்கத்தொலைபேசிக்காக சுருக்கெழுத்துக்கள்

1dRfL - wonderful
2 - to/too/two
2moro - today
2nite - tonight
3 dom - freedom
4 - for, four
4 get - forget
4N - forign
ADN - any day now
AFAIK - as far as I know
AFAIR - as far as I recall
ASAP - as soon as possible
ATM - at the moment
B - be
$B_4$ - before
$B_4N$ - by fore now
BB - bye bye
Bf - boy friend
BG - big grin
BION - belive it or not
BK - big kiss
BTDT - been there, done that
BTW - by the way
By - busy
C - see / sea
CB - call back
CUL - see you later
CWYL - chat with you latter
DUZ - does
DUZN - doesn't
F2F - free to talk
G2G - go to go
Gf - girl friend
Gr8 - great
Grr - anygry
H2 - how to
HUH - have you heard

IC - I see
ICCL - I couldn't care less
IK - I know
ILU/ILY - I love you
In 4 ml - Informal
Kiss - keep it simple stupid
KUTGW - keep up the good work
L8 - late
L8r - later
LMK - let me know
M8 - mate
MOF - matter of fact
MT - empty
MTE - my thought exactly
NAGI - not a good Idea
Ne - any
Nel - any one
No 1 - no one
nrg - energy
OIC - oh I see
Ok - okey
ONNA - oh no / not again
OTT - over the top
PCM - please call me
Pls - Please
PpL - People
PTL - Praise the lord
R - are
Re - regarding
Ruok - are you okey ?
Spk - Speak
Sry - Sorry
SWAK - Sealed with a kiss
THX - thanks
TTYL - talk you to latter
TXT - text
U - You

U @ - you at ? (Where are YoU?)
UOK - you okey?
UR - your / you're
USU - ysually
W8 - wait
W84m - wait forme
W/ - with
Wan2 - want to
wn - when
WMF - works for me
Wru - where are you ?
XLNT - excellent
y - why
YM - you mean
YR - yeah .right
@ - "At"
MSG - "message"
W - "with"
ATB - "All the best"
NE - "Any"
W/O - "With out"
B - "Be , Bee"
NETHNG- "Anything"
WKND - "Weekend"
BCNU - "I'll be seeing you"
NE1 - "Any one"
BWD - "Backward"
NO1 - "No one"
XOXOX - "Hugs and kisses"
YR - "Your"
DOIN - "Doing"
GONNA - "Going to"
SUMI - Some one
3 SOME - three some
STRA - Stary
H8 - Hate
THNQ - Thank you
:-) - I'm happy
:-0 - I'm surprised
:-C - Sad face

LUV - Love
d:) - Base ball cap
MOB - Mobile
WAN2 - Want to
:-/ - Confused
F2T - Free to talk
RUOK - Are you okey
FWD - Forward
RGDS - Regards
:) - Original smiley
:-) - Classic smiley
:.) - Wink
:-)) - Very happy
1-) - Hee – hee
:ˉD - Laugh loud
:ˉO - Amezement
:^D - Great I like it
:-* - Kiss
‹B - I love you
:- s - Confusion
{} - No comment
:- - Big wet kiss
:-9 - Licking lisps
0/$_0$) - Confused
*:* - Fuzzy face
:- c - Totally unbelievable
:- @ - Screaming
:- 7 - Wry remark
:- P - Sticking out tongue
:- ( - Frown
: > - Devilish grin
(:-I - K- Dressed to kill
:- II - Angry
:: = )) - Seeing double
:- > - Hey
1:-0 - Noexplanation
#-) - Partied all night
:-1 - Hmmm
:- & - Tongue tied
(:-.... - I'm tips are sealed
8 ˙ ) - Sender wears sealed

| | |
|---|---|
| :+( | - I'm hurt by that |
| :+)? | - tipsly |
| :- 0 | - Oh |
| :- 0) | - Iinnocent |
| #:-0 | - Oh no |
| :- # | - My lips are sealed |
| <:-) | - Dump Question |
| ~ 0 ~ | - Bird |
| :@ | - Ouch |
| :-(*) | - Sick comment |
| (:- | - Bald |
| ://) | - Frustrated |
| :3-< | - Dog |
| D:-) | - Hats off to your great idea |
| :- $ | - Put your money Where your mouth is |
| :- {} | - Sender has moustache |
| 1-1 | - Going to sleep |
| : @ ) | - Pig |
| \0/ | - Praise the lored |
| *<:O | - Clown |
| :=8) | - Baboon |
| 8^ | - Chicken |
| ~# :-( | - Bad hair day |
| :'-( | - I'm crying |
| :*)1 | - tipsy |
| :-) | - Sender has curly hair |

Mrs. Fathima Azmila zameel
2nd Year



# நாட்டிய சம்பிரதாய உருப்படிகளும் அவற்றின் விரிவான விளக்கமும்

### தோடய மங்களம்:-

நாட்டியக் கச்சேரி ஆரம்பிக்கும் முன் நடனமணி உள்ளே இருந்து வெளியே வருவதற்கு முன்னால், பாடகரும் பக்கவாத்தியகாரரும் சரியாகச் சேர்ந்து இசைப்பதற்காகவும், மங்களத்திற்காகவும், ''மேளாபகம்'' மேளப்ராப்தி; மேளம் கட்டுவதுஎன்னும் நிகழ்ச்சியை சுமார் ஒரு மணி நேரத்திற்கு நட்டுவனார் நடத்துவார்.முதலில் மிருதங்கம்ஒலிக்க வேண்டும்.ஒரு தாளத்தில் பல நடைகளில் குறைந்து வரும்படி ஜதிகள் சொல்லி வாசிக்கப்படும்.பின் ''ஜயஜானகீரமண'' என்ற தோடயமங்களம் பாடப்படும். இது கடவுள் வாழ்த்து,மங்களம் என்றும் ''ஜய ஜய'' என்றும் மங்கள சொற்கள் நிறைந்த பாடலாக ராகதாளமாளிகையில் அமைந்திருக்கும். கோயிலில் இருக்கும் கடவுளின் பெயர் புகழ் நிறைந்ததாக தோடயமங்களம் அமையும்.

### அலாரிப்பு :-

அலர் என்பது மலர்வது எனும் பொருள்படும். இதில் நடனம் ஆடுபவர் தன்உடலை மலராக நினைத்து அதனை கடவுளுக்கு அர்ப்பணம் பண்ணுவது போல் அமைக்கப்பட்டுள்ளது. இவ் உருப்படி ஒரு நாட்டிய மேடைக்கச்சேரியின் ஆரம்பமாகும். குரு, தெய்வம்,சபையினர் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஆகவும் இது அமைந்துள்ளது. இது ஒருநிருத்த உருப்படியாகும். தனிச் சொற்கட்டுக்களால் ஆனது. ''தாம்திதா'' எனும் சொற்கட்டே இதில் மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றது. இது திஸ்ர,சதுஸ்ர,மிண்ட,மிஸ்ர,சங்கீரண ஆகிய ஐந்து ஜாதிகளிலும் அமைந்திருக்கும் முதலில் கண்ணசைவுடன் ஆரம்பித்து பின் கழுத்து,தோள், இடுப்பு அசைவுகள் ஏற்படும். ஆங்கம்,பிரத்யாங்கம் அனைத்திற்கும் இதில்பிரயோகம் இருப்பதால் இந்நடனம் அழகை மலர்கிறது. ''சமபாதம்'' என்ற ஸ்தானத்தில் நின்று ''சௌஷ்டவம்'' என்ற குணமும், அழகும் அமைந்திருக்க திருஷ்டி சாதாரணமாயும் கைகளை மணிக் கட்டின் பின் புறமாய் இடுப்புப் புறங்களில்பொருத்தி இயற்கையாக நிற்பதோடு இந்நடனம் ஆரம்பமாகிறது. இது ஒரு பிரார்த்தனைக்குரிய நடனமாகும்.

## ஜதீஸ்வரம்:-

அலாரிப்புக்கு அடுத்த நிகழ்ச்சி இதுவாகும். ஸ்வரங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டதாய் இருக்கும். இதில் ஸ்வரங்களுக்கு ஏற்றப்படி கோர்வை அமைக்கப்பட்டிருக்கும். அபிநயம் இல்லாத நிருத்த வகையைச் சேர்ந்தது. ஜதீஸ்-வரம் முதலில் ஜ்வரத்துடன் ஆரம்பித்து தாள அங்கங்களில் ஜர்வலகுவில் ஆடியபிறகு ஒரு சிறு ஜதியும் தீர்மானமுமாக தொடரும். தீர்மானம் என்பது சில அடவுகளைக் கொண்டு ஒரு தாளத்தில் கற்பனையுடன் சேர்க்கப்பட்ட கோர்வையாகும். ஒரு ஜதீஸ்வரத்தில் சுமார் நான்கு ஸ்வரங்கள் வரை அமைந்திருக்கும். இது பல்லவியையும், சரணத்தையும் உடையதாக இருக்கும். சொற்கட்டுக்களையும் ஜதி கோர்வைகளையும் ஆதாரமாகக் கொண்டு அமைந்துள்ளது. இது கானவாத்திய நிருத்த வகையைச் சேர்ந்தது. ராகமாளிகை, கல்யாணி,வசந்தா,காவேரி,சரஸ்வதி, தோடி இராகங்களில் அமைந்துள்ளது.

**சப்தம்:-**

ஜதீஸ்வரதத்திற்கு அடுத்தப்படியாக பரதநாட்டியத்தில் வரும் உருப்படி ''சப்தம்'' ஒருநடன நிகழ்ச்சியில் முதலாவதாக பாவம் தோன்றுவது இந்த உருப்படியில்தான். சப்தம் என்றால் 'சொல்'' என்று பொருள். சொற்கட்டுக்களுடன் தொடங்குவதால் இதற்கு சப்தம் என்று பெயர். ஆர்த்தம் நிறைந்த ஸாஹித்யமும், சிறு ஜதிகோவைகளும் இணைந்து வரும் சாதாரணமாக மிஸ்ரசாபு தாளத்தில் காம்போதி அல்லது ராகமாளிகையில் அமைந்திருக்கும். பொதுவாக இதனசாகித்யம் விஷ்ணு அல்லது கிருஷ்ணனைப் பற்றியதாகவே இருக்கும். சப்தம் பெரும்பாலும் ஒருவரைப்பற்றி புகழுரைப்பதாகும். சாதாரணமாக அதன் தலைவனின் குணத்தை அறிவிப்பதாக இருக்கும். சப்தத்திலே பொருள் கொண்ட சொற்களும், சாகித்தியங்களும் காணப்படும். இதிலே நடனத்திற்கான ஜதிகளும் அபிநயத்திற்கான சொற்கோர்வைகளும் தொடர்ந்து வரும். பழைய சுவடிகளில் ஏராளமான சப்தங்கள் இருப்பதைக் காணலாம். தசாவதாரம், இராமாயணசப்தம் மண்டுகசப்தம்,மண்டோதரிசப்தம் முதலிய நீண்ட உருப்படிகளும் உண்டு

**வர்ணம்:-**

ஒரு சம்பிரதாயக் கச்சேரியில் நடுநாயகமாக விளங்கும் உருப்படி வர்ணமாகும். இவ்வர்ணம் நாட்டிய சம்பிரதாய உருப்படிகளில் நான்காவது உருப்படியாக உள்ளது. இது சப்தம் என்னும் உருப்படியைத் தொடர்ந்து ஆடப்படும். ஒரு நடனக்கச்சேரியின் சிகரமாக விளங்கும். ஒரு நாட்டியப் பெண் தன் திறமைகள் அனைத்தையும் சபையோருக்கு வெளிக்காட்டும் இடமாக இவ்வர்ணம் எனும் உருப்படி உள்ளது. வர்ணம் எனும் உருப்படி இசைக்கும்,நடனத்திற்கும் பொதுவானதாகும். வர்ணம் இரு வகைப்படும். நடனத்திற்காக உருவாக்கப்பட்ட வர்ணம் பதவர்ணம் ஆகும். இதனை சௌக்க வர்ணம்" என்றும் "ஆட்டவர்ணம்" என்றும் அழைப்பர். இது பெரும்பாலும் சௌக்க காலத்தில் அமைந்திருக்கும். வர்ணத்தில் நடனத்தின் உட்பிரிவுகளான நிருத்தம், நிருத்தியம் இரண்டும் இடம்பெறுகின்றது. அதாவது சுத்த நிருத்தமும், அபிநயமும் ஒன்றை ஒன்று தொடர்ந்து பின்னிப்பிணைந்து காணப்படும். பதவர்ணத்தில் பாவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். நாயகன் நாயகி பாவங்களில் அமைந்திருக்கும். பாட்டிற்கான வர்ணத்தை தாளவர்ணம் என்றும் கூறுவர். பூர்வாங்கம், உத்தராங்கம் என்று இரண்டு பாகங்களைக்கொண்ட வர்ணம் தானவர்ணம் பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம் மறுபடியும் பல்லவி என்ற வரிசையில் பூர்வாங்கம் அமைந்துள்ளது. உத்ராங்கம் எதுகடை பல்லவியையும் சரணங்களையும் உடையது.

**பதம்:-**

இது கடினமான உருப்படியான வர்ணத்திற்கு அடுத்தப்படியாக மெதுவான காலப்பிரமாணத்தினைக் கொண்ட நிகழ்ச்சியாகும். அபிநயத்திற்கென்றே தனியாக எடுத்துக்கொள்ளும் பாடல்கள் பதம் எனப்படும். அபிநயம் பதங்களில்தான் முக்கியமாகத் திகழ்கின்றது. கண்களாலும்,முகபாவங்களாலும், கைமுத்திரையாலும் பதத்தின் கருத்து வெளிப்படுத்தப்படுகின்றது. பதங்கள் அதிகமாக சௌக காலத்திலும் ஆடப்படுகின்றன. இவற்றில் சிருங்கார இரஸமே காணப்படுகின்றது. பதத்தின் கருத்து வெளிப்படையாக சிருங்காரமாக இருந்தாலும் இதன் உட்கருத்து

ஆழ்ந்த தத்துவங்களை உடையதாகவே இருக்கும். கடவுளைப் பரமாத்மவாகவும், தன்னை ஜீவாத்மாவகவும் கொண்டு இயற்றப்பட்ட பாடல்கள் பதங்களுக்கு உயிர் ஊட்டுகின்றன. பாட்டிய தர்மி, லோகதர்மி ஆகிய இருதரப்பிலும் அபிநயிக்கலாம். அவரவர் இரசனைக்கேற்றப்படி அமைக்கலாம். இதில் பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் அமையப்பெற்று பல பதங்களில் அனுபல்லவியுடன் ஆரம்பமாவதைக் காணலாம். சகியுடன் பேசுவதாகவும், நாயகனைப் பிரிந்து தூது செல்ல அழைப்பதாகவும் பல பதங்கள் அமைந்திருக்கும்.

***கீர்த்தனை:-***

பதத்திற்கு பின் ஆடப்படும் நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. நிருத்தமும், நிருத்தியமும் இணைந்து இவ் உருப்படி அமைக்கப்பட்டிருக்கும். இவை அநேகமாக பக்தி இரஸத்தினை வெளிப்படுத்துவனவாக இருக்கும்.பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய மூன்று பகுதிகளை உடையது சில கீர்த்தனங்களின் அழகைக் கூட்டுகின்றன. இறைவனின் புகழைப்பாடுவதை கீர்த்தனம் என்ற பொருளில் (கீர்த்துயதே, இதிகீர்த்தன) காரணப்பெயராக அமைந்தது. சாகித்யம், பக்தி நிரம்பியதாகவும் புராண நிகழ்ச்சிகளைப் பற்றியதாகவும், பக்தர்களின் உணர்ச்சிகளைத் தெரிவிப்பதாகவும் இருக்கும்.

***அஷ்டபதி:-***

ஒரு பரதநாட்டியக் கச்சேரியில் கீர்த்தனங்களுக்கு அடுத்தப்படியாக ஆடப்படுவது அஷ்டபதியாகும். இது கிருஷ்ணபரமாத்மாவிடம் இராதைக் கொண்ட அன்பினை சித்தரித்துக் காட்டுவனவாக அமைக்கப்பட்டுள்ளது. இது சமஸ்கிருத மொழியிலேயே அமைந்துள்ளது. இதில் பல்லவி, சரணம் என இரு பிரிவுகளே ஜெயதேவ சுவாமிகளினால் அருளிச் செய்யப்பட்டவையாகும். இவ்வஷ்டபதிகள் எட்டு சரணங்களைக் கொண்டவை. நாட்டியத்தை அழகு படுத்தும் ரஸங்களும், பாவங்களும், நாயக, பேதங்களும் ஒப்பற்ற திறமைகளில் ஜெயதேவரால் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஆஷ்டபதிகள் கண்ணபிரானையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டவை.

***ஜர்வளி :***

பதங்களைப்போல் ஜர்வளிகளிலும் அபிநயமே பிரதானமாக விளங்குகின்றது. ஜர்வளிகள் மனிதர்களை தலைவனாகக் கொள்ளும் சிருங்காரத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும். முத்திம காலத்திலோ, துரித காலத்திலேதான் அதிகமான ஜர்வளிகள் உள்ளன நாயகிகள் பாடும் ஜர்வளிகளே பெரும்பாலும் காணப்படுகின்றன.நாயகன் பாடும் ஜர்வளிகள் அபூர்வமாக கிடைக்கின்றன. ஜர்வளிகள் எளிய நடையில் சாதாரண சொற்றொடரில் அமைந்திருக்கும். பல்லவி,அனுபல்லவி,சரணம் போன்ற அங்க வித்தியாசங்கள் உண்டு. சாதாரண வர்ண மெட்டுக்களுடன் ஆதி,ரூபகம் என்னும் தாளங்களில் அமைந்திருக்கும். சரணம் ஒரே தாதுவிலும் பாடப்படும். கேட்டவுடனே மனதைக் கவரும் இசையில் அமைந்துள்ளதால் பெரும் பாலும் எல்லோரும் விரும்பக்கூடியதாய் இருக்கும்.

**தில்லானா :-**

இது நிருத்தத்தின் இறுதியில் இடம்பெறும். அழகான, விரைவான,துரிதம் நிறைந்த கடைசி நிகழ்ச்சியாகும். சொற்களையே மையமாகக் கொண்டு இயற்றப்படும். உருப்படி தில்லானா. ஜதிபோல உச்சரிக்கப்படாமல் பாடப்படும் இசை உருப்படியாகும். இசை,நடனம் ஆகிய கச்சேரிகளில் கடைசிப்பகுதிகளில் கையாளப்படுவது தில்லானா.பல்லவி, அனுபல்லவி,சரணம் இதன் அங்கங்களாகும். சரணத்தில் இரண்டு வரி ஸாகித்யமும் இருக்கும். ஆடப்படும் போது பல்லவியை பலமுறைப் பாடிக்கொண்டே போவார். இதற்கு தாளவின்யாஸ முறையில் பல விதமான அடவுகள் கோர்வைகளாக ஆடப்படுவதைக் காணலாம். தில்லானா எப்போதும் மெய்யடவுடன் ஆரம்பமாகின்றது. மூன்று காலங்களிலும் செய்யப்பட்டபின் சிக்கலான ஜதி பேதங்களைக் கொண்ட கோர்வைகளை கொண்டு காணப்படும்.

**ஸ்லோகம் :**

- பரதநாட்டிய நிகழ்ச்சியின் ஈற்றில் இடம் பெறும் நிகழ்ச்சியாக இது அமைந்துள்ளது. தாளத்தில் பாடாது கவிதைகளை இராகமாக நீட்டிப் பாடுவதை ஸ்லோகம் என்று கூறுவர். வடமொழியில் ஸ்லோகம் என்றும், தமிழில் விருத்தம் என்றும் தெலுங்கில் பத்யம் என்றும் சொல்வர். இந்த மூன்று சொற்களும் கவிதையையே குறிக்கின்றன. பரமாத்மாவின் பல அற்புதலீலைகள் சித்தரிப்பனவாக இவை அமைக்கப்பட்டிருக்கின்றது. பக்தி இரசம் ததும்பியது. தாளம் இல்லை. பக்கவாத்தியம் இல்லாமல் செய்யக்கூடியதாக உள்ளது. தெய்வங்களின் பெயரே இடம்பெறும்.

வினிட்டா மகேஷ்வரி ஜோன்
விடுகையாண்டு

# மனிதனின் தேடல்

மனித இனம் தோன்றிய காலம் தொடங்கி இன்றைய நவீன விஞ்ஞானகாலம் வரை மனிதன் தன்னை சாதனை வீரனாக அனைத்துத் துறைகளிலும் வெளிக் காட்டுகின்றான். அவனின் சிந்தனை, செயல், தேடல் அனைத்தும் நாளுக்கு நாள் விருத்தியடைந்து செல்கிறது என்றால் அது மிகையாகாது. கணனி வேகத்தில் முன்னேறிக் கொண்டு செல்லும் மனிதன் தான் சாதிக்கப் போகும் எத்தனையோ விடயங்களை எவராலும் கோடிட்டுக் காட்ட முடியாதவாறு பயணித்துக் கொண்டிருக்கின்றார். ஏனெனில் அவனின் எதிர்நோக்கு பலதுறைகளிலும் பலரையும் அதிசயித்து, ஆச்சரியப்படுத்தும் வகையிலும் அமைகின்றது.

"தேடல் ஒன்று உள்ளவரைதான் வாழ்வில் சுகம் இருக்கும்" எனும் பாடல் வரிகள் அழகாக எடுத்துக் கூறுகின்றது. அதுவே தேடல் அறியும் அவா என்பது வாழ்வில் பின்னிப்பிணைந்து ஒன்றாக கலந்து காணப்படுகின்றது. உளவியலாளர்களின் கருத்துப்படி ஒரு சாதாரண குழந்தை பிறந்து 4 அல்லது 5 மாதங்களின் பின்னர் நடப்பவைகள், பார்ப்பவைகள் அனைத்தையும் தன்னகத்தே எடுத்துக் கொள்கின்றது. குழந்தை வளர்ந்த பின்னர் அனைத்தையும் அறியும் ஆவலில் பல கேள்விகளை கேட்கின்றது. இத்தகைய தேடல் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. இவ்வாறு வளரும் மனிதன் தான் வாழும் காலத்தில் பல சாதனைகளை படைக்க தேடலிலே தனது காலத்தைச் செலவிடுகிறான். இதற்கு "கின்னஸ்" புத்தம் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

மனிதனின் தேடலானது ஒரு பயணம் இப்பயணத்தில் பல சவால்கள், தோல்விகள், சலிப்புகள், என்பன மேலும் கசகசப்பானது. இவற்றின் மத்தியிலும் தனது விடா முயற்சியால் சாதிக்கிறான். மேலும் 20ம் நூற்றாண்டில் மனிதனின் சாதனைகளை பார்ப்போமாயின், 1900ம் ஆண்டு மோட்டார் வாகனக் கண்டு பிடிப்பு, 1903ம் ஆண்டு ஆகாய விமானம், 1935ல் பூமி அதிர்ச்சியை அளவிடும் அளவுகோல், 1938ம் ஆண்டு வர்ணத் தொலைக்காட்சியை அறிமுகம் செய்திருக்கின்றான். இவ்வாறு மனிதனின் சாதனைகள் தலைசிறந்து விளங்குவதைக் காணலாம்.

இன்று மனிதன் தனது நவீன காலத்தேடலிலே இயந்திர மிருகமாக மாறுவதைக் காணலாம். இன்றைய நவீன தேடலிலே தன்னைத் தடம்பதிக்கத் துடிக்கும் மனிதன் பல வகையிலும் முரண்பாடுடையவனாக மாறுகிறான். நாம் இன்றைய நவீன காலத்தில் காண்பதென்ன? கொலை, கொள்ளை, வன்முறை, அடக்கு முறை, வெறியாட்டம், விபச்சாரம், பணத்திற்காக எதையும் செய்யும் கூட்டம். இன்றைய காலத்தில் நவீன விஞ்ஞானமானது மனிதனையும் அவனது புனிதமான வளர்ச்சியையும் குழிதோண்டிப் புதைக்கின்றது. மனிதனின் தேடலின் விளைவாக அவன் தனது மனித விழுமியங்களை மறுக்கின்றான். மறுபுறத்தில் அவன் விஸ்வரூபம் எடுத்து மிருக வடிவில் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றான்.

இவ்வுலகில் வாழ ஆரம்பிக்கும் ஒவ்வொரு மனிதனும் நிலையான உண்மையை அறிய, வாழ்க்கையில் அனுபவிக்க அழைக்கப்படுகின்றான். மெய்யியலாளர்களின் கருத்துப்படி உலக மக்கள் தொகையில் அதிகமானோர் அறியாமை என்ற இருண்ட உலகத்தில் தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். மெய்யியலாளர் 'பிளேட்டோ' இவ்வாறு கூறுகிறார். கூடுதலான மக்கள் உண்மையைத் தேடாமல் அறியாமல் தம்

வாழ்க்கையினை இருண்ட குகையிலே தான் கடத்துகிறார்கள். (World of shadow) ஆகவே எனது பணி அவர்களை வெளியில் உண்மை உலகிற்கு அழைத்து வருவது. ஆகவே அதற்காக என் வாழ்க்கையின் தேடலை செலவழிக்கிறேன் என்கிறார்.

மற்றுமொரு மெய்யியலாளர் சோக்கிரடீஸ் கூறுகிறார். எனது பணியானது ஒரு தாதியின் பணியைப் போன்று உதாரணமாக தாதி குழந்தை பெறவிருப்பவருக்கு உதவியாக இருப்பார். ஆனால் அவர் குழந்தை பெற இருப்பவருக்காக தான் குழந்தை பெறமாட்டார். அதுபோல் நானும் உண்மையைத் தேடி உலகிற்கு வெளிப்படுத்த அழைக்கப் பெற்றிருக்கிறேன். அவர் சொல்கிறார் " எனக்கு தெரியும், எனக்குத் தெரியாது" ( I know that I do not know) இவ்வாறு கூறி தனது தேடலின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறான்.

ஆகவே இவ்வுலகில் பிறந்து வாழ்ந்து வரும் நாம் அனைவரும் பிறப்பிலிருந்து உண்மையைத் தேடி அலைய அழைக்கப்படுகின்றோம். இந்த உண்மையானது இவ்வுலக மனிதர்களால் சிதறடிக்கப்படாமல் தெளிவாக உறுதியாக ஒரு நோக்கான உண்மையைத் தேடிச் செல்ல துணை செய்யும்போது தான் எம் வாழ்வின் நோக்கம் நிறைவேறுகின்றது.

J.M.சுஜாதா
இறுதியாண்டு.

# சம்பள நாள்
# சிறுகதை

"கதிரவன் குளித்த வெந்நீரின் புகையோ இந்த பனிகளின் கூட்டம்? என்று கேட்கத் தோன்றும் ரம்மியமான காலைப் பொழுது அது. இசை பாடும் அருவிகளும், கவிபாடும் பறவைகளும் தந்த வரவேற்பை பூரிப்புடன் ஏற்றபடி சூரியன் இலேசாய் சிரித்திருந்தான். பச்சை நிறத்திற்கே உரு கொடுத்த மலைகளின் கம்பீரம் நாளுக்கு நாள் மிருகேறுவது இந்த மலையக பாக்கியம். எந்த ஒரு வர்ணனையும் இந்த பொழுதின் அழகை முழுதாக கூற முடியாது.

மலைகளின் நடுவே எறும்புகளின் அணிவகுப்பு போல சத்தமிட்டபடி விரைந்து விரையத் தொடங்கியிருந்தது. தூரத்தில் இருந்து பார்ப்பதற்கு அது ஒரு தனி அழகு பனிமூட்டங்களை கிழித்தபடி கம்பீரமாய் தனது சேவையை மலையகத்தில் கால்பதித்து செய்துகொண்டிருந்தது. போக்குவரத்து வசதிகள் இல்லாத ஊரில் பயணம் செய்ய கற்பித்த பெருமை அந்த இரயில் பெட்டிகளுக்குத்தான் சொந்தம். அவ்வாறு இரயில் பயணத்தில் அடிமைப்பட்டுப் போன ஒருவன்தான் சரவணன். அந்த ஊரில் இருந்து நகரத்திற்கு கடற்தொழிலாளியாக செல்பவர்களில் அவனும் ஒருவன் கட்டிட நிர்மாணிப்பில் வேலைபார்த்து நாட்களை ஓட்டிக்கொண்டிருக்கும். வறிய சூழலில்தான் அவனது குடும்பம் ஓரளவு பசியின்றி வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறது. ஊரின் எல்லையைத் தாண்டிப் போய் பணம் சம்பாதிக்கும் சூழலில்தான் அந்தக் கிராமம் அமைக்கப்பட்டிருந்தது. இவன் மட்டும் என்ன விதி விலக்கா? ஞாயிற்றுக்கிழமை விடுமுறைகளின் நடைமுறையை இவன் அறிந்திருக்கவில்லை. அன்று கூட ஒரு ஞாயிற்றுக் கிழமைதான் குளிரின் கொடுமைகளையும், உடல் வலிமைகளையும் குடும்பத்தின் வயிற்றுப் பசிக்காக தாங்கிக்கொண்டு தமக்கான இரயிலின் வருகைக்காக காத்திருந்தான். தனது மாடான உழைப்பிற்கு சன்மானம் கிடைக்கப் போகும் பொன்னான நாள் அது. புண்பட்ட இதழ்கள் புன்னகைப்பது இது ஒன்றுக்காகத்தான்.

பசித்திருந்த வயிற்றுக்கு ஆறுதல் சொல்லியபடி இரயில் ஏறி பயணிக்க ஆரம்பித்தான். தன் சக தொழிலாளர்களுடன் அவர்கள் முகத்திலும் அதே பூரிப்பு பல கனவுகளுடன் அவர்கள் மனது சண்டை போட்டுக் கொண்டிருந்தது. கூலியை பெறுவதற்கு முன்னரே செலவுகளின் பட்டியல் அவனது மனதில் ஓடிக் கொண்டிருந்தது. அவனது செல்ல மகள் இரண்டு வாரங்களுக்கு முன்பு பாடசாலை செல்வதற்காக சப்பாத்து கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்தாள். வீட்டுக்கான மலிகைப் பொருட்கள் வேண்டும் என்பதை இன்று காலையில் கூட மனைவி நினைவூட்டி இருந்தாள். காத்திருக்கும் செலவுகளை எண்ணியபடியே வேலைகளின் வலுவைக்கூட மறந்து போனான். அவனது உடல் வலிக்கு பின்னேரம் மருந்து கிடைக்கப் போகும் சுகத்தில் மகிழ்ந்திருந்தான். எதிர்பார்த்த நேரம் கடிகாரத்தில் எட்டியது. கைகளில் பணத்தை வாங்கி ஓர் முறை தடவிப்பார்த்துக் கொண்டான். சட்டைப் பையில் போட்டபின்னும் கையால் தடவி பார்த்தபடியே.... எத்தனை கனவுகளுக்கு இன்று பதில் கிடைக்கப்பபோகின்றது. நினைக்கவே சுகமாக இருந்தது. சரவணன் இரயில் ஏறி வீட்டுக்கான பயணத்தில் மூழ்கிப்போனான்.

ஆனால் கூட அவன் நண்பர்கள் இல்லை எல்லோரும் பணத்தை பெற்றதும் நகரங்களின் கடைகளில் பொருட்கள் வாங்க சென்று விட்டனர். இவன் மட்டும் செல்லவில்லை நண்பர்களில் ஒருவன் வியந்த படியே "ஏன்டா கடைக்கு போகலையா? ஏதேதோ வாங்கணும் சொன்னா வாங்கலையா? இவன் சிரித்தபடி நண்பனது வியப்புக்கு பதில் சொன்னான்.

"இல்லடா நாளைக்கு வீட்டில் எல்லோரையும் டவுனுக்கு கூட்டிக்கிட்டு வரனும் அப்ப வாங்கலாம் அவங்களே பாத்து வாங்கட்டும். சற்று பெருமையும் குரலில் கலந்திருந்தது. இந்த பதிலுக்கு பிறகுதான் இரயிலில் ஏறினான். சரவணன் கதைத்து விட்டுப் போன நண்பனிடம் இன்னொருவன் கேட்டான் "என்னடா அவன் மட்டும் போறான் என்ன விசயம்? சற்று நக்கலாக வேறு என்ன எனக்கு தெரியாதுனு ஐயா பொய் சொல்லிட்டு போறான். கூட நாம வந்தா நமக்கும் வாங்கி கொடுக்கனும்னுதான் அவரு தனியா போறாரு. அது புரியலையா? " தண்ணி அடிக்கப் போறான்டா" என்று தனது கற்பனை வெள்ளத்திற்கு மடை திறந்து விட்டான். இதையொன்றையும் அறியாத சரவணன் இரயிலின் சத்தத்தில் இலயித்துப் போனான். இருட்டிப் போயிருந்த இந்த பொழுதில் கூட அவன் முகம் பிரகாசமாக இருந்தது. அவன் இருந்த இரயில் பெட்டியில் வேறு யாருமே இல்லை தனிமையில் தான் இன்று அவனது பயணம். பணத்தை எடுத்துப் பார்ப்பதும் வைப்பதுமாக இருந்தான். காற்றை கிழித்துச் செல்லும் இரயிலில் வேகம் புதிதல்ல. என்றாலும் ஏதோ ஒரு உணர்வு மனதில் ஊடுருவியது. அது என்னவென்று யோசித்தபடியே கையிலிருந்த நூறு ரூபாய் தாள்களைப் பார்த்துச் சிரித்தான்.

இருக்கையிலிருந்த படியே பணம் கையிலிருந்த சந்தோசத்தில் கதவுகளில் சாய்ந்த படியே வந்தான். தனது மகிழ்ச்சியில் இரயிலும் பங்கேற்று சிரிப்பது போன்றுதான் இருந்தது அந்த சக்கரங்களின் சத்தம். சந்தோசத்தில் மூழ்கியபடி கையில் தாள்களை மீண்டும் எண்ணிப்பார்த்தான். வேகமாக வந்த காற்றுக்கும் பணத்தாசையோ தெரியவில்லை அவனது கனவுகளைப் பறித்தப்படி அவனைத் தாண்டி சென்று விட்டது. சரவணன் ஒரு துடிதுடித்துப் போனான். "ஐயோ! என் பணம்......ம்"என்று கத்தியபடி இரயிலில் இருந்து பாய்ந்து விட்டான் . சற்றும் எதிர்பார்க்காத கணம் சரவணன் என்ன ஆனான்? இரயில் கடந்து போய் வெகு நேரம் ஆனது. அவனை எதிர்பார்த்திருக்கும் குடும்பத்திற்கும் அவனின் நிலையினைக் கூறுவது யார்? கனவுகளை பறிகொடுத்தத் துயரும், வீடு வந்து சேராத சரவணன் பற்றிய கவலையிலும் துடித்துப் போன அந்த நெஞ்சங்களுக்கு உண்மை நிலையினை யார் கூறுவது. அந்த நேரத்தில் சரவணனும் இரயில் பெட்டிகளும் தானே அங்கு இருந்தன. அந்த ஊரின் வழியைக் காட்டிய இரயில் சரவணனின் மரணத்திற்கும் காரணத்தை அவன் குடும்பத்தின் காதுகளில் சேர்க்குமா? விடை தெரியாத இந்தக் கேள்விக்கு விடை இந்த இரயில் மட்டுமே அறியும்.

திருமதி பி.ஆதீசன்
விடுகையாண்டு

# பெற்றோரே! பிள்ளைகளை இனங்காணுங்கள் வாழ்வை வளமாக்குங்கள்.

வளர்ந்து வரும் பிள்ளையின் உடலையும் மனதையும் தக்கபடி பங்குவமடையச் செய்து சரியான வழியில் வளர்த்தெடுப்பது பெற்றோரின் கடமை. சமூகம் போற்றும் நல்ல பிள்ளைகளை உருவாக்க வேண்டுமெனில் பெற்றோர் பிள்ளைகளுக்கு தகுந்த வழிகாட்டிகளாக திகழ வேண்டும்.

பிள்ளையின் மனநிலையறிந்து அவர்கள் மனங்கோணாது நடக்க முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். எல்லாப் பிள்ளைகளும் ஒரே விதமான உடல், உளநிலையைப் பெற்றிருப்பதில்லை. தொல்லை தராமல் அமைதியாய் நாம் கூறுவதைக் கேட்டு வளர்வார்கள் என்று எதிர்பார்ப்பது தவறு. இளங்கன்று பயமறியாது என்பதற்கொப்ப துடுக்குதனமும் குறும்பும் பயமென்றால் என்னவென்று அறியாது வளரும் பருவமே பிள்ளைப்பருவம், இத்தகைய பிள்ளைகள் செய்யும் செயல்களைப் பார்த்து இதைச் செய்யாதே, சண்டைபிடிக்காதே, அங்கு போகாதே என்றெல்லாம் கட்டுப்பாடுகளை விதித்து சதா ஏசிக் கொண்டும் அடித்துக்கொண்டும் இருப்பது நல்லதல்ல. இதனால் அப்பிள்ளையின் மனதில் பயமற்ற எதிர்க்கும் தன்மையும், பிடிவாதத் தன்மையும் வலுப் பெறும் என்பதில் ஐயமில்லை எதையும் செய்யாதே என்றால் அதைச்செய்து பார்த்தால் என்னவன்ற மனநிலை பிள்ளையிடம் ஏற்படுவது இயல்பு. இதனை அறியாத பெற்றோரும் சண்டைக்காரன், வாயாடி' 'நீ வர வர மோசம், ஒழுங்காக நடந்துக்கொள் என்றெல்லாம் பொருத்தமற்ற வார்த்தைகளை பிரயோகிப்பது வழக்கம்.

பெற்றோர் தம் பிள்ளைகளின் தவறான நடத்தைக்கான காரணங்கள் பற்றியும் அவற்றை நீக்குவதற்கான வழிவகைகள் பற்றியும் அறியாததாலேயே இவ்வாறு நடந்து கொள்கின்றனர். பொதுவாகச் சிறு வயதுப் பிள்ளைகள் சகோதரர்களுடன் சண்டையிடுதல், வகுப்பறையில் ஏனைய சகமாணவர்களுடன் வாயடித்தல், கோபம் கொண்டு பொருட்களை போட்டுடைத்தல், போன்ற தவறான நடத்தைகளில் ஈடுபடுவதைக் காணலாம். இவையாவற்றிற்கும் பிள்ளையின் மனதில் ஏற்படுகின்ற ஏதோ ஒரு தாக்கமே காரணமாக உள்ளது. என்பதை முதலில் நாம் அறிந்து கொள்ளவேண்டும். அவர்கள் தமது பிரச்சினைகள் எண்ணங்கள், ஆசைகள், விருப்பு வெறுப்பு என்பவற்றை வாய்மொழி மூலமாக விளக்கமாக வெளிப்படத்திப் பரிகாரம் தேட முடியாத நிலையில் இவ்வாறான முரணான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள்.

எனவே பெற்றோர் அத்தகைய பிள்ளைகளின் நடத்தைகளுக்குரிய காரணங்களை முதலில் அறிதல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் பிள்ளைகள் தவறிழைக்க வாய்ப்புக் கொடுக்காமல் தவிர்ப்பதை விடுத்து அவர்களைக் குறை கூறுவது தவறாகும்.

ஒவ்வொரு பிள்ளையின் மனநிலையும் ஆளுக்கு ஆள் வேறுபட்டிருக்கும். எனவே எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரே விதமான பரிகாரத்தை அளித்துவிட முடியாது. பிள்ளைகளை அன்பால் அணுகி அவர்களது பிரச்சினைகள், தேவைகள் என்பவற்றை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்தல் வேண்டும்.

நாம் தினந்தோறும் பிள்ளைகளை கண்டிப்பதாலும், அதீத அன்பு காட்டுவதாலும், அரவணைப்பதாலும் பிள்ளைகளுக்கு நன்மை செய்து விடுவதாக எண்ணிவிடலாகாது. பிள்ளை தான் செய்த பிழையான செயல்களுக்கு கூறும் காரணங்கள் யாவும் உண்மையென்று எண்ணி பெற்றோர் பிள்ளையை அரவணைத்து ஆதரவளித்தால் பிள்ளை மேலும் மேலும் தவறுகள் செய்ய வாய்ப்பு ஏற்பட இடமுண்டு.

பிறரை குறை கூறிக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவே பிள்ளை ஆசைப்படுவான் எனவே உண்மை நிலையென்ன என்று அறிந்து வழிகாட்டுதல் வேண்டும். பிறர் முன்னிலையில் தன்பிள்ளையின் குறைகளை எடுத்துக் கூறி சிரித்தல் கூடாது. அதைப்போல் ஏனைய பிள்ளைகளின் குறைகளையும் எடுத்துக் கூறி பரிகாசிக்கக் கூடாது.

தன் பிள்ளையுடன் ஏனைய பிள்ளைகளை ஒப்பிட்டு ஏசுவதும் கூடாது. இதனால் தன்னம்பிக்கை இழந்து அவமானமடைந்து உளத் தாக்கத்திற்கு உள்ளாக நேரிடும். எனவே எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பு பெற்றோருக்கே உள்ளது. எனவே பெற்றோரே உங்கள் பிள்ளையின் எதிர்கால வாழ்வை ஒளிமயமாக்குங்கள்.

பா.கலாதர்ஷினி
விடுகையாண்டு

# குழந்தைகளை மேதைகளாக்குவது எப்படி?

குழந்தைகள் பிறக்கும் போதே மேதைகளாக பிறப்பதில்லை. ஐந்து வயதுக்குள் சரியான பயிற்சி இருந்துவிட்டால் ரொம்ப சராசரி குழந்தைகூட நிச்சயம் மேதையாகிவிடும்! அதற்கான வாய்ப்பு பெற்றோரிடம் முதலிலும் பள்ளிக்கூடத்தில் இரண்டாவதும் இருக்கிறது.

உலக அளவில் குழந்தைக் கல்வி நிபுணர்கள் ஆராய்ந்து, குழந்தைகளை மேதைகளாக்க பெற்றோர் ஆசிரியர் என்ன செய்ய வேண்டும் என கூறுகிறார்கள். அவ்விடயங்கள் போல் செயற்பட்டு குழந்தைகளை மேதைகளாக்குவோம்

அவையாவன

***உணர்ச்சி***

குழந்தைகளுக்கு வித விதமான வண்ணங்கள், உருவங்கள், வாசனைகள், சத்தங்கள், சுவைகள், தட்பவெப்பங்கள் என்பவற்றை கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தையின் முதல் பள்ளிக்கூடம் சமையலறையாகும்.

***படிப்பு***

குழந்தைகளுக்கு தூங்கப் போகும் முன் தினமும் கதை கூற வேண்டும். அதில் வரும் கதாபாத்திரங்கள்போல் செய்து காட்ட வேண்டும். இதன் மூலம் தானே பார்த்துப் படித்துத் தெரிந்து கொள்கிற ஆர்வம் குழந்தைகளிடம் ஏற்படும்.

***தானே செயற்படல்***

பொம்மை முதல் உணவு வரை தானாகவே கையாளவிட வேண்டும். இதனால் கைக்கும் கண்ணுக்கும் நல்ல பயிற்சி கிடைக்கிறது.

***சுதந்திரம்***

குழந்தைகளை அவர்கள் விரும்பியவாறு செயற்படவிட வேண்டும். அதிகம் தவறு செய்யும் குழந்தை அதிகம் கற்று கொள்கிறது.

***வரையறை***

குழந்தையின் வழியே சென்று சில நடைமுறை விடயங்கள், நற்பழக்கங்கள் என்பவற்றை சொல்லி கொடுக்க வேண்டும்.
உதாரணம்:- காலை வணக்கம் பல்துலக்கல்.

***நடிப்பு***

சில விடயங்களை குழந்தைகளிடம் பேசும் போது கண்களை விரித்து முகத்தைச் சுருக்கி கை விரல்களை விரித்துப் பேச வேண்டும். இதன் மூலம் குழந்தையின் தேடியறியும் ஆர்வம் கற்பனா சக்தி அதிகரிக்கும்.

R.கிஷாந்தி
1ம் வருடம்

# பொதுக் கல்விச் சீர்திருத்தம்
## ஒரு நோக்கு......

1950 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கல்விக் கொள்கை ஆக்கங்கள் பின்னர் தொடர்ச்சியாக வந்த அரசுகளின் முன்னுரிமையோடு இணைக்கப்பட்டிருந்தது. இதனால் அவ் அரசுகளின் கொள்கை மாற்றங்கள் காரணமாக கல்விச் சேவைகளை ஒரு தொடர்ச்சியான முறையில் வழங்குவதிலும் பற்பல பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டிய கட்டாயமேற்பட்டது. இதன் காரணமாகவும் இதனை நிவர்த்தி செய்யுமுகமாகவும். இளைஞர் ஆணைக் குழுவானது 1991ல் 'தேசிய கல்வி ஆணைக்குழு' எனும் ஒரு அமைப்பினை நியமித்தது. இத் தேசிய கல்வி ஆணைக் குழுவானது பொதுக் கல்வித் துறையில் பல ஆய்வுகளை மேற்கொண்டு 1995இல் 'தேசிய கல்விக் கொள்கையை நோக்கிய செயற்பாட்டுப் பாங்கான உபயம்' என்ற கையேட்டினூடாக பல சீர்த்திருத்தங்களைப் பற்றிய கருத்துக்களை சமர்ப்பித்தது. இதில்

01. கல்வி வாய்ப்புகளை விரிவு செய்தல்.
02. பாடசாலைக் கல்வியிலும் (கலைத்திட்டத்தில்) மாற்றங்களை மேற்கொள்ளல்.
03. ஆசிரியர் கல்வியிலும், நிர்வாகத்திலும் சீர்த்திருத்தங்களை மேற்கொள்ளல்.

என்பன பிரதான அம்சங்களாகக் காணப்பட்டன. இச் சீர்திருத்த முன் மொழிவுகளை அக்காலப்பகுதியிலே ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்கா பண்டாரநாயக்கா அவர்கள் கருத்திற் கொண்டு, இதன் பிரகாரம் 1997ம் ஆண்டினை 'கல்விச் சீர்திருத்த ஆண்டாக' பிரகடனம் செய்யப்பட்டது.

இவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்த அம்சங்களில் முதலில் ''கல்வி வாய்ப்புகளை விரிவு செய்தல் தொடர்பாக நோக்கின் இங்கு சீர்திருத்தமானது

01. கட்டாயக் கல்வி
02. முன்பிள்ளைப் பருவ பராமரிப்பும், விருத்தியும்
03. விசேட கல்வி/குறைப்பாட்டுடையோருக்கான கல்வி

போன்ற அம்சங்களில் பிரதானமாக அமைந்து காணப்படுகின்றது. இதில் கட்டாயக் கல்வியினை நோக்கின் 5வயது முதல் 14வயது வரை கட்டாயக் கல்விக்குரிய வயதெல்லை எனவும். இவ்வயதெல்லைக்குள் பாடசாலைக்கு சமூகமளிக்காத மாணவர்களினையும் அவர்களது பிரச்சினைகளையும் ஆராய்ந்து தீர்வு காணுமுகமாக 1997ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25ம் திகதி 1003/5ம் இலக்க வர்த்தமானியானது ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் இதற்குத் தேவையான பிரமாணங்களை அறிமுகம் செய்தது. இது சகல பிள்ளைகளுக்கும் கல்வியை வழங்கும் தேசியக் கொள்கையை மேம்படுத்துவதாக அமைந்தது. இப் பிரமாணம் 1998 ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. மாணவர்களின் கட்டாய வரவினைக் கண்காணிக்க உள்ளூர் மட்டத்தில்

01) ஒவ்வொரு கிராம அதிகாரிகள் பிரிவிலும் பாடசாலை வருகையை கண்காணிக்க ஒரு குழு (இதில் 5 பாடசாலையை ஒரு குழு கண்காணித்தல்)

02) ஒவ்வொரு பிரிவுச் செயலாளர் பிரிவிலும் பாடசாலை வருகையை கண்காணிக்கும் ஒரு குழு

எனஇருகுழுக்கள் நியமிக்கப்பட்டு கட்டாயக் கல்விக்குரிய வயதெல்லைக்குட்பட்டவர்களின் பிரச்சினைகளை அவர்களிடத்தே சென்று ஆராய்ந்தறிந்து தீர்வுகாணுமுகமாக நியமிக்கப்பட்டது. இந்நிகழ்வு கல்விச் சீர்திருத்தச் செயற்பாட்டின் பிரதான ஒரு அம்சமாகும்.

அடுத்து 'முன் பிள்ளைப் பருவ பராமரிப்பு விருத்தியில்' ஏற்பட்ட சீர்திருத்தத்தினை நோக்கின் முன் பிள்ளைப் பருவ பிள்ளைகளின் தேவைகளை திருப்திப்படுத்துவதற்கான தேசிய கொள்கைகளின் அவசியத்தை புதிய கல்விச் சீர்திருத்தம் வெளிப்படையாக ஆதரித்தது. இச் சீர்திருத்தத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளாவன

01. முன்பள்ளிகளுக்கும், பராமரிப்பு நிலையங்களுக்கும் செல்லாத பிள்ளைகளுக்கு வீட்டினை மையமாகக் கொண்டு செயற்பாடுகளைக் கொண்ட நிகழ்ச்சி திட்டத்தினை உருவாக்கல்.

02. முன் பள்ளி வசதிகளை விரிவு செய்தல்.

03. பல்கலைக் கழகங்களில் சிறுவர் கற்கை நிலையத்தினை ஸ்தாபித்தல்

என்பன சீர்திருத்த செயற்பாடுகளாகக் காணப்பட்டன. இதற்கு தனியார், யுனிசெப், **G.T.Z** போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி புரிந்தன.

அடுத்து விசேட கல்விகுறைபாடுடைய பிள்ளைகளுக்கான கல்வியில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தத்தினை நோக்கின் அமைச்சின் முறைசாராக் கல்விப் பிரிவினரின் கண்காணிப்பில் பாதிக்கப்பட்ட நிலையிலிருந்த இக்கல்வியானது, 1997 பொதுக் கல்விச் சீர்திருத்தத்தில் 'குறைபாடுடைய பிள்ளைகளை பிரதான கல்வி அமைப்பினுள் கொண்டு வருவதற்கான சகல முயற்சிகளும் எடுத்தல் வேண்டும்' என குறிப்பிடப்பட்டிருந்த கூற்றுக்கமைவாக சீர்திருத்தங்கள் பல முன்னெடுக்கப்பட்டன. இதனை தேசிய கல்வி நிறுவனமே பொறுப்பேற்றிருக்கிறது. இதன் சீர்திருத்த திட்டமாக வைத்திய அதிகாரிகளின் உதவியுடன் பாடசாலைக்குச் சேருவோரின் அனுமதித் தேர்ச்சிகளை கணிப்பீடு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், குறைபாடுடைய பிள்ளைகளை இனங்காண்பதற்கான வாய்ப்புகளை வழங்குதல், மற்றும் பாடசாலைக் கற்றற் சூழலில் இவர்களது தேவைகளைக் கருத்திற் கொள்ளுதல் போன்ற செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. சீர்திருத்தத்தினுடாக மாணவர் மையக் கற்றல் மற்றும் தொடர்கணிப்பீடு ஆகியன வலியுறுத்தப்பட்டமை இப்பிள்ளைகளுக்கு சிறப்பான நன்மையளிப்பதாக காணப்படுகிறது.

இவ்வாறான கல்வி வாய்ப்புகளை விரிவு செய்தல் எனும் கொள்கையின் கீழ் மேற்கூறப்பட்ட விடயங்களில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் இதனை விட

* கல்வி வாய்ப்புகளை சமமாகப் பகிர்தல்.
* பாடசாலைகளை பகுத்தறிவு சார் முறையில் வகைப்படுத்தல்.
* முறைசாராக் கல்வி போன்ற விடயங்களில் பொதுக் கல்வி

சீர்திருத்தத்தில் பரிந்துரைப்பு செய்யப்பட்டாலும் அத்திட்டங்கள் முழுமையான அளவில் அமுல்ப்படுத்த முடியாது போயிருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

பொதுக் கல்விச் சீர்திருத்தத்தில் கல்வி வாய்ப்புகளை விரிவு செய்தல் ஒரு பகுதியாக காணப்பட்டாலும் இச் சீர்திருத்தத்தின் மிக முக்கியமான பகுதியாக காணப்படுவது கலைத்திட்டம் தொடர்பான சீர்திருத்தமாகும்.

இச் சீர்திருத்தமானது ஆரம்பநிலைக்கல்வி, கனிஸ்ட, இடைநிலைக் கல்வி, சிரேஷ்ட இடைநிலைக்கல்வி, மற்றும் பல்கலைக் கழகக்கல்வி போன்றவற்றில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியது. இதனடிப்படையில் ஆரம்பநிலைக் கல்வியில் 1997ம் ஆண்டு கொள்கை ஆவணத்தில் கீழ்க்கூறப்பட்ட சீர்திருத்தங்கள் முன் வைக்கப்பட்டன அவை

I. பிள்ளை மைய அணுகுமுறை
II. நான்கு பாடப்பரப்புகளை உள்ளடக்கிய இணைந்த பாட ஏற்பாடு (முதல்மொழி, கணிதம், சமயம், சுற்றாடல் தொடர்பான செயற்பாடுகள்)
III. தரம் 1இலும் தரம் - 2இலும் வாய்மொழி ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்பட்டது. தரம்-3ல் முறையான ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்பட்டது.
IV. ஆரம்பநிலைக் கல்வி 3 கட்டங்களில் ஒழுங்குபடுத்தப்பட்டது. (1ம் கட்டம் -தரம் 1,2), (2ம் கட்டம் -தரம் 3,4), (3ம் கட்டம் -தரம் 5)
V. கற்றல் - கற்பித்தல் வழிமுறையில் வழிப்படுத்தப்பட்ட விளையாட்டு, செயற்பாடு, மேசை மீதிருந்து கற்றல் எனும் 3 அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
VI. புகுமுகநிலையில் தேர்ச்சி மட்டத்தை இனங்காணல். (பிள்ளை அறிமுகம்)
VII. ஒவ்வொரு கட்டத்துக்குமான அத்தியாவசியமான கற்றல் தகைமையைக் கணிப்பீடு செய்யப் பரீட்சித்தல்.
VII. வகுப்பு மட்டக் கணிப்பீடு பாடசாலை மட்ட முகாமைத்துவம் தொடர்ச்சியான கண்காணிப்பும் மேற்பார்வையும்

மேற்கூறப்பட்ட சீர்திருத்தங்கள் முதலில் 1998ல் கம்பஹா மாவட்டத்தில் பரீட்சாத்தமாக தரம் - 01ல் நடைமுறைப்படுத்தப்பட்டு பின் அது 1999 இல் நாடளாவிய ரீதியில் அறிமுகம் செய்யப்பட்டது. இது தொடர்ந்து தகைமை அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதற்கமைவாக ஆசிரியர் கைந்நூல், மொழிப்பாடநூல், பயிற்சி நூல்கள் என்பன உருவாக்கப்பட்டு ஆண்டு தோறும் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

ஆரம்பக்கல்வியில் சீர்திருத்தமானது 1999 இல் தரம் 01இல் ஆரம்பித்து 2003இல் தரம் 05ஐ அடைந்தது. சீர்திருத்தத்தின் தொடர்ச்சி 2007 இல் இன்னும் சில முன்னெடுப்புகளுடன் தொடர்வதை காணலாம். அதாவது

- வகுப்பறைகள் மேலும் தரமுயர்த்தப்படுதல்
- 1ம் வகுப்பிலிருந்து ஆங்கிலக்கல்வி வலிதாக்கப்படும்
- ஆங்கிலக்கல்வி கணிதபாடத்துடனும் இணைந்து விரிவாக்கப்படும்
- 1ம் வகுப்பிலிருந்து தமிழ் பேசுவோர் சிங்களப் பேச்சும், சிங்களம் பேசுவோருக்கு தமிழும் அறிமுகமாகும்.
- ஆரம்பநிலையில் கணினி மற்றும் தகவல் தொழிநுட்ப எண்ணக்கருக்கள் அறிமுகமாகும்
- தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் துணை வாசிப்பு நூல்கள் உருவாக்கப்படும். இது போன்ற விடயங்கள் 2007ம் ஆண்டு சீர்திருத்தத்தில் முன்னெடுக்கப்படுகின்றன.

அடுத்து தரம் 06 தொடக்கம் 09 வரையான கலைத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களை நோக்கின்

I. 7-9 வரையான வகுப்புகளில் விஞ்ஞானத்திற்குப் பதிலாக விஞ்ஞானமும் தொழிநுட்பமும் எனும் தலைப்பில் மாற்றப்பட்டது.
II. வாழ்க்கைத் தேர்ச்சிகள் எனும் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது.
III. செய்முறையும், தொழிநுட்ப திறனும் எனும் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது.
IV. இரண்டாம் மொழியை கற்க மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டார்கள்.
V. ஒன்பதாம் தரத்தில் பாடசாலை மட்டப்பரீட்சை நடாத்தப்பட்டது.

(9ம் தரத்தோடு பாடசாலையை விட்டு விலகும் மாணவருக்கு தொழில் வாய்ப்புகளும், மாற்றுவகைக் கல்விக்கும் இத்தேர்வு துணைசெய்யும்) இது போன்ற விடயங்கள் 1999-2003ம் ஆண்டு சீர்திருத்தத்தில் மேற்கொள்ளப்பட்டாலும் 2007ம் ஆண்டு மீள் சீர்திருத்தத்தில்

* 6ம் வகுப்பில் சுற்றாடற்கல்விக்கு பதிலாக விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சிகள் முதலியன தனிப்பாடங்களாக கற்பிக்கப்படும்.
* செயற்றிட்டங்கள் ஒன்றிணைக்கப்படும்.
* எல்லா இடைநிலை பாடசாலைகளுக்கும் விஞ்ஞான ஆய்வுகூடம் செயற்பாட்டு அறை, நூலகம் முதலியன வழங்கப்படும்,

எனும் புதிய சீர்திருத்தம் மேலும் வலுச் சேர்ப்பதாக காணப்படுகிறது. அடுத்து சிரேஸ்ட இடைநிலைக் கலைத்திட்டத்தில் ஏற்பட்ட சீர்திருத்தங்களை நோக்கின் சிரேஸ்ட இடைநிலைக் கல்வி இரண்டு ஆண்டுகளை உள்ளடக்கிய இரு மட்டங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது.

மட்டம் 01 - க.பொ.த சாதாரணதரம் (தரம் - 10,11)
மட்டம் 02 - க.பொ.த உயர்தரம் (தரம் - 12-13)

மட்டம் - 1ல் அதாவது க.பொ.த சா/தரத்தில் அடிப்படைப் பாடங்கள், தெரிவுப் பாடங்கள் என இரு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. சமயம், முதல் மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தொழிநுட்பம், சமூகக்கல்வி, வரலாறும் அழகியற் கல்வி எனும் 7 பாடங்கள் அடிப்படைப் பாடங்களாகவும் சிங்களம்/தமிழ் - 2ம் மொழி, வரலாறு, புவியியல், உடல்நலமும் உடற்கல்வியும், இலக்கியமும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) நவீன

அல்லது தொல்சீர் மொழி அபிவிருத்திக் கல்வி, தொழிநுட்ப பாடங்கள் எனும் பாடங்களிலிருந்து மாணவர் தமது விருப்பிற்கேற்ப 3 தெரிவுப் பாடங்களை படிக்கலாம் எல்லாமாக 10 பாடங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

ஆனாலும் 2007ம் ஆண்டில் இச்சீர்திருத்தத்தில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன அவை

* 5 உள்ளீட்டுப்பாடங்கள் (சமயம், தமிழ், இலக்கியம், கணிதம், ஆங்கிலம், வரலாறு) 5 தெரிவுப் பாடங்களுமாக எல்லாமாக 10 பாடங்கள் தெரிவு செய்தல் வேண்டும்.
* தெரிவுப் பாடங்கள் மூன்று தொகுதிகளிலிருந்து ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒவ்வொரு பாடம் வீதம் 5 பாடங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும் நவீன சீர்திருத்தம் கூறி நிற்கிறது.

அடுத்து சிரேஸ்ட கல்வியின் மட்டம் 2இல் அதாவது க.பொ.த உ/தரத்தில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களை நோக்கின் 1999 இருந்து 4 கற்கை நெறிகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது ஒவ்வொரு கற்கை நெறியிலும் வரையறுக்கப்பட்ட 3 பாடங்களையும் ஓர் உளச்சார்பு தேர்வையும் பல்கலைக் கழக நுழைவுக்கு மாணவர்கள் எடுத்தல் வேண்டும். க.பொ.த உ/தரத்தில் உயிரியல், விரிந்த கணிதம் முதலியவற்றிற்கு புதிய கலைத்திட்டம் வகுக்கப்பட்டது.

அத்துடன் 2007 இல் இச்சீர்திருத்தம் மேலும் விரிவாக்கப்பட்டது.

01. பொது ஆங்கிலம் கட்டாயமாக்கப்பட்டது.

02. பொது தகவல் தொழில்நுட்பம் 12ம் வகுப்பில் தனியாக கற்பிக்கப்பட்டு பரீட்சிக்கப்படும்.

03. ஆங்கில மொழிமூலக் கற்கைகள் மேலும் விரிவாக்கப்படும்.
04. கலை, வர்த்தகம் கற்போருக்கு நவீன தொழில் நுட்பப் பாடங்கள் அறிமுகம் செய்யப்படும்.
05. க.பொ.த உ/தர பரீட்சை முறையில் மாற்றங்கள் என்பன 2007ல் முன் மொழியப்பட்டு அமுல்ப் படுத்துவதற்காக காத்திருக்கும் சீர்திருத்தங்களாகும்.

இவ்வாறான பொதுக் கல்விச் சீர்திருத்தத்தில் கலைத்திட்டத்தில் ஒவ்வொரு மட்டத்திலும் பல்வேறுப்பட்ட சீர்திருத்தங்கள் ஏற்பட்ட அதேவேளை எல்லா வகுப்புகளுக்கும் பொதுவானதாகவும் பல சீர்திருதத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அவையாவன

I. ஆங்கிலக் கற்கையை வலுப்படுத்தல்

II. பாடசாலை மட்டக் கணிப்பீடு

III. பாடநூல்கள்.

IV. ஆலோசனையும் வழிகாட்டலும்.

V. தொழிற்பயிற்சி நிறுவனங்களுடான தொடர்பு போன்ற சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான இப் பொதுக் கல்விச் சீர்திருத்தங்கள் பாடசாலை மட்டத்துடன் அதாவது பாடசாலையில் மாணவரின் கற்றல் கற்பித்தலுடன் மட்டும் நின்றுவிடாது பாடசாலையின் பௌதீக வளங்களிலும் அத்துடன் ஆசிரிய வளங்களிலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதையும் அத்துடன் இச்சீர்திருத்தங்கள் பல்கலைக்கழகம் வரை மேற்கொள்ளப்பட்டிருப் பதனையும் காணமுடிகிறது.

மேற்கூறப்பட்ட 1995ம் ஆண்டில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதந்துரைக்கமைய 1999ல் மேற்கொள்ளப்பட்ட பொதுக் கல்வி சீர்திருத்தமானது ஒன்பது தேசிய குறிக்கோளினையும் அனைவரும் எய்தும் முகமாக கல்வி வாய்ப்புகளை விரிவு செய்தல்

- பாடசாலைக் கல்வியிலும் (கலைத்திட்டத்தில்) மாற்றங்களை

- மேற்கொள்ளல்

- ஆசிரியக் கல்வியிலும் நிர்வாகத்திலும் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்

போன்ற விடயப் பரப்பினூடாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அவை இன்று வரை (2007ம் ஆண்டில்) இன்னும் புதிய மாற்றங்களுக்குட்பட்டு மிளிர்வதைக் காண முடிகிறது.

திருமதி.S.தர்சினி
விடுகையாண்டு

**உசாதுணை நூல்கள் :- 'இலங்கையின் பொதுக்கல்வி பற்றிய தேசிய கொள்கைச் சட்டமொன்றுக்கான ஆலோசனைகள்'
(தேசிய கல்வி ஆணைக்குழு)**

***.கல்வியில் புதிய சீர்திருத்தங்கள்
(கலாநிதி சபா ஜெயராசா)**

# கல்வி உலகின் புதிய பாதை

சமூக மயமாக்கலின் ஊடே வளர்ந்து வரும் உலக நாகரீகமானது மக்களிடையே பல்வேறு மாற்றத்தை உண்டு பண்ணுவதை காணக்கூடியதாக உள்ளது. அம்மாற்றங்கள் மக்களின் சாதாரண வாழ்க்கையில் பல்வேறுபட்ட சாதக பாதகங்களையும் உண்டு பண்ணுவது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் கல்வித்துறையில் பல்வேறு காலச்சூழ்நிலைக்கு ஏற்பவும், உலக மாற்றத்திற்கு முகம் கொடுக்கும் வகையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டது. பாரம்பரிய கற்றல் கற்பித்தல் முறைகளில் இருந்து முற்றிலும் விலகி எதிர்கால உலகமயமாக்கலுக்கு முகம் கொடுக்கும் வகையில் கல்வித்துறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டது. அந்த வகையில் ''தகவல் தொழிநுட்பம் , நுண்ணறிவு'' என்பவற்றின் ஊடே கல்விக்கான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு உலக மயமாக்கலுக்கு கல்வித்துறை முகம் கொடுத்தது.

20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலைத்தேய நாடுகளின் கல்வித்துறையில் தகவல் தொழினுட்பம் மூலம் புரட்சிகர மாற்றத்திற்கு வித்திடப்பட்டு அதற்கேற்ற வகையில் மேலைத்தேய கல்வி முறையில் வளர்ச்சி அடைந்து இருக்கிறது. இவ்வாறு மேலைத்தேய நாடுகளில் கல்வித்துறையில் தகவல் தொழினுட்பம் வந்த போதிலும் கீழைத்தேய நாடுகளில் குறிப்பாக அபிவிருத்தி அடைந்து வரும் மூன்றாம் நிலை நாடுகளில் 21ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை தகவல் தொழிநுட்பம் மந்தமான வளர்ச்சி நிலை காணப்பட்டது. மிகப்பிரபலமாக பேசப்பட்டதுடன் கல்வித்துறையில் தகவல் தொழிநுட்பம் அதன் சகல மட்டங்களிலும் அறிமுகம் செய்யப்பட்டது. பாடசாலை கல்வித்திட்டத்தை பொறுத்த வரையில் தகவல் தொழினுட்பம் என்பது அனைத்து பாடங்களின் ஊடாகவும் வியாபித்து உள்ள போதும் தற்போது கல்வி அமைச்சு எடுத்த நடவடிக்கை மூலம் க. பொ.த உ.தரம் வரை தனிப்பாடமாகவே அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. தகவல் தொழிநுட்பம் என்பது உலக மயமாதலின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் சக்தி அனைத்துக் காரணிகளையும் தீர்மானிக்கும் சக்தியாக தகவல் தொழிநுட்பம் மிளிர்கிறது.

சமகாலத்திலும் சர்வதேச மட்டத்தில் எழுகின்ற பிரச்சனைகளும் போட்டி உலகிற்கும் தற்கால மாணவர் சமூகம் ஈடு கொடுத்து நாட்டின் வளர்ச்சியை சர்வதேசத்திலும் தொடர்ந்து பேணுவதற்கு தகவல் தொழினுட்ப கல்லூரிகள் சாலச்சிறந்தது. அந்த வகையில் இலங்கை அரசும் கல்வி அமைச்சும் இணைந்து 1998 ம் ஆண்டு அமைக்கப்பட்ட கல்வி மறுசீரமைப்பு ஆணைக்குழு தனது விதந்துரைப்புகளாக தகவல் தொழிநுட்பத்திற்கு மிகவும் முக்கியத்துவத்தை கொடுத்துள்ளது. அவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட தேசிய குறிக்கோள்களில் தகவல் தொழிநுட்பம் வலியுறுப்பட்டத்தை அதன் ஏழாவது குறிக்கோளில் காணக்கூடியதாயுள்ளது.

மேலும் இக்கல்விக் குறிக்கோளின் ஊடாக பெறப்படும் அடிப்படைத் தேர்ச்சிகளில் முதாலாவது தேர்ச்சி தொடர்பாடல் தோர்ச்சியாகவே காணப்பட்டது. இவற்றை விட இரண்டு நான்கு ஆறு போன்ற தகவல் தொழிநுட்பம் நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தப்படுகிறது.

இவையெல்லாம் உலகமயமாதல் கல்வி துறையில் செல்வாக்கு செலுத்துகின்றது. மேலும் தகவல் தொழிநுட்பம் கல்வியின் சகல பிரிவுகளிலும் வியாபித்து இருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. அதாவது முறைசார் கல்வி, மீள்கல்வி போன்ற பல்வேறு கல்வி பிரிவுகளிலும் வியாபித்து இருப்பதை காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு தகவல் தொழிநுட்பம் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியதாக காணப்படுகிறது அவை கணித்தல், நுண் இலத்திரனியல், தொலை தொடர்புகள் போன்றவாகும். பெரும் பாலும் இலங்கையில் பாடசாலைக் கல்வியில் கணனி சம்பந்தமான அடிப்படைக்கல்வி வழங்கப்படுகிறது. மாணவர்கள் பாடசாலைக்கல்விக்கு வெளியிலேயே தகவல் தொழிநுட்பத்தின் அடுத்த இரண்டு பிரிவுளிலும் கற்கின்றனர். அவ்வாறு கல்வி உலகில் புதிய பாதையில் வெறுமனே மாணவர்களை மாத்திரம் மையப்படுத்தியது. அன்று ஆசிரியர்கள் கல்வி அதிகாரிகள் நிர்வாகத்துறையினர் என பலதரப்பட்டவர்களை கொண்டதாகவுள்ளது.

எனவே ஏட்டுக் கல்வியும் வாய்மொழிக்கல்வியும் முற்றாக கைவிடப்பட்டு புதிய உலகின் புதிய கல்விப்பாதையானது பல்வேறு பரிணாமங்களைக் கொண்டு பலவாறு பரிணமித்துக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாயுள்ளது.

செல்வி டே.ஜென்சிகுயின்ரா
விடுகையாண்டு

# இருப்புக்கள் தான் நிலையை நிர்ணயிக்கின்றன. விருப்புக்கள் அல்ல.

வரலாறு ஒரு சமூகத்தை எங்கு எந்த இடத்தில் நிறுத்தி இருக்கிறதோ. அங்கிருந்துதான் அது தனது வரலாற்றுப் பயணத்தை மேற்கொள்ள முடியும். வரலாறு எதனைத் தருகின்றதோ அதில் இருந்துதான் வரலாற்றைப் படைக்க முடியும்.

வெறுமனையில் இருந்து எதனையும் படைத்திட யாராலும் முடியாது. "இருப்புத்தான் நிலையை நிர்ணயிக்கும். விருப்பு அல்ல" என்ற தத்துவார்த்தக் கோட்பாடுதான் இன்றைய உலகின் பெரும் சவாலாகவும், சிக்கல் நிறைந்த பாதையிலும் மனித குலத்தினைப் பயணிக்க வைத்துள்ளது.

"சர்வதேச அரங்கில் நாம் ஒரு வழியில்தான் பயணிக்க வேண்டுமே தவிர பல திசைகளில் அல்ல" நாம் அமெரிக்கர் உலகைக் கட்டுப் படுத்தவில்லை என்றால் உலகம் எம்மைக் கட்டுப்படுத்தி விடும். அல்லது நாம் உலகை எம்மயப்படுத்தவில்லை என்றால் உலகம் எம்மைத் தம்மயப்படுத்தி விடும். எனவே நாம் பொருளாதாரம், அரசியல், கலாச்சாரம், இராணுவம், ஆகிய தளங்களில் முன்நிலையில் திகழவேண்டும் என அமெரிக்காவின் கொள்கை வகுப்புக் குழாத்தின் இயக்குனர் "றிச்சாட் லக்காஸ்" குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய கொள்கைக்கு அமைவாகவே ஐ.நா (U.N) அமைப்புக்கள், உலக வர்த்தக ஸ்தாபனம் (W.T.O) நேட்டோ (NATO) உலக வங்கி (W.B), சர்வதேச நாணயநிதியம் (I.M.F) போன்ற அமைப்புக்களை எல்லாம் அமெரிக்கா தனது உலகலாவிய கொள்கைப்பிடியின் அங்கங்க ளாக்கி விட்டுள்ளது. அல்லது



சுருங்கக்கூறின் ஓர் நங்கூரத்தின் பல்வேறு கொளுக்கிகள் போன்ற பயன்படுத்தப்படுகின்றன என கருதப்படுகின்றது.



எனவே அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் மூலோபாயம் என்னவெனில் உலகில் உள்ள எந்தவொரு நாட்டையும் முடக்கவல்ல உலகலாவிய வியூகம் ஒன்றை அமெரிக்கா தன்கையில் கொண்டிருப்ப தாகும். இதன்படி தனது விருப்பத்திற்கு மாறாகச் செயற்படத்தக்க எந்தவொரு நாட்டையும் தனது உலகலாவிய வியூகத்தில் சிக்கவைத்து சுற்றி வளைத்து அதனை அமெரிக்காவின் விருப்பத் திற்குப் பணியவைப்பதே தனது வெளியுறவுக் கொள்கையின் அடிநாதமாய் உள்ளது. எனவே அமெரிக்காவின் பிரதான ஆயுதமாய் உலகலாவிய வியூகமே காணப் படுகிறது. இதன்படி எந்தவொரு தேசத்தையும் தனிக்கப் பிடித்து அதனைத் தனது உலகலாவிய

வியூகத்தில் சிக்கவைத்து அதன் மூலம் குறித்த நாட்டைத் தனது நலனிற்குப் பணியச் செய்வதே வெளியுறவுக் கொள்கையின் மூலோபாயமாக உள்ளது. மொத்தத்தில் எந்வொரு நாட்டினதும் உச்சியில் அடிக்கவல்ல, உலகைக் கட்டுப்படுத்தும் சம்மட்டியாக உலகலாவிய வியூகத்தைக் கையேந்தி நிற்கின்றது. அந்தச் சம்மட்டியிற்கான அழகிய பெயர்தான் அமெரிக்கா கூறும் "உலக மயமாதல்" ஆகும்.

1ஆம், 2ஆம் உலக மகாயுத்தத்திற்கு முன்னர் ஐரோப்பிய தேசத்தினுள் மிகவும் வல்லாண்மை பொருந்திய பல நாடுகள் காணப்பட்டன. இவையே உலக ஒழுங்கினையும் நிர்ணயித்தும் வந்தன. கால ஓட்டத்தில் அந்நாடுகள் தமக்கிடையே வல்லாண்மைப் பல பரீட்சையில் ஈடுபட்டதன் விளைவாகத் தமக்கிடையே மோதல்களை ஏற்படுத்தி வல்லாண்மை விசப் பரீட்சையில் ஈடுபட்டன. இதன் விளைவுதான் என்ன.

உலகின் தலைசிறந்த வளங்கள் அழிந்ததுமட்டுமன்றி, பெறுமதிமிக்க மனித உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. அந் நாடுகளின் பொருளாதாரம் பாதாளம் வரை வீழ்ச்சி அடைந்தன. இராணுவ பலம் முற்றுமுழுதாகச் சிதைக்கப் பட்டன. அரசியல் இராஜதந்திரிகள் கொல்லப் பட்டார்கள். மொத்தத்தில் கூறுவதாயின் ஐரோப்பிய தேசம் பலம் இழந்து சிதறிப்போய் தள்ளாடத் தொடங்கியது.

இத்தகைய புறநிலைச் சூழலைக் கண்கானித்துக் கொண்டிருந்த அமெரிக்க தேசம் தனது சாணக்கியம் மிக்க அரசியல் காய் நகர்த்தல்களையும், கொள்கை களையும் வகுத்துக்கொண்டது.

இதன் பின்னணியில் அமெரிக்க தேசம் ஐரோப்பிய தேசத்தில் இருந்து தலைசிறந்த விஞ்ஞானிகளையும், புத்தி ஜீவிகளையும் தன்வசம் ஈர்த்து சுவீகரித்துக்கொண்டது. இது முதலாவது கட்டமாகும். இதன் அடுத்த படிமுறையாக இதன் அடிப்படையில் உயர் தொழில்நுட்பத் துறைகளும், புதிய கண்டுபிடிப்புக் களும் விருத்திபெற்றன. இதன் விளைவாக ஈவிரக்கமற்ற பலாத்காரத் தொழில்நுட்பம் விஸ்வரூபம் எடுத்து இத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சியில் ஓர் திருப்புமுனையே அணுகுண்டுத் தயாரிப்புத் தொழிநுட்பம். இந்த தான்தோன்றித் தனமான தொழில்நுட்பத்தின் விளைவுதான் எவ்வாறு அமைந்தன. வீழ்ந்துகிடந்த உலகப் பொருளாதார வீழ்ச்சிப் பிரச்சினையைத் தீர்ப்பதற் காகவும் உலகில் உள்ள நாடுகளைத் தன் பிடியினுள் கொண்டுவரும் நோக்கிலும் உலகப் பொருளாதாரத்தையும் தன்கையில் ஏந்தும் நோக்குடன் செயற்பட்டது. இதன் அடிப்படையில் உலக உணவு, பொருளாதார வளத்தேவை களையும் பூர்த்திசெய்யும் நோக்குடனும், இராஜதந்திரமாகச் செயற்பட்டது. இதன் விளைவுதான் என்ன?

உலக உற்பத்தித் துறையில் 3/4 பங்கு தேவையைத் தனித்து ஒரு நாடாக நின்று தேவையைப் பூர்த்தி செய்தது மட்டுமன்றி உலகப் பொருளாதாரத் தினையும் தன்கையில் ஏந்தி எடுத்துக் கொண்டதுடன் வீழ்ந்து கிடந்த நாடுகளிற்குப் பொருளாதார வளம் பெறவும், தன் வலையில் வீழ்த்தும் முகமாகவும் மீள் கட்டுமானம் என்ற போர்வையில் உதவிகளையும் செய்து தனக்கு ஏற்ற விதத்தில் இந்நாடுகளை மாற்றி அமைத்துக் கொண்டது. இது இவ்வாறு இருக்க.

1ஆம் உலக மகாயுத்தத்தில் தலைசிறந்த விஞ்ஞானிகளைச் சுவீகரித்த அமெரிக்கா தன் நாட்டில் அணுகுண்டு தயாரித்து அதனைப் பரிசோதிக்க களத்தினைத் தேடிக் கொண்டிருந்தது. இத்தகைய புறநிலைச் சூழ்நிலையில் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் யப்பானிய தேசம் யுத்தத்தின் கொடுமைகளால் பலம் குன்றிக் கொண்டு செல்வதை அவதானித்த நிலையில் யுத்தத்திலிருந்து பின்வாங்கித் தனது நாட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது 1945 ஏப்பிரல் 14,15அம் திகதிகளில் கிரோசிமா, நாகசாகி மீது அமெரிக்க தேசம் அணுகுண்டுப் பரிசீலித்த பரிசோதனைக் களமாக மாற்றப்பட்டது. இதன் ஊடாக யப்பானிய தேசத்தை நாசப் படுத்தியது மட்டுமன்றி உலக நாடுகளையும் ஒருகணம் சிந்திக்கத் தூண்டியதுடன், உலகநாடு களையும் தன் பிடிக்குள் வரச்செய்துகொண்டது. இத்தகைய காய்நகர்த்தல் ஊடாக உலக இராணுவ ஒழுங்கில் மாற்றத்தினை ஏற்படுத்தித் தனக்கென ஓர் இடத்தினைப் பொறித்துக்கொண்டது அமெரிக்க தேசம்.

இது இவ்வாறு இருக்க அமெரிக்க தேசத்தின் மூன்றாவது நடவடிக்கையான காய்நகர்த்தல் பாதை சற்று வித்தியாசமான வடிவத்தினைத் தாங்கிநின்றது.

அதாவது இராணுவ சமநிலையையும் உலகில் தனக்கு எதிராக சவால்விடக் கூடியதுமான சோவியத் யூனியனிற்கு எதிரானது. இதனை நேரடியாக மோதுவதைத் தவிர்த்து சாணக்கியம் மிக்க பனிப்போர் ஊடாகத் . காய்நகர்த்தலை மேற்கொண்டது மட்டுமன்றி சோவியத் யூனியன் வளப்பரப்பலின் அடிப்படையில் தந்திரக் காய்நகர்த்தல் ஊடாகப் பிரிவினையை ஏற்படுத்தி 23 தேசங்களாக உடைத்தெறிந்தது. அதன் பின்னணியில் சோவியத் யூனியன் உடைவுற்றதுடன் என்றுமே ஒற்றுமைப்படாத பகைமைகளையும் 23 நாடுகளும் ஏற்படுத்திக்கொண்டது. இதன் பின்னணியில் சோசலீசம் ஆட்டம் கண்டது. இது இவ்வாறு இருக்க அமெரிக்க தேசம் சீனாவில் வர்த்தக நோக்கிலான போர்வையில் கால்பதித்தது. இதன் விளைவாக சோசலீசம் ஓரளவிற்கு முடிவிற்கு வந்துவிட்டது. இன் நடவடிக்கைகளைச் சாணக்கியமாக மேற்கொண்ட அமெரிக்க தேசம் இன்று அரசியல், பொருளாதாரம், இராணுவம், கலாச்சாரம் ஆகிய துறைகளில் முதன்மை நாடாக மாறியுள்ளது. இந்நாடு வகுக்கும் பாதையிலேயே ஏனைய நாடுகள் பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க எஞ்சிய நாடுகளையும் தன்பிடியில் கொண்டுவரும் மூலோபாய நோக்கில் 5ஆம் நகர்வு திட்டமிடப்பட்டு அரங்கேற்றி வருகின்றது. இதனையே சமகால அரசியலாக அவதானிக்கலாம். வெள்ளை மாளிகையின் மற்றுமோர் செல்லப் பிள்ளையான ஒசாமாவைத் தேடி ஆப்கானிலும், அரசியல் உள் முரண்பாட்டால் திணறிக்கொண்டிருந்த சதாமைத் துரத்திக் கைதுசெய்து தூக்கிலிட்டு ஈராக்கையும் கைப்பற்றி அகல கால் பதித்து நிற்கின்றது அமெரிக்க தேசம். அத்துடன் அந்நாட்டின் மூலவளங்களை நாசப்படுத்து வதுடன் அந்நாட்டின் பண்பாட்டு விழுமியங்களையும் வேரோடு பிடுங்கியெறிய முற்பட்டும்

வருகின்றது. அத்துடன் இஸ்லாத்தை ஓரங்கட்டும் நடவடிக்கையாகவும் இது அமைந்தது மட்டுமன்றிச் சாவதேச அரங்கையும் அச்சுறுத்துவதுடன் மத்திய கிழக்கையும், ஆசியாவையும் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றது. இந் நிலையில் அமெரிக்காவின் எதிர்கால காய் நகர்த்தல், துருக்கியை நோக்கியா அல்லது ஈரான் மீதா அல்லாவிடின் சீனா தேசம் மீதா என்ற சந்தேகம் தோன்றியுள்ளது.

எது எவ்வாறாயினும் இன்றைய நவீன உலகில், அடுத்தவரின் முதுகில் குத்திக் குருதி பார்க்கும் பனிப்போர் பவனிகள் முயற்சிகள் அரங்குகள் கடந்து, நாடுகள் கடந்து, நகரம், கிராமம் நிறுவனங்கள் கடந்து ஒரு சமூகத்தின் கருவான குடும்பம் வரை வியாப்பித்துப் பரம்பிச் செல்கின்றது என்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும். இதன் பின்னணியில் நோக்குகையில் இன்று குறித்த ஒரு நாடு வகுக்கும் பாதையில் எல்லோரும் விரும்பியோ அல்லது விரும்பாமலோ பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது. எனவே ஏனைய நாட்டின் விருப்பிற்கு மாறாகத் தான்தோன்றித்தனமான ஏக இறைமையையும்,சர்வாதிகாரத்தையும் கையேந்தி நிற்கின்றது அமெரிக்க தேசம். இது வகுக்கும் பாதையில் அனைவரும் பயணிக்க வேண்டிய நிலையும் தோன்றியுள்ளது. அந்நாட்டின் இருப்பே உலகைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளதே தவிர ஏனைய நாடுகளின் விருப்பு அல்ல. முடிவுதான் என்ன?



ஆசியாவில் ஜப்பான் மீது அமெரிக்காவால் வீசப்பட்ட இரண்டு அணுகுண்டுகளோடு இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவிற்கு வந்தது. ஆசிய நாடொன்றால் அமெரிக்காவின் பேள் துறைமுகம் (Pearl Harbour) மீது குண்டு வீசி அழிக்கப்பட்டதற்குப் பழிவாங்கும் முகமாகவும் அணுகுண்டின் தாக்கத்தை பரிசீலித்துப் பார்ப்பதற்குமாகவும் ஆசிய நாடொன்றில் கிடைத்த வாய்ப்பைப் பயன் படுத்துவதற்காகவும் இந்த அணுகுண்டுகளை அமெரிக்கா ஜப்பான் மீது வீசியது.



ஒரு அணுகுண்டை மட்டும் வீசுவதனால் ஒப்பீட்டாய்வு செய்ய முடியாது. எனவே ஒப்பீட்டு ஆய்வு செய்வதற்காக இரண்டு குண்டுகள் வீச வேண்டியிருந்ததனால் இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. மிகப்பெரும் படுமோசமான இனப் படுகொலையைப்



புரிந்த ஹிட்லர் இன் ஐரோப்பிய மண்ணில் அந்த அணுகுண்டுகளை வீசாமல் அதுவும் யுத்தத்தில் எதிரிப்படைகள் தோல்வி அடைந்து யுத்தம் முடியப் போகின்ற இறுதிக் கட்டத்தில் அணுகுண்டு வீசப்பட்டது. இன் நடவடிக்கை ஊடாக இரண்டாம் உலக யுத்தத்தில் இறுதி வெற்றியை தனதாக்கித் தோள் தட்டிக்கொண்டது அமெரிக்கா. அந்த இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பின் தொடங்கி சுமாராக 1/2 நூற்றாண்டு காலம் நீடித்த பனிப்போரிலும் தனிப்பெரும் வெற்றியை தனதாக்கிக் கொண்டது. பனிப்போர் முடிந்ததன் பின்னான காலத்திற்குத் தானே முழு உலகுக்குமான "ஏக தலைவன்" என்ற பாத்திரத்தை 1990ம் ஆண்டு டிசெம்பரில் ஈராக்கிற்கு எதிரான யுத்தத்தில் 54 நாடுகளைக் கொண்ட ஐ.நா படைக்குத் தலைமை தாங்கியதன் மூலம் தனதாக்கிக் கொண்டது. அதேவேளை 2001ம் ஆண்டு இரட்டைக் கோபுரம் மீதான பின்லேடனின் தாக்குதலைத் தொடர்ந்து "சர்வதேசப் பயங்கரவாத எதிர்ப்பு" என்ற கோசத்தின் கீழ் பனிப்பேரின் பின் பின்னான காலம் உருவாகியது. இதனை பயன்படுத்திக் கொண்டு உலகலாவிய ரீதியான அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களிலும் தலையிடுவதற்குரிய தலைமைத்துவத்தினைப் பெற்றுக்கொண்டது அமெரிக்கா தேசம். இது இவ்வாறு இருக்க உலக வரலாற்றினை புரட்டிப்பார்க்கும் போது சில உண்மைகள் நிதர்சனமாகின்றன.

- அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ ஏகாதிபத்தியம் ஒரு "பூச்சாண்டி" அது இன்றோ நாளையோ விழப்போகின்றது என்று கூறிய சோபியத் யூனியன் அமெரிக்காவின் காலடியில் சரிந்து வீழ்ந்தது.

- அமெரிக்கா நேட்டோ அணிக்கு எதிராக சேபியத் உடன் கூட்டுச்சேர்ந்து 20 வருட இந்திய சோபியத் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்த இந்தியா இப்போது அமெரிக்காவுடன் கூட்டிணைந்து இரண்டாம் புஸ் நிர்வாகத்துடன் அமெரிக்கா - இந்திய அணுத் தொழிநுட்ப ஒப்பந்தத்தை செய்து கொண்டது.

- அமெரிக்காவை பரம எதிரியாக நீண்ட இரத்தம் சிந்திய போராட்டத்தை நடாத்தி வெற்றியும் பெற்ற வியட்நாம் பின்பு கிளிங்டன் காலத்தில் 2000ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தத்திற்கு போய்விட்டது.

- அமெரிக்காவிற்கு எதிராக விடாப்பிடியாக வீரம் பேசி வந்த லிபிய ஜனாதிபதி கேர்ணல் கடாபி லொக்கெபி விமான வெடிப்புச் சந்தேக நபர்களை விசாரணைக்காக மேற்கிடம் கையளித்தவுடன் அமெரிக்காவிடம் சரணாகதி அடைந்துவிட்டது.

- சதாமின் குவைத் மீதான படையெடுப்பை முதலாம் புஸ் காலத்தில் தோற்கடித்த அமெரிக்கா பின்பு இரண்டாம் புஸ் நிர்வாக காலத்தில் ஈராக்கைக் கைப்பற்றி சதாமை தூக்கிலிட்டு கொன்றுவிட்டது.



➤ பின்லேடனுக்கு எதிரான யுத்தத்தில் உதவ மறுத்ததற்காக அணுகுண்டு வீசுவோம் என்று அணுகுண்டு பலம்கொண்ட பாக்கிஸ்தானிய அரசாங்கத்தினை வெருட்டிப் பணியவைத்து தனது தேவைக்கு ஏற்ற விதமாக மாற்றியமைத்து பயன்படுத்தியது அமெரிக்க தேசம்.

இப்படி அமெரிக்கா உலகின் பகுதிகலெல்லாம் பலவெற்றிகளை ஈட்டிவந்துள்ள போதிலும் அது தனது கண்டத்திலேயே அதற்கு அருகிலேயே அதனால் அதன் ஏவுகணை, அதன் தொடர்பு சாதனங்களால் இராணுவத்தால் வெற்றி கொள்ள முடியாதிருக்கும் ஒரு தலைவனும் ஒரு நாடும் இந்தப் பூமியில் உண்டு என்ற பாடத்தை நாம் புரிந்து கொள்ளத்தவறக்கூடாது. அந்தத் தலைவன் வேறுயாருமல்ல பிடல் காஸ்ரோ அந்த நாடு கியூபா. 1959ம் ஆண்டிலிருந்து இற்றை வரை அரை நூற்றாண்டு காலமாக வெற்றி கொள்ள முடியாதிருக்கும் நிஜ வரலாறு அங்கு உண்டு. கஸ்ரோவால் எப்படி விழமுடியாது இருந்தது? உண்மை மிகவும் இலகுவானது அவர் பில்லேடனைப் போல், சதாம் உஷைனைப்போல் எதிரிக்கு ஒருபோதும் வாய்ப்பைத்தானும் கொடுக்கவில்லை. அவர் எதிரிக்கு எதிராக இடையறாது போராடி வருகின்றார். அவருக்கு எதிரான முழு நீள மூளைச் சலவையை அமெரிக்கா தனது மக்களிற்கு செய்வதற்கு கூட அவர் வாய்ப்பளிக்கவில்லை. 1962ம் ஆண்டு சேபியத் யூனியனால் மேற்கொள்ளப்பட்ட கியூபா ஏவுகணைத் திட்டத்தை ஓர் முக்கிய திருப்பு முனையாக கொண்டு அன்றைய கெனடி நிர்வாகம் மக்கள் மத்தியில் மூளைச் சலவை செய்யவும் கியூபாவிற்கு எதிராக டையெடுக்கவும் வாய்ப்பு இருந்தது. யதார்த்த நிலையை அவர் சரிவர உள்வாங்கி அந்த ஏவுகனைத் திட்டத்திலிருந்து கியூபாவை விலக்கி தனது தேசத்தையும், சோசலிசத்தையும் காப்பாற்றினார் பின்லேடன் உணர்ச்சிவசப்பட்டு எதிரிக்கு வாய்ப்பைக் கொடுத்தது போல கஸ்ரோ செயறபடவில்லை எதிரிக்கு வாய்ப்புக் கொடுத்திருப்பதில் கஸ்ரோ மிகவும் கவனமாக செயற்பட்டார். அத்துடன் கியூபா ஒரு கேந்திர முக்கியமான தீவாக உள்ளமையும் அதன் புரட்சியைப் பாதுகாக்க வாய்ப்பாக உள்ளது. பிடல்கஸ்ரோ ஒரு வெல்லப்பட முடியாத ஒரு வரலாற்று சக்தியாக ஆட்சி செய்து அரசியலில் இருந்து ஓய்வு பெற்று உள்ளார். 24.02.2008 புதிய ஆட்சியாளராக பிடல்காஸ்ரோவின் சகோதரன் ராகுல் காஸ்ரோ ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டு ஆட்சி பீடம் ஏறியுள்ளார்.

இது இவ்வாறே இருக்க அண்மைக்கால புதிய திருப்புகரமான பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது அதாவது டெங்-சியா-ஓ-பிங் அறிமுகப்படுத்திய நால்வகை நவீனமயமாக்கல் சீனாவை ஆசியாவின் வல்லரசு என்ற நிலைக்கு உயர்த்திவிட்டது. கடந்த ஆண்டு (2007) ஜனவரி 11ம் திகதி சீனா செய்மதி அழிப்பு ஏவுகணை ஒன்றை தனது சொந்தத் தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி வெற்றிகரமாக பரிசீலித்துப் பார்த்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இது சீனாவின் வளர்ச்சியின் ஓர் முக்கிய பாச்சலாக கருதப்படுகின்றது. டெங்கின் நால்வகை நவீனமயமாக்கலை எதிர்கொள்வதற்காகவே நரசிம்மராவ் அரசாங்கம் பொருளாதார சீர்திருத்தம் மேற்கொண்டு மேற்குடன் கைகோர்த்து தனது தொழிநுட்பத்தை வளர்க்கவும் புதிய கூட்டிற்கு போகவும் முடிவெடுத்தது. அதனால்

டெங்சியா சீர்திருத்தங்களின் விளைவுக் காலமே இப்போதைய அரசியலில் அரங்கேறி வரத் தொடங்கியுள்ளது. இதனால் ஆசியாவின் மீது சர்வதேச கண்ணோட்டம் திசைமாறி அரங்கேறத் தொடங்கி உள்ளது. இதில் சீனாவின் வளர்ச்சி அமெரிக்காவிற்கு சவாலாகிவிட்டது. அதனால் தற்போது ஆசியாவே அமெரிக்காவின் சவாலாக கருதிக் கொள்கின்றது. இதன் அடிப்படையில் சீனாவின் கால்பதிக்கும் நகர்விற்கும் இடம் கொடுக்காத அரசியல் யதார்த்தம் அரங்கேறத் தொடங்கிவிட்டன. இதனால் எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் சீனா - அமெரிக்கா எதிர்கால யுத்தத்திற்கான வியூகம் அமைக்கும் பணிகள் உருவாகின்றன இதற்கான கருவியாக ஆசியாவின் சிலசிறுதீவுகள் அமைந்துவிட வாய்ப்பும் உள்ளன.

இன்றைய நிலையில் அதன் முழுநிலை அர்த்தத்தில் நோக்கின் உலகம் என்றால் வர்த்தகம், வர்த்தகம் என்றால் கப்பல், கப்பல் என்றால் கடல், கடல் என்றால் இந்து சமுத்திரம், இந்து சமுத்திரம் என்றால்? .....

B. சதீஸ்
விடுகையாண்டு

# GOOD HEALTH HABITS

*Health is man's best wealth. It is a priceless gift that god gives a person. So we must be careful about our Health what eat decides, how we grow Hence we should eat wholesome nutritious food if we want our body to be strong and healthy our food must have all the main nutrients carbohydrates, fats proteins, vitamins and minerals*

*carbohydrates are our chief source of energy of work and play. they are found in rice, flour, bread and potatoes, sugar also gives us energy but too much of sugar is bad our teeth and can make is fat. so we must avoid eating too many biscuits, sweets, pastries and cake. fats too are another source of energy. they are found in butter, margarine, cheese and coconut oil. but too much fat in our diet may cause heart diseases. Proteins help to keep our body fit and strong, fish, meat and eggs are rice in protein, vegetarians can get their protein from soya green peas, dhal and nuts, Vegetables like ladies fingers drumsticks will do us much good. We must eat a sufficient quantity of green leaf Vegetables like gotta - kola and spinach*

*they are high vitamins and mineral salts and are good for our hair. Carrot is good for eyes. Milk is the only food for which there is no proper substitute. Calcium in milk helps to build strong bones and teeth. So it is a must for the grousing child . Fresh fruit are rich of vitamins so we must take them daily*

*We should our meal at regular intervals. We must avoid eating the between the meals. We must remember to drink plenty of water everyday . It is always good to drink, boiled water, we must brush our teeth in the morning and at night before going to bed. We must take regular exercise in the evening . We must trim our finger nails regulars. We must have a bath everyday preferably in the morning we shouldn't forget the saying, Early to bed and early to rise makes a man healthy wealthy and wish.*

*By :- Mrs. Bamah pulendran,*
*2nd year*

# பணியிடத்தைச் சிறப்பாகப் பேணும் ஐந்து பின்பற்றுதல்கள்

(5s for good work place keeping practice)

1. பணியிடமொன்றில் தொடர்ச்சியான உற்பத்தி அதிகரிப்பையும் தர அபிவிருத்தியையும் (Quality Improvement) ஏற்படுத்த வல்ல சிறப்பான பின்பற்றுதலுக்குரிய செயற்பாடுகளாக ஜப்பானில் இருந்து பெறப்பட்ட ஐந்து எண்ணக்கருக்கள் காணப்படுகின்றன.

2. இத்தகைய தொடர்ச்சியான மேம்பாட்டுத்திட்டம் ஜப்பான் மொழியில் KAIZEN எனப்படும். KAI- மாற்றம், ZEN - நன்மைக்காக அந்த வகையில் நன்மைக்கான மாற்றம் எனப் பொருள்படும்.

3. **5S எண்ணக்கருசெய்ரி (Seiri) - Short out (வகைப்படுத்தல்)**

    1. பியிடமொன்றில் உள்ள பொருட்களை தேவையானது, தேவையற்றது என வகைப்படுத்துவோம்.
    2. தேவையற்றதை அப்புறப்படுத்துவோம்.
    3. தேவையான பொருட்களை அடிக்கடி அல்லது எப்போதும் தேவையானது, இடைக்கிடை தேவையானது, எப்போதாவது தேவையானது என வகைப்படுத்துவோம்.

**செய்ரின் (Sei ton) Systematic (ஒழுங்குப்படுத்தல்)**

1. தேவையான பொருட்களை தேவையான போது இலகுவான முறையில் எடுக்கக் கூடியதாக சிறந்த ஒழுங்கு முறையில் ஒழுங்கமைப்போம்.
2. தேவையின் அடிப்படையில் இடத்தை ஒதுக்கீடு செய்வோம்.
3. எல்லாப் பொருட்களுக்கும் லேபல் பண்ணுவோம்.
4. இடங்களை இனங்காணப் பெயர்ப் பலகை, திசைக்குறிகள், உள்ளடக்கப் பெயர்பட்டியல் இடுவோம்.

**செய்சோ ( Seiso) - Sanitizing (தூய்மை பேணல்)**

1. பணியிடம் முழுமையும் தூசுகள் எதுவுமின்றிய நிலையில் சுத்தமாகப் பேணுவோம்.
2. பணிடத்தின் சுத்தம் பேண தினமும் நேரம் ஒதுக்குவோம்.

**செய்கெட்சு (Seiketsu) - standardizing (தரப்படுத்தல்)**

1. வகைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், தூய்மைப்படுத்தலினூடாகப் பேணப்படும் பணியிடத்திலுள்ள பொருட்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகளிற்கும், வடிவங்களிற்கும் ஏற்ப தரப்படுத்துவோம்.

2. உதாரணம் :- ஒரே பரிமாணம் ஒரேநிறம், ஒரேவகையான லேபல் முறை.

**சிட்சுகி (Shitsuke) Self discipline (சுயஒழுங்குமுறை)**

1. மேற்படி விடயங்களை சிறப்பாகப் பேணுவதால் ஏற்படும் பயிற்சியின் விளைவாக நல்ல பண்புகளையும், பணியிடத்திற்குரிய சிறப்பான மனப்பாங்குகளையும் தன்வசமாக்கிக் கொள்ளல்.

## 4.Super 5S Becoming popular for seven solid Reasons

1. பணியிடம் அல்லது பாடசாலையானது தூய்மையானதாகவும் சிறந்த ஒழுங்கமைப்புடையதாகவும் மாறும்.

2. பணியிடம் அல்லது பாடசாலையை இயக்குவது இலகுவானதாகவும், பாதுகாப்பானதாகவும், கட்புலனாகக் கூடிய சிறந்த பெறுபேறுகளை அவதானிக்க முடியும்.

3. இத்தகைய பெறுபேறுகள் பணியிடத்தில் புத்தாக்க முயற்சிகளை மகிழ்ந்தெழச் செய்யும்.

4. இயற்கையாகவே பாடசாலைச் சமூகத்தினர் சிறந்த ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுவார்.

5. தூய்மையானதாயும், சிறந்த ஒழுங்கமைப்பாயும், உள்ள தமது பணியிடம் தொடர்பில் ஒவ்வொருவரும் பெருமைப்படுவர்.

6. பணியிடம் அல்லது பாடசாலையில் வினைத்திறன் தொடர்ச்சியாக உயர்வடைந்து செல்லும்.

## 5. Super 5S can expect participation of Morte people for four Reasons

1. எந்த வகை பணியிடத்திற்கும் பாடசாலைக்கும் நடைமுறைப்படுத்த சாத்தியமானது.

2. பணியிடம் அல்லது பாடசாலையிலுள்ள எந்த ஒரு பிரிவிலும் செயற்படுத்தக் கூடியது.

அலுவலகம்,வகுப்பறை, விஞ்ஞானகூடம், விளையாட்டு முற்றம்.

3. 5S எண்ணக்கருவின் தத்துவார்த்த விளக்கமானது எந்த ஒரு சாதாரண மனிதனாலும் இலகுவாகப் புரிந்துக் கொள்ளக் கூடியது.

4. எல்லோராலும் தூய்மை, வசதியாகச் செயற்படவல்ல நிலைமை விரும்புவதால் இதனை நடைமுறைப்படுத்த விரும்புவர்.

## 6. Super 5S Contributes to each of PQCDSM.

| | | |
|---|---|---|
| -high in Productivity | - | உயர்ந்த உற்பத்திப் பெறுபேறு |
| -high in Quality | - | உயர்ந்த தரம் |
| -low in cost | - | குறைந்த செலவு |
| -accurate in Delivery | - | செம்மையான வழங்குகை |
| -Safe for People to work | - | பணிசெய்யப் பாதுகாப்பு |
| -high in Morale | - | உயர் தார்மீகம். |

R.X . Selvajothy culas
J.M. Suja
2nd Year

# சுருக்கப் பெயர்கள்

1. U.N.O - United Nation of Organization
ஐக்கிய நாடுகள் சபை

2. SAARC - South Asian Association for Regnal co-operation
தெற்காசிய பிராந்திய நாடுகளுக்கான ஒத்துழைப்பு கூட்டமைப்பு

3. NATO - North Atlantic Treaty Organization
வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனம்

4. BBC - British Broad Casting co-operation
பிரித்தானிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

5. ICC - International Cricket Committee
சர்வதேச கிரிக்கட் சங்கம்

6. IOC - International Olimpic Committee
சர்வதேச ஒலிம்பிக் குழு

7. OPEC - Organization of petroleum Exporting Countries
பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் சங்கம்

8. VOA - Voice of America
அமெரிக்க ஒலிபரப்பு சேவை

9. AL - Arab Leak
ஆரபு லீக்

10. Inter pol - International police Commission
சர்வதேச காவல் துறை ஆணைக்குழு

11. NIE - National Institute of Education
தேசிய கல்வி நிருவனம்

12. NASA - National Aromatics and Space Administration
ஐக்கிய அமேரக்காவின் விண்வெளி ஆய்வு நிலையம்

13. HIV - Human Immune Deficiency Virus
எயிட்ஸ் நோயை உண்டாக்கும் வைரஸ்

14. InterNet - International Net work
சர்வதேச கணனிகளின் கூட்டமைப்பு

15. E-mail - Electronic mail
இலத்திரனியல் தபால்

16. WTO - World Trade Organization
ஊலக வர்த்தக நிலையம்

17. NPT - Nuclear Non-Proliferation Treaty
அணு ஆயுத தடுப்பு உடன்படிக்கை

18. NGO - Non Government Organization
அரச சார்பற்ற நிறுவனம்

19. IAEA - International Atomic Energy Agency
சர்வதேச அணு சக்தி முகவர்

20. SLRC - Srilanka Red cross
இலங்கை செஞ்சிலுவை சங்கம்

R. கிஷிசாந்தி
முதலாம் வருடம்



# எமது பண்பாட்டுக்கலை

கலை வரலாறு என்பது மிகவும் மீட்சி கொண்டது. உலகம் என்று தோன்றியதோ அதை எப்பொழுது மனிதன் நுகர முற்பட்டானோ அப்பொழுது கலைகளும் தோன்றிவிட்டது. இவற்றில் கூட்டுக் கலையாகவும் தாய்கலையாகவும் கொள்ளப்படுவதே நாடகம். இதன் தோற்றம், வளர்ச்சிவேகங்கள் தற்போது இதன் நிலை போன்ற விடயங்களை உற்று நோக்கினால் மொழி அந்த மனிதனிடத்தே அங்க அசைவுகளே உணர்ச்சி வெளிபாட்டு ஊடகமாகக் கொள்ளப்பட்டது. இவனது செயல்களை அடுத்த சடங்குகள் நாடகத்தின் தன்மைகள் பலவற்றையும் தாங்கிக் கொண்டது. உதாரணமாக கிரேக்கத்தின் தயோனியஸ் சடங்கினை எடுத்துக் கூறலாம். உணர்வு வெளிபாட்டு ஊடகமாகவும் பொழுது போக்கு சாதனமாகவும, திறன் வெளிப்பாட்டு ஊடகமாகவும், பிரச்சார ஊடகமாகவும் எனப் பல்வேறு தேவைகளை அடிப்படையாகக்கொண்டு கலைகள் வளர்க்கப்பட்டன. நாம் தமிழர்கள் , இலங்கையர்கள் என்கின்ற போது எமக்கென்று ஒரு பூர்வீகம் இருத்தல் வேண்டும். இன்றைய மாணவர்கள் மத்தியிலும் சரி கல்வி கற்ற உயர்வர்க்கத்திடம் ஆயினும் சரி பண்பாட்டுக் கலை பற்றிய அறிவு கேள்விக் குறியாகவே உள்ளது. கூத்து என்பதே எமது இசைக்கருவி இவை இரண்டும் இன்று மருவி வருகின்றது.

காதல், வீரம், சோகம், சடங்குள் என சமூகத்தின் பல்வேறு கண்களையும் சுமந்து கொண்டவையாக கூத்துக்கள் காணப்பட்டன காணப்படுகின்றன. வரலாற்று ஆய்வின்படி தென் இந்தியாவில் இருந்து தொழில் வர்க்கக் குழுக்கள் ஊடாக யாழ்பாணத்தை வந்தடைந்த கூத்து கரையோரப்பகுதியாக நகர்ந்து மட்டக்களப்பில் நிலைபெற்றுக் கொண்டதாக அறிய முடிகின்றது. ஆனால் இன்றைய நிலையில் மட்டக்களப்பில் கூட பாரம்பரியக்கலை பற்றிய விடயத் தெளிவுகள் குன்றிப் போய் உள்ளது எனலாம். கிழக்கு பல்கலைக்கழகத்தினை மையமாகக் கொண்டு கலாநிதி சி.மௌனகுரு அவர்கள் பேராசிரியர் ஜெயசங்கர் அவர்கள் போன்றோரின் முயற்சிகள் ஓரளவு நாடகமும் அரங்கியலும் சிறப்புக் கற்கை மாணவர்கள் மத்தியிலாவது பாரம்பரியம் பற்றிய உணர்வினை விரும்பியோ விரும்பாமலோ ஏற்படுத்துகின்றது.

மட்டக்களப்பை மையமாகக் கொண்டு வடமோடி, தென்மோடி ,வசந்தன்கூத்து, பறைமேளக்கூத்து, மகிடிக்கூத்து போன்றனவும் மன்னாரை மையமாகக் கொண்டு வடபாங்கு, தெம்மாங்கு போன்றவற்றோடு கிறிஸ்தவ மதம்சார் ஞானசவுந்தரி ஆட்டுவணிகன் போன்ற கலை வடிவங்களும் யாழ்ப்பாணத்தை மையமாக கொண்டு காத்தவராயன்கூத்து மகிடிக்கூத்து மற்றும் தொழில்சார் வசந்தன்கூத்து வடிவங்கள் போன்றனவும் நிலைபெறுவதோடு திருமறைகலாமன்றத்தை மையமாகக் கொண்டு கிறிஸ்தவ மதம்சார் கலைவடிவங்களும் காணப்படுகின்றன்.

வன்னியைப் பொறுத்தவரை கோவலன் கண்ணகி, மகிடிக்கூத்து, வசந்தன்கூத்து போன்றனவும் மலையகத்தில் அருச்சுனன்தவசு, பொன்னர்சங்கர், காமன்கூத்து மகிடிக்கூத்து போன்றனவும் நிலைப்பெற்றுள்ளன என இலக்கியங்கள் ஊடாகவே அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அவை இன்று எங்கோ சிறு மூலைகளில் பேணப்பட்டு வரினும் சமூகத்தில் அந்தஸ்து பெறாத கலைகள் என பலரால் கருதப்படுகின்றது. தமிழ் பாரம்பரியத்தின் கலைவடிவம் எது எனக்கேட்டால் பரதம் எனக்கூறும் நிலையே இன்று காணப்படுகின்றது. பறை என்பது மகிழ்வுகளில் இசைக்கப்படக்கூடாத ஓர் இசைக்கருவியாகும். அவலத்தின் ஒரு அறைகூவலாகவும். கருதப்படுகின்றது. வரவேற்பு நிகழ்வுகளின் மங்கள வாத்தியம், தவில், நாதஸ்வரம் அதேபோல வரவேற்று நிகழ்வு பரதம் என்பதாகவே எம்முள் நிலைபெற்று விட்டது எனலாம். கலை பற்றிய ஆய்வு செய்யும் போது நான் ஓர் பழமைவாதி அல்ல ஆனால் செழுமை சொல்லும் எமது பாரம்பரியங்களை இழத்தல் எமது பண்பாட்டை இழப்பதற்கு ஒப்பானது என்பதைனையே இங்கு விளக்க விரும்புகிறேன். 1940ம் ஆண்டிற்குப் பின்னர் பேராசிரியர் விததியானந்தன் பாரம்பரிக்கலைகளைப் பேணும் முயற்சியில் ஈடுபட்டார்.

கூத்துகளை கூறும் அண்ணாவியர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதேபணியினை இன்று கலாநிதி அ.மௌனகுரு அவர்கள் நிகழ்த்துகின்றார். பல்கலைக்கழக போதனைகளாக ஊட்டப்படுகின்றன. ஆனால் 1940 முதல் இன்று வரை கூத்திற்கென ஓர் அந்தஸ்து வழங்கப்பட்டதாக எம்மால் அறிய முடியவில்லை. காரணம் நாகரீக மோகம், தொழில்முறைச் சினிமாவின் வருகை எனக் கற்றோர்களால் கூறப்படலாம். இவை முழுமைத் தரும் காரணங்கள் அல்ல மாறிவரும் உலகிற்கேற்ப கலைகளில் மாற்றம் வேண்டும் என்பது உண்மை அதிகரிக்கும் தேவைகள் கலைகளையும் ஊடகமாகக் கொள்ளும் என்பதும்உண்மை. ஆனால் அதற்காக பண்பாட்டை இழந்து விட முடியாது. எமக்காகத்தான் நாகரீகமோ அல்லது நாகரீகத்திற்காக நாமோ இருந்து விட முடியாது. தலை என்பது தெய்வத்தின் கொடை அதனை உதாசீனம் செய்யாது பேண வேண்டும்.கலைக்கும் எனக்கும் தொடர்பு இல்லையே என்று எம்மை நாமே தூற்றாது பிறப்புமுதல் (தாலாட்டு ) இறப்புவரை (ஒப்பாரி ) கலைகளுடனேயே வாழ்கிறோம். கலையின் ஊடாகவே இப்பிரபஞ்சம் இயங்குகின்றது என்பதனை மனங் கொள்வோம்.

திரு.ம.ஜெயகாந்தன்.
விடுகையாண்டு

# நண்பத்துவம் பற்றிய ஓர் கண்ணோட்டம்

சமூக உளவியலில் நண்பத்துவம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த எண்ணக்கருவாகக் காணப்படுகின்றது. மனிதன் ஒரு சமூகப் பிராணி ஆவான். இந்த வகையில் மனிதன் தனித்திருக்க முடியாது. பல்வேறுப்பட்ட உறவு வலையூடாக வளர்க்கப்பட்டே ஒருவன் சமூகமயமாக்கப்படுகின்றான். இந்த வகையில் மனித வாழ்வில் நண்பத்துவம் என்பது முக்கியம் வாய்ந்ததாகும். குறிப்பாக இளைஞர்களது சமூகமயமாக்கலில் நண்பர்கள் முக்கிய பங்கேற்பதை அவதானிக்கலாம்.

அதாவது தனிமையில் இருக்க ஒருவன் பயம் உள்ளவனாகவும், பலவீனமுள்ளவனாகவும் அதே சமயம் பாதுகாப்பின்மையையும் உணர்கின்றான். இந்த வகையில் கட்டிளமைப் பருவத்தினரே தனிமையில் அதிக தாக்கத்தை பெறுகின்றனர். சமகால சமூக உளவியலாளர்கள் இளைஞர் பண்பாடு தொடர்பான ஆய்வுகளிலும் படிப்புக்களிலும் தொடர்ச்சியாக ஆர்வம் காட்டி வருவதினை அவதானிக்கலாம்.

ஒருவனது பிள்ளைப் பராயத்திலுள்ள நண்பத்துவம் மூலமே அவனது சுயம் தொடர்பான கருத்துக்கள் அபிவிருத்தி செய்யப்படுவதைக் காணலாம். இது சம்மந்தமாக ஜ.எச் மீட்டினுடைய தொல்சீர் சிந்தனையை நோக்கும் இடத்து இவர் பிள்ளைப் பராயத்தை "விளையாட்டுப் படிநிலை போட்டி விளையாட்டுப் படிநிலை எனப்பார்க்கிறார்கள்.

01. விளையாட்டுப் படிநிலை - Play stage இன்நிலையில் ஒருபிள்ளை தனக்குரிய நடிபங்குகளை ஏற்கிறது (உ+ம்) ஆசிரியராக விளையாடுவது.
02. போட்டி விளையாட்டுப் படிநிலை - Game stage இந்நிலைக்கே இவ்வறிஞர் கூடிய முக்கியத்துவம் கொடுக்கிறார். அதாவது ஒரு பிள்ளை விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட உணர்வைக் கொண்டிருக்கும்.

உதாரணம் :- குருவிளையாட்டில் ஈடுபடும் போது தலைவர் கட்டளைக்குக் கீழ்ப்படிதல், விட்டுக் கொடுத்தல், சகிப்புத்தன்மை போன்ற பண்புகளை வளர்ப்பதோடு அவர்களது சுயம் என்ற எண்ணக்கரு விருத்தியடைவதைக் காணலாம்.

மேலும் கட்டிளமைப் பருவத்தினரிடையே காணப்படும் நண்பத்துவமானது அவர்களை நெருக்கமான உறவுகளுக்குள்ளாகி விடும். குறிப்பாக இந்நிலையில் எதிர்பாலாரைக் கொண்ட நண்பத்துவம் காதலாக பரிணமித்து திருமணம் என்னும் பந்தத்தை நிலை நிறுத்தி நிற்பதனையும் காணலாம்.

இளைஞர் பல்வேறுப்பட்ட தேவைகளின் நிமிர்த்தம் வேறுபட்ட நண்பர்களை வைத்திருப்பர், அதாவது விளையாடும் போது விளையாட்டில் ஈடுபாடுடையவர்களையும், கற்றலின் போதும் மற்றும் இரகசியங்களை பகிர்வதற்கும் ஒருவகையான நண்பர்களையும் கொண்டிருப்பர். ஒருவன் குடும்பத்தில் இருந்து பெறத்தவறியவை நண்பர்கள் மூலமே நிவர்த்தி செய்யப்படுவதனைக் காணலாம்.

நண்பனைக் கொண்டு ஒருவனின் நடத்தையை உணரலாம் என்பது சாதுலான்ட் (Satherland) என்பவரது கருத்தாகும். இந்நிலையில் ஒருவனின் விலகல் நடத்தை கூட அவனது நண்பர்கள் காரணமாக அமைந்துவிடுகின்றன. ஒருவன் தனது குணாம்சங்களுடன் ஒத்த தன்மைகள் உள்ள ஒருவருடனேயே இணைந்துக் கொள்கின்றான்.

இன்று எம்மிடையே காணப்படும் நண்பத்துவத்தை எடுத்து நோக்கினால் பெண்களைவிட ஆண்களிடம் நட்பு இறுக்கமாகக் காணப்படுகின்றது. ஆண்களே அதிக நேரத்தை நண்பர்களுடன் கழிக்கின்றனர். இந்நடத்தைக்கு சமுதாய அமைப்பு முறை ஒரு காரணமாக அமைகிறது. எனினும் அண்மைய காலத்தில் பெண்கள் மத்தியில் நண்பத்துவத்தின் ஆழம் பெருகி வருவதைக் காணலாம். இருப்பினும் குடும்பம் என்ற அமைப்பு போன்று நண்பத்துவம் நிலையானதல்ல. இதற்கு நீண்ட கால இலக்குகளும் கிடையாது.

எவ்வாறாயினும் இன்றைய காலகட்டத்தில் குடும்பத்தின் செல்வாக்கு குறைந்து வருகின்றது. இதனால் தற்போது நண்பர்கள் முக்கியத்துவம் பெறுகின்றார்கள். நண்பர்கள் சமூகத்தில் சமூக அசைவை ஏற்படுத்துவார். அதாவது உயர்குலத்தைச் சேர்ந்த நடுத்தர, கீழ்த்தர குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுடன் உயிருக்குயிரான தொடர்புகளை வைத்திருப்பார்கள்.

இதனால் அவன் உயர்குலத்தைப் போல் உயர வேண்டும் என்ற மனப்பாங்கு இயல்பாகவே ஏற்படும். மேலும் தானே தனித்து இயங்கும் தன்னம்பிக்கை, பரந்த அறிவு, அனுபவம், சமமான அந்தஸ்தையும் ஒருவன் பெறுகின்றான். குடும்பத்தில் கிடைக்காத அன்பு,கணிப்பு, காப்பு என்பன நண்பத்துவத்தினுள் கிடைக்கும் போது ஒருவன் இயல்பாகவே சமூகமயமாக்கப்படுகின்றான்.

செல்வி A.Q.குலாஸ்
1ம் வருடம்



# நாடகம் கூத்து என்ற சொல்லின் தோற்றம் பற்றிய சில தரவுகள்.

தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே சங்க காலம் என்று சொல்லப்படுகின்ற மூன்றாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் ஐந்து வகையான நிலங்களுக்கு ஐந்து வகையான ஒழுக்கங்கள் காணப்பட்டன. அவ்வாறான வயலும் வயல் சார்ந்த பிரதேசமாகிய மருத நில ஒழுக்கத்தில் கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. அவ்வாறு தொடர்ந்து வந்துள்ள காலங்களையும் எடுத்து நோக்குவோமானால் ஒவ்வொரு காலப்பகுதியிலும் கலை இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது. அவ்வாறு தோற்றம் பெற்ற முத்தமிழிலே இயல், இசை, நாடகம் என்று எடுத்துக்கொள்வோம். இயல் என்பது எண்ணத்தை வளர்த்து வருகின்றது. இசை என்பது உள்ளத்தின் உணர்வுகளை வளர்கின்றது. எண்ணம் உள்ளத்தின் உணர்வு என்பன சீராக்கம் பெறுகின்ற போதே நாடகம் பரிணமிக்கின்றது.

இவ்வாறு சில காலப்பகுதியில் மாற்றம் பெற்றதே கூத்து ஆகும். கூத்து எனும் சொல்லின் வினையடியாக இருப்பது குதி எனும் உரிச் சொல் இச்சொல்லின் அடிப்படையிலே தான் தோற்றம் பெற்றுள்ளது. குறித்து ஆடுதலே கூத்து என அழைக்கப்படுகிறது. ஒருவர் சந்தோஷம் ஏற்படுகின்ற போது சில சமயத்தில் உணர்ச்சிவசப்பட்டு ஆட்டம் போடுதல் என்ற இயல்பு பண்புகளை அவதானிக்க முடிகிறது. கூத்து ஒரு தமிழ் சொல் ஆகையால் அதன் பொருளில் கருத்து வேறுபாடு காட்டப்படுவதில்லை. ஆனால் நாடகம் எனும் சொல் அப்படியன்று அது வடசொல் கருத்தை உருவாக்குகின்றது. அதாவது பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் பரத சாஸ்த்திரத்திலுள்ள நாட்டிய தர்மி எனும் சொல்லின் தமிழ் பெயர்ப்பே நாடகம் என கூறிக்கொள்கிறார். இன்னும் சிலர் நாட்டியத்தில் உள்ள உருப்படிகளில் ஒன்றான நிருத்தம் என்னும் வட சொல்லோடு நாடகம் என்னும் சொல்லுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு எனக் கூறிபிடுகிறார்கள்.

நாடகம் எனும் சொல்லை எடுத்து நோக்குவோமாயின் நாடு+அகம் எனப் பிரித்து நாட்டு மக்களின் மனதைக் காட்டும் கண்ணாடி எனக் கூறிக்கொள்ளலாம். அதாவது இச்சொல்லினை மேலும் ஆய்வு செய்வோமாயின் நாடகம் எனும் சொல் தமிழில் தொழில் பண்பை குறிக்கும் நட எனும் உரிச் சொல்லின் அடிப்படையாகவே பிறந்துள்ளது. நாடகம் என்ற சொல்லைப் போலவே நடை, நடிப்பு, நடனம், நாட்டியம், நட்டு நட்டுவம், நட்டுவன் ஆகிய சொற்கள் உள்ளன. இச் சொற்களுக்கும் நட என்னும் உரிச் சொல்லாக அமைந்து காணப்படுவது கண் கூடு.

இவற்றில் நடை எனும் சொல்லுக்கு கூத்து என்று தழிழ் அகராதி குறிப்பிடுவதும் அறியதக்கது. இச்சொல் (நடை) நட எனும் சொல்லோடு ஐ உருபு சேர்ந்து (நட+ஐ) நடை என உருவாக்கம் பெற்றுள்ளது. அதாவது மனிதன் ஒருவனைப் பொறுத்தமட்டில் அவனது நடையும் மன இயல்பை வெளிப்படுத்தும் மனதோடு நடை எனும் சொல் சேரும் போதே இது வெளிப்பட்டுள்ளது. என்ற கருத்தினை வெளிவிடாமல் மனம் எனும் அகமும் நடையும் புணரும் போது (நடை +அகம்) நடையகம் என்று கூறுவதுண்டு. இது காலத்துக்கு காலம் மருவி வந்துள்ளமையே நாடகம் என தோற்றம் பெற்றுள்ளது என்று மொழி அறிஞான தேவநேய பாவணர் கூறுகின்றார்.

அடுத்து நாடகம் எனும் சொல் தோற்றம் பெற்றமைக்கு மக்களிடையே நிலவும் சாதாரண பேச்சு வழக்கை எடுத்து நோக்கி ஒருவரின் நடத்தையை கவனிப்போம். அவன் வெறுப்புற்று அல்லது மகிழ்ச்சியடைந்து இது நல்ல நாடகம்தான் என்று சொல்வதை இன்றும் நம்மிடையே இருந்து வருவதை அவதானிக்கலாம். சிலரின் விசித்திரமான நடையை நாடகம் என்று வர்ணிப்போரும் இல்லாமல் இல்லை. உதாரணமாக திரைப்பாடல்களில் வருகின்ற வரிகள் இதற்கு சான்று பகிர்கின்றன. நடையா? இது நடையா? கேலியாக கூறப்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

மக்களிடையே நிலவும் இச் சாதாரணமான பேச்சு வழக்கு மட்டுமன்றி சைவ சமயத்தவர்களின் கடவுளாகிய சிவபெருமானை நடராஜன், நடேசன், கூத்தர் பிரான், தாண்டவராயன் எனும் திரு நாமங்களை சூடிக் கொண்டமைக்கு அவனது நடையும் அதில் எழுந்து நின்ற நடனம் கூத்து தாண்டவம் என்பதுதான் காரணங்களாக வந்துள்ளது என்று கூறுவதில் எந்த வித ஐயமும் இல்லை. இவற்றிலிருந்து நாடகம் அல்லது நடனம் என்பது நடையின் அலங்காரம் என்று நிச்சயம் நாம் கூறிக் கொள்ளலாம்.

அத்தோடு நாடகம் என்பதை ஆங்கில மொழியில் கூறுவோமானால் Play என்றும் வழங்கப்படுகிறது. இவற்றில் Play என்றும் Drama சொல்லுக்கு Move about in lively என்றும் ஒக்ஸ்போட் அகராதி கூறுகின்றது. நட எனும் சொல்லால் நம் நினைவிற்கு வராமல் போகாது இது போன்றே Drama எனும் சொல்லும் இதற்கு ஒரு செயலை மேற்கொள்ளல், சுறுசுறுப்பாக செயற்படல் எனும் கருத்துக்களை The universal Dictionary at the English Language என்று ஆங்கில அகராதி கூறுகின்றது. இக்கருத்துக்களும் மனித நடையில் முக்கியத்துவத்தையே வெளிப்படுத்துவதாக அமைகின்றன.

இறுதியாக மேலே தரப்பட்டுள்ள ஆய்வுகளும் அவற்றின் முடிவுகளும் மனிதனின் இயல்பான சில செயற்பாடு (நடத்தல், குதித்தல்) என்பவற்றில் இருந்தே நாடகம், கூத்து என்ற ஆடற்கலைகள் தோற்றம் பெற்றிருக்கின்றன என்னும் சிந்தனையைக் காட்டி நிற்கிறது. இதனை விடுத்து நாடகத்திற்கென ஒரு பொருளும் இலக்கண நூலினைப் படைத்த நாடகப் பேரறிஞர் பரிதிமாற் கலைஞரும் அவர் போன்றோரும் கோயில் சடங்குகளிலிருந்துதான் தோற்றம் பெற்றிருத்தல் வேண்டும் என்று கருத்தை முன்வைத்துள்ளமையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு முழுமையாக நோக்கும் போது சங்ககாலம் தொட்டு இன்றுவரைக்கும் இக்கருத்து மருவி நிலைத்து நிற்கின்றது என்பது போற்றக்கூடிய விடயம் ஆகும். அந்த வகையில் இந்த கூத்து நாடகம் என்பது மக்களிடையே பின்னிப் பிணைந்த ஒரு கலையாக அமைந்துள்ளது என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத ஒன்றாகும்.

"கலையிலே இலக்கியம் படைக்கும் மனிதப் பண்பைப் போற்றுவோம்"

திருமதி. S.T. ராஜ்வதனி
விடுகையாண்டு

# தமிழர் பண்பாட்டு விழுமியங்களும் விஞ்ஞான செறிவும்.

"கல்லுக்கும், மண்ணிற்கும், சொல்லிற்கும் பொருள் தந்தது எங்கள் தமிழ்" அந்த வகையில் பண்டைக்காலம் தொட்டே தனக்கென கலை, கலாச்சார விழுமியங்களைக் கொண்டு உலக வரலாற்றில் தனது முத்திரையைப் பதித்துள்ளது. உள்ளங்கையில் உலகத்தைக் காணும் இன்றைய விஞ்ஞான உலகத்தின் அடிப்படை வித்துக்கள் தமிழர் பண்பாட்டிலிருந்தும் தோற்றம் பெற்றதைக் காணலாம். அதில் சிலவற்றை நாம் ஆராய்ந்து நோக்குவோம்.

தமிழர் பண்பாட்டில் ஒரு மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை தனக்கென ஒரு பண்பாட்டைக் கொண்டு வாழ்கின்றமை கண்கூடு. அந்த வகையில் குழந்தை பிறந்ததும் எண்ணை தேய்த்து சூரிய ஒளியில் கிடத்தும் முறை காணப்படுகின்றது. இது சூரிய ஒளியிலிருந்து பெறும் விற்றமின் D தொகுப்பிற்கு ஏதுவாக அமைகின்றது. அத்தோடு பிள்ளைகளுக்கு எண்ணை பூசி மசாச் செய்யும் போது குழந்தையின் தசைநார் விரிவடைகின்றது. குழந்தைகள் மட்டுமல்ல " சனி நீராடு" என்ற வகையில் எமது மூத்தோரும் நல்லெண்ணை தேய்த்து முழுகுவதை தமது பழக்கமாகக் கொண்டனர். இது இன்னும் வெளிநாடுகளில் " சூரியக்குளியல்" என்னும் பெயரில் கடற்கரை மணலில் சூரிய ஒளி படுமாறு இருக்கும் நிலைமை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றை விட காலையில் சூரிய நமஸ்காரம் செய்துதான் மக்கள் தொழில்களை ஆரம்பிப்பார்கள். எனவே சூரியனின் கதிரில் இருந்து பெறும் விற்றமின் D தொகுப்பிற்கு இது வழி சமைக்கின்றது.

தமிழர் பண்பாட்டில் மஞ்சள் தெளித்தல் அல்லது சாணம் தெளித்தல் என்னும் பழக்கம் காணப்படுகின்றது. அதனை விஞ்ஞான ரீதியில் நோக்கும் போது அவை நோய்க் கிருமிகளை அழிக்கும் ஒரு கிருமிகொல்லியாக தொழிற்படுகின்றது. இவற்றில் சாணத்தின் பாவனை இன்று குறைவடைதலும் மஞ்சளின் பாவனை இன்றும் காணப்படுகின்றது. அதிலும் அன்று நேரடியாகப் பயன்படுத்தப்பட்ட மஞ்சள் இன்று முகப்பூச்சுகளாகவும், கழிம்புகளாகவும், சவர்க்காரங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. அத்தோடு ஒரு இறப்பு வீட்டுக்குச் சென்று வந்தால் மஞ்சள் நீரால் தலை முழுகும் பழக்கமும் எமது பண்பாட்டில் ஒன்றாகும் அதன் காரணம் இறந்த உடலின் நோய்க்கிருமிகள் எம்முடலில் தாக்கி இருக்கும். எனவே அதனை அகற்ற வேண்டும் என்பதற்காகவே. ஆகும்.

தமிழர்களின் பண்பாட்டில் மண்சட்டி பானையில் உணவு சமைப்பது, ஓலைப் பெட்டிகளில் உணவு இட்டு பாதுகாப்பது என்பதும் ஒன்றாகும். இதன்போது உணவானது பாத்திரங்களுடன் தாக்கம் புரிந்து தேவையற்ற வாயுக்கள், சேர்வைகளை தோற்றுவிக்காது. இதுவொரு உலோக பாத்திரமானால் அவை உணவுடன் தாக்கமடைந்து உடலுக்கு ஒவ்வாத பதார்த்தங்களை வெளிவிடும்.

நெற்றியிலே பொட்டு வைக்கும் பழக்கத்தை கொண்டது தமிழர் பாரம்பரியம். அதாவது நெற்றியின் நடுவே நரம்பு மண்டலங்கள் சந்திக்கின்ற இடத்திலே பொட்டு வைக்கும் போது சூரிய வெப்பம் காரணமாக நரம்பு மண்டலம்

பாதுகாக்கப்படுவதுடன் ஹிப்னாடிசம் போன்ற நரம்பு வித்தைகளும் தடுக்கப்படுகின்றது. இவற்றோடு " தீர்த்தம் பருகுதல்" என்னும் எமது கலாச்சாரத்தை நோக்கினால் ஆலயத்தில் உள்ள மூலமூர்த்தியை பால், தேன், தயிர் கொண்டு அபிசேகம் செய்த நீரை பருகுதல் ஆகும். இதன்போது கடவுளின் திருவுருவம் செய்யப்பட்ட கல்லின் அல்லது செப்பில் உள்ள தாதுக்கள் சேர்ந்து வரும் நீர் ஓர் நிவாரணியாக காணப்படுகின்றது.

தமிழர் வைபவங்களில் வாழை மரம் கட்டப்படும் மரபு காணப்படுகின்றது. இதன் போது மக்கள் பலர் ஒன்று கூடுவதால் அங்கே வளி மாசடைகின்றது. அதாவது காபனீரொட்சைட் வாயு அதிகரிக்கின்றது.. எனவே அகற்ற வேருடன் கூடிய வாழை மரம் பயன்படுகின்றது. இவற்றோடு தமிழர் வைபவங்களில் மோதகம், பஞ்சாமிர்தம், கொழுக்கட்டை, பலாபழம் என்பவற்றில் ஒன்றாவது பிரதான இடத்தை பெற்றிருக்கும். அந்த வகையில் மோதகம் என்னும் போது அரிசிமாவில் மாப்பொருளும், பயற்றில் புரதமும் தேங்காய் பூவில் கொழுப்புச்சத்தும்,விற்றமின்கள் கனியுப்புக்களும் அடங்கியுள்ளன. எனவே அது ஒரு நிறையுணவாக காணப்படுகின்றது. எனவே நிறையுணவை பேணும் தன்மை எமது பண்டைய பாரம்பரியத்தில் ஒன்றாக பரிணமித்துள்ளமை கண்கூடு.

இன்னும் தமிழர் பண்பாட்டில் விரதம் இருக்கும் பண்பை நோக்குவோமானால் பல்வேறு உணவுகளை தொடர்ச்சியாக உண்டு வரும் சந்தர்ப்பங்களில் ஒரு நேர உணவை விடுக்கும் போது எமது உடலில் தேவையில்லாத அளவில் அல்லது அதிகளவில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள கொழுப்புச்சத்துக் குறைக்கப்படுகின்றது. அத்தோடு காவடி ஆடும் மரபும் தமிழர் பண்பாட்டில் உண்டு. அதாவது முதுகில், அலகில் உள்ள நரம்புகளில் துளையிட்டு செடில் குற்றும் போது அங்கே நரம்பியல் சம்பந்தமான வியாதிகள் தவிர்க்கப்படுகின்றது. இது ஒரு அக்யூபஞ்சர் மருத்துவ முறையாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

துளசிச் செடி மற்றும் மூலிகைப்பாவனை எமது பாரம்பரிய பண்பில் காணப்படுகின்றது. அதாவது துளசியிலிருந்து வெளிவிடும் மணம் கொடிய பிராணிகளை அதாவது பாம்பு, பூச்சி, பூரான் என்பவற்றை அதன் எல்லையினுள் வாழவிடாது. அத்தோடு முடக்கறுத்தான், மஞ்சள் கற்றாளை குப்பைமேனி, வல்லாரை என்ற எண்ணற்ற மூலிகைகள் இன்றைய ஆங்கில மருத்துவத்தில் வில்லைகளாக, பாணிகளாக, கழிம்புகளாக வெளிவந்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. இவற்றோடு வீட்டிற்கு அருகில் பாரிய மரங்களான நாவல்,புளி,தேக்கு போன்ற மரங்கள் வளர்ப்பதில்லை. ஏனெனில் அவற்றின் வேர்கள் வீட்டின் அத்திவாரத்தைத் துளைத்து வீட்டை வெடிக்கச் செய்துவிடும் என்பதால் ஆகும்.

இவற்றோடு தமிழர் புதுவீடு கட்டுவதற்காக "நிலையம் பார்த்தல்" எனும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். அதாவது வீடுகட்டும் எல்லையின் மண்ணின் தன்மை நீர்வசதி, என்பவற்றை அறிதலே இதன் பிரதான அம்சமாகும்.

எனவே தமிழர் பாரம்பரியங்களில் விஞ்ஞான உண்மைகள் எண்ணற்றன செறிந்து காணப்பட்டுள்ள போதிலும் இன்று நாம் மூடநம்பிக்கைகள் என்ற போர்வையில் எமது பாரம்பரியங்கள் பலவற்றை உதறித்தள்ளி நவீன நாகரீகம் எனும் போர்வையில் எமது பண்பாட்டைச் சீரழித்துக்கொண்டு வருகின்றோம். எனவே இந்நிலை மாற ஆசிரியர்களாகிய நாம் எமது பாரம்பரியங்களை நவீன உலகத்தோடு ஒட்டிப் பேணிக்காப்பதையும் எமது கடமைகளில் ஒன்றாகக் கருதுவோம்.

திருமதி. வராகினி ஜெகதீஸ்வரன்
விடுகையாண்டு

# மலையகக் கல்வி அபிவிருத்தி

## மலையக மக்கள் பற்றிய ஒரு சுருக்கம்

மலையக மக்கள் என்போர் இலங்கையில் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களைப் போன்ற தனித்துவமான ஒரு இனக் குழுமத்தினராவர். பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சிக் காலத்தின் போது தென்னிந்தியாவிலிருந்து இலங்கையின் பெருந்தோட்டத்துறையை உருவாக்குவதற்காகவும் பெருந்தோட்டத் துறையில் தொழில் புரிவதற்காகவுமென 1835ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ இரண்டு லட்சம் பேர் இங்கு வரவழைக்கப்பட்டனர். இவர்கள் ஆரம்பத்தில் மலையகப் பிரதேசங்களில் காணப்பட்ட காடுகளை அழித்து அவற்றில் பெருந்தோட்டப் பயிர்களைப் பயிரிட்டனர். தொழில் புரிகின்ற தோட்டங்களிலேயே 'லயன்' எனப்படுகின்ற வசதிகள் மிகக் குறைந்த சிறிய அளவிலான வீடுகளில் மோசமான நிலையில் வசித்து வந்தனர். ஆரம்ப காலத்தில் எதுவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் வாழ்ந்தாலும் இவர்களின் உழைப்பை உறிஞ்சி எடுப்பதிலேயே பிரித்தானிய காலணித்துவ ஆட்சியாளர்கள் முனைப்புக் காட்டினர். ஏறத்தாழ 20ஆம் நூற்றாண்டின் முட்பகுதி வரை அதே நிலையிலேயே இவர்கள் வாழ்ந்து வந்தனர். இவ்வாறு இலங்கையில் மலையக மக்களின் வரலாறு ஒரு கசப்பான பதிவுகளுடனேயே ஆரம்பிக்கின்றது.

## இலங்கையின் கல்விப் பின்புலம்

இலங்கை வரலாற்றில் காலனித்துவ ஆட்சிக் காலத்துக்கு முன்னர் இந்துப் பிராமணர்களாலும் புரோகிதர்களாலும் ஆங்காங்கே திண்ணைப் பாடசாலைகள் நடாத்தப்பட்டு அவற்றில் மொழியறிவு, எழுத்து, வாசிப்பு, பாராயணம் செய்தல் என்பன முக்கியமானதாகக் காணப்பட்டது. இதுவே இலங்கையின் சுதேச கல்வி முறையாகும். 1505இல் போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப்பகுதிகளைக் கைப்பற்றியதிலிருந்து தமது மதத்தைப் பரப்புவதற்காகவும் தமது வியாபாரத் தேவைகளுக்காகவும் ஆங்காங்கே கோவிற்றுப் பாடசாலைகளை நிறுவி அதனூடே கல்வி புகட்டி வந்தனர்.

இருப்பினும் போர்த்துக்கீசரைவிட அவர்களின் பின் வந்த ஒல்லாந்தர் காலத்திலேயே இலங்கை ஒரு நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்வி முறையைக் கண்டது. அதாவது மிசநெறிப் பாடசாலைகளை நிறுவி அதனூடாகக் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர். இப்பாடசாலைகளில் ஆரம்ப காலத்தில் புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவியவர்களுக்கு மதக் கல்வியும் ஆங்கிலக் கல்வியும் கற்பிக்கப்பட்டன. ஒல்லாந்தர்கள் வியாபார நோக்கத்துடன் இலங்கைக்கு வருகை தந்த போதும் சிறந்த நிர்வாகத்தைப் பேணுவதில் தேர்ச்சி உடையவர்களாக இருந்ததுடன் அவற்றை இலங்கையர்களுக்கு ஓரளவு புகட்டியும் வந்தமை சிறப்பம்சமாகும்.

ஒல்லாந்தர் போலவே வியாபார நோக்கத்டதுடன் இலங்கைக்குப் படையெடுத்த பிரித்தானியர்கள் முன்னைய இரு வகையினர் போலல்லாது முழு இலங்கைத் தீவையும் 1815இல் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து ஆட்சி செய்தனர். இவர்களும் இலங்கையின் வளங்களைச் சுரண்டுவதிலும் இலங்கையை தமது வியாபார மற்றும் இன்னோரன்ன நலன்களுக்காகப் பேணுவதிலும் முனைப்புக் காட்டினர். இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தைவிட பிரித்தானியர் காலம் வேறுபட்டதாகக் காணப்படுகிறது.

முன்னையவர்கள் வியாபார நோக்கங்களுக்காகவும் மதப்பிரசாரத் தேவைகளுக்காகவும் இலங்கையைப் பயன்படுத்திக் கொண்டனர். ஆனால் பிரித்தானியர்கள் இலங்கையில் கல்வி, நிர்வாக ரீதியில் மாற்றத்தை உண்டுபண்ணத் தலைப்பட்டனர். இதற்காக இலங்கையை மதச் செயற்பாடுகள் மற்றும் வியாபார நோக்கங்களுக்குப் பயன்படுத்தினாலும் தங்களுடைய காலனித்துவ ஆட்சிப் பிரதேசமாகக் கொண்டிருந்தனர். இதனால் இலங்கையிலுள்ள மக்களுக்கு மிஷனெறிகள், ஆங்கில மொழிப் பாடசாலைகள், சுதேசப் பாடசாலைகள் என்பவற்றினூடாகக் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர். பிற்பட்ட காலத்தில் முன்னேற்றகரமான கல்வி மாற்றங்கள் கொண்டு வரப்பட்டதுடன் அவை மென்மேலும் விரிவு காலத்திலும் பெரிதும் செல்வாக்குச் செலுத்துவதை இன்றைய கல்வி மற்றும் நிர்வாக முறைமைகளில் காணக்கூடியதாகவுள்ளது. இருப்பினும் இவர்களின் ஆட்சியின் இறுதிக்காலம் வரை மலையக மக்களுக்கு இவர்களால் கல்வி வழங்கப்படவில்லை. இவ்வாறனவொரு பின்னணியிலேயே இலங்கையில் மலையக மக்களின் கல்வி வரலாறு காணப்படுகிறது.

## இலங்கையின் கல்விப் பின்புலமும் மலையகமும்

இவ்வாறான பின்புலத்தைக் கொண்ட இலங்கையில் மேற்கண்டவாறு பெருந்தோட்டத் தொழிற்துறையில் குடியேற்றப்பட்ட மலையக மக்களுக்கு காலனித்துவ ஆட்சியாளர்களாலும் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட சுமார் 25 வருடங்களாக ஆட்சி செய்த இலங்கையின் ஆட்சியாளர்களாலும் கல்வி உரிமை வழங்கப்படவில்லை. அதாவது ஏறத்தாழ இரு நூற்றாண்டு காலம் கல்வி உரிமை மறுக்கப்பட்ட ஒரு கொத்தடிமைச் சமூகமாகவே மலையக மக்கள் நடத்தப்பட்டு வந்துள்ளனர்.

சுதந்திரத்திற்குப் பின்னர் பெருந்தோட்டத்துறை மக்களின் பிள்ளைகள் கற்கவென தோட்டப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. இவை பெருந்தோட்டங்களின் துரைமாரின் மேற்பார்வையின் கீழ் இயங்கின. இது மலையக மக்களின் பிள்ளைகள் தமது தோட்டங்களை விட்டு வெளியே செல்லாது அங்கேயே இருந்துவிடும் ஒரு நிலையினை உருவாக்கியது. இதனால் இவர்கள் வெளியுலக அனுபவங்கள் எதுவுமின்றி கிணற்றுத் தவளைகளாக தம் வாழ்வைக் கழித்து வந்தனர்.

இத்துடன் ஐந்து வயதைப் பூர்த்தி செய்யாத பிள்ளைகள் தோட்டப் பயிர்களை நாசம் செய்யாமலிருப்பதற்கும் பெற்றோர் தொழிலுக்குச் செல்வதில் எதுவித தடையும் ஏற்படாதிருப்பதற்குமாக பிள்ளை மடுவம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. தோட்ட நிர்வாகத்தினரால் அதற்கென பராமரிப்பாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர் தனது அறிவுக்கெட்டியவாறு பராமரிக்கப்படும் பிள்ளைகளுக்கு அறிவு வழங்கும் பணியினை மேற்கொள்பவராகக் காணப்பட்டார். இவற்றின் அடிப்படையில் நோக்கும் போது இங்கு கல்வி புகட்டல் என்பது ஒரு ஏமாற்று நடைமுறையாகவே காணப்பட்டது.

1972ஆம் ஆண்டு பெருந்தோட்டப் பாடசாலைகள் அரசாங்கப் பாடசாலைகளாக உள்வாங்கப்படும் வரை மலையக மக்களுக்கு கல்வி ஒரு எட்டாக் கனியாகவே இருந்து வந்துள்ளது. இவ்வாறான கல்விப் பின்புலத்தைக் கொண்ட மலையக மக்களின் கல்வியில் 1972ஆம் ஆண்டுகளின் பின்னர் ஓரளவான துரித வளர்ச்சி ஒன்று தோன்றியதை அவதானிக்க முடிகிறது. இதற்கு அம்மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சிகள் மற்றும் இன்னும் பல காரணிகளும் ஏதுவாய் அமைந்தன எனலாம்.

### மலையகக் கல்வி நிலையில் ஏற்பட்ட திருப்பம்

இவ்வாறு 1970 வரை பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டு வந்த மலையகப் பாடசாலைகள் அதன் பின்னர் கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக அரசுடைமையாக்கப்பட்டன. இம்மாற்றத்தின் பின்னர்தான் மலையக மாணவர்கள் நாடளாவிய ரீதியில் சம கல்வி வாய்ப்புக்களைப் பெற்றனர். 1970களின் ஆரம்பத்தில் இப்பாடசாலைகள் அரசுடைமையாக்கப்படத் தொடங்கினாலும் 1980களின் இறுதியிலேயே அது முற்றுப் பெற்றது.

மலையக மக்களுக்கு கல்வித் துறையில் காணப்பட்ட பாரபட்சம் குறித்து பேராசிரியர் சுவர்ணா ஜயவீர "இலங்கை அரசின் கொள்கைகளில் பால், வகுப்பு. இனம் என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காணப்படவில்லை. ஆனால் தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட தொழிலாளர்களின் கல்வி காலனித்துவவாதிகளின் பொருளாதாரத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட அதேவேளை சுதந்திரத்திற்குப் பின்னரான சமூக அபிவிருத்திக் கொள்கைகள்கூட அவர்களை எட்டவில்லை" எனக் கருத்துரைக்கிறார். இந்நிலையில் படசாலைகள் அரசுடைமையாக்கப்பட்டதன் பின்னர் மலையக மக்கள் பெற்றுக் கொண்ட அரசியல் உரிமைகள், சர்வதேச மற்றும் உள்ளூர் பொது நிறுவனங்களின் பங்களிப்புக்கள்என்பன மலையகமக்களின் கல்வியில் பல்வேறுபட்ட உடன்பாட்டு ரீதியான மாற்றங்களை உருவாக்கின.

இருப்பினும் அவ்வேளையில் விரல் விட்டு எண்ணக் கூடிய மலையக ஆசிரியர்களே இருந்தனர். ஆனாலும் வட கிழக்கிலிருந்து வருகை தந்த ஆசிரயர்களினால் மலையகக் கல்வி ஒரு வளர்ச்சியை நோக்கி நகர்ந்ததைக் காண முடிந்தது. இந்நிலையில் 1983ஆம் ஆண்டு மலையகத்தில் 402 ஆசிரியர்கள் நியமனம் பெற்றமை மலையகக் கல்வி வரலாற்றில் ஒரு மைற்கல்லாகவே எண்ண முடியும். இம்முன்னேற்றமானது மலையக மக்களின் சிந்தனையை கல்வித் துறையின்பால் இயக்குவித்தமை முக்கிமானது. இது இன்று 3179 ஆசிரியர் நியமனம் வரை வளர்ந்துள்ள அதேவேளை கல்வித்துறை மட்டுமல்லாது அரசியல், சமூக, பொருளாதார, சட்ட மற்றும் இன்னோரன்ன துறைகளிலும் மலையக மக்கள் தமது தடத்தைப் பதித்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்.

இருந்த போதிலும் ஏனைய சமூககங்களுடன் ஒப்பிடும் போது மலையகக் கல்வி அபிவிருத்தி பெரிதாக மகிழ்ச்சிக்குரியதாகக் காணப்படவில்லை. அதற்கான காரணங்களை மேலே கண்டுள்ளோம். இன்றும் மலையகக் கல்வி தேசிய கல்விக் குறிகாட்டிகளின் நியமங்களின் அடிப்படையில் நோக்கும் போது விகிதாசார ரீதியில் பின்தங்கியே காணப்படுகின்றது. இதற்கு புறக் காரணிகள் பெரிதளவில் செல்வாக்குச் செலுத்தினாலும் அகக் காரணிகளும் காரணமாய் அமைந்துள்ளன என்பது மறுப்பதற்கில்லை.

## இலங்கையின் கல்வி வளர்ச்சியில் மலையகக் கல்வி ஏற்படுத்திய தாக்கம்

பெருந்தோட்டப் பாடசாலைகள் அரச பாடசாலைகளாக உள்ளீர்க்கப்படும் வரை இலங்கையின் கல்வி என்பது அல்லது கல்வி ரீதியான செயற்பாடுகள் என்பது மலையகச் சமூகத்தைத் தவிர்த்து ஏனைய சமூகங்களை அடிப்படையாக வைத்தே நோக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்டதன் பின்னர் கல்வித் துறைக்கான அரச வளங்கள் மலையகத்துக்கும் வழங்கப்பட்டதுடன் பாடத்திட்டங்களும் இம் மாணவர்களையும் அவர்களின் தராதரங்களையும் உள்ளீர்த்து உருவாக்கப்பட்டன. மேலும் கல்வியியற் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் மலையக மாணவர்களுக்காக சில கற்கை நெறிகளை உருவாக்கி நடாத்திக் கொண்டிருக்கின்றன.

இது வரை ஏனைய சமூகங்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஆசிரிய நியமனங்கள் 1970களின் பின்னர் மலையக மக்களுக்கும் வழங்கப்பட்டமை கல்வித் துறையில் அவர்களும் தாக்கத்தை ஏற்படுத்தும் தன்மையை ஏற்படுத்தியது. மலையக மக்கள் இலங்கையின் சமூக, பொருளாதார, நிர்வாக, அரசியல் என்ற பல துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது கல்வியில் ஏற்பட்ட மாற்றங்களேயாகும்.

## மலையகக் கல்வித் துறையில் மேம்படுத்த வேண்டிய விடயங்கள்

இன்றைய நிலையில் மலையகக் கல்வியின் நிலை என்ன என்பதனை நாம் அறிந்து கொண்டால் மட்டுமே மலையகக் கல்வித் துறையில் மேம்படுத்த வேண்டிய விடயங்கள் பற்றி ஆராய முடியும். இப்பூரணமான தெரிதலின் ஊடாகவே மலையகக் கல்வியின் மேம்பாட்டுக்கான திட்டங்களை உருவாக்க முடியும். பல்வேறு பரிணாமங்களைக் கொண்ட மலையகக் கல்வி பற்றிய தரவுகள், தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டும். மலையகக் கல்வி பற்றியவொரு அறிவுசார் தளத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதன் ஊடாகப் பெறப்படும் தகவல்களை மையமாக வைத்து மலையகக் கல்வி தொடர்பான ஒரு தகவல் மையத்தை ஏற்படுத்த வேண்டும்.

இது மலையகக் கல்வியை அறிவுபூர்வமாக விளங்கிக் கெள்ளவும் மதிப்பீடு செய்யவும் ஏதுவாக அமையும். இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு திட்டங்களை வகுக்க முடியும். இத்திட்டங்களை உடனடி, நீண்டகால இலக்குகளை அடையக்கூடிய முறையில் வகுத்துக் கொள்ளல் வேண்டும். அவற்றை அடைவதற்குத் தேவையான வளங்கள், வாய்ப்புக்கள் என்பன பற்றியும் வரும் தடைகள் பற்றியும் அவற்றை உடைத்தெறிந்து இலக்குகளை அடையக்கூடிய ஏற்பாடுகளையும் கொண்டிருக்க வேண்டும்.

இது போன்ற திட்டங்கள் பல்வேறு மட்டங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதற்குள் மலையகத்தின் பல்வேறு தரப்பினரையும் உள்வாங்கி அவர்களை ஒரு பொறுப்புக் கூறக்கூடிய நிலைக்கு தள்ளுவதனூடாக அனைவரினதும் ஆக்கபூர்வமான செயற்றிறன் மிக்க பங்களிப்பை உறுதி செய்ய முடியும். இத்திட்டத்தின் ஊடாக வருடாந்த மதிப்பீட்டுத் திட்டத்தினை வெளியிடுவதன் மூலமும் வருடாந்த கல்வி மகாநாடுகளை நடத்துவதன் மூலமும் தற்போதைய கல்வி முறையை அறிந்து கொள்ள முடியும். அத்துடன் மேற்கொள்ளப்பட்ட வினைதிறன் கொண்ட பணிகளை மதிப்பீடு செய்யவும் இது உதவும். மேலும் சகல மட்டங்களிலும் மலையகக் கல்வி பற்றியவொரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதனூடே சகலரையும் சென்றடையக் கூடிய ஒரு தளமாகவும் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## முடிவுரை

இவ்வாறு ஒரு இருண்ட வரலாற்றுடன் ஆரம்பித்த மலையகக் கல்வி சந்தித்த இடர்பாடுகள், தாண்டிய தடைகள், எழுச்சிகள், சீர்திருத்தங்கள் என்பவற்றை மேலே நோக்கியுள்ளோம். மேலும் அவற்றை மெருகூட்டக்கூடிய அம்சங்களும் ஓரளவு சுருக்கமாக இங்கு கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. மலையகக் கல்வியின் எதிர்காலம் பிரகாசமானதாகக் காணப்பட வேண்டுமாயின் மேற்கண்ட மலையகக் கல்வி அபிவிருத்தித் திட்டங்கள் துறைசார்ந்த நிபுணர்களால் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல ஒரு இனத்தின் வளர்ச்சி கல்வி மற்றும் கல்வி மேம்பாடுகளில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒன்றிலிருந்து இன்னொன்று மாறுபட்டதன்று. வெறுமனே குறித்தவொரு துறையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி அடைந்துவிட முடியாது என்பதே இதன் சாரமாகும். இவ்வாறான சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு அடிப்படையாக அமைந்தது கல்வி அபிவிருத்தி என்பதற்கு மாற்றுக் கருத்து கிடையாது.

காலத்துடன் ஒப்பிடும் போது இன்று மலையகக் கல்வி பல்வேறு நிலைகளிலும் விழிப்புணர்வு கண்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்விழிப்பு உணர்வுபூர்வமான சிந்தனை கொண்டதாக இருப்பதோடு இன்னும் அதிகமாகப் பரவலடைய வேண்டியுள்ளது. இவ்விடயத்தில் வசதி குறைந்த மாணவர்கள் தொடர்ந்து கற்பதற்கு நிதி வசதிகள் வழங்கப்பட வேண்டியது முக்கிய தேவையாகும். அது மலையகக் கல்வியில் ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முக்கியமானதொரு பிரச்சினையாகும். எனவே இம்மாணவர்களின் கல்வி மேம்பாடடையும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன் அரசியல் தலைமைத்துவங்களோடு செயற்பாட்டு ரீதியான கல்வித் தலைமைத்துவங்கள் இணைந்து இருந்தாலும் அவர்கள் ஒரு சுயமாகச் செயற்படக்கூடிய ஒரு தலைமைத்துவ நிலையில் இருக்க வேண்டும். அப்போது தான் இக்கல்வியியலாளர்களினால் தூர நோக்குக் கொண்ட கல்விச் சிந்தனைகளும் சீர்திருத்த முறைகளும் முன்னெடுக்கப்பட முடியும். அதற்குச் சமூகத் தடைகள் என்ற வகையில் அரசியல் தலைமைகள் தாரமீக அடிப்படையில் செயற்றிறனுடன் கூடிய ஆதரவை நல்க வேண்டும். இவ்வாறு உறுதியுடன் கூடியவொரு செயற்பாட்டை கல்வியியலாளர்களும் சமூகத் தலைவர்களும் கூட்டிணைந்து முன்னெடுப்பார்களாயின் மலையகக் கல்வி நிலை மற்றைய சமூகங்களின் நிலைக்கு ஈடு கொடுக்கக் கூடியவொரு விகிதாரசார சமூகமாக வரும் என்பதில் ஐயமில்லை.

மலையகமே விழித்தெழு: கல்வியினூடே சமூகப் புரட்சிதனை
முன்னெடுத்திடவே!

சுப்பிரமணியம் விஷ்வநாதன்
விடுகையாண்டு

# பெண்களும் அன்று தொட்டு இன்று வரையான சமூக நிலையும்

“பெண்களின் நிலை உயரும் போதுதான் ஆண்களின் நிலையும் உயரும் இவ்விருவரின் நிலையும் உயரும் போதுதான் மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்து விடும்” -

*மகாத்மாகாந்தி-*

சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மனித இனத்தவர் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திக் கொண்ட ஒரு கூட்டமைப்பு மனிதன் அக் கூட்டமைப்பின் உறுப்பினன் என்ற முறையில் அவன் நடத்தை செயல்கள் சமுதாயத்தின் நடைமுறைகள் ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டுள்ளான்.

சமுதாயம் சமூகத்தின் ஒரு பிரிவாகும். சமூகத்திற்குள் இது அடங்கி இருக்கும். சமுதாய வாழ்வில் ஆண் தனக்கென்று ஏற்படுத்திக்கொண்ட வரையறைகளைத் தன்னுடன் இணைந்து வாழும் பெண்களுக்கும் செயல்படுத்த விழையும் போதுதான் சமூகத்தில் முதன்மையானவள் என்ற எண்ணத்தில் பெண்களை தாழ்ந்த நிலைக்குத் தள்ளிவிட்டான் சமுதாய வாழ்வில் பெண்களின் மரபுச் சிந்தனையை நோக்கும் போது அவர்களின் நிலை ஒவ்வொரு காலகட்டத்திலும் மாறுபடக் காண்கின்றோம்!

ஓர் ஆண் தன் வாழ்நாளில் காலந்தோறும் பெண்களைக் தன் தேவைகளுக்கேற்ப கொண்டு அவர்கள் ஓர் அடிமையைப் போல எப்போதும் வாழ தன் சட்ட திட்டங்களை உருவாக்கி சாஸ்திரம் சம்பிரதாயமென்று சங்கிலிகளால் பிணைத்து சமூகத்தில் வாழ வழி வகுத்தது ஆண் சமூகம்.

ஆனால் நாகரீக வாழ்வின் தன்மையை அறியாத ஆதிகாலத்தில் ஆணும் பெண்ணும் சரிசமமான செயல்களில் ஈடுபட்டுத் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டனர்.அப்போது தங்களுக்குள் எந்தப் பேதங்களையும் கொண்டிருக்கவில்லை. மனுதர்ம சாஸ்திர சட்டமுறையானது ஒரு பெண் குழந்தைப்பருவத்தில் தாய் தந்தை மேற்பார்வையிலும் வாலிபப் பருவத்தில் கணவரின் மேற்பார்வையிலும் வயோதிபப்பருவத்தில் தன் மக்களின் மேற்பார்வையிலும் இருக்க வேண்டுமென்றும், உடன் கட்டை ஏறுதல் போன்ற சட்டதிட்டங்களுக்கும் பெண்ணின் கற்பை மூன்று பிரிவாக பிரிக்கின்றனர். அதாவது கணவன் உயிர் துறந்த செய்தியைக் கேட்ட மாத்திரத்திலேயே உயிர்விடுபவள் தலைக்கற்பு எனவும் கணவனின் சிதையிலோ அல்லது தீ வளர்த்தோ இறப்பது இடைக்கற்பு எனவும் கணவன் இறந்த பின் அவனுடன் உயிரை மாய்த்துக் கொள்ளாது பயன்கருதியோ அல்லது கருதாமலோ கைம்மை நோன்பு நோற்று வாழ்வது கடைக்கற்பு என்று கற்பின் பெயரால் அவளைக் கொலை செய்யப் பண்பாட்டு மரபுகளை உருவாக்கினர்.

ஆனால் சங்ககால சமுதாயத்தில் பெண்களுக்குத் தகுந்த மதிப்பிருந்தது ஆண்களுக்கு சமமாகப் பெண்கள் பல வீரச் செயல்களைப் புரிந்தும் விளையாட்டுக்கள், ஆடல் பாடல்களிலும் தங்களின் திறமையை வெளிப்படுத்தியிருக்கின்றனர். பெண்களின் திருமணங்கள் கூட பெண்களின் விருப்புக்கேற்ப சுயம்வரங்களாக, காதல் திருமணங்களாகவும் இடம் பெற்றதை சங்க இலக்கியங்கள் மூலம் அறிகிறோம்.

இந்துசாஸ்திரத்தில் பெண்களுக்கு சமுதாயத்தில் இழிந்த இடத்தையே அளித்திருக்கின்றது. சாஸ்திரம் சம்பிரதாயம் என்ற வட்டத்திற்குள் அவர்களைத் தள்ளி விட்டது. ஆனால் இருக்குவேத காலத்தில் பெண்கள் ஆண்களுக்குச் சமமான நிலையைப் பெற்றுப் பல உரிமைகளோடு வாழ்ந்திருந்தனர். ஆனால் அக்கால கட்டத்திலும் குடும்பத்தின் தலைவன் ஆண் மகனே. ஆட்சிப் பொறுப்பிலும் போரிலும் பெண்கள் ஈடுபட்டதில்லை. பொதுவாக பெண்களின் படைப்பே மக்கட்பேறுக்காக மட்டுமே என்ற எண்ணமே நிலவியது.

பெண் வலிமையற்ற மனம் உடையவள் கணவனால்தான் மனைவி சிறப்புப் பெறுவாள் என்ற கருத்தில் குடும்பம் ஆணுக்கு நிகரான நிலை பெண்ணுக்கு அளிக்கப்பட்டவில்லை. பெண்ணுக்கு சுதந்திரமளித்தால் அவள் நெறிதவறிப் போவாள் என்ற எண்ணம் அக்கால சமூகத்தில் நிலவியது. அதனால் ஒரு பெண் தான் நினைத்த முறையில் வாழ்வை அமைத்துக் கொள்ளும் உரிமை வழங்கப்படவில்லை. திருமணம் என்ற பந்தத்தின் கீழ் ஆண்களிடம் அடங்கி வாழும் நிலையே காணப்பட்டது. அதுபோல் பெண்களுக்கு சொத்தில் எந்த உரிமையும் அளிக்கப்படவுமில்லை.

கால ஓட்டத்தில் இந்நிலை மாறி சமய, சமூக, அரசியல் இயக்கங்களில் பல புதிய சமூக உணர்வுகள் தோன்றி பெண்ணுரிமை கோரிப் போரிட்டனர். பெண் ஆண்களைப் போலவே அறிவு திறன் உடையவள் ஆண்களைப்போல் பெண்களும் காரியம் செய்ய உரிமை உண்டு. ஆணுக்கு நிகர் பெண்ணே என்ற எண்ணங்கள் உருவாயின.

பல்வேறு அடிமைத்தனங்களுக்கும் மையமான கற்புக் கோட்பாட்டை முதல் முதலில் துணிவாக வெளிப்படையாக எதிர்த்து நின்றவர் தந்தை பெரியாராவார். இந்த விடயத்தில் பல்வேறு சிறப்புகளைக் கொண்ட பழந்தமிழர் இலக்கியங்களைக் கூட விட்டு வைக்கவில்லை. உண்மையாக பெண்கள் விடுதலை வேண்டுமானால் ஒரு பிறப்பு ஒரு நீதி வழங்கும் நிர்பந்தக் கற்பு முறை ஒழித்து இரு பிறப்புக்கும் சமமாக சுயேட்சைக் கற்புமுறை ஏற்பட வேண்டும். பெண்களுக்கு இழைக்கப்படும் பலவாறான சமூகக் கொள்கைகள் அழிய வேண்டும் என்கின்றார்.

வரலாற்றில் பெண்கள் மீது கற்பு திணிக்கப்பட்டதினால் கற்பைக் காத்துக் கொள்ளுதல் பெண்களின் மிக முக்கியமான வாழ்க்கைப் பிரச்சினையாகி விடுகிறது. இது பெண்களின் மன பலத்தை இழக்கச் செய்வதுடன் பல்வேறு வகைகளிலும் தாழ்வு மனப்பான்மைக்கு இடமளிக்கின்றது. இத் தாழ்வு மனோபாவமும் மேலும் ஆண் ஆதிக்கத்தை வலுப்படுத்துகின்றது.

இன்றைய உலகில் பெண்கள் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட நிலைமாறி சுதந்திரப் பறவையாய், ஆணுக்கு நிகர் மங்கையும் உண்டு. பெண் சமூகத்திற்கு ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக அவர்கள் பல உரிமைகளைப் பெற்று விட்டாலும் பழைய மரபுகளில் இன்னும் சிக்கித் தவிப்போரும் உண்டு. வேதகால சட்டங்களைத் தாண்டி தர்ம சாஸ்திர விதிகளை உடைத்து சம்பிரதாய சட்டங்களை உடைத்து இன்று எந்தத் துறையிலும் எந்த நிலையிலும் பெண்களால் சாதனைகள் புரிய முடியும்.

ஆணுக்கு நிகரான ஒரு சமதர்ம சமுதாயம் உருவாகிக் கொண்டு இருப்பதை இந்த நூற்றாண்டுகளில் காணமுடிகின்றது. உடலுக்கு இரண்டு கண்கள் தேவை போல உலகிற்கு இரண்டு சமூகமும் சம உரிமை பெறவேண்டும். உயர்வும் தாழ்வும் இரு சமூகத்திற்கும் உண்டு என்ற எண்ணமே உலகின் எல்லா முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கும்.

"பெண்களைப் பெருமிதம் கொள்ளச் செய்வது அழகு
அவர்களை மிகவும் பாராட்டும்படி செய்வது பண்பு
அவர்களைத் தெய்வீகமாக தோன்றச் செய்வது
அடக்கம்"
- ஷேக்ஸ்பியர்.

செல்வி சின்னத்தம்பி
கிரிசாந்தி
விடுகையாண்டு

# ஆசிரியர் பணியே அறப்பணி

இன்றைய இருபதாம் நூற்றாண்டில் ஈடிணையற்ற விஞ்ஞான சாதனைகளுடன் இணைந்ததாக பல தொழில்கள் தோன்றிடினும் அதன் சாசனைகளின் பின்னணியில் ஒரு உலகம் காணப்படுகின்றது. அதுதான் ஆசிரியர் உலகம். இவ் ஆசிரியர் சமூகமானது எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான் உற்ற சான்றோர் வாக்குக்கு ஏற்ப சேவை தொண்டு என்ற அடிப்படையில் குரு குலக் கல்வி முதல் இன்று வரை பல்வேறுபட்ட ஒழுங்கமைக்கப்பட்ட மாற்றங்களுடன் தமக்கென்று உரிய ஒழுக்கக் கோவையுடன் மாணவனுக்குக் கல்வி புகட்டி அவன் கற்றல்களை உளவியல் ரீதியாக அறிந்து வெளிக் கொணர்ந்து தன் கல்வியையும் விருத்தி செய்து நற் சமூகம் உருவாக்க காரணமாக அமைந்து உலக மேம்பாட்டின் கலங்கரை விளக்காகத் துலங்குவதை நாம் அவதானிக்கலாம்.

இத்தகைய சிறப்பு மிகுந்த சேவையில் தன்னை அர்ப்பணித்த ஆசிரிய சமூகத்திடம் அறிவு மட்டுமல்ல கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றோடு சிறந்த ஆளுமை சமுதாய நல்லுறவு சீரிய படைப்பாற்றல் மாணவர்களை புரிந்து கொள்ளும் தன்மை பெற்றோர் மாணவரிடம் நெருங்கிய தொடர்பு போன்ற நல்லொழுக்கப் பண்புகள் காணப்படும் இத்தகைய ஆசிரிய சமூகத்திடம் தன் மழலைப் பருவத்தைப் பெற்றோருடன் கழித்த குழந்தை தன் கல்வி நாடி எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும் கலநிலையமான பாடசாலையை நோக்கி வருகின்றான். ஆசிரிய சமூகத்திடம் கற்பித்தல் செயற்பாடு மட்டுமல்ல ஆசிரியரின் நடை உடை பாவனை பழக்கவழக்கம் மாணவருக்கு வேண்டிய அன்பு காப்பு கணிப்பு போன்றவற்றை வழங்வதில் காட்டும் பாரபட்சமற்ற தன்மை என்பன மாணவரின் மனதில் பதிய மாணவன் முதல் கற்கத் தொடங்குவது பாடத்தை அல்ல ஆசிரியரையே எனவே இத்தகைய ஆசிரிய சமூகம் அனைத்து செயற்பாடுகளிலும் முன் மாதிரியாக விளங்கிக் குடும்பத்திற்கு அடுத்தபடியாக அதிகளவு நேரத்தை தம்முடன் செலவழிக்கும் குழந்தைகளின் "புடை பெயர்ந்த பெற்றோராக" விளங்குகின்றார்கள் விளங்க வேண்டும்.

மேலும் அவ் ஆசிரிய சமூகமானது தம்மை நாடி வரும் ஒவ்வொரு மாணவனையும் உளவியல் ரீதியாகவும் உடலியல் ரீதியாகவும் அறிந்து செயற்பட வேண்டியது அவசியமாகும் காரணம் எல்லா மாணவர்களும் ஒரே வகையான அறிவு திறன் மனப்பாங்கு கொண்டவர்கள் பாடசாலைக்குச் சமூகமளிப்பர் இத்தகைய மாணவர்களை ஆசிரியர்கள் நித்தமும் சந்திக்க வேண்டி இருப்பதால் அவர்களுக்குரிய பிரச்சினைகளை அறிந்து அனுசரித்துக் கல்வி புகட்ட வேண்டிய பாரிய பொறுப்பும் ஆசிரிய சமூகத்திடமே ஒப்படைக்கப்படுவதால் ஆசிரியப் பணி மேலும் பொறுப்புவாய்ந்ததாகின்றது இந்நிலையில் ஆசிரியரும் தன் ஆளுமையைச் சிறப்பாக நிலை நிறுத்த வேண்டியது அவசியம் ஏனெனில் மாணவர்கள் அனைவரும் ஆசிரியரின் அனைத்துச் செயற்பாடுகளையும் ஊன்றிக் கவனித்து அதன் படி நடக்க முற்படுவர் இது அவர்களின் பின்பற்றலின் விளைவாகும் எனவே குடும்பத்தில் தன் சமூக மயமாக்கலைப் பெற்ற பிள்ளை அச் செயன்முறையைப் பாடசாலையில் தொடர்ந்தும் பெறுவதால் இங்கு மாணவரின் நடத்தைக் கோலங்களுக்கு ஆசிரியர் முழுப் பொறுப்பாளி ஆகின்றான்.

எனவே பண்பாட்டு விழுமியங்களை ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு வழங்கும் பணியில் பாடசாலைகளும் பங்கெடுப்பதால் மேற்கூறப்பட்ட ஆசிரியர் சமூகத்திடம் இருந்தே திறன்கள் ஆற்றல்கள் அறக் கருத்துக்கள் விழுமியங்கள் தொழில் சார் மனோ பாவங்கள் என்பன வழங்கப் படுதலைக் காணலாம்.

இத்தகைய சிறப்புமிகு சேவையானது இன்றைய காலகட்டத்தில் அதிக வருமானத்தைத் தரும் வைத்தியர், பொறியியலாளர் வழக்கறிஞர் போன்ற அந்தஸ்த்து மிக்க வாண்மை தொழில்களால் ஒப்பீட்டு நிலையில் பின் தள்ளப்பட்டு இருப்போது வேறு தொழில் கிடைக்காதோரே இச்சேவைக்கு வருகின்றனர். என எண்ணும் நிலைக்குப் புறக்கணிக்கப்பட்ட நிலையில் . பின்தள்ளப்பட்டு இப்போது வேறு தொழில் கிடைக்காதோரே இருப்பது கவலைக்குரிய விடயமே ஆழ்ந்தது சிந்திப்பின் உலகில் உள்ள அனைத்து தொழில்களுக்கும் அத்திவாரமாகவும் ஆணிவேராகவும் இருப்பது ஆசிரிய சேவைதான் என்பது வெள்ளிடைமலை. இத்தகைய ஆசிரியர் பாடசாலையில் கல்வி நெறிப் படுத்துபவராகவும் மட்டுமன்றி ஒழுக்கத்தை நிலை நாட் பவராகவும், நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமானவராகவும் மாணவரிடையே ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் நீதிபதியாகவும் மாணவரினதும் பெற்றோரினதும் இன்பதுன்ப நிகழ்ச்சிகளின் பங்காளராகவும் பல்வேறு பட்ட பணிகளை வகிப்பவராகவும் விளங்குவதைக் காணலாம் இத்தகைய தூய்மையான சேவை செய்யும் ஆசிரியர்கள் குறைந்தளவு சம்பளத்தை பெறுவது கவலைக்குரிய விடயமாகும்.

மேற்கூறிய ஆசிரியர் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு மாணவரே ஏனெனில் இச் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஆசிரியர் வாழ் நாள் முழுவதும் கல்வி என்ற தத்துவக் கருத்துக்கு அமையவும் மனிதருக்குள் மறைந்து கிடக்கும் பூரணத்தை வெளிக் கொணர்வதே கல்வி என்ற சுவாமி விவேகானந்தரின் கருத்துக்கு ஏற்பவும் மாறிவரும் பாடத்திட்டத்திற்கு அமையவும் மாணவருக்கு ஏற்பவும் தம் அறிவைத் தேடிக் கொள்ளும் ஆசிரிய சமூகம் சமூதாயத்தோடு தம் உறவைப் பலப்படுத்தும் போதுதான் அவரது ஆசிரியத் தொழில் மேலும் செழுமை பெறுகின்றது எனலாம் சமூதாயத்தில் நாட்டில் உயர் நிலையில் உள்ளவர்கள் எல்லாம் ஆசிரியன் என்ற ஆலம் விதையில் இருந்து தோன்றி வளர்ந்து விருட்சங்களாகி விழுதுகளாக வேரூன்றியவர்கள் என்ற உண்மை புலனாகும்.

எனவே எல்லாவற்றையும் தொகுத்து நோக்கும் போது சமூகம் முறைகளில் குறியீடாகவும் தரிப்பிடமாகவும் மனச்சாட்சியாகவும் தொழில்களை வளர்த்தெடுக்கும் நிலைக் களமாகவும் ஏணிப் படியாகவும் மைல் கல்லாகவும் மாணவரினதும் சமூகத்தினதும் வழிகாட்டியாகவும் உலக மேம்பாட்டின் கலங்கரை விளக்காகவும் துலங்கும் ஆசிரியர்கள்.

கற்கக் கசடறக் கற்றவை கற்றப்பின் நிற்க அதற்கு தக என்ற வள்ளுவன் வாக்குக்கு இணங்க தம்மை வளர்த்து அதனூடாக சமூகத்தை வளப்படுத்திய மாணவரின் நடத்தைக் கோலங்களை ஒழுங்கமைத்து நற் பிரஜைகளை உருவாக்கும் பணியில் இச் சேவைக்கு தம்மை அர்ப்பணித்துள்ளார்கள் என்றால் மிகையாகாது. எனவே எல்லாவற்றிலும் சிறந்த தீபமாக சுடர் விடும் ஆசிரிய தொண்டினை சிறப்புடனே போற்றி நாடு போற்றும் நற் பிரஜைகளை உருவாக்கத் தொடர்ந்து செயற்படுவோம்

ஆசிரியப் பணியே அறப்பணி
அதற்கே உன்னை அர்ப்பணி
என்ற உயரிய கருத்தினை முழுமை பெறச் செய்வோம்.

S அன்ரனிற்றுஷா
விடுகையாண்டு

## தொழிலின் மகத்துவம் தொழிலாளருக்குரிய கடமைகள் உரிமைகள் என்பன பற்றி இஸ்லாமிய போதனைகள்.

உழைத்துச் சாப்பிடுவதன் உயர்வைப்பற்றிய அல்குர்ஆனும் ஹதீசும் வெகுவாகப் பாராட்டி கூறுகின்றன "தம் கையினால் உழைத்துச் சாப்பிடுவதை விட மேலான உணவை எவரும் எந்த சமயத்திலும் சாப்பிட்டிருக்கமாட்டார்கள். நிச்சயமாகவே அல்லாஹ்வின் நபி தாவூத் (சுலை) அவர்கள் தம் கையினால் உழைத்தே சாப்பிட்டார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள் (புகாரி)" உலகில் தோன்றிய நபிமார்கள் அனைவரும் தம் கைகளினால் உழைத்துச் சாப்பிட்டார்கள். நம் ஆதி பிதா ஆதாம் (சுலை) விவசாயியாகவும், நூஹ் நபி தச்சராகவும், இத்ரீஸ் நபி நெசவாளராகவும், நபி இப்ராஹீம் நபி லூத் உழவர்களாகவும், ஸாலிஹ் நபி வியாபாரியாகவும், தாவூத் நபி கொல்லராகவும், நபி மூஸா ஸூஜப் முஹம்மது நபி (ஸல்) இடையர்களாகவும் வாழ்ந்ததாக ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (றலி) அறிவிக்கின்றார்கள்.

உலகிற்கு நல்வழி காட்ட வந்த இந்த உத்தம நபிமார்கள் தாம் புரிந்து வந்த மக்கள் தொண்டுக்கு எவ்வித பிரதியுபகாரத்தையும் கருதாமல் தம் குடும்ப வாழ்க்கையினை தம் கரங்களினால் உழைத்தே பரிபாலித்து வந்ததன் காரணமாக உலகிற்கோர் சிறந்த படிப்பினையை விட்டுச் சென்றிருக்கின்றார்கள்.ஹஜூரத் அபூஹுரைரா, ஹுதைபா, உபை இப்னு கசுப், அப்துல்லா இப்னு மஸ்ஊத் போன்ற உத்தம ஸகாபாக்கள் தம் தலையில் விறகுக்கட்டுக்களையும், உணவுப் பொருட்களையும் சுமந்து சென்று விற்பனை செய்வார்கள். முதீனாவின் சுவர்னரான அபூகுரைரா (ரழி) விறகுக்கட்டை தலையில் சுமந்தவாறு உங்கள் அமீருக்கு வழிவிடுங்கள் என்பார்களாம். நபி (ஸல்) அவர்கள் உழைப்பவர்கள் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்."தன் கையினால் வேலை செய்து அலுத்துப் போய்(வீடு திரும்பி) வருபவர் மன்னித்தருளப்பட்டவராக வருவார்" என்பது எம் பெருமானாரின் அருள் வாக்கு.

மனிதன் தேர்ந்தெடுக்கின்ற தொழில் நல்லதாக இருத்தல் வேண்டும்.மனிதன் தனக்குரிய பங்கை நிச்சயமாகவே தம் வாழ்நாளில் பெற்றுக் கொள்கின்றான். மனிதனை மரணம் தேடுவது போன்று அவனுடைய இரணமும் தேடித்திரிகின்றது என்பது பெருமானாரின் பொன் மொழியாகும்.

வணக்கம் பத்துவகை அதில் ஒன்பது வகை ஜீவனோ பாயத்திற்காகச் செலவிடுவதில் அமைந்திருகின்றது. ஒரு தொழிலாளி தமது சொந்த அனுகூலத்திற்காக தொழில் செய்த போதிலும் அதில் எத்தனையோ பொது நன்மைகள் அடங்கியிருக்கின்றன. விவசாயி உழுது மாள வேண்டி ஏற்படுமா? நெசவுத் தொழிலாளர்கள் தம் கைகளை கட்டி உட்கார்ந்து விடுவார்களானால் நாட்டில் நாகரீகத்தையும் கவர்ச்சியையும் பண்பாட்டையும் காண முடியுமா ? குயவர்கள் மட்பாண்டங்கள் செய்தளிக்க முன்வராவிட்டால் சமைத்து புசித்தல் முடியுமா? கொத்தர்கள், கொல்லர்கள், தச்சர்கள் தம் அபார வேலைத்திறனைக் காட்டத்தயங்கினால் நம் வாழ்க்கை என்னவாகும்? இவ்வாறே சிறு தொழிலாளி முதல் பெரும் பெரும் விஞ்ஞானிகள் வரை மக்கள் தொண்டு செய்து வருகின்றனர். அவர்களால் மனித சமூகம் பயனுறுகின்றது.

தொழில் துறைகளில் கவனஞ் செலுத்திக் கொண்டிருப்பவர் அனேக தீமைகளிலிருந்து பாதுகாக்கப்படுகின்றார். பிறர் குறை துருவிப் பார்ப்பது, வசைபாடுவது, கோள் குழப்பம் இவைகளுக்கு எல்லாம் அவர்களுக்கு சந்தர்ப்பம் வாய்க்காமல் போய்விடுகின்றது. அவர்கள் தம் மனதை ஒரு நிலைப்படுத்தி தன் உழைப்பிலேயே கண்ணுங்கருத்துமாயிருத்தல் போற்றுவதற்குரிய செயலாகும். "அல்லாஹ் தன் அடியார்களுக்கு ஆகாரத்தை விஸ்த்தீரணப்படுத்திக் கொடுத்துவிடுவானாகில் அவர்கள் பூமியில் குழப்பம் விளைவித்துவிடுவார்கள்" என்ற திருக்குர்ஆன் வசனத்திற்கு இறைவன் தன் அடியார்களுக்கு உழைத்து பாடுபடாமலேயே உணவுக்கு வழி செய்தவிடுவானாகில் பூமியில் குழப்பம் தான் விளையும். இறைவன் மக்கள் கவனத்தை தொழில்துறைகளில் திருப்பி குழப்பத்திற்கு இடமளிக்காமல் அமைத்துவைத்திருக்கின்றான்.இது இறைவனின் மகத்தான ஏற்பாடாகும். "நிச்சயமாக அல்லாஹ் தொழில் செய்யும் மனித - விசுவாசியை நேசிக்கின்றான்"என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்தல்லாஹ் இப்னு உமர் (ரழி) அறிவிக்கின்றார். (தபரானீ) வர்த்தகம் புரிவது புனிதமான முயற்சி என்பதில் சந்தேகமில்லை. எல்லாம் வல்ல நாயன் வர்த்தகத்தை திருக்குர்ஆனில் அனேக இடங்களில் பாராட்டுகின்றான். "வாழ்க்கைக்காக நாம் பகல் நேரத்தைப் படைத்தோம்" என்று கூறுகின்றான். இறைவனால் மனிதனுக்கு அளிக்கப்பட்ட பேருதவி என்று இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது. "பகல் நேரத்தில் உங்களுக்கு நாம் வாழ்க்கையை அமைத்தோம் ஆனால் நீங்கள் மிகக் குறைவாகவே நன்றி செலுத்துகின்றீர்கள்"என்கின்றது திருக்கர்ஆன். வியாபாரம் அனேகமாக பகல் நேரத்தில்தான் நடக்கின்றது. எனவே பகலில் தான் வாழ்க்கை மலர்கின்றது. இவ்வாறு அமைந்திருப்பது இறைவனிடமிருந்து உங்களுக்குக் கிடைத்திருக்கும் மகத்தான உதவி இதற்கு நன்றி செலுத்துமாறு இறைவன் கட்டளையிடுகிறான். "இறையருளை முன்னிட்டு நீங்கள் வருமானம் தேடுவதில் தவறில்லை" என்றும் மீண்டும் கூறுகின்றான். "இறையருளை முன்னிட்டதம் வருமானத்திற்காக அவர்கள் உலகின் பல பாகங்களுக்கும் செல்கின்றார்கள்" என்றும் பிரிதோர் இடத்தில் திருமறை பாராட்டுகின்றது "உலகில் பல இடங்களுக்கும் செல்லுங்கள் இறைவனின் திருவருளைத் தேடியடையுங்கள்" என்று மற்றுமோர் இடத்தில் திருக்குர்ஆன் பேசுகின்றது.

மேற் கூறப்பட்ட இறை கருத்துக்கள் அனைத்திலும் சம்பாத்தியத்திற்கு இறையருள் என்றே பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஓரு மனிதன் நல்ல முறையில் சம்பாதிப்பதும் அதை நல்ல முறையில் செலவிடுவதும் இறையருளின் பாற்பட்டவைதான் இதனால் தான் இறைவன் சம்பாத்தியத்தை இறையருள் என்று குறிப்பிடுகின்றான். உண்மையானவியாபாரி மறுமையில் உத்தமர்களுக்கும் தியாகிகளுக்கும் மத்தியில் உட்காத்திருப்பார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் தன் நண்பர்களுடன் அமர்ந்திருந்தார்கள் அப்போது வாட்டசாட்டமான வாலிபர் ஒருவர் அந்த பக்கமாக நடந்து போனார் அவர் உறுதியான அவயவங்களைப் பெற்றிருந்தார். அவர் முகத்தில் விரக்கலை படிந்திருந்தது இந்த மனிதனின் வீரமும் சக்தியும் இறைவழியில் செல்வானனால் எவ்வளவு நன்மையாக இருக்கும் புனிதப் போரில் ஈடுபட்டால் எத்தனை நன்மை ஏற்படும்! என்று நண்பர்அங்கலாய்த்துக் கொண்டார். பெறுமானார் இந்தக் கூற்றை மறுத்து விட்டார். போர் புரிவது தான் இறை வழி என நாம் எண்ணக் கூடாது ஏனெனில் மற்றவர்களிடம் யாசகம் கேட்க வேண்டிய நிலைமை ஏற்படக்கூடாது என்பதற்காக இந்த மனிதன் சிரமமெடுத்து சம்பாதித்தால் அதுவும் இறைவழிதான்.

ஏனெனில் பிறருக்கு பாரமாக இருப்பது சரியல்ல பலவீனர்களான பெற்றோர்களைக் காப்பாற்ற வறுமை வசப்பட்ட பந்துக்களை ஆதரிக்க முற்பட்டாலே போதும் இதுவும் இறைவழிதான் இது பற்றி நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள் "மக்களின் உதவி தமக்கு தேவைப்படக் கூடாது என்பதற்காகச் சிரமப்பட்டு உழைக்கும் மனிதனை இறைவன் விரும்புகின்றான்" ஒரு சமயம் இஸா நபியவர்கள் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் ? என்று ஒரு மனிதனைக் கேட்டார்கள் இறைவணக்கத்தில் ஈடுபட்டக்கொண்டிருக்கின்றேன். அப்படியானால் சாப்பாட்டிற்கும் இதர காரியங்களுக்கும் என்ன செய்கின்றாய் உன் பந்துக்களில் யாரேனும் உன்னைக் கவனித்துக் கொள்கின்றார்களா ? ஆம் என் சகோதரன் இருக்கின்றான் அவன் தான் என்னை கவனித்துக் கொள்கின்றான். உன் சகோதரன் சம்பாதிக்கின்றான் அந்த வருமானத்தின்உதவியால் நீ இறைவணக்கம் புரிகின்றாய் அப்படியானால் உன்னைவிட உன் சகோதரன் சிறந்த பக்தன். உனக்கு கிடைப்பதை விட அவனுக்கு அதிகமான நாட் கூலி கிடைக்கும் என்று கூறினான்.

உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள் சம்பாத்திய முயற்சியில் ஈடுபடாமல் உங்களில் யாரும் முடங்கிக் கிடக்கக் கூடாது. முயற்சி செய்யாமல் வீட்டில் உட்கார்ந்து கொண்டு ஆண்டவனே எனக்கு வருமானத்தை கொடுப்பாயாக என்று இறைஞ்சுவதில் அர்த்தமில்லை வானம் பொழிகிறது என்பது உங்களுக்கு தெரியும் எதைப் பொழிகிறது ? தங்கத்தையும் வெள்ளியையும் அது பொழிவதில்லை. எனவே நீங்கள் ஒவ்வொருவரும் தொழில் புரிய வேண்டும்.

ஒரு முறை ஸைத் பின் முஸ்லீமா என்பவர் தம் வயலில் நாற்று நடும் வேலையில் ஈடுபட்டிருந்தார் அப்போது உமர் அவர்கள் அங்கு போனார்கள் ஸைத் நீ நல்ல விதமாக நீர்பாச்சி ஆவண செய்ய வேண்டும் அப்படிச் செய்வதால் மக்களிடமிருந்து எத்தகைய உதவியையும் எதிர்பார்க்காமல் உம்மால் தனித்து நிற்க முடியும். இது பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள் "கைத்தொழிலில் கிடைப்பது தான் நல்ல ஹலாலான வருமானம்"

இப்றாஹிம்(சுலை) அவர்கள் ஒரு முறை இப்படி வினாவப்பட்டார்கள் உண்மையான ஒரு வர்த்தகன் பக்தியில் மூழ்கிக்கிடக்கும் ஒரு இறைபக்தன் இவ்விருவரில் நீங்கள் யாரை விரும்'புகின்றீர்கள். உண்மையான வியாபாரியைத்ததான் நான் பெரிதும் விரும்புகின்றேன். ஏன்னென்றால் அவனுக்கு எப்போதும் மனப்போராட்டம் நடத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. எந்த நேரத்திலும் அவன் தன் மனதோடு போராடிக் கொண்டிருக்கின்றான் நிறுக்கும் போதும் அளக்கும் போதும் அவன் தன் மனதோடு போராடி வெற்றி காண வேண்டும். ஆனால் இத்தகைய போராட்டங்கள் இறைபக்த்தனுக்குக் கிடையாது. எனவே இறைபக்தனை விட உண்மையுள்ள வியாபாரி என் அன்புக்குரியவனாகின்றான்.

ஒரு சமயம் அபஸாயீயும் இப்றாஹீம் பின் அத்ஹமும் சந்தித்துக் கொண்டார்கள். ஆப்போது இப்றாஹீம் விறகுக்கட்டு ஒன்றைச் சுமந்து கொண்டிருந்தார் அபஸாயீ துடித்துப் போய் விட்டார்.

என்ன இது ! உங்களுக்கு ஏன் இந்த வேலை ஆ ! எத்தனை நாட்களாக இப்படி சிறமப்படுகின்றீர்களோ ! இதற்கு தேவையில்லையே ! சகோதரர்கள் இருக்கும் போது உங்களுக்கு என்ன கவலை அவர்கள் உங்களைக் கவனித்துக் கொள்ளமாட்டார்களா என்ன ? இந்தப் பேச்சு அத்ஹமக்கு ஏற்பட்டதோ ? இப்படியெல்லாம் நீர் கூறக் கூடாது என் முயற்சிக்கு குறுக்கே நிற்காதீர் வருமானத்திற்காக இறைவன் அனுமதித்த எந்த தொழிலையும் செய்யலாம் தவறில்லை மார்க்கம் அனுமதித்தளித்த எந்த முயற்சியும் அருவருக்கத்தக்கதரிய மக்கள் என் முயற்சியைக் கேவலமாக மதிக்கலாம். ஆனால் அது தவறான காரியமல்லவே ! மார்க்கம் இதற்குத் தடை விதிக்கவில்லை. பெருமானாரும் மறுத்துக் கூறவில்லை

வணக்கம் என்றால் என்ன? அபூசுலைமான் தாராானீ கூறுகின்றார் இறைவழியில் நேரத்தையெல்லாம் செலவிட்டு விட்டு மற்றவர்களிடம் உதவி கேட்பது வணக்கமல்ல ஒரு புரம் இறைவனுக்கு வழிப்படும் மறுபுரம் பணக்காரரிடம் உதவிக்காகப் பல்லிளிப்பது இப்படி நடப்பது சரியல்ல நீ இறைவனை நல்ல முறையில் வழிபட விரும்பினால் முதலில் வரமானத்தை தேடிக்கொள் பின் இறைவழியில் இறங்கு இது பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள் "பணக்காரன் ஒருவனிடம் சென்று உதவி கேட்பதை விட விறகு வெட்டிச் சுமந்து வருவது எத்தனையோ மேலான காரியம்"

ஆறிஞ்ர் லுக்மானுல் ஹக்கீம் தம் மகனுக்கு கூறினார் மகனே ! வறுமையைத் தவிர்ப்பதற்காக நல்ல வருமானத்தைத் தேடிக் கொள். ஏனெனில் வறுமையில் சிக்கியவர்கள் குறிப்பாக மூன்று ஆபத்துக்களில் சிக்குகிறார்கள். முதலாவது அவர்களின் மத நம்பிக்கை குறைந்து போகின்றது வறுமையின் கொடுமையை தாங்க முடியாமல் அவர்கள் இறைவனையே நிந்திக்கின்றார்கள். இரண்டாவதாக அவர்களின் பகுத்தறிவு மழுங்கிப் போகிறது இதனால் அவர்கள் அறிவுக்குப் பொருந்தாத செயல்களில் ஈடுபடுகின்றார்கள். மூன்றாவதாக அவர்களின் மனிதத் தன்மையையே பறிக்கப்பட்டுப் போகிறத இதகால் அவர்கள் மிருகங்களைப் போன்று செயலாற்றுகின்றார்கள். இவை எல்லாவற்றையும் விட பெரியதோர் ஆபத்து உண்டு. உரியவர்களை மக்கள் மதிப்பதில்லை இவையனைத்தும் வறுமையாலேயே ஏற்படுகின்றன. எனவே தான் எச்சரிக்கின்றேன். மகனே நீ சம்பாதிக்க வேண்டும். வறுமையை விரட்டுவதற்குதொழில் செய்வதே சரியான வழி நபியவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

"ஒருவன் பிறரிடம் ஒரு தடவையாசகம் கேட்டு விட்டால் இறைவன் அந்த மனிதனின் வாழ்க்கையில் வறுமைப் புயலையே உருவாக்கி விடுகிறான்" மேலும் கூறினார்கள் உங்களை வறுமையில் நரகத்தில் நுழைய விடாமல் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வதற்க்குரிய எந்த வழியும் எனக்குத் தெரியாது ஆனால் சில காரியங்களைத் தவிர்த்தொழுகுமாறு சொல்லியிருக்கின்றேன் அவற்றை ஒதுக்கித் தள்ளுங்கள் இந்த ஒரே வழிதான் எனக்குத் தெரிகிறது இதன் மூலம் நீங்கள் வறுமையில் வெற்றியடைய முடியும் ஒவ்வொரு மனிதனுக்கும் குறிப்பிட்ட வருமானம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அந்த வருமானம் அவனுக்கு கிடைக்க எப்படியும் கிடைத்தேதீரும் அந்த வருமானம் அவனுக்கு கிடைக்கும்வரை மரணம் அவனை அனுகாது.

சில வேளைகளில் வருமானம் சற்று பிந்துவதுண்டு இது போன்ற சந்தர்ப்பங்களில் முயற்சி செய்து வருமானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்,என்றாலும் மற்றுமோர் இடத்தில் இப்படிக் கூறுகின்றார்கள் வறுமை அண்டினால் குறுக்குவழியில் சம்பாதிக்க முற்படாதீர்கள் அந்த நிலைமை ஏற்படும்படி விட்டுவிடாதீர்கள். குறுக்குவழியில் இறைவனின் அன்பைப் பெற முடியாது.

ஊழியர்கள் தமது சொந்த காரியங்களை கவனிப்பது போன்று தாம் பொறுப்பேற்றிருக்கும் காரியங்களையும் கவனித்தல் வேண்டும். நம்பிக்கை நாணயத்துடன் உழைக்கும் ஊழியனுக்கே நல்ல எதிர் காலம் உண்டு முதலாளி கட்டளை இடுவதற்கு முன் குறிப்பறிந்து வேலை செய்யும் ஊழியர்கள் வெகு சீக்கிரத்தில் முன்னேறி விடுகின்றான்.பொய், களவு, மோசடி போன்ற சிறுமையான செயல்களை செய்ய கனவிலும் நினைத்தல் கூடாது. நல்ல ஊழியர்களுக்கு அல்லாஹ்வின் சந்நிதியிலும் நல்ல பதவி இருக்கிறது. ஒரு ஊழியன் தனது முதலாளிக்கு நன்மை கருதி வாழ்ந்தும் அல்லாஹ்வின் வணக்கத்தையும் அழகு படச்செய்து வருவானாகில் அவனுக்கு அவனது ஊழி இரு மடங்கு கிடைக்கும் என்று நபி அவர்கள் கூறியுள்ளார்கள்.(புகாரி) ஒரு ஊழியர் சொர்கத்தில் பிரவேசிப்பார் முதலாளி தனது ஊழியரை தனது அந்தஸ்த்துக்கு மேலிருப்பதை காண்பார் இறைவனே எனது ஊழியர் எனது அந்தஸ்த்துக்கு மேலிருக்கின்றார் என்று முதலாளி கூறுவார் ஆம் அவனுக்கு அவனின் செயலுக்கு தகுந்தவாறு நான் பரிசளித்தேன் என்று இறைவன் பதில் உரைப்பான் என்று நபி (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்.

தொழிலில் ஈடுபடும் தொழிலாளியின் உரிமைகளையும் வரையறுத்துக் கூறுகிறது இஸ்லாம் தொழிலாளியும் தொழிலாளரும் தொழில் துறையில் முக்கிய தொடர்பு உள்ளவர்கள் வாழ்க்கையை செம்மையாக நடத்த உதவும்முகமாகத் தொழிலை தொழிலாளிக்கு அளித்தலும் தொழிலதிபரின் உயர்வுக்கு தொழிலாளி உழைப்பதாலும் இவ்விருவரும் அன்னியோன்னிய மனப்பான்மை இருத்தல் வேண்டும்.தொழில் கொள்வோர் தொழிலாளியின் ஊதியத்தை ஒழுங்காக கொடுப்பதுடன் அவனது இன்ப துன்பங்களில் பங்கு கொள்ள முயல்வது சிறப்புடையது. மேலும் மேலதிக உழைப்பிற்கு ஊதியம் அளித்தல் வேண்டும். உழைப்பின் ஊதியத்தை மறுத்தும் குறைத்தும் மனிதனை மனிதன் சுரண்டி வாழ்வதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. எனவேதான் வேலை செய்வோரின் வியர்வை காய்வதற்கு முன் அவரின் கூலியை கொடுத்து விட வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இன்றைய கால கட்டத்தில் பல தொழிலாளர்கள் பல மாதங்கள் உழைத்தும் தமக்குச் சரியான ஊதியம் கிடைக்கவில்லையென்று பலர் நீதி மன்றங்களில் வழக்குத் தொடர்வதை அவதானிக்க முடிகிறது. தொழிலாளி முதலாளி ஆகிய இருவரும் இறைவனின் அடியார்கள் என்பதை மறந்து விட முடியாது. அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. மனிதனையும் ஜீவன்களையும் என்னை வணங்குவதற்காகவன்றி நான் படைக்கவில்லை எனவே அல்லாஹ்வை வணங்க உயிர் வாழ வேண்டும். அதற்காக ஆக்கமான வழியில் உணவு தேடுதல் இபாதத்தாகும் எனவேதான் கால ஓட்டத்தில் அழியாத தன்னிகரற்ற தனித்துவமான பொருளீட்டும் கொள்கையை இவ்வுலகிற்கு அல்லாஹ் அருளியுள்ளான்.

A.அமீனா பீபி
2 ம் வருடம்

# கலைகளும் சமுதாயமும்

சமூகம் என்பது மொழியால் இனத்தால் பண்பாட்டால் ஒன்றுபட்ட மக்கள் ஓரிடத்தில் கூடி வாழும் போது அவர்களையே சமூகம் என அழைக்கின்றோம். கூடி வாழ்வதுவே சமூக வாழ்வு. சமூகத்தில் பல திறன் ஆற்றல் மிக்கவர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் தம் உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளை பிறருக்குப் புலப்படுத்தும் வகையில் வெளிப்படுத்தப்படும் போது அவைகளை கலைகள் என்கின்றோம். உடலுக்கும் உள்ளத்திற்கும் உற்சாகம் தரும் வகையில் வெளிப்படுத்தும் கலைகள் கவின் கலைகள் என்றும், அக் கலைகள் சமூதாயத்திற்கு பயன் தரும் போது அவற்றைப் பயன் கலைகள், என்றும் கூறுவர். இசை, நடனம் ஓவியம் சித்திரம் முதலிய கலைகளை கவின் கலை என்றும் இலக்கியம், நாடகம் முதலியவற்றை பயன் கலைகள், என்றும் பாகுபடுத்துவர். எவ்வாறாயினும் சமூகத்தின் ஆணிவேராக இருந்து சமூதாயம் வளம் பெற உதவுவன கலைகளே!

மனிதன் இன்ப நாட்டங் கொண்டவன் அவன் என்றும் இன்பமாக வாழ விரும்பினான். அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்பட்ட போது ஆடியும் பாடியும் மகிழ்ந்தான். அச்சம் எற்பட்ட போது ஒலிகள் எழுப்பியும் சித்தர வடிவங்கள் சமிக்ஞைகள் மூலமும் தமது உணர்வை வெளிப்படுத்தினான். இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மனிதன் தனக்கு ஏற்பட்ட இன்ப துன்பங்களைப் புலப்படுத்த ஆடல் பாடல்களில் ஈடுபட்ட போது கலையும் தோற்றம் பெற்றுவிட்டது. நாட்டு நிலைமைக்கும் கல்வி அறிவுக்கும் இயற்கைச் சூழலுக்கும் ஏற்ப கலைகள் வளர்ச்சியடைந்து சமூதாயத்தில் நிலவிய பண்பாட்டுக் கோலங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்தன. எமது நாட்டில் மட்டுமல்ல உலக நாடுகள் பலவற்றிலும் அந்நாட்டின் பாரம்பரியச் சொத்துக்களாக பண்பாட்டின் வெளிப்பாடுகளாக அந் நாட்டின் கலைச் செல்வங்களே விளங்குகின்றன.

கிரேக்கம் உரோமம் ஆகிய நாடுகளில் தோற்றம் பெற்ற கலைகளாகிய சிற்பம், கட்டிடம், விளையாட்டு ஆகிய கலைகள் தனித்தும் பெற்று விளங்கியதோடு ஐரோப்பிய நாட்டின் கலைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின் அதாவது கலைகள் வாழ்வியல் அம்சங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் செல்வாக்குப் பெற்றிருந்தன. அதே போன்று சீனா, ஜப்பான், எகிப்து, இந்தியா போன்ற நாடுகளில் தோற்றம் பெற்ற கலைகள் கீழைத்தேச நாடுகளின் நாகரீகத்தை வெளிப்படுத்துவனவாக அமைந்தன. எமது நாட்டில் சமயம், தத்துவம், இலக்கியம் ஆகிய பண்பாட்டுக் கூறுகளே எமது கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் கலைகளாக சிறப்பிடம் பெற்றுள்ளன.

வரலாற்று ரீதியாக சமூதாயமும் கலைகளும் ஒன்றிணைந்து வளர்ச்சி பெற்றமையை அக்கால இலக்கியங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

சங்க காலப் பகுதியில் வாழ்ந்த மக்கள் இன்பப்பொழுது போக்கிற்காக ஆடல் பாடல்களில் ஈடுப்பட்டனர். அவர்கள் இசைக் கருவிகளை இசைத்துப் பாடி ஆடல்,. வேலவன், வெறியாடல் போன்ற கலைகள் சமூகத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தன. கால மாற்றத்துக்கு ஏற்ப கலைகளும் வளர்ச்சியடைந்து வருதல் இயற்கை. சங்கமருவிய காலப்பகுதியில் வாழ்ந்த சமூதாயம் கலைகளில் அதிக ஆர்வம் காட்டியது. என்பதை சிலப்பதிகாரம் வாயிலாக அறியக் கூடியதாக உள்ளது. ஆடல் அரங்குகளிலும் விதானங்களிலும் மேற் கூரைகளிலும் வரையப்பட்ட ஓவியங்கள் பல்வேறு பட்ட இசைக்கருவிகளை பற்றி குறிப்புக்கள் மாதவி ஆடிய ஆடல்கள் அணிகலன்கள் பற்றிய குறிப்புகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன. எனவே அக் காலப்பகுதியில் சமூதாயத்தில் கலைகளுக்கு இருந்த செல்வாக்கை பற்றி அறியக் கூடியதாக உள்ளது. சமூதாயத்தின் பண்பாட்டு தனித்துவத்தை ஆதிகால மக்களின் அழகியல் உணர்வுளை இக் கலைகள் வெளிப்படுத்துவனவாக அமைந்தன. சமூதாயம் மேனிலையடைய இக் கலைகள் பெரிதும் உதவின. திராவிட கட்டடக்கலைகள், கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம் போன்ற கலைகள் வளர்ச்சியடைந்தது வாழ்வியல் இன்பமும் அமைதியும் ஏற்பட துணை செய்தமையை சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகிறது. அதாவது சமூதாயமும் கலைகளும் ஒன்றிணைந்த போக்கை இக்காலப்பகுதியில் காணக்கூடியதாக உதவிற்று.

ஒரு காலப்பகுதியின் செல்வாக்க அடுத்த காலப்பகுதியையும் பாதிக்கும் என்பது வரலாற்று உண்மை. பல்லவர் காலப்பகுதியல் மக்கள் கலையில் தம்மை மறந்து ஈடுப்பட்டனர். அழகுணர்வில் உந்தப்பட்ட அவர்களின் உணர்ச்சி வெளிப்பாடு கலைகளாகப் பரிணமித்தன. கலைகளின் வளர்ச்சியில் கற்பனாவாதம் மேலோங்கியது. கலையுணர்வு சமூதாயத்துடன் இணைந்தது. பௌராணிக்க கதைகள் மையமாக வைத்து இறை வடிவங்கள் ஓவியங்கள் சிற்பங்களாக மிளிர்ந்தன. கலைகள் வேகமாக வளர்ந்தன.

சமுதாயம் எண்ணற்ற கலைஞர்களை உருவாக்கியது. அவர்கள் தம் செயல் நெறிகளை கலைகள் மூலம் வெளிப்படுத்தினர். கலைஞர்களை மன்னர்கள் ஆதரித்தனர் மன்னர்களும் கலைஞர்களாக மிளிர்ந்தனர். சமுதாயத்தில் கலைகள் சிறப்பிடம் பெற்றன. கல்வெட்டு ஆதாரங்கள் மூலம் கலைஞர்களை மன்னர்கள் கௌரவித்து அவர்களுக்கு பட்டங்களும் பரிசில்களும் வழங்கியதுடன் மானிய நிலங்களை வழங்கியதாகவும் அறியக் கூடியதாக உள்ளது. இவ்வாறு சமுதாயமும் கலைகளும் இணையும் போக்கு பல்லவர் காலத்தில் மேலோங்கி வந்தமையை அறியலாம். இப்போக்கு பின்வந்த சோழர் காலப் பகுதிகளிலும் தொடர்வதை எச்ச சொச்சங்களாகவுள்ள அக்கால ஆலயங்களும், சிற்பங்களும், உருவங்களும், இசைக் கலைகளும் ,நடனக்கலை விற்பனர்களும் எடுத்துக் காட்டுகின்றனர். எனவே கலைகளும் சமுதாயமும் இணையும் போக்கில் மேலோங்கி வந்தமையை நாம் காணக் கூடியதாக உள்ளது.

எனினும் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கூடியதாய் மிகச் சிறிய உணர்வைக் கூட வெளிப்படுத்தும் வகையில் கலைகள் வளர்ச்சி பெற்றிருந்த போதும்

அவற்றில் பௌராணிகத் தன்மையே மேலோங்கியிருந்தது. சமுதாயத்தின் வெளிப்படுகளாக அக்கலைகள் அமையவில்லை. ஆனால் அடுத்துவந்த காலப்பகுதிகளில் இவ் உணர்வு படிப்படியாக வீழ்ச்சியடையும் போக்கை காணக் கூடியதாக உள்ளது. சமுதாயத்தில் கலை உணர்வு மங்கி விட்டது என்று கூற முடியாது. ஆனால் மாற்றம் செய்யப்பட்டு விட்டது. இன்று கலைகள் பெரும்பாலும் மாற்றமடைந்து வருகின்றன. அழகுணர்வு வெளிப்படுத்தவும், பொழுது போக்கிறகாகவுமே பயன்படுத்தப்படுகின்றது.மனித சமுதாயத்தை மட்டுப்படுத்தவும் மானிடத்தை அதன் வழியே சென்று முன்னேற்றவும் யதார்த்த பூர்வமாக வெளிக் கொணருகின்றன. பழமையைப் பேணி பாதுகாக்க உதவுவது கலை என்ற சிந்தனைப் போக்கு சமுதாயத்தில் மெல்ல மெல்ல மாறி வருகிறது

.எனவே சமுதாயத்தில் ஏற்படும் சிந்தனைமாற்றம் கலைகளின் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உண்மை. சமுதாயப் பண்பாடு, சமுதாயப் பிரச்சனைகளின் வெளிபாடு நல்லதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல் போன்றவைகளே கலையின் பயனாதல் வேண்டும். வாழ்க்கையிலிருந்து பிரிந்து வேறாகாது அதாவது அந்நியமாகாத வகையில் கலைகள் பேணி வளர்க்கப்படல் வேண்டும். ஆகவே கலையின் பயன்பாடு உண்மை, நன்மை, அழகு என்ற இலட்சியங்களை நோக்கி கலைகள் வழி நடத்தப்படல் வேண்டும். அதன் மூலம் நல்லதோர் சமுதாயம் மலர முடியும்.

"கலை கலைக்காகவே" என்ற கூற்று இன்று அர்த்தமற்றது. கலை சமுதாயத்துக்காகவே அச் சமுதாயத்தை மேம்படுத்தஉதவ வேண்டும். சமுதாயத்தில் நல்ல பண்பாட்டு நாகரீகம் வளர உறுதுணையாக அமைதல் வேண்டும். மனித சமுதாயம் இணைந்தும் பிணைந்தும் வாழ வேண்டும். என்று விரும்பிய உணர்வே கலையின் வெளிப்பாடு சமுதாயம் மாற தனி மனிதன் வேறு என்ற உணர்வு இன்றி கால தேச மொழி வேறுபாடுகளுக்கிடையில் சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரையும் ஒரேமரத்துக் கிளைபோல் ஒன்றுபடுத்த உதவுவதே கலை. சமுதாயம் செம்மை பெறும் அதே வேளை ஆணிவேராகிய தனி மனிதனது வாழ்வும் செம்மை பெற கலையே பெரிதும் பயன்படும். அதாவது தனிமனிதன் தனது பெருமையை சமுதாயத்துக்கு உரிமையாக்க கலையே உதவும் அப்போது சமுதாயம் ஏற்றம் பெறுவது உறுதி.

V.சுகனியா
விடுகையாண்டு

# நவீன தொடர்பு சாதனங்கள்

இன்றைய உலகில் நவீன தொடர்பு சாதனங்களின் செயற்றிட்டம் இன்றியமையாதது. உலகில் ஒவ்வொரு மனித வாழ்க்கையிலும் அன்றாட செயற்பாடுகளில் அவன் விரும்பியோ விரும்பாமலோ சமூகத்திற்கும் மனித நாகரீகப் பண்பாட்டிற்கும் இடையிலான தொடர்பூடகமாக நவீன தொடர்பு சாதனங்கள் விளங்குகின்றன.

நீண்டு பரந்து விரிந்து இருந்த உலகம் இன்றைய நவீன தொடர்பு சாதனங்களின் வருகையால் சிறிய கிராமமாக மாற்றம் பெற்றுள்ளதை யாவரும் அறிவோம். பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளின் மக்களின் வாழ்க்கை முறை, நாகரீகம், கலாச்சார விழுமிய பண்பாடுகள், அரசியல் தன்மை அரசின் நடைமுறைகள் யாவற்றையும் எம் நாட்டிலும் கண்டுகளிக்கக் கூடியதாகவும், அவற்றுக்கு இடையிலான தொடர்புகளை பேணக்கூடியதாகவும் இருப்பதற்கு மிக முக்கிய காரணம் நவீன தொடர்பு சாதனம் என்றால் மிகையாகாது.

எமது நாட்டில் இன்று வரையும் பல்வேறு வெளிநாட்டு, உள்நாட்டு தொழில் நிறுவனங்கள் பல்வேறு பெயர்களைக் கொண்ட தொடர்பு சாதனங்கள் ஊடாக பல்வேறு நிகழ்வுகளை பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற தொடர்பு சாதனங்கள் ஊடாக வெளிப்படுத்தி வருகின்றன. சமூகம், மாணவர்கள், பாமரமக்கள் என்போரின் சுயகற்றல் திறன், அனுபவ மனப்பாங்கு, வாழ்க்கைத் தேர்ச்சி, அடிப்படை உரிமைகள், பொருளாதாரம், சிந்தனை சமூகமயமாக்கற் திறன் என்பவற்றில் முன்னேற்றம் காணக்கூடிய விதத்தில் தொடர்பு சாதனங்களின் பங்களிப்பு இன்றியமையாதது.

தனிமனித,சமூக,நாடுகளின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி, பொருளாதார துறையில் அளப்பரிய தாக்கத்தை உண்டு பண்ணுவதும் தொடர்பு சாதனங்களாகும். ஒவ்வொரு நாடுகளின் பொருளாதாரத்தின் செயற்றிறன், தொழில்நுட்பம், அந்நாட்டு மக்களின் பங்கு, அரசின் பங்கு என்பவற்றை அறிந்து அம் மனித முயற்சியை மற்றைய நாடுகளும் மக்களும் முன்னெடுக்கும் போது பொருளாதாரத்துறை வளர்ச்சி காண்கிறது. உதாரணமாக இன்றைய இந்தியாவின் கணனிக் கல்வி வளர்ச்சியினை பொருளாதார வல்லரசுகள் கூட பார்த்து வியந்து நிற்கின்றன.

மக்களின் அன்றாட அத்தியாவசிய நிகழ்வுகளுக்கும் தொடர்பாடல் இன்றியமையாதது. இன்றைய உலகின் போக்குவரத்து வசதியற்ற கிராமப் புறங்களிலுள்ள மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும், அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் நவீன தொடர்பு சாதனங்கள் ஓர் ஊக்கியாக விளங்குகின்றன. அத்துடன் போக்குவரத்து வசதிகளற்ற கிராமப்புற மக்களை இயற்கைச் சீற்றத்தில் இருந்து காப்பாற்றுவதற்கும் காலநிலை மாற்றங்கள் போன்றவற்றை அறிந்து மேற்கொள்வதற்கும் தொடர்பு சாதனங்கள் பயன்படுகின்றன.

உதாரணமாக சுனாமி அனர்த்தங்களையும், சுனாமியின் போது கடலின் அலையின் வேகம், அவற்றினால் ஏற்பட்ட சோகம், காவு கொண்ட மக்களின் விபரம், தங்களின் உறவுகளின் நிலை என்பவற்றை துல்லியமாக இத் தொடர்பு சாதனங்கள் மக்கள் முன் எடுத்துச் சென்றமை வியக்கத்தக்கதாகும்.

கல்வி இன்றைய காலமாற்றத்துடன் இணைந்து விரைவாகவும் நேர்த்தியாகவும் எடுத்துச் செல்லப்பட வேண்டியது அவசியமாகும். எனவே ஒவ்வொரு பிரஜைக்கும் கற்பதற்கு உரிமையுண்டு. அரசானது கல்விக் கொள்கையை முன் கொண்டு செல்வதற்கு நவீன தொர்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக Vedio Conference, Radio. TV, E-mail, Wep site போன்றன இன்றைய கல்வித் துறையில் பயன்படுத்தப்படுகின்றது.

அத்துடன் சுயகற்றலுக்கும் முன்னுரிமை கொடுத்து அவற்றையும் e - learning ஊடாக எடுத்துச் செல்கிறது.

<u>நன்றி.</u>

திருமதி.சி.லீலாவதி
இரண்டாம் வருடம்

# சிந்திக்கும் நொடியில் சிரத்தையெடுக்க சில துளிகள்

இருபத்தோராம் நூற்றாண்டிலும் ஆசியாக் கண்டத்தின் நாடுகளில் இலங்கை என்ற திருநாட்டின் பசுமையான சோலைகளை இயற்கையாகவே தன்னகத்தே கொண்டு நிமிர்ந்து நிற்கின்ற நிலமே மலையகமாகும். பிற நாட்டவரும் பல விதத்தில் பொருளாதாரத்தை ஈட்டிக் கொள்ளச் செய்த பெருமையும் இதனையே சாரும் இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரத்திலும் முதன்மை இடத்தை பெற்றுள்ளது தேயிலையேயாகும். ஆதிகாலந்தொட்டே உலக நாடுகளில் பொருளாதாரந்துறையில் தன்னை முதன்மைபடுத்திய மலையகக் கல்வித்துறை வளர்ச்சியில் தன்னை இனங்காட்ட பின் தள்ளப்பட்டமை கேள்விக்குறியானதே.

உலகத்தில் பிறந்த மனிதன் வாழக்கூடிய உரிமையை எவ்வாறு பெற்றுள்ளானோ அதேயளவு கல்வியை பெறவும் உரிமையுள்ளவனே. ஆனாலும் மலையக மக்கள் இலங்கை வாழ் மக்களிடையே ஒப்பிட்டு நோக்கினால். கல்வியை பெற ஒரு நூற்றாண்டு காலம் பின்தள்ளப்பட்டமை என்பது ஓர் கசப்பான உண்மை. மனிதனுக்கு எவ்வாறு தமது கண்கள் உலகத்தை நோக்குவதற்கு அவசியமானதோ. அதே போன்று அறிவுக் கண்களோடு உலகத்தை நோக்க அவசியப்பட்டதே கல்வி தான்.

அடிமையாகவே வாழப்பிறந்தவன் மனிதனல்ல. போராடி எதிர்நீச்சல் போட்டு வாழத்துணிந்தவன் மனிதன். மாற்றங்கள் நம்மை நோக்கி மிக வேகமாக வந்து கொண்டேயிருக்கும். அம்மாற்றங்களை உணர்ந்து அவற்றிற்கு ஈடுகொடுத்து மாற்றங்களிற்கேற்ப தம்மை மாற்றிக்கொள்ளாவிட்டால் வாழ்க்கையில் பின்தள்ளப்பட்டு விடுவோம் என்பது யதார்த்த உண்மை. தற்கால உலகிற்கு மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக கல்வி இடம்பெறுகின்றது. இக்கல்வியாலேதான் மாற்றங்களை உருவாக்கி விட முடியும். என்பதை நிச்சயம் உணர்ந்தேயாக வேண்டும்.

இலவசமாக கல்வி வழங்கப்பட்ட பின்பும் பலவித இடையூறுகள் மத்தியிலும் பற்றாக்குறையான வளங்களையும் நிவர்த்தி செய்து கொண்டு சமமான கல்வியை பெறக்கூடிய சூழ்நிலைகளை வழங்கிய பின்பும் பெறுபேறுகளை பெற தவறவிடுகின்றமைக்கான காரணங்களை சிந்தித்தேயாக வேண்டிய நிர்பந்தம் மலையகத்தில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கையின் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கமும் அரசசார்பற்ற நிறுவனங்களும் பெரும் பங்காற்றி வருவது நாமறிந்ததே. அதே போன்று ஒவ்வொரு பாடசாலையின் வளர்ச்சிக்கு மனித வளங்களுடன் பௌதீக வளங்களும் பயிற்சி பற்றாக்குறைகளும் வழங்கி வருகின்றது. அவற்றால் பெறக்கூடிய உச்ச பயன்பாட்டைப் பெற்று மாணவர் சிறார்களை கல்வித் தரத்தில் உயர்த்தும் மிகப் பாரிய பொறுப்பு ஆசான்களின் கரத்திலே உள்ளது.

மலையகத்தை பொருளாதார ரீதியில் ஒப்பிட்டு அன்றாட ஒரு வேளை உணவிற்கே வழியின்றிய நிலை,

குடும்ப சூழல், மதுபாவனை, வழிதவறுகின்ற குடும்பங்கள், வெளிநாட்டு மோகம் போன்ற எண்ணிலடங்கா பிரச்சினையை எதிர்நோக்கியே வாழ்ந்து வருகின்றார்கள். சிறுவர்களை வேலைக்கமர்த்தும் வீதமும் ஆடைத்தொழிற்சாலை செல்கின்ற வீதம் தற்போது அதிகரித்தே காணப்படுகிறது.

எவ்வாறாயினும் பெருந்தோட்டப் பெற்றோர்களில் ஏராளமானோர் தம் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு தம்மை வருத்தி முயற்சிக்கின்றார்கள். முன்பள்ளிக்கு அனுப்புவதிலும் ஆரம்பக்கல்விக்கும் உரிய வயதில் சேர்கின்றமை வரவேற்கக் கூடியது. பாடசாலைக்கு என்று சென்றுவிட்டால் ஆசிரியர்கள் கல்வியில் உயர்த்தி விடுவார்கள் என்ற பெரும் எதிபார்ப்பிலேயே தாம்படும் துன்பங்களைப் பற்றி சிரத்தை கொள்வதேயில்லை. தொடர்கல்விகளையும் சேவைக்கால பயிற்சிகளையும் தொடர்ந்து கற்பதோடு தங்கள் தரங்களை உயர்த்திக் கொண்டு சேவையாற்ற தவறிவிடாமல் பணியாற்ற வேண்டும்.

நவீன உலகில் உயர் தொழிற்நுட்ப துறைகளிலும், கைத்தொழில் துறைகளிலும், போக்குவரத்து துறை, சமூக செயற்பாட்டுதுறை, மருத்துவத்துறை சட்ட நீதி நிர்வாகத்துறைகளிலும், தொடர்பு சாதனத் துறைகளிலும் மலையக மாணவர்களை மிளிரச் செய்வதோடு நவீன கண்டுபிடிப்புகளிலும் சாதனைபடைக்கவும் மாணவரை ஊக்குவிப்பதில் சிரத்தை எடுத்தல் அவசியமானதே.

திறம்பட சேவையை நித்தமும் செய்வதால் விலைமதிப்பற்ற சேவையாகிய ஆசிரியர் சேவையை போற்றாதவர்களும் வையகத்தில் இருப்பினரோ? இத்தனை மகத்துவமிக்க ஆசிரியத்துவம் பேணப்பட அரும்பாடுபடல் வேண்டும். 19ம் நூற்றாண்டு கறைபடிந்த அவலங்களை சந்தித்த சமுதாயத்தை இருபத்தோராம் நூற்றாண்டில் புதுமைமிக்க சமுதாயமாக மாற்றும் பணியில் எமது ஆசிரியபெருந்தகை வீறுநடை போடுவதை சிந்திப்போம். சிந்தித்துக் கொண்டேயிருப்போம்.

திருமதி R அருட்செல்வி
விடுகையாண்டு

# Rudiments of body Language and the importance of body Language

Although human beings have been living on our planet for millions of year much affection had not been paid to body Language this does not mean that people did not use body Language. In fact they did use body language Body language has played a vital role in communication even before speech evolved some million years ago.

Body language means that you could be judged by the way you stand. walk speak etc It helps us to understand people by what they say write or how they behave in a face to face situation. A person who is well versed in body language will be able to know what sort of a person you are even without associating with you. According to a recent research done the verbal component of Communication between two people lone 35% Where as non verbal or body language amounted to 65%.

Body language helps people to become famous. For example Charlie Chaplin was the first to use body language successfully in his movies. As a result people still crave to watch his films when we think of politicians they mostly attract the public using body language. They know how to use body language to prop up their image. Most of the politicians wish to be dressed in pure white, because, they know that people can be mesmerized by their outward appearance. Sometimes they tend to receive training under body language experts to show the word that they are sincere people.

Mostly the first impression of a stranger whom we meet is formed by means of his/her body language. That is even before that person speaks to us we pass a judgement on him. This is not a mystery. Most of use are able to judge people by means of their body language. Very often we hear people comment on others though they don't associate with them closely. This is because the body language helps them to form an impression about Thom.

Even for tune tellers know how to read the body language of people and if you utter one word they know how to manipulate the situation and win Your confidence. Most of the beggars on streets understand the basics of body language. When they beg for money in a bus or in a railway compartment he knows who and who will give him some money. He will not get closer to a person who would nor look at him; because he knows that such a person will not like to part with his money. sometime the people who don't like to give a beggar some money will pert to be asleep

It is now proved that not only individuals but also organizations use body language, to tell their customers who and what they are organizations may be any firm company, corporation departments institution or any organized body. In some organizations when you enter them; you will feel out of place; or you feel that you are not wan..... there. How do you get to know this. It is the body language that makes you enter some other organizations you feel like visiting Thom again. How? this is also by body language of organizations. We could observe such an atmosphere only in some private organizations.

When you enter some organizations the officers there never seem to take notice of you. They totally ignore your presence. The receptionist will be talking to someone over the phone. Some may be engaged in their own talks. It you get closer to them and ask them something they will be annoyed and they will consider you as a nuisance sometime the walls of the organizations would nor had been white washed for years and years. This gives an awful look for that organizations. The furniture would not had been organized in an order to suit an organization. It would hinder the free movement of the customers. Will any one like to pay a second visit to such an organization? Definitely not because the body language of the organization in negative.

In some other organization the reception desk remains unmanned. Sometimes the receptionist or the man at the inquiries desk do nor want to disturb them. We may have to wait aside patiently till you get somebody to help you. In some organizations the receptionist is loaded with so many work. She has to answer the telephone calls; accept what the fees that has to be paid and issue the receipts eft. This is too much for one person ultimately the body language is lost there and the image of the organizations desk is manned by a member of a junior staff or a minor staff when someone comes or calls to get an information. The need information could nor be give to Thom Unfortunately all the aforesaid instances occur mostly in government organizations.

On the other hand most of our private organizations strictly follow the organizational. Body language (OBI) . the person at the inquiries desk or the reception will be very polite. They follow the telephone etiquette some times if you happen to wait for sometime a glass of drink will be offered to you. Some one will quickly attend to your work and do the needed. They practices what they preach. The treat the customer their salaries; bonuses and dividends for the share holders. So how can an organization neglect their customers? In today's world where the competition is very high! if you are to survive in your business it is the OBI that would deceive whether you are going to remain in your business or whether you are going to lose your reputation as good enter preneurs .

practiced very strictly. School is a part of a society. To maintain the reputation of the school special attention should be paid to OBL. According to the new trend in Education the atmosphere of an institution should be favorable for the Teaching Learning processes. So an teachers we all should first pay utmost attention to keep the environment of the school favorable to carry-out our duties effectively. As far an possible every thing should be organized in a school. The walls should be paid attention to. There should not be scribbling on the walls. The furniture should be arranged satisfactorily in every unit. The land of the school so the physical atmosphere of the organization should be charming and appealing to the students.

Teachers should practice OBI every time whether you are in a school or outside the school your OBI should be acceptable. It is the body language of a teacher that helps a child to form a positive image about a teacher. So thus, the teachers way of dressing, speaking, waiting behaving and everything should be paid attention to and given priority too. When a child lock at a teacher, it should feel to learn from her or under her. At a glance the children would from a negative or positive image of a teacher. specially in primary classes, the teachers who work with those students should have body Language for a considerable amount. If nor students would fear to come to a teacher and learn from her.

So in this modern world how even educated one may be ; it is the body Language that would help him/ her to have a positive image about him / her and to prologue in her career successfully.

Mrs. S.K. Arugumugam
Part time Lecture (English)
G.T.C., Kotagala.

# கவித்துளிகள்



# நூல்

காலையில் எழுந்ததும் தேடுகின்றேன் உன் முகத்தை
மாலையானதும் உன்னுள்ளேயே சங்கமிக்கின்றேன்
உன் முகம் காணாவிட்டால் என் முகம் அலைகிறதே
உன்னைத் தொட்டதால் என்னை மறந்துவிடுகிறேன்.

கருவறையில் உதித்து கல்லறையில் மரணிக்கும் வரை
நேசிக்கின்றேன் என்னை அல்ல உன்னையே!
உன்னை முழுதும் இரசித்து உணர்கின்றேன்
நீ இல்லாவிடில் நான் இல்லை ஆகிவிடுகின்றேன்.

செல்லமாக உனக்கு பெயர்கள்தான் எத்தனை உண்டோ?
தேடிவந்து உனை உறவுகள் அள்ளிவிட
மலரே ! உன்னைத் தேடி வரும் வண்டுகள் எத்தனையோ
அத்தனைக்கும் சலிக்காது மணம் வீசுகின்றாய்.

வடிவடிவாய் உன் உருவங்கள் பவனி வர
அவனியிலே சுடர் விளக்காய் ஒளிர்கின்ற நீ
வாசகரை யாசிக்கின்றாய் அவரையே நாட வைக்கின்றாய்.
நீ வேறு யாருமல்ல என் வாசனை நூலே!

V.சிவேந்திரன்
விடுகையாண்டு



# மனிதம் மதிக்கப்பட வேண்டும்

மனிதம் மலர்ந்திட வேண்டும்
மனித மாண்புகள் உயர்ந்திட வேண்டும்
சுய நலம் என்னும் போர்வை இப்பாரினிலே
சுகமாக களைய வேண்டுமே .

உயிர்களிடத்து அன்பு வைக்க வேண்டிய மனிதமே
இன்று நீயே உயிரைக் காவு கொள்கின்றாயே!
தன்னலமற்ற பண்பில் வாழவேண்டிய நீ
தலைக்கனம் மிகுந்து துள்ளுகின்றாயே

இயற்கை வளம் நிறைந்த இந் நாட்டிலே
இதமான மன நிலைகள் உருவாக வேண்டும்
இனி வரும் காலங்களில் கூட மழலை
இதயங்கள் கலங்கிடாதிருக்க வழி வேண்டுமே

அகதிகளாக அனாதைகளாக அலைந்து திரியும் ~ ஒவ்வொரு
மானிடத்தையும் நீ மாண்போடு நோக்காயோ?
அதிகாரமும் அடக்கு முறையும் தான் உனக்கு
செல்வத்தை அள்ளித் தருமோ? சிந்தித்துப் பார்

அமைதியானது உலகு . அதுவும் இனிமையானது தான்
அன்பு நிறைந்த வாழ்வு . அதுவும் புனிதமானது தான் ~ஆனால்
அயலவர்படும் வேதனையில் நீயும் சற்று தரித்து நின்றால்
அது உனக்கு அவமானத்தை அல்ல அனுதாபத்தையே தரும்.

செல்வி அந்தோனியாப்பிள்ளை-யாகப்பு
முதலாம் வருடம்

# ஆசான்

கட்டான உடலும் கறுகறுத்த மீசையும்
கற்பிக்கும் கையில் கடிவாளம் போல் பிரம்பும்
கதிரவன் போல் வகுப்பறையில் நுழையும் ஆசானே
கண்டதும் கற்பிப்பது விரிவுரை

கண் கண்டதும் குற்றத்துக்கு வஞ்சம்
இந்நிலை மாறிட்டடா?
இன்முகத்துடன் வகுப்பறையில் நுழையும் ஆசானே
கையில் பிரம்பில்லை நெஞ்சிலே அன்புண்டு

ஆசான் செயல் இல்லை மாணவர் செயல் உண்டு
ஆசான் வழிகாட்டி மாணவர் மையக்காட்டி
அந்நிலை மாறிட்டடா! மாறிட்டடா!
கற்றல் செல்வமும் மாறிட்டடா! அவனியிலே
அன்று வெறுமனே கற்பித்த ஆசான்
இன்று பயன்படுத்திட்டான்
சாதனத்தை பயன்படுத்திட்டான்
சாதனை பல புரிந்திட்டான்
ஜெகம் எங்கும் இம்முறையே
ஜெகத்தின் வளர்ச்சி ஆசான் வளர்ச்சியடா!

P .லோகீசன்
விடுகையாண்டு

# கேட்பது யார்

கதிரவன் வெளி வர
கருத்துடனே கடமைகளை செய்து
பள்ளிக்குச் சென்றிடுவார் பாலகர்
பக்குவமாய் கல்வி கற்கத்தான் முடியுமா?

கணக்கை செய் என்றார் ஆசான்
கணக்காக வந்திடுவான் கிபிர்
வடபுல மக்களுக்கு
இன்றைய இயமன்

இவனுக்கு முன் வந்திடுவான்
வண்டு என்ற மொழி சொல்லிடுவார்
வடிவாக தெரியும் வண்டு
வந்ததும் பக்குவமாய் பதுங்கு குழிக்குள்
பாலகர் பதுங்கும் நிலை காணா

கோயில் குளம் என்றோ பள்ளி என்றோ
வேற்றுமை தான் உண்டா இயமன்
பள்ளி சென்று படித்து படித்து
பட்டம் பல பெறுவோம் என்று
பட்டயம் சொன்னோம்

பள்ளி சென்ற பாலகன்
மறுநாள் ஒன்றரைக்கு
பாடையிலே செல்கிறானே!
பாரினிலே இதைக் கேட்க
யார் தான் முன்வருவார்

வீ.வேலாநந்தன்
வீடுகையாண்டு

# தேசம் அழுகிறது

எங்கள் தேசம் அழுகிறது – தினம்
எம்மவர் உடலம் விழுகிறது – விழி
சிந்தும் கண்ணீர் சுடுகிறது – தமிழ்
விம்மிய மூச்சை விடுகிறது!
எங்கள் தேசம் அழுகிறது
எரிமலையாகி வெடிக்கிறது!
பள்ளிக்கூடம் அகதிமுகாம் – பசியால்
வாடிப்போகும் அகதி முகாம்
கொள்ளிக்கிங்கே பிள்ளையில்லை – தாய்
ஓலமே எங்கள் நாட்டில் எல்லை......
சத்தம் இல்லா அழுகைகள் – தமிழ்
சாதிக்கு மட்டும் தொழுகைகள்
நித்தம் நித்தம் வெடியோசை – எம்
குருதியில் கரையும் எமதாசை
பாலுக்கு பிள்ளை மனமேங்கும் – தாய்
பசியினில் கண்ணில் நீர் தேங்கும்
நாளுக்கு நாள் பெரும் விலையேற்றம் – நாம்
நடுத்தெரு வந்தோம் பிணநாற்றம்!
பழியை சுமந்த பல கூட்டம் – எம்
பாவ சிலுவை யார் சுமப்பார்

திருமதி பி கனேந்திரன்
முதலாம் வருடம்

# இனியொரு பொழுது?

குழந்தைகள் அழுகுரல்
தூக்கத்தைக் கெடுத்திடும்
நுளம்புகள் இசை மழை
காதினில் முழங்கிடும்
குழம்பிய மனமது
நினைவுடன் அலைந்திடும்
இன்னொரு பொழுதும்
முகாமினில் புலர்ந்திடும்.

தொலைந்த அந்நிம்மதி
எங்கென தேடிடும்
கலைந்த எம் கூட்டினில்
கனவுகள் சுழண்டிடும்
வரம்பினில் அறுகென
வாழ்வது அமைந்திடும்
வளம் தனை இழந்தே நம்
வாழ்வது தொடர்ந்திடும்.

காலைக் கடன் தீர்க்க
சாலை யோரம் தேடியங்கு
மூலை முடுக்கெல்லாம்
குந்தியே எழுந்து நின்று
ஆதாரம் ஏதுமின்றி
சுகாதாரம் ஏனோவென்று
வேதாந்தம் பேசும் நிலையில்
வெதும்பியே வாழுகின்றோம்.

மாற்றுடை ஏதுமில்லை
மாற்றவோர் மறைவுமில்லை
தேற்றுவார் யாருமில்லை
தேறவோர் உணவுமில்லை
வீட்டினில் விட்டு வந்த
வேண்டிய பொருட்கள் யாவும்
தேவையில் நினைவு வந்து
தேம்பிட வைக்குதையோ.

கூரையில் தடங்கலின்றி
மழமையுடன் வெயில் வரும்
குளிர்வாடையில் கரங்கள் எம்மை
கூசாமல் அணைத்துக்கொள்ளும்
குசினியும் வீடும் இங்கே
ஒன்றெனக் கலந்து நிற்கும்
குளிப்புகள் முழுக்குமின்றி
குலைந்த எம் வாழ்வு போகும்

ஆணுக்கும் பெண்ணுக்கும்
சமத்துவம் இங்குதான்
ஆதலால் அந்தரங்கம்
என்றேதும் இல்லைதான்
தீயிக்கும் பஞ்சுக்கும்
ஏற்படும் உறவுபோல்
பண்பாடு பாழ்பட்டு
பலியாகி வாழ்வு போகும்.

உறவென்றால் இதுவென்று
ஒரு திட்டம் கிடையாது
உறக்கத்தின் கொதுக்காக
ஓர் இடமும் இருக்காது
இரவென்ன பகலென்ன
அமைதிக்கு இடமேது
இது தான் எம் நிலையென்றால்
இதை விட வாழ்வேது?

விரும்பிய நாம் இங்கு
விருந்துண்ண வந்திட்டோம்
விதி விட்ட வழி என்று
விலத்தியா இருந்திட்டோம்
இனி என்ன முடிவென்று
எவர் சொல்லக் கூடுமோ
இன்னுமோர் நாளென்று
இது போலப் போகுமா?

- ந. ஸ்ரீதரன்
இரண்டாம் வருடம்

# சமய சமரசம்

ஐந்து வயது
அறியாப் பருவம்
அம்மன் கோயில் வெள்ளை மணல்
இன்று நினைத்தாலும்
சிரிப்பு வரும்
பூசாரி பூசை வைப்பார்
சிலிர்த்த ஆலமரம்
சிக்கு புக்கு ரயில் வண்டி
பஞ்சாமிர்தம் பார்த்ததும்
பறந்து வரும்
ஒரு முறையல்ல
பலமுறை வேண்டியும்
கடைசியில் கை நக்கும் படலம் தான்

சக்கரை பயறும்
தேங்காய்த் துருவலும்
அரிசிமாவில் அவித்த மோதகங்கள்
தலைக்கு இரண்டு தான்
எனக்கு மட்டும் நான்கு
முன்னால் இடக்கை
அடுத்தவன் தோள் தாண்டி
வலமாய் வலக்கை
கண்டு பிடித்து விட்டார்கள் காலப்போக்கில்

சந்திப்புக்கு பள்ளிக்கூடம்
சரசு ரீச்சர் சொன்னா
சமயங்கள் நாலாம், அடச்சே......
எங்கட ஊரில எல்லாம் இருந்தால்
எவ்வளவு சாப்பிடலாம்
கவலை தான் அப்போது

கானல் பயிர் தான்
ஆனால் கார் மேகம் தேடவில்லை
வேர்கள் நீர் தேட
வேதங்கள் தேவையில்லை

வல்லோர வறள் நிலத்தில்
முதல் நாள் மழைக்கு
மூன்றாம் நாள் காளான்களாய்
முளைக்கின்றன வினாக்கள்
மதங்கள் ஏன் பலவிதங்கள்
விடை தேடி விரைகின்றன வினாக்கள்
தொலைகின்றன கணங்கள்
ஆழ்மனதில் ஒரு புள்ளி
அகல விரிகின்றது
அப்படி ஒன்றுமில்லை
யாழ்ப்பாண பஸ் நிலையம்பயணத்துக்காய்
பஸ்வண்டிகள் பல!
பலகைகள் தான் வேறு
வந்த இடம் ஒன்றுதானே
அப்போது நினைத்தேன்........

ஆரம்பங்கள் வேறுதான்
அடைதல் ஒன்றுதானே
பாதைகள் வேறுதான்
பயணங்கள் ஒன்றுதானே
இடங்கள் வேறுதான்
இலக்கு ஒன்றுதானே
இறைவன் மனிதனைப் படைத்தான்
மனிதன் மதங்களைப் படைத்தான்
மதங்கள் மனிதரைப் பிரிக்கவில்லை
மனிதர்கள் மதங்களைப் பிரித்தார்கள்

திருமதி சசிகலா நவரத்தினம்
விடுகையாண்டு

## கைக்கூ...................கவிதைகள்

### பெற்றோர்
உலகிற்கு ஒளி கொடுக்க
வானிலிருந்து தீபம் போல்
எம் வாழ்விற்கு ஒளிதர
எமக்காய் வாழும்
இரு உள்ளங்கள்.

### மழை
ஆகாயம் கொண்ட காதலை
பூலோகம் ஏற்க மறுத்ததால்
ஆகாயங்கள் சிந்தும்
கண்ணீர்த்துளி!

### ரோஜாவின் முள்
அழகான காதலிலும்
ரணங்கள் அதிகம்
என்பதன் எச்சரிக்கை

### பனித்துளி
இலைகள் தலை கழுவிட
இறைவன் கொடுத்த
நீர் துளிகள்

### கண்ணீர்
அதிக சந்தோசம்
ஆழமான துக்கம் -எது
வந்தாலும் கூட வரும்
தோழன்

### கவிதை
யாரும் விதைக்காமல்
இதையத்தில் விளையும்
சொற்போர்......

### வெண்ணிலா
காலக் கணக்கில்
ஒளிந்து விளையாடும்
குட்டிக் குழந்தை

### இரவு
ஓடி ஆடி உழைக்கும்
மனிதனுக்கு ஓய்வு
தருவது

### நண்பன்
உயிரையே தியாகம்
செய்யும் உத்தமன்

### இலஞ்சம்
உண்மையைப்
புதைக்கும் - ஒரு
பாசாங்கு விளையாட்டு

செல்வி A. Q. குலாஸ்
1ம் வருடம்

# சுனாமிப் பேரலையின் கோரத் தாண்டவத்தால் விடை காணா வினாக்களாக!

சிட்டுக் குருவிகளாய்
சிறகடித்த எம் பள்ளித் தோழர்களே
ஒரு நொடிப் பொழுதில் அள்ளிச் சென்றதுவோ
அந்த சுனாமி அரக்கப் பேரலை!

இரண்டாயிரத்து நான்கு
மார்கழி இருபத்தாறு
மானிடப் பிறப்பிற்கு
மனங்கருகி இருளடைந்த நாள்!
அன்றைய தினத்தில்
மலை போல் வந்த
ஆழிப் பேரலைக்கு
மனங்களின் வேண்டுதல்கள்
கேட்கவுமில்லையோ?

ஏய் கடலே!
நாம் படித்த பாடசாலை எங்கே?
நாம் வணங்கிய கோயில்கள் எங்கே?
நாம் வாழ்ந்த வாழ்விடங்கள் எங்கே?
எம்மோடு உறவாடிய நண்பர்கள் எங்கே?

உடமைகள் பறித்தாய்
உறவுகளைப் பறித்தாய்
உனக்கென்ன தீங்கு செய்தோம்
இப்பாரினில் வாழும்
உன் பங்காளிகள் நாம்
ஏன் எமக்கிந்த சோதனை – நீ
கொந்தளித்து வற்றி விட்டாய் – ஆனால்
எம் கண்ணீர் கொந்தளிப்பு என்றுதான் வற்றிவிடும்?

செல்வி க.சுமி
விடுகையாண்டு

# நூல்

என்னுள்ளே உயிர் இருக்கு
எனக்குள்ளே மனம் இருக்கு – நீ
தேடும் போதுதான்
உன்னிடம் நான் வருவேன்

உதிர்த்திடும் சூரியன் நான்
உனக்குள்ளே வருவதற்கு
பதித்திடுவாய் மனதிடத்தே
பதிந்திடுவேன் உனக்குள்ளே

உறங்கிடும் நேரமெல்லாம்
உன்னருகே இருப்பதற்கு
மடித்து வைத்திருப்பாய்
மறந்திடாமல் இருப்பதற்கு

பிஞ்சு வயதில் வருகிறேன்
ஐந்து வயதில் தொடர்கிறேன்
நெஞ்சு நிறைவிற்காய்
நேரில் நான் வருகிறேன்

பள்ளி எனும் பருவத்தில் தொடங்கி
பல்கலைக்கழகம் வரை
என்னை நீ சுமந்திடுவாய்
உன்னருகே வருவதற்கு
தருணம் உன்னைத் தள்ளும்
மரணம் உன்னை வெல்லும்
என்னை இங்கு வெல்வதற்கு
உன் ஞாபகத்தில் இருந்திடுவேன்.

நயினைச்சுரேஸ்
விடுகையாண்டு

# மனித நேயத்தை வளர்ப்போம்

தாய்த் தமிழோடு உங்கள்
சகோதரியின் தமிழ்த்தாய் வாழ்த்துக்கள்!

வரலாறுகள் முற்றுப் பெற்றதில்லை நண்பா!
என்றும் முற்றுப்பெறப் போவதும் இல்லை.

சர்வதேச ஜனநாயகம் என்றும்
ஆதிக்க அமெரிக்கர் செய்யாத
இனத்துடைப்பினையா
சிங்களம் அரங்கேற்றிவிட்டது
அவளை மன்னித்து விடு!

கொரியா மீது யப்பான் மேற்கொள்ளாத
கற்பழிப்பினையா இனவாதம்
மேற்கொண்டு விட்டது!
செம்மணிகள் மறக்க முடியாதவை தான்
அதனையும்
உகண்டா மிஞ்சிவிட்டதடா
சிங்கத்தை மன்னித்துவிடு.

வெஞ்சமரின் வரிகள் எல்லாம்
வெந்து தணிந்து முத்திவெடித்து சிங்களத்தை
மன்னித்துவிட்டதடா
நீயும் அவர்களை மன்னித்து விடு
நண்பா.... உன்னுடன்
சகிப்புத் தன்மை கொண்ட சமுதாயத்தைக்
கட்டியெழுப்பு
இரத்தக் காட்டாற்றில் ஊனம்
பிணங்களைத் தவிர்த்துக் கொள்

எமொரியா கண்டத்தின் மூத்த
குடியடா நீ..........
உலகை வழிநடத்திய மூத்த
மொழியடா – தமிழ்
எங்கே நீ இன்னும் ........... இன்றும்!

குமரித்தமிழ் இன்று ஊசலாடுவது
உன்னிடத்தில் மட்டும் தான்
வர்ணனைகளில் இருந்து தமிழை விடுதலை செய்து
அறிவியல் தமிழாக்கு!

இன்றும் தான் யுத்தம் வேண்டாம்
இழந்தது போதும் பிரிவுகள் காணும்
கடவுளை மட்டுமின்றி மனிதத்தையும் நேசி!
மனிதனை அழித்து கடவுளை காட்டாதே
உயிர்களை அர்ச்சித்து
பெயர்ப்பலகை போட்டது காணும்
உனது சமுதாயத்தைச் செழிப்பாக்கு!

பொங்கி எழுவதை விட்டெறிந்து
எதிரிக்கும் மனிதத்தைப் புகட்டு
விதி என்று சொல்லி வீணர்கள் வளர்ந்தது போதும்
மடமையை ஒழித்து மூடக்கொள்கைகளைத் தகர்த்து
மனிதனை மனிதனாக மாற்றும்
கொள்கையை உருவாக்கு

உழைப்பினை உணவாக்கு
அடுத்த வானில் நீயாகு
உள்ளதே உள்ளதென்று நிமிர்ந்த
நெஞ்சோடு நீ தூயவனாய்
மனிதத்திற்கு மட்டும் தலை வணங்கு
நீ தான் மகாத்மா! ஏன்
நீதான் கடவுள்
உலகத்தின் அத்தியாயப் பதிவேட்டில்
பேனாக்கள் உனக்காக காத்துள்ளது
எவர் பாதையிலும் நீ செல்லாதே
உனது பாதையில் மக்களை செல்லவை!

திருமதி. சசிகலா ரவிச்சந்திரன்
விடுகையாண்டு

# அகதி முகாம்

அவனியில் மனித குல வாழ்க்கை
உயர்வினை நாடுமென்றோ! இல்லை
உள்ளத்தை உருக்குலைக்கும்
உயரிய வாழ்வாக மண்ணில்
இன்று அகதிமுகாம் நிலையாயிற்று

கருவறையின் இருப்பிடமாய்
கதிரவனின் வதிவிடமாய்
அமைதி என்ற போர்வையில்
கதிகலங்க வைப்பது இவ்விடமே

இலங்கை என்னும் எமது நாட்டில்
இலை மறைகாய் என்று கூறாமல்
வெள்ளிடை மலை போல் - எங்கும்
வெளிச்சம் தருவது இந்த அகதிமுகாம்

உண்ண உணவின்றி தடுமாறி
உடுப்பதற்கு உடைக்கு அலை மோதி
வண்ணக் கனவிற்கு தடைபோட்டு
வாடிய முகத்துடன் வதங்குமிடம் அகதிமுகாம்

எதிர் காலம் என்ன ஆகுமோ!
வளரும் சந்ததி என்ன செய்யுமோ!
யாதும் அறியா நிலையாய்
அல்லலுறும் மானிடருக்கு
இம்மண்ணில் விடிவுண்டோ!
அது எப்போ வரும்!

திருமதி ல.தாவீது
(1ம்வருடம்)

## இன்றுவரை கலாசாலையை பரிணமித்த அதிபர்கள், உப அதிபர்கள், பிரதி அதிபர்கள்

| வருடம் | அதிபர் | உபஅதிபர் | பிரதி அதிபர் |
|---|---|---|---|
| 1979.06.02-1984 | திரு. அ.வ. பாலசுப்பிரமணியம் | செல்வி. க. பரமேஸ்வரி | - |
| 1984 | திரு. பி. பரம் | செல்வி. க. பரமேஸ்வரி | - |
| 1984 - 1987 | திரு. காரை சுந்தரம்பிள்ளை | செல்வி. க. பரமேஸ்வரி | - |
| 1987 - 1991 | திரு. ந. நடராஜா | செல்வி. க. பரமேஸ்வரி | - |
| 1991 - 1992 | திருமதி வ. மாரிமுத்து | செல்வி. க. பரமேஸ்வரி | செல்வி. பி. நடராஜபிள்ளை |
| 1993 - 1994 | செல்வி. பி. நடராஜபிள்ளை | செல்வி. க. பரமேஸ்வரி | திரு. சு. முரளிதரன் |
| 1995 - 1996 | செல்வி. க. பரமேஸ்வரி | - | திரு. சு. முரளிதரன் |
| 1996 - 1998 | திரு. மு. கணபதி | திரு. ப. ஸ்ரீதரன் | - |
| 1998 - 1999 | திரு. சு. முரளிதரன் | திரு. ப. ஸ்ரீதரன் | திரு. செ. ஜெயக்குமார் |
| 2000 - 2002 | திரு. செ. ஜெயக்குமார் | திரு. ப. ஸ்ரீதரன் | - |
| 2002 - 2004 | திரு. செ. ஜெயக்குமார் | திரு. எஸ். இதயராஜா | திரு. ப. ஸ்ரீதரன் |
| 2004 - 2006 | திரு. செ. ஜெயக்குமார் | - | திரு. ப. ஸ்ரீதரன்<br>திருமதி. ம. சந்திரலேகா கிங்ஸ்லி |
| 2007 இன்றுவரை | திரு. செ. ஜெயக்குமார் | | திரு. ப. ஸ்ரீதரன்<br>திருமதி. ம. சந்திரலேகா கிங்ஸ்லி |

# கலாசாலையில் கடந்து போன இருபத்தொன்பது வருடங்கள்

| | |
|---|---|
| 1979.02.06 | பண்டாரவளை சிங்கள ஆசிரியர் கலாசாலையில் தமிழ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டமை. |
| 1980.08.06 | தலவாக்கலையில் ஆசிரியர் கலாசாலை ஆரம்பிக்கப் பட்டமை. |
| 1944.05.30 | கலாசாலையில் முதல் அதிபர் திரு.பாலசுப்பிரமணியம் அவர்கள் காலமானார். |
| 1986.10.06 | உடற்கல்வி விரிவுரையாளர் ந.பத்மநாதன் கொலை செய்யப்பட்டமை. மாணவர்கள் மூன்று மாத பயிற்சியினை பேராதனை ஆசிரிய கலாசாலையில் மேற் கொண்டமை. |
| 1988.03.14 | யதன்சைட் தோட்ட தொழிற்சாலைக்கு கலாசாலை மாற்றப்பட்டது. |
| 1999ல் | கொமர்ஷலில் காணி கிடைக்கப்பெற்றது. |
| 2000.09.25 | நிரந்தர கட்டிடத்துக்காக கலாசாலை காணியில் (கொமர்ஷல்) கௌரவ எஸ்.ஆர்.எம்.ஆறுமுகம் தொண்டமான் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. |
| 2002.11.01 | கௌரவ எஸ்.ஆர்.எம்.ஆறுமுகம் தொண்டமான் அவர்களால் புதிய கல்லூரி திறந்து வைக்கப்பட்டது. |
| 2004.01.05 | உத்தியோக பூர்வமாக புதிய கல்லூரி ஆரம்பிக்கப் பட்டது. |
| 2004.02.06 | (06,07,08) கலாசாலையில் வெள்ளி விழா நிகழ்வுகள் மூன்று நாட்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. |
| 2005.07.07 | நிர்வாக கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. |
| 2006.12.06 | நவீன மாதிரி வகுப்பறை கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. |
| 2008.05.29 | நவீன கட்டிட திறப்பு விழா செய்யப்பட்டது. |

## இன்றுவரை கலாசாலையில் பரிணமித்த பண்புமிக்க மாணவ தலைவர்கள்

| | |
|---|---|
| 1979 | திரு. ஜே. சி. டேவிட்பிள்ளை |
| 1980 | திரு. கே. முத்துவேல் |
| 1981 | திரு. எஸ் கோபிநாத் |
| 1981 | திரு. எஸ் விநாயகமூர்த்தி |
| 1982 | திரு. கே. கிருஸ்ணன் |
| 1983 | திரு. வி. குரூஸ் |
| 1984 | திரு. பீ. எம். ராமையா |
| 1985 | திரு. கே. குமாரவேல் |
| 1986-87 | திரு. டீ.வடிவேல் |
| 1988-89 | திரு. கே. யசோதரன் |
| 1990 | திரு. டீ.பென்சமீன் |
| 1991 | திரு. பீ. விஸ்வநாதன் |
| 1992 | திரு. ஜீ. ராஜரட்ணம் |
| 1993 | .............................. |
| 1994 | திரு. ஆர். அரியராமர் |
| 1995 | திரு. எஸ். கே. ஆனந்தராஜ் |
| 1996 | திரு. எம்.வரதராஜ் |
| 1997 | திரு. எஸ். பாலசேகர் |
| 1998 | திரு. ஆர். ரெங்கசாமி (முதலாம் பருவம்) |
| 1998 | திரு. எஸ்.பீ. முரளி(இரண்டாம் பருவம்) |
| 1999 | திரு. எஸ். பீற்றர் றோய் கெப்ரியல் |
| 2000 | திரு. எம்.மு. வேந்தன் |
| 2001 | திரு. ஆர். பிரபானந்தன் |
| 2002 | திரு. எஸ். சுரேஸ்காந்தன் |
| 2003 | திரு.எஸ். சுதாகரன் |
| 2004 | திரு. வீ.உதயகுமார் |
| 2005 | திரு. ஜீ.ஜோர்ஜ் |
| 2006 | திரு. ஏ. ஆனந்தராகவன் |
| 2007 | திரு. A. அஜந்தன் |



# Name & Address





Group I

## Academic Year -2006-2008

**Mr.K.Piratheef**
No.110, Main Street,
Periyaneelavanai - 01
Kalmunai (E.P)
T.P:- 077-9222669/060-2675945.

**Mrs.T.Manivasan**
C/o K.Jeyaradnam
Kantharoddi Road,
Chandilipay,
Jaffna.
T.P:- 077-5934746.

**Miss.T.Manchula**
Vadduvakal,
Mullaitivu.

**Miss.K.Sumitha**
Ward No.04,
Puthukkudiyiruppu,
Mullaitivu.
T.P:- 077-6567854.

**Mrs.S.Emalda Nevismary**
Ward No.10, Delft,
Jaffna.
T.P:- 060-2516558.

**Mrs.F.H.D.D.Rihana**
No.185, Main Street,
Kannattota.
T.P:- 077-9744895

**Mrs.S.Leelawathy**
No.03, First Lane,
Paddanichoor,
Mannar Road,
Vavuniya.
T.P:- 077-5150654.

**Ms. V.Tharshiny**
Navalar Street,
Mulliyawalai,
Mullaitivu.
T.P:- 077-5487122.

**Miss. A.Pushparany**
104/56, Sangamitha Mawatha,
Colombo - 13.
T.P:- 077-5788249/011-2384860

**Mr. S.Nanthapalan**
Kalnaddinakulam,
Vavuniya.
T.P:- 077-9053541/060-2241484

**Mr.T.Jegatheesan**
10/2 First lane,
College Road,
Poonthoddam,
Vavuniya.
T.P:- 077-9359274/024-2224434

**Miss.C.Thenmoly**
No.03, Radella Sbort,
Naun -oya
T.P:- 072-3556290/0525613710

**Miss.S.Thusiyavathany**
No.02,Mathuraiveeran
Kovil Lane, Maharambikulam,
Vavuniya.
T.P:- 078-6147683/024.5670016.

**Miss.V.Sutha**
No.154 Shandapuram,
Kilinochchi.
T.P:- 077-9480257.

**Miss.M.S.Noory**
No.10, Hewaheta Road,
Deltota.
T.P:- 071-3385889/081.5622612.

**Mr.V.Siventhiran**
No.215/15B, Thirunavatkulam
Thandik kulam
Vavuniya.
T.P:- 077-5381137.

**Mr.M.Shantharooban**
"Valarmathy"
Karaveddy East
Karaveddy.
Jaffna.

T.P:- 077-3598489

**Mrs.S.Thavamakalratha**
No.14, Udayanagar West,
Kilinochchi.
T.P:- 077-1536158.

**Mrs. S.Logeesan**
Word No.04, Mulliyawalai,
Mullaitivu.
T.P:- 077-5157302

**Mrs. P.Logeesan**
Word No.04,Mulliyawalai,
Mullaitivu.
T.P:- 077-5157302

**Miss. K.Jegatheeswary**
Thanniroottu,
Mulliyawalai.
T.P:- 078-6233021

**Mrs.R.Arutselvi**
No.49, Mani Street
Hali-Ela
T.P:- 060-2646902/077.6079182

**Mrs.J.Pathmawathy**
36/172, Sumathagama,
Trincomalee.
T.P:- 077-9474423.

**Miss.J.Mary Sujatha**
Josephvaz Nager,
Thoddavelly,
Mannar.
T.P:- 0776687465.

**Miss.S.Susikala**
Gonakelle L.D, 10th Mile Post,
Passara
T.P:- 078-6233039.

**Ms.S.Lumina Silva**
Kovankullam
Nanattan,
Mannar.
T.P:- 077-9046880/060.2232709.

**Ms.S.Rajhawathany**
Ampalveethy
Mulliyavalai,
Mullaitivu.
T.P:- 078-6300558.

**Ms.M.Susikala**
Darawella Lower Division,
Dickoya.
T.P:- 051-2224956.

**Ms.K.Chandraramani**
Malar vasa ,
Gurutalawa.
T.P:- 072-5269599/071.5422295.

**Miss.S.Antanat Rusha**
No.108,Gandhinagar,
Cheddikulam Vavuniya.
T.P:- 077-4384871/024.5670031

**Mrs.K.Santhamoorthy**
No.18, Mannar Road,
Nelukkulam
Vavuniya.
T.P:- 060-2240176/077.4317108.

**Miss.V.Suganya**
1st lane, Mathavuvaiththa Kulam,
Vavuniya.
T.P:- 0777-049606.

**Miss.N.M.F.Nihara**
Ulpatha Pitiya,
Kiula,
Matale.
T.P:- 071-3430599.

**Miss. T.Seethadevi**
49/80D Pillaiar kovil road,
Kurumankadu,
Vavuniya.

**Mrs.S.Vishvanathan**
Aruna mahal,
No.53,Elkaduwa Road,
Wathegama.
T.P:- 077- 3628049.

**Mr.Rupaa Nadarajah**
9/33, Vihara road,
Trincomalee.
T.P:- 026-2220750

**S.Pathmasri**
Periyar kulam,
poonthoddam
Vavuniya.
T.P:- 077-9234171
024.4900555.

# Group II
## Academic Year -2006-2008

**Mrs.S.Jayatharanlambert**
Ward No.03,
Vankalai,
Mannar.
T.P:- 060-2230432.

**Miss.A.Arulmalar Raji**
Manarkudiyirappu,
Mullaitivu.
T.P:- 077-9912813.

**Miss.Vinitamaheswary John**
No.32/10, Hosptal Road,
Kandy.
T.P:- 077-5427903.

**Mrs.M.Y.F.Azmila**
Mosque road,
moragolla,
Ibbagamuwa.
T.P:- 077-9826258.

**Mrs.S.Sivakala**
Maragala Division,
Monargala.
T.P:- 077-4417687/077-9808283.

**Mrs.P.Bamah**
No.280/3rd,Mile post,
PassaraRoad,
Badulla.

**Mrs.S.Umadevi**
No.02, Needwood Estae
Haldummulla

**Mrs.K.Sivakumaran**
No.218/2 Wolfendhal Street
Colombo - 13.

**Miss.S.Rama**
Vadduvakal,
Mullaitivu.
T.P:- 077-4 970795.

**Mrs. B.Atheesan**
No.06, 6th lane Kovil PuthuKulam
Vavuniya.
T.P:-024-2224474.

**Miss.Marie sutharshine yogeswaran.**
No.383,Josepiyan,
Rambaikulam
Vavuniya.
T.P:- 024-2224396.

**Miss.Kaladarshini Balashundram**
No.913 Srijayanthi Mawatha,
Hunupitiya Wattala.
T.P:- 077-3412523.

**Mrs.R.Rajenthiny**
Karuralankandal
Oddusuddan,
Mullaitivi.

**Mr.R.Samsunnissa**
No.79, Bogasthenna road,
Middieclass
Hali-Ela.
T.P:- 055-5783205.

**Mr.P.Hatheesan**
Unnappulavu,
Mullaitivu.
T.P:- 077-9179301.

**Mr.A.Ajanthan**
Vattappalai ,
Mulliyawalai
Mullaitivu
T.P:- 077-9359268.

**Miss.S.Thanushiya**
No.19, Soya lane,
Jaffna road,
vavuniya.
T.P:- 024-2223208/077.9228668.

**Mrs.J.R.Croos**
No.25, Main road, Pettah.
Mannar.
T.P:- 077-9044325.

**Mr.S.Santhamoorthy**
PuthuKulam,
Kanagarayan Kulam,
Vavuniya.
T.P:- 078-6233043.

**Miss.S.Kirishanthy**
Kangaraththina puram Leftband.
muththaijankaddu, oddusuddan.
T.P:-072-5240193.

**Mrs.Sivagowry Mogan**
No.145/01, Suduganga road,
Kaluthawala Matale.
T.P:-0775740174.

**Mrs.A.Ameenabeebi.**
School lane, Kandakkudu,
Talawil post,
puttalam.
T.P:- 077-9996891.

**Mr. S.Thiyagaraj**
Hellbodde Katukitula,
Kotmale.
T.P:-071-5109549.

**Ms.A.Lisa**
Kaddayadampan,
Madhu road,
Murunkan,
Mannar.
T.P:- 060-2231595.

**Miss.D.Anatsuganthini**
No.18, Iyanar puram,
Kilinochchi.

**Mrs.V.Suganthi**
Sammalankuam,
Oddusuddan.
Mullaitivu.
T.P:- 0242223208/072.5240191.

**Mrs.K.Kirupa**
Samalan Kulam,
Vavuniya.
T.P:-078-6259717.

**Mrs.E.Sutharsini**
First lane Mathavuvaiththa Kulam,
Vavuniya.
T.P:-078-6418235.

**Mrs.P.Jesudasan**
No.478/2A, Cyril C.Perera Mw,
Colombo - 13.
T.P:- 077-5245034.

**Mrs.L.Sasikala**
No.05, Kanthinagar ,
Cheddi Kulam,
Vavuniya.
T.P:- 078-6579896.

**Mr.S.Suventhiran**
No.95/34G, First Lane,
Church Road
Vepan Kulam,
Vavuniya.
T.P:- 077-6687826.

**Mr.S.Sivabalan**
Kidachoori,
Sasthirikulan Kulam,
Vavuniya.
T.P:- 077-6728215.

**Mr.R.Subenthiran**
V/Muruganoor Saratha Viddiyalayam,
Vavuniya.
T.P:-077-5442182.

**Mr.S.Bakirathan.**
No.65, Srinagar,
Poonthoddam,
Vavuniya.
T.P:-077-6258783.
072-6287463/071-3573210.
078-6205278.

**Miss.K.Kamaladevi**
No.11,Road Shanthapuram,
Kilinochchi.

Mrs. P.Jencyquinta
Arasapuram,
Poonakary,
Kilinochchi.
T.P:-077-9773422.

**Mrs.T.Parameswaran**
Maharambai Kulam,
Vavuniya.

**Mr.N.Sritharan**
Mulliwakkal East,
Mulliwakkal,
Mullaitivu.
T.P:- 071-6264031.

**Mrs.J.Amuthini**
Anbu Valipuram 17/24,
Tringomalee.
T.P:-077-4043048.

**Mrs.B.Thavarasa**
1st Cross, Street
Muthaliyar kulam,
Cheddi kulam.

## GroupIII

## Academic Year -2007-2008

**Mr.M.Jayakanthan**
No.124, Kanthapuram
Kilinochchi.
T.P:- 078-5916764.

**Mr.S. Jenatravindran**
07th Vaddaram,
Puthukkudiyiruppu.
T.P:- 077-4920146.

**Mr.V.Velananthan**
kannaginagar
Visvamadu.
Kilinochchi.
T.P. : 021-2285721

**Mr.N.Suresh**
Amman Road,
Anantha puram,
Kilinochchi.

**Mr.Y.Suthaskaran**
Aththai Madduvilnadu East,
Poonakary,
kilinochchi.
T.P:- 077-9782395.

**Mr.P.Sathees**
30/1, Thiruvaiyaru
kilinochchi.
T.P:- 077-9076707.

**Mr.K.Kirisangar**
Meesalai North,
Meesalai
T.P:- 078- 6436019.

**Mr.A.Thayaparan**
No.27, Ampalapperumal Kulam,
Akkarayan.
T.P:- 078-5963014.

**Mr.S.Ravichandran.**
Thunukkai Road,
Maankulam.

**Mr.V. Jegatheswaran**
Puliyam Phokkanai Santhy,
Periyakulam Kandawalai,
Kilinochchi.
T.P:- 078-6529656.

**Mr.P.Jutsiya Rashmy**
Suruvil Road ,
Urkavathurai.

**Mr.S.Ganesanathan**
Periya Palai, Palai
Kilinochchi.

**Mr.S.Prakash**
154th Kaddai,
Murukandy
Kilinochchi.
T.P:-077-4957079.

**Mr.M.Ajantha**
146, Kanakampikai Kulam,
Kilinochchi.
T.P:- 077-5594773.

**Mr.K.Kirubakaran.**
No.09, Kiranchi sivapuram,
Poonakary,
Kilinochchi.

**Mr.J.Jeyaroopan**
Siththan Kurichchy,
Poonakary,
kilinochchi.

**Miss.S.Kalaiveeranalini**
Kachchai South,
Kodigamam,
Jaffna.
T.P.:- 077-6791103.

**Mr.S.Navarathnam**
Shoranpattu Palai,
kilinochchi.
T.P:-077-9906832.

**Miss.R.Kalaiyarasi**
No.373/7, Tharmapuram,
Paranthan.
T.P:-078-6255415.

**Mr.M.Vasanthakumaran.**
No.48/1, Valathukarai
Muthayan Kaddu,
Oddisuddan.

**Mr.C.Saravanabavananthan**
No.20, Mathini Kiramam,
Pallavarayan kraddu,
Kilinochchi.

**Miss.S. Udhayakumary**
Karukkaiteevu
Poonakary,
Kilinochchi.

**Mr.V.Thomas**
Kumulamunai,
Kilinochchi.
T.P. : 021-2224261.

**Mr.N.Suresh**
Amman Road,
Anantha puram
Kilinochchi.

**Miss.K.Punithamalar**
No.470, Kariyalai Nagapaduvan,
Mulankavil.
T.P:- 077-4014571.

**Mr.S.Kanesalingam**
Shoranpattu Palai,
kilinochchi.
T.P:- 071-5141323.

**Miss.K.Suganya**
Karippaddamurippu,
Mankulam.
T.P:- 078- 6532397.

**Miss.A.Irinshopasini**
Kiranchi Sivapuram,
Poonakary.
T.P:- 078-6477523/060-2231958.

**Mr.K.Karunakaran**
No.15/3, Valathukarai,
Muththayan Kaddu.

**Mr. J. Srikantha**
No.141, Thirunagar
Kilinochchi.

**Mr.M.Bakeerathan**
No.03, Navalnagar,
Kalmadu
Kilinochchi.

**Miss.S.Thavapputhalvi**
No.05/9, Kudiyiruppu,
Vavuniya.
T.P:- 077-4107435.

**Mr.R.Kirubagaran**
Mankulam Road,
Oddisuddan.
T.P:-078-6525969.

**S.Sujitha Thamotharampillai**
No.22, Service Road,
Kanakampikai Kulam.
T.P:- 077-4485367

**Miss.P.Sujitha**
No.166, Vanniyasingam Road,
Ananthapuram,
Kilinochchi.
T.P:-078-6579226.

**Mr.J. Santhakumar**
No.127/3, Valathukarai
Muthayankaddu.
T.P:- 077-4348416.

**Miss.p.Thevaki**
Jeyapuran south,
Pallavarayankaddu,
T.P. : 077-9902326.

**Mr.T.Sanmugalingam**
No.54/1, Edathuykarai
Muthayankaddu
Oddisuddan.

**Miss.M.Srivilasini**
No.439, Thirunagar,
Yogapuram,
Mallavi.

**Mr.Y.Suthaskaran**
No.72, Poonthoddam,
Oddisuddan,
Mullaitivu.

**Mr.L.Thavatselvam**
No.30, Veedduthiddam, Palinagar
Vavunikkulam.

**Mr.K.Sathiyanesan**
No.430, Yogapuram,
Mallavi.

# 1st Year

## Academic Year -2007-2009

**Mrs.R.S.Fernando**
No.160, Newnham Squre
Colombo -13.
T.P:-011-2342761.

**Mrs.R.Kishanthi**
No.27,Argel Road,
Kudaoya,
Hatton.
T.P:- 060-2510313.

**Mrs.M.R.Croos**
Thalaimannar Station,
Thalaimannar.
T.P:- 060-2233497.

**Mrs.S.Premila**
Pattim Mannar.
T.P:- 071-3417860.

**Mrs.C.R.I.Sudarshini**
No.266 New Street,
UppuKulam.
Mannar.
T.P:- 077-6353967.

**Mrs.S.Sothinathan**
No.68, AsiKulam
Vavuniya.
T.P:- 077-6172656.

**Mrs.P.Kanendran**
No.57/4, Athivinayagar Kovil Road
Vairavapuliyan Kulam,
Vavuniya.
T.P:-077-4336961.

**Mrs.N.M.Sudharsi**
No.137/28, Devisiripura
Thalawakella.
T.P:-060-2532236.

**Mrs.S.Sivakumar.**
Semmanthivu,
Murungan,
Mannar.
T.P:- 060-2231420.

**Miss. M.Nalini**
Alavakkai,
Murungan,
Mannar.
T.P:-077-9362970.

**Mrs.T.Vicneshwaran**
No.102, Muthaliyarkulam,
Cheddi Kulam.
T.P:-060-2242165.

**Mrs.T.Aradhana**
No.467, Nuwaraeliya road,
Pussellawa.
T.P:- 060-2810441.

**Mrs.S.Manonmaney**
No.70/C/2, Janaudana Gammana,
Qpata Road,
Ksahawatta
T.P:- 045-4903660.

**Mrs.C.E.Coonche**
Mullikulam Marichukkady,
Mannar.
T.P:-060-2236172.

**Mrs.I.X.S.Dias**
Mullikulam Marichukkady,
Mannar.

**Miss.S.Suranutha**
No.11 1/1 A, Cambpell Place,
Dehiwala
T.P:- 011-2738492.

**Mrs.Y.Thaveethu**
Kalnaddinakulam,
Vavuniya.
T.P:- 077-4200357.

**Miss.M.Priya**
No.23, Uruthiramawatha
Colombo - 06.
T.P:- 077- 4053015

**Mrs.J.Kalistra**
Isaimalaithaivu,
Murunkan.

**Miss.K.Shanmugawathani**
No.240/2, Garagoda,
Yatiyanthota.
T.P:- 078-6255413.

**Mrs.M.A.U.Habeeba**
Hairiyanagar,
Pulmoddai-01.
Tringomalee.
T.P:- 071-5734216.

**Mrs.P.Yogeshwary**
Bangalow Division.
Hopton.
Badulla.
T.P:- 060-2560241.

**Mrs.S.E.Romildan**
No.08, Psalai,
Mannar.
T.P:- 071-6683855.

**Mrs.N.J.Kulas**
**Word** No.04, Pesalai,
Mannar.
T.P:- 060-2231898.

**Miss.A.Q.Kulas**
**Word** No.03, Pesalai,
Mannar.
T.P:- 060-2233067.

**Mrs.W.M.J.Peries**
**Word** No.03, Pesalai,
Mannar.
T.P:- 060-2230644.

**Mrs.N.Ganeshwaran**
No.37/1,Ganesapuram,
Kilinochchi.
T.P:- 060-2233117.

**Mrs.M.V.S.Santhiyapillai**
Achankulam Nanattan
Mannar.
T.P:- 077-5120491

**Mrs.Paragaran**
Left band, Muthayankaddu,
Mullaitivu.

**Mrs.K.Aravinthan**
Samippulam Nallur,
Poonagari
kilinochchi.
T.P:- 077-4949180.

**Mrs.K.Ratnakumar**
Karukaithivu Poonagari,
Kilinochchi.

**Mrs.S.Varathan**
Word No.9 Anthoniyar Road,
Puthukudiyippu
Mullaitivu.

**Mrs.K.Ranjithamalar**
Samippulam Nallur,
Poonagari,
Kilinochchi.

**Mrs.J.Udhayakumar**
Ward No.7, Sivanagar,
Puthukkudiyiruppu,
Mullaitivu.

**Mrs.J.Srikumaran**
Kanagapuram,
Kilinochchi.

**Miss.M.Priya**
No.23, Uruthiramawatha
Colombo - 06.
T.P:- 077-4053015

**Mrs.A.N.Gamal Joicy**
Thenudaiya,
Thituketheeswaram,
Mannar.
T.P:-077-4334180.

**Mrs.S.Sivakumar**
Murukandy,
Kilinochchi.

**Mrs.J.Parathan**
Sinthamani Pillaiyar Kovil Road,
Vavuniya.

**Miss.R.Rajeshwary**
Nedunkandal,
Adampan,
Mannar.

**Miss.B.Chandrawathani**
Mungilaru,
Udaiyarkaddu,
Mullaitivu.

**Mrs.G.Vinothini**
No.5, 1st cross Street,
Rathnapuram,
Kilinochchi.

**Mrs.S.Sasikumar**
Ananthapuram,
Puthukkudiyirupu
Mullaitivu.

**Miss.A.Jahappu**
Thevanpiddy,
Vellankulam,
Mannar.

**Mr.N.Senthilnathan**
No.175,
Akkarayankulam,
Kilinochchi.

**Mrs.S.Nanthakumar**
212/2, Murasumoddai
Paranthan,
Kilinochchi.

# மனம் திறந்து நவில்கின்றோம் நன்றி

*குன்று நடுவே தலைநிமிர்ந்து*
*நிற்கும் எம் அன்னைத் தாயே*
*எம்மை உன் பிள்ளைகளாய் ஏற்று*
*கலைகள் பல அள்ளி வழங்கிட்டாய்*
*அதுதானோ என்னவோ நேசிக்கின்றோம் உன்னையே*

பல நதிகள் ஊற்றெடுத்தாலும் ஆண்டு தோறும் ஊற்றெடுக்கும் எம் கலையருவியே புதிய பல விடயம் கொண்டு படைத்திட்ட காத்திரமான படைப்புகளையும் கொண்டு 17வது மலராய் மலர்ந்திருக்கின்றாய்.

இன்றைய இன்னல்கலையும் துயர்களையும் கொண்டும் உள்ளக்கிடக்கைகளை ஏட்டிலே வடித்து சுடர் விளக்காய் ஒளிரவிட்ட அனைத்து உள்ளங்களுக்கும் கனிவுடனே நன்றி நவிழ்கின்றோம்.

சிறுவர் எம் தகவல் கண்டு ஆசியுரை வழங்கி ஆலோசனைகள் பல கூறியும், பிரதம அதிதிகளாய் வந்தமர்ந்து எம் மனம் குளிரவைத்த பிரதம அதிதி அவர்களுக்கும், எம் நூலினைச் சீர்தூக்கி நூல் விமர்சனம் செய்தவர்களுக்கும், ஒருவரில் ஒருவராய் இருந்து தோளோடு தோள்நின்றுழைத்த பண்புமிக்க எம்முதல்வர், பிரதிமுதல்வர்கள், பொறுப்பு விரிவுரையாளர்கள், பகுதிநேர விரிவுரையாளர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி உரித்தாகட்டும்.

நூலின் மலருக்காய் ஆக்கங்களை தந்துதவிய ஆசிரிய மாணவர்களுக்கும், அட்டைப்படம் அழகுடன் வடிவமைத்து தந்த ஆசிரிய மாணவன் நந்தபாலன் அவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த கல்வி சாரா ஊழியர்களுக்கும் நன்றி நவிழ்கின்றோம்.

ஆக்கங்கள் தந்துதவியும் எம்மை ஊக்கப்படுத்திய பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களுக்கும், முதுநிலை விரிவுரையாளர் தை. தனராஜ் அவர்களுக்கும், நூலாக்கத்திற்கு ஆசிச்செய்தி வழங்கி வாழ்த்துரையளித்த பிரதம ஆணையாளருக்கும் மேலும் ஆசியுரை வழங்கிய கல்லூரி முதல்வர், பிரதி முதல்வர்கள், பொறுப்பு விரிவுரையாளர், மாணவப் பேரவைத் தலைவர், செயலாளர் மற்றும் நல்லபல ஆக்கங்கள் கொடுத்துதவிய விரிவுரையாளருக்கும், ஆசிரிய நண்பர்களுக்கும் நன்றி நவிழ்கின்றோம்.

கலையருவி நூலினை அழகுடன் செம்மையாக அச்சிட்டு தந்த நியு ஹில்பிரைன் அச்சக உரிமையாளர் அவர்கட்கும், கணனி வடிவமைத்து தந்த செல்வி. ச. மல்லிகா, செல்வி. ச. தர்ஷினி அவர்களுக்கும் அங்கு நூலுக்காக பணிபுரிந்த அனைவருக்கும் நன்றி நவிழ்கின்றோம். வண்ணப் புகைப்பட்ம் பிடித்து கொடுத்த புகைப்பட கலைஞருக்கும் ஆக்கங்களை செவ்வைப்பார்த்து உதவிய அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய பயிலுனர்கள் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். நேர்த்தியாக திறம்பட வருவதற்கும் தமது உயர்வான பணிகளை செய்த கல்விக்கழக தலைவர், செயலாளர், பொருளாளர், இதழாசிரியர், இணைப்பாளர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் சொற்களால் அல்ல மனந்திறந்த எண்ணங்களால் நன்றி நவிழ்கின்றோம்.




அச்சுப்பதிப்பு-
நியு ஹில்பிரைன் அச்சகம்
இல. 132, திம்புள்ள வீதி,
மல்லியப்பு.
ஹட்டன்.